# புற்று



ஐந்திணைப் பதிப்பகம்

## லா. ச. ராமாமிருதம்

# புற்று

சிறுகதைகள்

லா. ச. ராமாமிருதம்

Phone : 849410

ஐந்திணைப் பதிப்பகம்

279, பாரதி (பைகிராப்ட்ஸ்) சாலை

திருவல்லிக்கேணி, சென்னை—5.

முதல் பதிப்பு : மார்ச் 1989

ஐந்திணை—54
உரிமை பதிவு

விலை ரூ. 18-50

PUTTRU

Tamil
A Collection of short stories
By
L. S. RAMAMIRTHAM

First Edition, March 1989
10.9 Kg D/c
18×12.5 cms.
10Pt Letters
12+232 PAGES
Box Board Binding

Published
By
KUZHA. KATHIRESAN

Phone: 849410
AINTHINAI PATHIPPAGAM
279, Bharathi (Pycrofts) Road
Triplicane, Madras-600 005

SAALAI ACHAHAM, Gopalapuram
Madras-86 (Ph. 477820)

# சமர்ப்பணம்

**ஸ்ரீமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி**
**ஸ்ரீ கே. கிருஷ்ணமூர்த்தி**

*என் எழுத்தில்*
*உங்கள் மாறாத நம்பிக்கைக்காக*
*நன்றியுடன்*

# ஒரு வழக்கு

எனக்கு இந்தப் பகுதி, வாசகனுடன் அளாவ ஒரு சந்தர்ப்பம்; திண்ணை. என் முன்னுரைகளை அப்படித் தான் நான் இதுவரை பயன்படுத்தியிருப்பதாக எனக்கு எண்ணம். (மற்றவர் என் எழுத்துக்கு வழங்கியிருக்கும் முன்னுரைகளை விடுங்கள்.)

எனக்கு உன்னுடன் நெடு நாளாக ஒரு வழக்கு. ஆமாம், தீருமோ தீராதோ, தீர்க்க முடியுமோ முடியாதோ, சொல்லியாவது ஆற்றிக் கொள்ளலாம் அல்லவா? ஆறுவது உன்கையில்தானிருக்கிறது. சொல்லாமல், என் கக்ஷி உனக்கு எப்படித்தான், எப்போத்தான் தெரிவது?

முதலில் ஒரு உபகதை; உண்மைக் கதை:

அமெரிக்காவில் ஒரு எழுத்தாளன். Howard Fast? அல்லது Howard Spring? Fast என்றே நினைக்கிறேன். ரோமாபுரியில் அடிமைகளின் கலகத்தை அடிப்படையாகக் கொண்டு Spartacus என்று ஒரு நாவலை எழுதினான். (Spartacus சரித்திர புருஷன், கலகக்காரர்களின் தலைவன்,

கலகம் முறியடிக்கப்பட்டு, Spartacus சிலுவையில் அறையப் பட்டான்.)

பொது உடைமைத் தத்துவத்தைச் சார்ந்து இருப்ப தாகக் கருதப்பட்டதால், பதிப்பாளர்கள் நாவலைப் பிரசுரிக்க மறுத்துவிட்டனர். இத்தனைக்கும் Fast, நன்றாக ஊன்றிக் கொண்ட எழுத்தாளன் தான். ஆனால் அவன் பாச்சா பலிக்கவில்லை.

Fast, தினசரிகளில் ஒரு விளம்பரம் விடுத்தான். பிரசுரகர்த்தாக்களின் முரண்டலைச் சொல்லி, புத்தகத்தை வெளிக் கொண்டுவர ஆகும் செலவைத் தோராயமாய்க் கணக்கிட்டு, அதன்படி ஒரு பிரதிக்கு வைக்கக் கூடிய விற்பனை விலையைக் குறிப்பிட்டு, தானே புத்தகத்தை வெளியிடப் பணம் உதவுமாறு பொதுமக்களை வேண்டிக் கொண்டான்.

உடனே தொகைகள் வந்து குவிந்தன. சிறு துளி பெரு வெள்ளம் புரண்டு, புத்தகமும் வெளியாகி, ஒருவகையில் வாசகனே வெளிக்கொண்டு வந்த புத்தகம் என்கிற காரணத்தில் அமோக வெற்றி கண்டது; அதே சமயத்தில் எழுத்தாளனுக்கும் வாசகனுக்கும் இடையே லக்ஷியமான உறவுக்கு ஒரு எடுத்துக் காட்டாகவும் அமைந்துவிட்டது.

தம்பி, உன்னையும் என்னையும் பற்றி, இந்நாட்டில் அந்த முறையில் பெருமைப் பட்டுக் கொள்ள முடியுமா?

எழுதுவது, எழுதினதைப் புத்தகமாக உருவாக்குவது, வெளியான புத்தகத்தை வாசிப்பது—அத்தனையும் கலை தான். ஆனால் புத்தக ப்ரசுரம் ஒரு தொழில், முதலீடு கணிசமாகக் கேட்கும் தொழில், புத்தக வியாபாரம், அதன்

இன்றியமையாத அம்சம் என்பது மறுக்க முடியாத உண்மை. நான் எழுத்தாளன். என் எழுத்தை நானே ப்ரசுரித்துக் கொள்ள எனக்கு வக்கில்லை. என் புத்தகங்களை விற்று, போட்டமுதலை மீட்க சாமர்த்தியமும் கிடையாது. (முதலில் போடுவதற்கு முதல் ஏது?) அப்படியும் ஒரு முறை சூடிக் கொண்டும் ஆயிற்று.

'52,'53 வாக்கில் நானும், நாலைந்து உற்சாகமான இளைஞர்களும் சேர்ந்து, என் முதல் கதைத் தொகுதி, 'ஜனனி'யை வெளிக்கொண்டு வந்தோம். கி.வா.ஜ. அவர்களின் தலைமையில் வெளியீட்டு விழா, பால் பாயஸம் வினியோகம், ஒவ்வொரு பிரதியிலும் தனித்தனியாக என் கையொப்பம்—தடபுடல்தான். பிரதி விலை ரூ.3/-இல் அந்தத் தரத்தில் (Bamboo Paper), புத்தகத்தை இந்நாளில், அதைப்போலப் பன் மடங்கு செலவில் கூடத் தயாரிக்க முடியாது என்று திண்ணமாகக் கூறுவேன்.

புத்தகத்தைக் கலை சிருஷ்டியாகக் கொண்டு வந்தோமே தவிர அதன் வியாபாரத்தில் எங்களுக்கு விஷயமோ, அனுபவமோ பூஜ்யம். இடை மனிதனை நம்பி, முன்பின் எங்களுக்குத் தெரியாதவர்களிடம் மாட்டிக் கொண்டு, அவர்கள் எங்கள் தலையைத் தடவி, மோசம் போனோம்.

வீட்டுக்குத் தெரியாமல், புத்தக சம்பந்தமாக, P.F.ல் வாங்கின கடன் ரூ. 1500/- மாதத் தவணையில் அடைத்து மீள்வதற்குள், உன்பாடு என்பாடு, ஏண்டாப்பா மாட்டிக் கொண்டேன் என்று ஆகிவிட்டது.

ஆனால் அந்தப்பதிப்பின் பிரதி, இப்போது Collector's item ஆகிவிட்டது. இப்பவும் என் எழுத்து மூலம் பரிசயமான புது நண்பர்களின் வீடுகளில் அதை அபூர்வமாகச்

சந்திக்க நேரிடுகிறது. அலமாரியிலிருந்து அதை யெடுத்து, அதில் என் கையொப்பத்தைப் பெருமையுடன் எனக்குக் காட்டி அலமாரியில், பக்தியுடன், மீண்டும் சேர்த்த பின், என் வாசகன் அலமாரியை இழுத்துப் பூட்டுகிறான். கதவுதிறந்து மூடிய நேரத்துக்கு அலமாரியிலிருந்து குங்குமப்பூ மணம் கமகம—

வெட்கத்தில் தலைகுனிகிறேன். ஏனெனில் என்னிடத்தில் ஒரு பிரதி கூட இல்லை. புத்தகத்தைக் கடனாகக் கேட்கக் கூடக் கூசுகிறது. சரி, இது போகட்டும்.

பதிப்பாளர்கள், அவர்கள் பிரச்சனைகளை அவர்களே சொல்லக் கேட்கும்போது, அவை பூதம் காட்டுகின்றன. ஆயிரம் பிரதிகளை அச்சிட்டு, அவைகளை விற்பனைப் படுத்த அவர்கள் படும்பாடு—கேட்க அதைரியமாகவே இருக்கிறது. வியாபார நோக்கோடு மட்டும் இல்லாமல் உண்மையான எழுத்தார்வம் கொண்ட பதிப்பாளன், எழுத்தாளனுடைய பாக்கியம், பூஜாபலன், உழவன் லாபக் கணக்குப் பார்க்கிற மாதிரியான இந்த ப்ரசுரத்தொழிலில் உங்களுக்காக ஈடுபடுகிறோமே, அதுவே எங்கள் கலை ஆர்வத்துக்கு சாக்ஷி என்று கட்சி கட்டுவோர்களும் இருக்கிறார்கள். எங்களுக்குப் பேசவே வழியில்லை.

தம்பி, இங்குதான் உன்னோடு என் வழக்கு வருகிறது.

தமிழ நாட்டின் ஆறு கோடி மக்களில், ஒரு எழுத்தாளனுக்கு அவன் புத்தகத்தை விலைகொடுத்து வாங்கிப் படிக்க ஆயிரம் பேர் இல்லையா? நம்பும்படி இருக்கிறதா? இது யாருக்கு அவமானம், வாசகனுக்கா, எழுத்தாளனுக்கா? ஐம்பத்திரண்டு வருடங்களுக்கும் மேல் எழுத்தில்

ஈடுபட்டுக் கண்ட பலன் இது தானா? ஒரு ஆயிரம் பேர்கள்!

லா. ச. ரா. இலக்கியச் சிற்பி.
சிறுகதையின் பிதாமகர்.
நனவோடை உத்தியை முதன் முதலாகத் தமிழில் கையாண்டவர்.
கவிதை ததும்பும் உரை நடை ஆட்சி கொண்டவர்.

லா. ச. ராவின் முத்திரையை அவருடைய பெயர் இல்லாமலே அடையாளம் கண்டு கொள்ளலாம்.
படிக்கும் ஒவ்வொரு சமயத்துக்கும் ஒரு புது அர்த்தம், புது வெளிச்சம் தெரியும்.

லா. ச. ராவின் ஆத்ம விசாரணை, தமிழில் கற்பனை இலக்கியத்துக்குப் புதிது.

லா. ச. ரா. தமிழ் இலக்கியத்தில் ஒரு பெரிய சகாப்தம்.

தம்பி, மலைக்காதே, உன்னைப் போல் வாசகர்களின் பாஷைதான். இது போன்ற பாராட்டுக்களிலே ஒரு அர்ச்சனையே தயாரித்து விடலாம். ஆனால் என்ன ப்ரயோஜனம்? ஒன்று சொல்கிறேன். நாட்டில் எத்தனையோ மாறுதல்கள் நடந்திருக்கின்றன. ஆனால் எழுத்தாளனின்—பொருளாதார நிலைமை மட்டும், என்னைப் போன்றவர்களுக்கு, நான் எழுத ஆரம்பித்த காலத்திலிருந்து இன்னும் மாறவில்லை.

'புத்தகங்களின் விலைவாசி...' என்று முனகல் கேட்கிறது. தம்பி திருப்பிக் கேட்கிறேன், இந்நாளில் எந்தப் பண்டம் விலை அதிகரிக்காமல் இருக்கிறது?

ஹோட்டல், சினிமா டிக்கட்—House full காய்கறி—விலை கொடுத்தாலும் கறிவேப்பிலை கிடைக்கவில்லை; இந்த "ஜே ஜே"யில், புத்தகம் ஒன்றுதான் பழிக்கு ஆச்சா?

தம்பி புத்தகம், இலக்கியம், கலைகள் யாவுமே சொகுஸுதான்.

ஒரு நல்ல புத்தகம் தூண்டி, உன்னை ஆழ்த்தும் சிந்தனையும் சொகுஸுதான்.

நீ படிக்கும் புத்தகத்தில்
ஏதோ ஒரு பக்கத்திலோ
அதில் ஒரு வாக்யத்திலோ, சொற்றொடரிலோ
பதத்திலோ
அல்லது இரு பதங்களினிடையே தொக்கி
உன்னுள்ளேயே நின்று கொண்டு உன்னை இடறி
நிறுத்தும்
அணுநேர மோனத்திலோ
நீண்ட பெருமூச்சிலோ
உன் கண்ணில் பனிக்கும் கண்ணீர்த் துளியிலோ
அந்தத் தருணத்தோடு நீ ஒன்றிப்போய் உன்னை
அடையாளம் கண்டு கொள்வது, அதுவே ஸொகுஸு
தான், பெரிய ஸொகுஸு.

தடத்திலிருந்து தடம்மாற்றும் சொல் மந்திரத்தால் ஊடுருவப் படுவதே ஸொகுஸுதான் (luxury).

சரி, இதெல்லாம் உவமை பாஷை; சமத்காரம் என்று விட்டுத் தள்ளினாலும் தெள்ளும் உண்மையென்ன? விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் ஆர்வம் மக்களிடமில்லை. அவர்களைப் பற்றி, அவர்களின் பெருமைகளைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் இல்லை.

பின் என்ன, யாரைப் பற்றி எதைப் பற்றி எழுது கிறேன்? இந்தப் பக்கங்களிலும் இதுவரையிலும் இனி மேலும், எப்பவும் மனித குல மாண்பைத்தான் பாடு கிறேன். எனக்குத் தெரிந்ததே அதுதான்.

'நீயும் நானும்' உறவின் பரஸ்பரம் தானே. மனித பரம்பரையே! அந்தப் பரம்பரையின் பெருமையை, நீ வந்த வழியின் பெருமை, உன் பெருமையை நீ தெரிந்து கொள் வதில், அதில் திளைப்பதில் உனக்கு ஆசையில்லையா?

உன்னை ஒன்று கேட்கிறேன். இப்போது நீ எனக்கு ஆயிரம் பேர்களின் பிரதிநிதி.

நீ (அட அது நீயோ, நீங்களோ?) பதிப்பாளர்களிடம் கேட்க வேண்டும்; நீங்கள் நெடுநாட்களாகத் தேடிக் கொண் டிருக்கும், ஆனால் அச்சில் இல்லாத புத்தகங்களை வெளிக் கொணர வற்புறுத்த வேண்டும்.

''புத்ர' எங்கே? 'ஜனனி' என்னவாயிற்று? அதே போல் ''அலைகள்'' ''தயா'' 'மீனோட்டம்'' ''த்வனி'' ''இதழ்கள்'' ''கங்கா'' இன்னும் என்னென்ன? 'அஞ்சலி' என்கிற தலைப்பில், பஞ்சபூதக் கதைகளாமே! அதாவது நடைகாலப் பாத்திரங்களாக ஒரு ஒரு element ஐயும்—தண்ணீர், நெருப்பு, பூமி, காற்று, ஆகாசம்—உருவகப் படுத்தித் தனித்தனிச் சோதனைக் கதைகளாமே! இவை களைப் பற்றி நாங்கள் கேள்விப் பட்டிருக்கிறோமே ஒழிய

எங்கள் கைக்கு வந்து சேரவில்லையே! மறுபதிப்புக்கள் தானே என்று நீங்கள் தயங்கினாலும் எங்கள் தலைமுறை இவைசொல்லும் விஷயங்கள் அத்தனையும் புதிது- "கொண்டுவாருங்கள், கொடுங்கள்" என்றுப் பன்னித் தட்டினால் தான், கதவு திறக்கப்படும். உங்கள் பசியை நீங்கள் தெரிவிக்காமல் அவர்கள் எப்படித் தெரிந்து கொள்வது? அழுத குழந்தைக்குத்தான் பால் கிடைக்கும்.

"கடைவிரித்தேன் கொள்வோர் யாருமில்லையே" என்னும் நிலை இனிமேலாயினும் நமக்குள் வேண்டாம்.

என் வழக்கின் ஆரம்பத்திலேயே 'Spartacus' எனும் புத்தகத்தின் கதையைச் சொன்னதே இதற்குத்தான்.

Plot 242, ஞானமூர்த்தி நகர்
அம்பத்தூர்
சென்னை-600 053
16, பிப்ரவரி, 1989

ஆசீர்வாதம்
லா. ச. ராமாமிருதம்

# பார்க்கவி

இந்தக் கதையைப்பற்றி, வரிக்குவரி ஒரு அலசல் விமர்சனம் சி. சு. செல்லப்பா அவர்கள் தொடராக சுதேசமித்ரன் வாரப்பதிப்பில், மூன்று இதழ்களில் எழுதினார். ஆனால் அதுமட்டும் இந்தக் கதையைப் படிக்க சிபாரிசு ஆகாது என்று அறிவேன். ஆனால், இந்தத் தொகுப்பின் சம்பந்தமாக, முப்பது வருட இடைவெளிக்குப் பின் இந்தக் கதையை மீண்டும் படிக்க நேரிட்ட போது, கலைக்க முடியாத விதியின் கதியே போன்ற, இதன் படிப்படியான முன்னேற்றமும், கதை முடிவில், கதைக்கே முத்தாய்ப்பாக அமையும் இரண்டு வார்த்தைகளும், அவைகளின் எதிர்ப்பாராத தன்மையும் அவைதரும் சாந்தமும்-சாந்தியும்—

ஐயா, நானே என்மேல் பூப்போட்டுக் கொள்கிறேன் என்கிற குற்றத்தையும் கேலியையும் இந்தக் கதைக்காக ஏற்கத் துணிந்து விட்டேன் என்பதே இந்தக் கதைக்குச் சிபாரிசு. ஒன்று சொல்கிறேன், நம்பினாலும், நம்பாவிடினும். ஒரு கட்டத்தின் பிறகு கதை தானே தன்னைச் சொல்லிக் கொண்டு போகும் வேகத்தில் எல்லாமே சுயப்பிரக்ஞையின் சாதனை அல்ல,

ஸ்ருதி பிசகாமல் இருந்தால், சுயப்ரக்ஞை பிதற்ற வில்லை என்று தெரிகிறது. அதுவே சரி, ஸ்ருதியே கதையைத் தாங்கிக்கொண்டு போகி றது.

**தொகுதி : இதழ்கள்**

''பார்க்கவி! பார்க்கவி!!''

பார்க்கவி அசைந்துகூடக் கொடுக்கவில்லை. தலையணை மீது ஐந்து தலை நாகம் படம் விரித்தாற் போல் கூந்தல் ஐந்து பிரிகளாய் அவிழ்ந்து அலை மோதிற்று.

''அடீ நாட்டுப் பெண்ணே!''

(நாறப் பொண்ணே!)

பார்க்கவி மல்லாந்து படுத்தபடி கால் கட்டைவிரலி லிருந்து கழுத்து வரை தன் உடலைக் கண்ணோட்டம் விட முயன்றாள். தூக்கத்தில் மேலாக்கு இடுப்புவரை இறங்கி விட்டது. ஆனால் இன்னும் அவள் சரி பண்ணிக்கொள்ள ஆரம்பிக்கக்கூட இல்லை. இப்பொழுது கிடக்கையில் அங்கங்கள் தளர்ந்து வீழ்ந்து கிடக்கும் இதவில் ஒரு விரலைக்கூட அசைக்க மனமில்லை.

''அடீ ராணியம்மா! காப்பி கலந்தாச்சு. எழுந்திருக்க மனசு பண்ணலாமே!''

கரும் பலகையில் ஆணியால் கோடு இழுத்தாற்போல் கிறீச்சிட்டு, கீழிருந்து அக்குரல் எட்டிற்று. பார்க்கவிக்குச் செவி நரம்புகள் துடித்தன. பல்லைக் கடித்துக் கண்களை இறுக மூடிக் கொண்டாள். இன்னிக்கு என்ன வேணு

மானாலும் ஆகட்டும்; நான் இறங்கப் போறதில்லை. இந்த வீட்டில் இது வரைக்கும் நான் போடறபோதே, ஆறவெச்ச காப்பி நான் குடிச்சதில்லையாக்கும்! இன்னிக்குன்னு நாட்டுப் பெண் மேலே அலாதி அக்குசு வந்திருக்காக்கும்! கத்துங்கோ, கத்துங்கோ நன்னாக் கத்துங்கோ. இனி என்ன பயம்? பயந்து பயந்து செத்ததுக்கெல்லாம் பலனை அனுபவிச் சாச்சு. இனிமே பயப்படாமே போற ஆபத்தில் போனாப் போறேன்— பார் பார், இதோ வரார்—இந்தச் சரீரத்தைத் தூக்க முடியாமெ தூக்கிண்டு, புஸ் புஸ்ன்னு கொல்லன் பட்டறைத் துருத்தி மாதிரி மூச்சு விட்டுண்டு என்னை விரட்டிண்டு வராட்டால்தான் என்ன? மார்க்கபமோ சதங்கையாய்க் குலுங்குகிறது. என்மேலே பரிவுதான்ம் என்ன தட்டுக் கெட்டுப் போச்சு? 'நான் கூப்பிடறேன், நீ வரவில்லையா என்கிற ஹடம்தானே!—'

அவசர அவசரமாய் ஆடையைச் சரிப்படுத்திக் கொள்கையிலேயே அறைக்கதவு படீரெனத் திறந்தது. நிலை வாசல் மேல் சாய்ந்தபடி மாமியார் நின்றார் ஏறி வந்த சிரமம் தாளவில்லை. மூச்சு இரைத்தது.

பார்க்கவி எழ முயன்றாள். தள்ளிவிட்டது.

'வந்தது வரட்டும், நான் இருக்கறபடிதான் இருக்கப் போறேன் என்றெல்லாம் தனக்குள் வீறாப்பு எண்ண லாமே தவிர, நேரில் காண்கையில் நெஞ்சு அப்படியே சுருங்கி விடறது! ஏனோ தெரியல்லே.' பார்க்கவிக்குத் தன் மேலேயே கொள்ளை ஆத்திரம் வந்தது. அம்மாவின் தோற்றத்திற்கே பிறரை வாயடைக்கும் ஒரு ப்ரஸன்னம் இருந்தது. தூண்மேல் சாய்ந்து ஒரு காலை நீட்டி உட்கார்ந்தபடி தயிரைக் கடைந்து கொண்டே, "என்னடா சொல்ல வரே, மா விளக்கு மா திங்கற மாதிரி வாயைக் குதப்பிண்டு?" என்று கேட்டதுதான் தாமதம், "ஒண்ணு

மில்லேம்மா!'' என்று அவள் கணவன் அவசரமாய் வெளியே போய் போய்விடுவான். ஒரு நாளா, இரண்டு நாளா? இம்மாதிரி, அவளுக்கு நினைவு தெரிஞ்சு இந்த அஞ்சு வருஷமா இரும்புக் கோலால் ஆண்டு ஆண்டு, ஈரமும் நயமும் இத்த வீட்டில் வறண்டு போய் முதலுக்கே மோசமா ஆயிடுத்து.

''சேசே! இப்பொ அவசரம் என்ன? படுத்திண்டிரு. இன்னும் பொழுது விடியல்லே; சூரியன் புறப்பட்டு ஒரு மணி நேரம்தான் ஆறது—''

''இல்லேம்மா, விடிவேளையிலே கண்ணை அசத்திடுத்து—'' எழவொட்டாமல் அவள் உடல் மறுபடியும் அவளைக் கீழே தள்ளிற்று.

''ஊ-ஹூம், நீ சொன்னால் நான் கேட்பேனா என்ன? இன்னும் கொஞ்ச நாழி படுத்திண்டிரு; அதுக்குள்ளேயும் வந்தூடும்.''

''என்னது?'' பார்க்கவிக்குப் புரியவில்லை.

''சந்தனப் பேலாவும் கொட்டுமேளமும் சொல்லியனுப்பிச்சிருக்கேன், உன்னைப் பள்ளியெழுப்ப.''

நாக்கிலிருந்து ஒருங்கே குதிக்க நானூறு வார்த்தைகள் எண்ணங்கள், விஷயங்கள், உணர்ச்சிகள் தவித்தன. ஆனால் பார்க்கவிக்கு வாயடைத்து விட்டது.

''என்னடீ, முழி முழின்னு முழிதாணிருக்குன்னு முழிக்கறே? கொம்பேறு மூக்கி!'' சவுக்கு நுனியில் கட்டிய ஈயக் குண்டுபோல் வார்த்தைகள் திடீரெனத் தெறிந்தன. ''நீ வந்ததே மொதக்கொண்டு வீடு சுபிக்ஷமா யிருக்கேன்னு மூதேவி வேறு கொண்டாடியாறதோ? இந்தத் தள்ளாத வயசுலே, என்னை ஒக்காத்தி வெச்சுத் தாங்கற நாளுலே, நான் பட்டதெல்லாம் போறாதுன்னு, நான் போட்டுவெச்ச

காப்பியைக் குடிக்கறதுக்கு நானே மாடியேறிக் கூப்பிடணு மாக்கும். தவிடு திங்கறதுலே ஒய்யாரம் வேறே!''

சரி, இன்னிக்கு முழிச்ச வேளை சரியில்லே, இன்னிப் பொழுது நல்ல போதாப் போகணும். இன்னிக்குத்தான்னு உடம்பு என் வசத்துலேயில்லே.

பார்க்கவி பதில் பேசவில்லை. படுக்கையைச் சுருட்டி விட்டு எழுந்து நின்றாள். மாமியார் வாயிலை அடைத்துக் கொண்டு நின்றாள். பறங்கிப்பழ மேனி. தாடைச் சதையும் கழுத்துச் சதையும் தளர்ந்து இறங்கி, பேச்சில் வாயசைகை யில் தாமும் ஆடின. சிங்கப்பிடரி போல் கூந்தல், மூப்பு மஞ்சள் பூத்து மயிர்க் கால்களிலிருந்து முரடிக்கொண்டு எழுந்து ஓடிற்று. அம்மா மஞ்சள் இழந்து எத்தனையோ வருடங்கள், அவள் இந்த வீட்டுக்குள் புகுவதற்கு முன்னா லேயே- ஆகிவிட்டன. ஆனால் அவள் முகத்தில் இன்னும் லக்ஷ்மி பெருகினாள். கைராசி இன்னமும் விளங்கிக் கொண்டுதானிருந்தது. இன்னமும் அவர் கையில் குழந்தை யைக் கொடுத்து வாங்கிக் கொண்டு போய்க் கொண்டு தானிருந்தார்கள். தன்னைக் கண்டால் தான் இப்படி. அம்மா சின்ன வயதில் ரொம்பவும் அழகாய்த்தானிருந்திருப் பார். ஆனால், பாவம், பற்கள் தாம் நிற்கவில்லை. வெறும் வாயைமென்று கொண்டிருப்பார்.

பார்க்கவி உடம்பை ஒடுக்கிக் கொண்டு சுவரோரமாய் நகர்ந்து வாசலைத் தாண்டினாள். ''அதாண்டி கேட்டேன்! பல்லைத் தேய்க்காத பவிஷோடு மேலே இடிச்சுண்டே போ! ஏன்னா, உனக்கு இன்னும் பொழுது விடியாவிட்டாலும் வெள்ளி முளைக்கறதுக்கு முன்னாலே நான் ஸ்நானம் பண் ணிட்டு நிக்கறேனே, உனக்குப் பொறுக்குமா? இந்த ஒரு வேளை சோத்தைத் தானே பொங்கித் தின்கிற மாமியார், அதையும் நாறாமல் ஏன் தின்கணும்? ஊஹூம்—மண்டை வெடிச்சுடாதா?''

அவர் மேல் தன் காற்றுக்கூடப் படவில்லை என்று அவளுக்குத் தெரியும். தெரிந்து யார் பதில் சொல்றது? தர்க்கந்தான் மிஞ்சும். படிப்படியாய்ப் பார்க்கவி மாடி இறங்கினாள். பின்னாலேயே அவளை முழுங்கிவிடும் பசியோடு அம்மாவின் பார்வை அவள் முதுகைத் துளைப் பதை அவள் உணர்வாள்.

இந்தப்பார்வைதான் அம்மாவின் வாயைவிட எனக்குத் திகிலாயிருக்கு. என் உடம்பின் ஓரொரு அசைவையும், செய்கையையும் இவர் இப்படித் தொடர்ந்து கவனிக் கறப்போ என்னுடைய தப்புகள் மாத்திரம் என்மேல் ஈட்டிகள் மாதிரி தலை நீட்டிக்கொண்டு நிக்கறதுகள். நான் என்ன செய்வேன்? என்னிக்கு நான் வாய்விட்டு அலறிடுவேனோ! உதட்டைக் கடிச்சு அந்த உளறல் கத் தலை உள்ளுக்குத் தள்ளறத்துக்குள்ளே உன் பாடு என் பாடாயிடறது. அந்த அசதி தாங்காமல் ஒவ்வொரு சமயம் சுவத்துலே சாஞ்சுடறேன். இந்த வேட்டைப் பார்வையால் எனக்கு என்னிக்குப் பைத்தியம் புடிச்சுடுமோ? இல்லாட்டா ஏற்கெனவே புடிச்சுடுத்தோ? ஆனால் எனக்குப் புடிச்சால் எனக்குத் தெரியுமோ...?''

தவலையைத் தூக்கிக்கொணடு பார்க்கவி கிணற் றடிக்குச் சென்றாள்.

'என்னிக்குத்தான் எனக்கு விடியுமோ? இன்னிக்கு முழிச்ச வேளை சரியில்லே. எதன் முகத்துலே முழிச்சேன்? வழக்கப்படி பூ முகத்துலே முழிக்கல்லையா? பூ முகத்துலே முழிக்கணும்னு தானே தினம் ஜன்னலோரம் படுக்கையைப் போட்டுக்கறேன்! பகவான் பூவைத்தான் பிடுங்கிண்டுட் டார்னா, பூ முகத்துலேகூட முழிக்கக் கூடாதுன்னு இருக்கா? ஆனால் என் மாதிரி ஆயிட்டவாளுக்கெல்லாம் நல்ல சகுனம், கெட்ட சகுனம் எல்லாம் ஏது? நாங்களே

தான் பெரிய சகுனமாயிடறோமே, 'நீயும் நானுமடி, எதிரும் புதிருமடி'ன்னு அம்மா பாடற மாதிரி...'

இருந்தாலும் அவளுக்குப் பூவின் மேல் அபரிமிதமான ஆசைதான். (அதனாலேயே அதை அவள் இழந்துவிட்டாளோ?) இந்த ஆசை சுயம் மாத்திரம் அல்ல; அதில் கொஞ்சம் பரம்பரை வாசனையும் கலந்திருந்தது. அவள் தகப்பனார் ஒரு நந்தவனத்தைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். தோட்டத்தின் நடுவில் பர்ணசாலைபோல் ஒரு ஓலைக் குடிசை. ராத்திரி வேளையில் ஜில் காற்று ஆளைத் தேவலோகத்துக்குக் கொண்டு போய்விடும்.

'அப்பா கயிற்றுக் கட்டிலைப் போட்டுண்டு உட்காந்துடுவார். அப்பா தாடி வளர்த்துண்டிருந்தார். ஏனோ தெரியல்லே. தனக்குள்ளே ரிஷீன்னு தியானமோ? கரு கருன்னு தொப்புள் வரையிறக்கி மாலைக் காற்றில், தாடி ஜோரா வெட்டி வேர்த் தட்டிமாதிரி மெதுவா அசைஞ்சுண்டிருக்கும். அப்போ வாத்தியத்தில் ஸ்வரப்பற்களை அமுக்கின மாதிரி ஒரு ஒரு சமயம் விதவிதமான பூ வாசனை ஒண்ணும் பின்னாலே ஒண்ணு காற்று வாக்கிலே கிளம்பும். அப்பா தாடியை உருவிக் கொண்டே ஒவ்வொண்ணா ரொம்ப நுட்பமான அடையாளம் கூடத் தப்பிப் போகாமல் சொல்வார். பூ விஷயத்தில் அப்பாவுக்கு மிஞ்சித் தெரிஞ்சுக்க ஒண்ணுமேயில்லை. பூ மாத்திரம் என்ன? எதைப் பற்றியும் அவரால் அப்படிப் பேச முடியும்.'

அதுமாதிரி ஒரு சமயம்:

"அதோ அந்தப் பூ என்னோடே பேசறதும்மா அதோ, அந்தச் சிவப்புலே வரி வரியா வெள்ளைக்கோடு போட்டிருக்கே ஆ, அதான்!"

"என்னப்பா பேசறது?" அப்போ எல்லாம் அவளுக்கு அப்பா வாக்கு வேதவாக்கு. போகப் போகத்தானே தெரியறது. யார் யார் வார்த்தை எவ்வெவ்வளவு எடை தாங்கும்னு? ஆனால் அவர் வாயை வெறுமெனக் கிண்டினாலும் அவர் எப்பவும் சுவாரஸ்யமாயிருப்பார்.

அவள் கேள்வி காதில் விழாததுபோல் அவர் இருந்தார்.

"பூ என்னப்பா சொல்றது?"

"என்னத்தைச் சொல்றதுன்னா என்னத்தைச் சொல்றது?" ஒரு முறைக்கு மறுமுறை கேட்டால் அவருக்குக் கோபம் வந்து விடும். "உங்கள் மாதிரியெல்லாம் உள்நாக்கு தெரிய வாயைத் திறந்து வளவளன்னு வம்பளந்தால் தான் பேச்சா? பேச்சுன்னா பேச்சு என்று அர்த்தமில்லை. பேச்சுன்னா பாஷை என்று அர்த்தம்."

"இப்போ இதன் பாஷை என்ன பாஷை?"

"அது அதுக்கு அதனதன் பாஷை உண்டு."

"இப்போ இதன் பாஷை என்ன பாஷை?"

"பூவின் பாஷை அதன் மணம்தான்."

"மணக்காத பூக்கள் இருக்கே!"

"மணக்காத பூக்களின் பாஷை அவைகளின் அழகு தான்."

"அழகில்லாத பூக்கள்?"

"அழகில்லாட்டா மணமிருக்கும். மணமில்லாட்டா அழகிருக்கும்."

"மணமுமில்லே அழகுமில்லே, அப்போ?"

"அது பூத்திருக்கே அதான் அதன் பாஷை."

"பூக்காத பூக்களைப்பற்றி என்ன சொல்றேள்?"

சட்டென ஒரு ஊமைத்தனம் அவர்களிடையே திடீரெனத் தேங்கிற்று. அதனால் தான் என்னடா அப்பா பதில் பேசலையே என்று அவள் தலை நிமிர்ந்து பார்த்தாள். அவர் அவளை ஒரு தினுசாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார். விழிகள் தழலாய் மாறியிருந்தன. சற்று நேரங் கழித்து அவர் வார்த்தைகள் சாதாரணமாய் வந்தாலும் அந்தக் குரலைக் கேட்க அவளுக்குப் பயமா யிருந்தது, ரிஷியின் சாபம் போல்.

"பார்க்கவி, நீ ஒரு அபஸ்மாரம். ஆமாம், சந்தேகமே யில்லை. ஒரு அபஸ்மாரம்."

"ஏம்பா திடீர்னு கோவிச்சுக்கறேள்? நான் என்ன பண்ணிட்டேன்?"

"நீ இன்னும் ஏன்ன பண்ணனும்? பெண்ணாய்ப் பிறந்தூட்டு பூக்காத பூக்களைப்பற்றி உனக்கு முதலில் எண்ணம் தோணித்தே, அது போதாதா? நீ ஒரு அபஸ்மாரம்."

"என்னப்பா நீங்கள் ஏதோ சொல்லிண்டே வந்தேள். நானும் ஏதோ கேள்வி கேட்டுண்டே வந்தேன். இதில் உங்களுக்கும் எனக்கும் என்ன தர்க்கம்? இதில் என்ன தப்பு?"—அவள் உதடுகள் கோப அழுகையில் நடுங்கின.

"பார்க்கவி! உன்மேல் நான் கோபிக்கவில்லை ஆனால் கேட்கத் தேன்றினாலும் கேட்கக்கூடாத கேள்விகள் இருக்கின்றன. செய்யக் கூடாத காரியங்கள், சொல்லக்கூடாத வார்த்தைகள், கேட்கக்கூடாத கேள்விகள்—இதில் நான் எதையும் மன்னிச்சுடறேன். ஆனால் தோன்றக்கூடாத எண்ணங்களை எண்ணுபவர்கள் தோன்றவே கூடாது. அப்படித் தோன்றினால் அவர்கள் ஒரு சாபக்கேடு. அவர்

களுடைய எண்ணங்களுக்கு அவர்கள் பொறுப்பாளிகளல்ல. ஆனால் அவர்களுடைய எண்ணங்களுக்கு மட்டும் எண்ணியபடியே செயலாகிவிடும் வலிமையுண்டு. அப்படிப் பலிக்கையில் அவர்களைச் சுற்றி எப்பவுமே சூன்யந்தான். அபபோது அவர்கள் ஆபத்தான பிறவிகள் ஆகி விடுகிறார்கள்.''

அவர் விசனத்துடன் பெருமூச்செறிந்தார். எழுந்து போய் எதிரே ஒரு செடியிலிருந்து ஒரு பூவைக் கிள்ளிக் கொண்டு திரும்பிவந்து கட்டிலில் உட்கார்ந்தார்.

''பார்க்கவி, பிறந்தாய்; பிறந்து ஒருவாரத்தில் உன் தாயாரை உருட்டிவிட்டாய்.''

வெடுக்கென ஒரு இதழைப் பிய்த்தெறிந்தார். அது காற்றில் சுழன்று சுழன்று சென்றது.

''உன் அம்மா இருந்த வரைக்கும் ஏதோ லக்ஷ்மி மாதிரியிருந்தாள். அவள் இருந்த வரைக்கும் எனக்கும் எல்லாம் சரியாய்த்தானிருந்தது. அவள் போனாள். நீ வந்தாய். புடிச்சுதய்யா எனக்கும் சனியன்! என் ஆஸ்தி யெல்லாம் நாஸ்தியாச்சு.''

இன்னொரு இதழ் காற்றில் பறந்தது. மூன்று இதழ் களுடன் மூளியாய் அவர் விரல்களிடை திரியும் பூவைப் பார்க்கவே அவளுக்குப் பயமா யிருந்தது. அவர் அவளைப் பார்க்கவில்லை. அவர் தன்னோடு பேசிக்கொண்டிருந்தார். இல்லை. தன் கைப்பூவோடு பேசிக்கொண்டிருந்தார். இது தான் பூவின் பாஷையோ?

''உனக்கு முன் பிறப்பு எனக்கு ரெண்டு பெண்கள் உண்டு. இருந்த மாடு, மனை வீடு; சொத்து எல்லாம் விற்று, கடன்பட்டு, அவர்களைக் கட்டிக்கொடுத்து, அவ ரவர் வீட்டுக்கு அவர்களை ஓட்டியும் விட்டேன். அன்னியி

விருந்து அவர்கள் என்னவானார்கள், இருக்காளா செத்தாளா என்று இன்னமும் தெரியாது. அவர்களைப் பார்த்து உனக்கு வயஸாகிற வருஷம் ஆகிறது—''

இதழ்களைப் பிய்த்து உள்ளங்கையில் வைத்துக் கொண்டு ஊதினார். இரண்டும் இரண்டு திக்காய்ப் பிரிந்து மிதந்து மறைந்தன.

இன்னும் ஒரு இதழ் குற்றுயிராய்க் காம்பில் ஒட்டிக் கொண்டு காற்றில் அலைந்து தவித்தது.

''லக்ஷ்மி இருந்த வரைக்கும் ஒரு தம்ளர் ஜலத்தை இடம் விட்டு இடம் நான் நகர்த்தினதில்லை. ஆனால் உனக்கு நான் தாயாகவே இருந்திருக்கிறேன். நீ பச்சைக் குழந்தையாய் இருக்கையில் உன்னை என் முழங்காலில் குப்புறப் போட்டுக் குளிப்பாட்டி யிருக்கிறேன். கடைவாயில் பாலாடையை அமுக்கிவைத்துப் பாலும் எண்ணெயும் கஞ்சியும் கஷாயமும் நானே புகட்டியிருக்கிறேன். இப்போ இங்கே நீயும் நானும் உட்கார்ந்து கொண்டு இதெல்லாம் எப்படி நடந்தது, என்னவாய் நடந்தது என்று கேட்டாலும் நினைத்தாலும் எனக்கே திகைப்பாயிருக்கிறது.''

இன்னிக்கு அப்பா பேச ஆரம்பித்ததை அதுவே முடியற வரைக்கும் பேசி முடிப்பார். இன்னிக் குணம் அவருக்கு அப்படியிருந்தது.

''கடன்காரருக்குப் பயந்து முகமறைவாய் தாடி வளர்த்துக் கொண்டு இடமே மாறி வந்துட்டேன். ஆனால் பாம்புப் பிடாரன் கூடவே பாம்புபோல், நான் எங்கு போனாலும் என்னோடு நீ.

''பாம்புப் பிடாரனுக்குப் பாம்பாலேயே சாவு என்று ஒரு வசனம் உண்டு. அது வீண் போகாமல், நீ பிறந்த உட

னேயே என்னைக் கடித்தாய் விட்டது. நான் சாகவில்லை. ஆனால் உயிரோடு இல்லை. இனிமேல்தான் என்ன நடக்கப் போகிறதென்று தெரியவில்லை. நீயும் ஆளாகி விட்டாய் பூக்காத பூக்களைப்பற்றி என்னோடு தர்க்கம் பண்ணிக் கொண்டிருக்கிறாய். சே, என் பிழைப்பு ஒரு பிழைப்பா!'' காம்போடு இதழை வீசி எறிந்தார். பூமியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்பாவுக்கு இன்னிக்கு என்னவோ வெறி, தெரியல்லே! தன்னுடைய தோல்விகளுக் கெல்லாம் அவளைப் பொறுப்பாக்கிக் கொண்டிருந்தார். அது தெரிந்தது.

* * *

உச்சி வெய்யில் கூட அவ்விடத்தில் தெரியாது; அவ்வளவு குளுமை. அது அவளுடைய ரகஸ்ய இடம். ஆற்றுக்கரை மேட்டில் ஒட்டினாற்போல் நின்ற இரு தென்னங்கன்றுகளிடையில், நெருக்கமாய்ச் செந்தாழம் புதர்கள் சூழ, ஒரு ஆள் மல்லாந்து படுக்குமளவு இடம் அங்கு யார் கண்ணுக்கும் புலப்படாது பதுங்கியிருந்தது. புதர்களின் நெருக்கத்தில் அங்கு எப்பவுமே தண்மை தரும் இன்ப இருள் தேங்கிற்று. அங்கு அவள் இப்பொழுது ஒரு புறமாய்ப் படுத்து இருக்கையில் பூமியைப் பொத்திய இடது செவியில், பூமிமேல் அதிரும் அத்தனை சப்தங்களும் படுகையில் பூமியின் நாடியே கேட்பதுபோலிருந்தது.

இப்பொழுது குபீர் குபீர் என்று கிளம்பும் செந்தாழையின் மணம் சிந்தனையின் போதையுடன் கலக்கையில் நேரம் போக்கற்று நின்று விட்டது.

இன்னமும் சாப்பிடவில்லை. வயிறு காலி. ஆனாலும் இன்று பசிக்கணும் சாப்பிடணும்னு தோணல்லே,

'மாமியார்தான் எடுத்துப்போட்டுக் கொண்டு சாப்பிட்டு விட்டு (''என் கையும் காலும் என் வசமிருக்கிற வரைக்கும் நான் ஒருத்தர் கையையும் எதிர்பார்க்கப் போற தில்லை. ஈசுவரா, நான் காலும் கையோடு நல்லபடியா வளைய வரத்துலேயே என்னைக் கொண்டு போயிடு. இந்தப் பீடைகளிடம் காட்டிக் கொடுக்காமே!'') கொல்லை ரேழி வாசல்படி மேல் தலைவைத்துக் காலை நீட்டிக் குறட்டையும்விட ஆரம்பிச்சாச்சு. அங்குக் காற்று சொகம்மா வரும். சமையலறையில் போட்ட சாமான் போட்டபடி கிடக்கும். மாமியாரின் எச்சிற்கலை காஞ்சிண்டிருக்கும். எந்த சாமானை மூடியிருக்கோ? திறந்து கிடக்கோ? கிடக்கிறது கிடக்கட்டும்; நான் தானே பாக்கி. சாப்பிட்டாலும் போச்சு. சாப்பிடாட்டாலும் போச்சு. இப்படியே சேர்ந்தாப் போலே ஒரு பத்து நாள் சாப்பிடாமல் இருக்க முடிஞ்சா நான்கூட பாக்கியில்லாமல் ஆயிடுவேன். நான் செத்த அப்புறம் எனக்கென்ன தெரியப் போறது?'

அப்படி நினைத்தாலும் அவளால் பசி தாங்கமுடியாது என்று அவள் நன்கு அறிவாள். இந்த வீட்டுக்கு வந்த பிறகு முதல் பகிரங்கத் தகராறே அதில்தான் ஆரம்பித்தது. மாமியார் போர் மாதிரி சோற்றை உள்ளே இறக்கினாலும் சமயத்தில் மூன்று நாள் சேந்தாப்போல், முழுங்கு ஜலம் கூட இல்லாமல் வேலை செய்துகொண்டு சுறுசுறுப்பாய் வளைய வரமுடியும்.

ஒருமுறை அவள் மாமியார் வம்படிக்க (தெரியாதா அவளைப் பற்றிக் குறைப்பட்டுத்தான்!) பக்கத்திலே எங்கோ போனவர், போனார் போனார் போனாரே!... பேச்சு சுவாரஸ்யத்தில் திரும்பியே வரல்லே. (அதென்னதான் அப்படி ஒரு பேச்சு இருக்குமோ? சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிண்டு கேக்கறவாளுக்கு அலுத்

துப் போகும்படி...அவாதான் அப்புறம் அவள் கிட்டவந்து சொல்லிடறாளே கடுகோ, பருப்போ கடன் வாங்கப் போறாப்போலே கரண்டியை வீசிண்டுவந்து. அம்மா உத்தரவு இல்லாமல் அவள் ஒரு உப்புக்கல்கூடக் கடன் கொடுக்க முடியாதுன்னு அவாளுக்கே தெரியும்—அவர்கள் எதிரிலேயே அவள் எவ்வளவு அவஸ்தைப் பட்டிருக்கிறாள்! போகட்டும் போகட்டும்; அய்யாகுடி அப்பன்குடி அவளுது என்ன தட்டுக் கெட்டுப் போச்சு. எல்லாத்துக்கும் போறவேளை வந்துடுத்து.) கலத்தில் சாதத்தை வைத்துக் கொண்டு அப்போதுதான் ஒரு கவளத்தை வாயில் போட்டாள். வெறும் வயிற்றில் விழுந்ததும் விக்கல் கண்டு விட்டது. அதைச் சமாளிக்கத் தீர்த்தத்தை முழுங்கிக் கொண்டிருந்தாள். அம்மா வந்துவிட்டார். கலத்தில் சோற்றை வெச்சுண்டா காசிக்குப்போன கணவன் கூட வந்துவிடுவான் என்கிற வசனம் வீணாய்ப் போகவா ஏற்படுத்தியிருக்கா?

''பேஷ் பேஷ்! ஓஹோ, பசிக்கிறதோ? பொம்மனாட்டிக்கு அப்படி ஒரு பசியா? சரி இனிமேல் எனக்கு எவ்வளவு மரியாதை கிடைக்கும்னு தெரிஞ்சுண்டேன். என் கையள்ளு அரிசியை நானே தனியாக் களைஞ்சு வெச்சுக்க வேண்டியது தான். இந்தாத்து ராஜகுமாரன் அந்த ஊர் ராஜகுமாரியைத் தேடிப் புடிச்சண்டு வந்துட்டானோன்னோ, கதையும் நாவலும் நடத்தி! வீட்டுக்கு வந்ததும் ராஜகுமாரி ராணியம்மாளாயிட்டா. அப்புறம் இந்தக் கிழம் கட்டைக்கெல்லாம் பேசறதுக்கு என்ன இருக்கு? வேணும் வேணும், எனக்கு நன்னா வேணும்; இதுக்கு மேலேயும் வேணும்!''

தட்டுச் சோறும் அப்படியே விஷமாய் மாறிவிட்டது. முழுங்கி முழுங்கிப் பார்த்தும் உள்ளே செல்ல மறுத்து விட்டது. வாகலிலே கொட்டும்படியே ஆகிவிட்டது. அதற்கு வேறே தனி வசவு!

அவளுக்குப் பசி தாங்கவில்லையென்று எப்போது கண்டு கொண்டாரோ, மாமியார் தன்னிஷ்டப்பட்ட போது தான் சாப்பிட வருவார். அந்தப் போட்டியில் சாதம் ஆறிப் போய் முள்முள்ளாய் விறைத்துக் கொண்டாலும் அவருக்கு அக்கறையில்லை. அவளுக்குக் கண்ணில் உசிர் வந்து நின்ற பிறகு, உதட்டையமுக்கித் தனக்குள் ஒரு சிரிப்பு சிரித்துக் கொள்வார். "சரி, இலையைப் போடறது, தட்டை வெச்சுக் கறது; இந்த நாளில்தான் நாம் பசிச்சப்போ சாப்பிட முடியல்லியே. பிறத்தியார் வயத்தைப் பார்த்து, நம்ம வயத்துக்குக் கொட்டிக்க வேண்டியிருக்கு!—"

பெரியவள எப்பொழுதுமே என்ன வேணுமானாலும் சொல்லலாம். அவர்கள் சொல்வதில் நியாயம் இருக்கோ இல்லையோ, அவாளுக்குப் பெரியவாள் என்கிற அவர்களுடைய ஸ்தானம் மாத்திரம் கெட்டி, அதை வெச்சுண்டு அவர்கள் யார்மேல் இருக்கிற ஆத்திரத்தையெல்லாம் யார் மேலே வேணுமானாலும் தீர்க்க வழி பார்த்துண்டு அட்டம் செய்யலாம். அம்மாவுக்கு யார் மேலே ஆத்திரம் இல்லை? முதலில் அவருடைய கணவன், தன் மாமனார் பேரிலேயே ஆத்திரம் பொங்கி வழிந்தது. அம்மாவுக்கும் பிள்ளைக்கும் ஒருநாள் விட்டு ஒரு நாள் நடக்கும் தர்க்கங்களில் அடிபடும் பழைய ஏடுகளிலிருந்து அப்படி இப்படியென்று முன்னும் பின்னுமாய் விஷயங்கள் வெளிவரும்.

கூட்டுக் குடும்பத்தில் வெகுநாள் கஷ்டப்பட்ட பிறகு, எப்படியோ தங்களைப் பிரித்துக்கொண்டு வந்த பிறகு, பத்து மாதம் சேர்ந்தாப்போல் குடித்தனம் நடத்தவில்லை. பஞ்சுப் பொதியில் பொறி வைத்தாற்போல், கண்ணப்பன் சிவதரிசனம் கண்டாற்போல், மாமனாருக்குத் திடீரென்று தேசத் தொண்டில் ஆர்வம் நேர்ந்துவிட்டது. உத்யோகத்தைத் துறந்து இயக்கத்தில் இறங்கினார். எங்கேயோ ஊர் தள்ளி, உள்ளேயும் தள்ளி விட்டார்கள். உள்ளே போன

வர் வெளியே வரவேயில்லை. ஒரு மாஸம் இரண்டு மாஸம் கழித்து ஒரு கடிதம்தான் வந்தது. ''உங்கள் கணவர் திடீரென நேற்றிரவு சிறையில் காலமாய் விட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்''. இல்லியா, அப்பா அடிக்கடி சொல்லுவா, இங்கிலீஷ் பாஷையில் பதவிசுக்குக் கேட்கணுமா? அதுதான் பாகா இழுபடுமே!'' என்று.

அம்மாவுக்கு ஒரே ஆத்திரம். ''கொண்ட பெண்டாட்டியையும் பெத்த குழந்தையையும் மானத்தோட காப்பாத்த வக்கில்லாதவாளுக்குத் தேசத்தொண்டு என்ன வேண்டிக் கிடக்கு? தன்னைக் காப்பாத்திக்க வழியில்லை, தேசத்தைக் காப்பாத்தப் போனானாம். போனானே, போனானே, என்னை நடுச்சந்தியிலே நிக்கவிட்டுட்டு! என் வயிறு எரியக் கண்டவாளெல்லாம் விடிஞ்சுடுவாளா?''

ஆயிரம் கத்தியும் வயத்தில் அறைஞ்சுண்டும் என்ன பண்றது? சகுந்தலை மாதிரி குழந்தையை ஏந்திண்டு பிரிஞ்ச இடத்திலேயே சேரும்படி ஆயிடுத்து. போன இடத்தில் இடிக்காமல் யார் விடறா? ''நீ வெச்சுக்கோ நான் மாட்டேன் வேங்கைப்புலி!'' என்று ஏலம்போட ஆரம்பித்துவிட்டார்கள்.

இப்போதுகூட நினைச்சுண்டு அம்மா ஆத்திரத்தில் அழுவர். அம்மாவுக்கு மூணு ஓர்ப்படிகளாம். அஃகன்னா மாதிரி மூன்று பேரும் கொல்லை ரேழியில் உட்கார்ந்திண்டு அம்மா முன்னும் பின்னுமாய்க் காரியமாய் நடமாடுகையில், அவளைப் பார்த்துக் கள்ளச்சிரிப்பு சிரிச்சுண்டே கும்மியடிப்பார்களாம்.

ஒருத்தி : ''போன மச்சான்—'' என்பாள்.

இன்னொருத்தி: (பிராசம் கெடாமல்) ''திரும்பி வந்தான்!''

மூணாவள்; "பூமணத்தோடே!" என்று தாளத்தோடு முடிப்பாள்.

அம்மா மூத்த நாட்டுப் பெண்.

உலகம் தெரிய ஒரு முறை சறுக்கினால் அப்புறம் ஒரே சறுக்கல்தான்.

"அப்படி யெல்லாம் சகிச்சுண்டு உன்னை ஆளாக்கினப்புறம் சாக்கடையில் போய் ஸ்நானம் பண்ணிண்டு வந்ததையேடா?" என்று அம்மா அடிபட்ட மிருகம்போல் கத்துவார்.

இந்த வீட்டில் எதைச் சாக்கிட்டு சண்டைவரும். அது எப்போ எப்படி ஓயும் என்றே சொல்ல முடியாது. வீட்டில் சுழலும் காற்றுக்கே ஒரு விறுவிறுப்பு இருந்தது அதில் சண்டையின் அண்ட கோசங்கள் எந்தச் சமயத்தில் நாம் நம் உருவைப் பெறப் போகிறோம் எனக் காத்திருந்தபடி நீந்திக் கொண்டிருக்கும்.

இப்போத்தான் நாலு மாஸத்திற்கு முன்னால்-அவர் போறத்துக்கு ரெண்டு மாஸத்துக்கு முன்னால்-ஒரு முக்காலணாக் கடிதாசு வீட்டுக்கு வந்தது. விலாசம் விலாசமாத் தேடியலைஞ்சு திரிஞ்சுட்டு, தபால் ஆபீஸ் வால் ஒண்ணைத் தாங்கிண்டு, முத்திரையின் உதையெல்லாம் பட்டுண்டு, அது வந்த வேளைக்கும் அதை எழுதின தேதிக்கும் ஆறுமாஸ இடை நாள் இருக்கும். அவள் தகப்பனார் காலமாகிவிட்ட செய்தி கண்டிருந்தது. யாரோ அக்கம் பக்கத்தில் அரை குறையாகத் தெரிந்த ஒரு மாமி அவளுக்கேதான் எழுதியிருந்தாள், கொச்சை கொச்சையாக:

"உன் அப்பாவை மூணு நாளா தேடு தேடுன்னு தேடியும் அகப்படல்லே. நந்தவனம் நாத்தம் அடிக்க

ஆரம்பிச்சுடுத்து. என்னன்னு பார்த்தா, ஒரு புதர் மறைவில் மனுஷன் விழுந்து கிடக்கான். உடல் முழுக்க நீலம் பாரிச்சுகிடக்கு. யாருக்குக் காத்திண்டிருக்கிறது! வெட்டியான் தலையாரி மணியக்காரன் எல்லாம் வந்தூட்டா. நீ வரவரைக்கும்னா, நீ போய் அஞ்சு வருஷமாயும் இந்தப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கல்லே. நீ எங்கே யிருக்கேன்னு யார் என்னத்தைக் கண்டா? எனக்கு மனசு கேக்கல்லே. எனக்குத் தெரிஞ்ச விலாஸத்துக்கு இதை எழுதிப் போடறேன். இதுவே போய்ச் சேர்றதோ இல்லியோ? சமத்தாயிரு. நான் வேறென்னத்தைச் சொல்லப் போறேன்...?''

அன்று முழுவதும் வீடு ஒரே ரகளை. அவருக்கென்ன, சமாசாரம் கேட்டதற்கு ஸ்நானம்கூடப் பண்ணாமல் வெளியே போயிட்டார். அம்மாதான் கூடத்தில் இரைஞ்சுண்டிருந்தார், பழக்கத்தை யெல்லாம் புதுக் கதையாய்ப் படிச்சிண்டு.

''நன்னா வேணும் அவனுக்கு! கோவிந்தாக் கொள்ளிக்குத் தானே அவன் லாயக்கு! கிடைக்க வேண்டியதுதான் கிடைச்சிருக்கு. ஏமாந்த கொள்ளி அகப்பட்டான் என் பிள்ளைன்னு அவன் தலையில் தோசியைக்கட்டியனுப்பிச்சுட்டானே! மறப்பேனோ என்ன? ஒரு கல்யாணம்னா கிள்ளுக் கீரையா? முன்னே பார்த்து, பின்னே பார்த்து ஜாதகம் குலம் கோதிரம் பார்த்து விஜாரிச்சு, பெரியவாளைக் கலந்து யோஜிச்சு, ஆயிரம் யோசனைப் பண்ணி நாலுபேர் நடுவே தாலியைக் கட்டி வீட்டுக்குப் பொண்ணை இழுத்துண்டு வருவா. இந்த மாதிரி அக்ரமம் எங்கே நடக்கும்? யாருக்கு அடுக்கும்? 'இவதாம்மா பார்க்கவீ—(பழிச்சுக் காண்பிக்கிறார்) ஹி ஹீ ஹீ-உன் நாட்டுப் பொண்ணு...அம்மாக்கு வீந்து நமஸ்காரம் பண்ணு!'—இவளை முன்னேபின்னே கண்டது யாரு?

கோத்ரமே ஒண்ணாயிருந்தாலும் யாருக்கு என்ன தெரிஞ்சுது? எப்படி சப்பந்தம் பண்ணிண்டு வந்தானோ அப்படித்தானிருக்கும் அன்னியிலிருந்து வீடு. என்னிக்கு மகராஜியம்மா படி மிதிச்சாளோ அன்னியிலிருந்து அழிஞ்சுதய்யா என் குடும்பம்! என்னென்னெல்லாமோ ஆசை வெச்சுண்டிருந்தேன்; இப்பவும் என்னை ஏமாத்திப்பிட்டான் என் சம்பந்தி! அவனைக் கண்ணால் மட்டும் கண்டேன்னா கிழிச்சு மாலையாப் போட்டுண்டுட மாட்டேனா, அப்பறம் தூக்கேறினாலும் சரின்னு!''

இன்னும் இதே ரீதியில் என்னென்னெல்லாமோ.

அப்பாவுக்கு அழுவாளா? அம்மாவின் ஆத்திரத்திற்கு பயப்படுவாளா? அதென்னவோ வாஸ்தவந்தான். அம்மா தன் பிள்ளைமேல் என்னன்னவோ ஆசையெல்லாம் தான் வைத்திருந்தார். தன்னுடைய சரியான வயது நாளில் இழந்த பதவி யெல்லாம் மீண்டும் பெற்றுவிடலாம் என்று வயிற்றையும் வாயையும் ஒடுக்கி, படாதபாடெல்லாம் பட்டு, அவனைப் படிக்க வைத்து, யார் மூலமாகவோ சிபாரிசு புடிச்சு உத்யோகம்கூடப் பண்ணி வெச்சு-ஒரொரு நாள் சண்டை வருகையில் இடிச்சுக் காண்பிப்பார்! ''என்னமோ உலகத்தில் இல்லாத ஆம்படையானை ஏமாத்திப்புடிச்சுட்டேன்னுஇறுமாந்துடாதேடீ! எனக்குப் புள்ளை, அப்புறந்தான் உனக்கு ஆம்படையான். உனக்கு முன்னால் என் வயத்தில் அவன் இருந்த நாளிலிருந்து எனக்கு அவனைத் தெரியுண்டீ! நான் இல்லாட்டா அவன் இல்லைன்னு தெரிஞ்சுக்கோ!—ஆமாம், சொல்லிப் பிட்டேன்—'' என்று கறுவுவார்.

அவள் அகமுடையான் இருவருக்கும் இடையில் சப்பளம் கொட்டி உட்கார்ந்திருப்பான். கறுப்பு முழி

மாத்திரம் இருவரையும் மாறி மாறி நோக்கும். கடைக்கண் பார்வையில், வெள்ளை முழியில் கடையும். அம்மா அசரீரி மாதிரி பேசுகையில் அந்த மனுஷன் யார் பங்கும் எடுத்துக் கொள்ளாமல் பதுங்கிய விலங்கு போல் இருவரையும் மௌனமாய்க் கவனிக்கையில் அவளுக்குப் புரியாத திகிலா யிருக்கும், இன்னும் என்ன இருக்கோ, என்ன வரப் போகிறதோ என்று. ஆமாம், உண்மையில் அவரைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்? எப்படியாவது பிறந்த வீட்டை விட்டுக் கிளம்பினால் போதும் என்று வந்துவிட்டாள். ஆனால் இப்போது தான் தெரியறது பொரியற எண்ணெயி லிருந்து எரியற நெருப்பில் விழுந்து விட்டாள். என்னவோ கொட்டிக் கொட்டிக் குளவி விஷத்தை ஏற்றுமாம், அது மாதிரி அம்மா கறுவிக் கறுவி அவளுக்குள் ஏதோ இறுகிக் இறுகிக் கனத்துக் கொண்டு வருவது போல் தோன்றிற்று. அதை எதிர்த்துக் கேட்டுடலாமா, இதை எதிர்த்துக் கேட்டுடலாமா, என்றுதோன்றும். ஆனால் அம்மா பரந்து தளர்ந்து செந்தாழை மேனியோடு எங்கோ பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கையில், என்னவோ யாக குண்டத்தில் நின்றெரியும் நெருப்பைப் போல், கிட்ட அண்டக்கூட நெஞ்சு அஞ்சும். அம்மாவுக்கு அது என்ன சக்தியோ? அதன் பேர் தான் தைரிய லட்சுமியோ? அம்மா சாதாரணமாகக் கீழே உட்கார்ந்திருந்தாலும் ஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்தாப் போலேத்தான் இருக்கு.

கரிப்பு என்கிறது என்ன நிறமாயிருக்கும்? கறுப்பா? சிவப்பா? பாம்பு விஷத்தைப் போல் பச்சையாயிருக்குமா?

இப்பொழுது களைப்பும் சிந்தனையுமாய் அவள் படுத்திருக்கும் அரை உறக்கத்தில் ஒரு கனவு கண்டாள்.

அவளும் அம்மாவும் பாம்புகளாய் மாறிவிட்ட மாதிரி யிருந்தது. இரண்டும் எதிருக் கெதிர் தலையை உயரத் தூக்கிக்கொண்டு, கண்களில் கொடூரம் கொதிக்க ஒன்றை யொன்று சீறிக் கொண்டு உக்கிரமாய்ப் படத்தைத் தரை யில் அடித்து அடித்து விஷத்தைக் கக்குகின்றன. இரண்டு விஷமும் ஒன்று கலந்து திரண்டு—என்ன ஆச்சரியம். ஒரு பூ உருவாகிறது! யானை காது போல் பெரிய கறுத்த இதழ் கள், பச்சைக் காம்பிலிருந்து விரிகின்றன. பூவின் நடுவில் செக்கச் செவேல் என்று ஒரு இரத்தத் தண்டு கிளம்பு கிறது. அதிலிருந்து சொரியும் இரத்தத் துளிகள் பூவின் இதழ்கள் மேலும் தரை மேலேயும் சிந்துகின்றன. சிந்திய இடத்தில் ஒவ்வொரு கண் சிமிட்டிக் கொண்டே திறக் கிறது.

கரிப்பு!

வீல் என்று அலறிக்கொண்டெழுந்தாள்.

பொழுது நன்கு சாய்ந்து, மரங்களின் நிழல்கள் நீள ஆரம்பித்துவிட்டன.

தலைக்கு நேர் வானத்தில் ஒரு கிளிக் கூட்டம் பறந் தது, புஷ்பங்களை ஆகாயத்தில் தூவினாற் போல். நாமும் ஏன் அது மாதிரி காற்றில் மிதந்து போக முடிகிறதில்லை. சரி சரி, இப்படி யோசனை பண்ணிண்டிருந்தால், இன்னி முழுக்கப் பண்ணிண்டிருக்கலாம். வேளையோ முழி பிதுங்கிக் காத்துக் கிடக்கு, நாளைக்கு வெள்ளிக்கிழமை. நமக்கேது வெள்ளிக் கிழமை? வேலைக்குத்தான் வெள்ளிக் கிழமை. வெள்ளிக்கிழமை பண்ணியாகனும். போறும் போறாததற்கு வேறே—'நனைச்சு வெச்சிருக்கு'! நான் ஏதாவது வேண்டாம்னு சொல்லிடுவேனோன்னு அவரே பண்ணிவிடற காரியங்களில் அது சேர்த்தி.

ஆமாம், யாருக்கு என்ன வேண்டியில்லை? பண்டம் கெட்டுப் போனால் பத்து நிமிஷம். மனுஷா தவறினால் பத்து நாள் அவ்வளவுதானே?

இன்னிக்குச் சாப்பிடலாமா, வேண்டாமா? இன்னிக் கென்னவோ அதான் மலைப்பாயிருக்கு. வேண்டியுமில்லை. சரி, ஒரு நாள் சாப்பிடாட்டால்தான் என்ன? உசிர் போயிடாது; அட அப்படிப் போற உசிர் போகட்டுமே!

எல்லாக் காரியத்தையும் முடித்துக்கொண்டு நிமிர்கை யில் நல்ல நேரமாகிவிட்டது. கட்டையை நீட்டிவிட்டால் போறும். இன்றுதான் மாடிப்படிச் சுவரைப் புடிச்சுண்டு படிகளை ஒண்ணொண்ணாய் ஏறினாள். அடேயப்பா என்ன வசதி! அறைக் கதவு சாத்தியிருந்தது. மெதுவாய்த் திறந்தாள்.

"யார் அது? விடமுடியாது போ. இன்னியிலிருந்து நான் இங்கேதான் படுத்துக்கப் போறேன். இந்த ரூமை உனக்கு ஒண்ணும் குத்தகைக்கு விட்டுடல்லே, இது உனக்கு மாத்ரம்னு—"

பாக்கி வார்த்தைகள் முடியு முன்னாலேயே கதவை மூடினாள். சிரிப்புக்கூட வர்ரது. அம்மா ஏன் இப்படி தன்னைத் தானே முடுக்கிண்டு கத்தறார்?

மாடியிறக்கத்தின் முதற் படியில் உட்கார்ந்தாள், கன் னத்தைக் கையில் தாங்கிக் கொண்டு. இன்னிக்கு நானே கொஞ்சம் சுருக்க, என்னாலும் தெரு கூட அடங்கிடுத்தே! இருளோடு இருளாய் இந்த மாதிரி இழைஞ்சிருக்கிறதும் இதமாய்த் தானிருக்கு.

என்னவோ நான் என்கிற தன்மையின் பிரிவான தனி மையோ பொறுப்போ இல்லாமல், கர்ப்பத்தில் தூங்கும் சிசுப்போல் ஏகாந்தமான இருள் அவளைத் தன் வயிற்றுள்

அடக்கமாய் அடக்கிக் கொண்டாற் போல் இதழ்களுக்குள் பூவுக்கு வயிறு கட்டியிறுப்பது போல்... அப்பா சொல்லுவார், 'அதுகளுக்கு என்ன கவலை? ஆயுசு என்னவோ குறைச்சல்தான். ஆனால் அதுகளுக்கு ஆயிசு வரை அழகும் சிரிப்பும்தான்...னு.'

கீழே ஏதோ சாமான் உருண்டு சிந்தனையைக் கலைத்தது. போய்ப் பார்க்கலாமா, வேண்டாமா? என்னவாயிருக்கலாம்? ஓஹோ, சுவாமி பிறையுள் எலி மாட்டிண்டு விக்ரஹத்தைத் தள்ளி விட்டிருக்கு.

அம்மாதிரி அந்த சப்தத்தை அடையாளம் கண்டு கொண்டதுமே அதை யொட்டி அப்பொத்தான் இரண்டு மாதங்களுக்கு முன்னால் நேர்ந்த ஒரு சம்பவம், நினைவு முழுக்கிலிருந்து மேடு எடுத்துக் கொண்டு எழுந்தது. அதை ஆயுசுக்கும் மறக்க முடியாது.

அன்று வெள்ளிக்கிழமை மாலை. வெள்ளிக்கிழமை வந்தாலே நல்ல கிழமையாகப் போகவேண்டும் என்ற க்வலையுண்டு. இந்த வீட்டில் வெள்ளிக் கிழமைக்கும் சண்டைக்கும் அவ்வளவு ஏர்வை. அப்போத்தான் விளக்கேற்றிவிட்டு அடுப்பில் ஏதோ காரியமாய் இருந்தாள். திடீர் என்று எதிர் அறையில் ஒரு வீறல்.

''மோசம்! மோசம்!''

''என்ன? என்ன?'' அவள் கணவன் மாடியிலிருந்து திடு திடுவென இறங்கினான்.

''நூறு ரூபாய் நோட்டு என் பெட்டியில் வெச்சிருந்தேனே? யார் எடுத்தேள்? உண்மையைச் சொல்லிடுங்கோ, யார் எடுத்தேள்?'' ஒரே கர்ஜனை.

அம்மா கையைப் பிசைஞ்சுண்டு நிக்கறார். மூஞ்சியே வெடிச்சுடும் போல், தக்காளிப் பழம்போல் சிவந்து போயிருக்கு.

அவள் கணவன் சிரித்தான். "என்னம்மா பேத்தறே? யார் எடுக்க முடியும்? கர்ணகுண்டலம் மாதிரி சாவிக் கொத்தோ உன் இடுப்பில் தொங்கிண்டே இருக்கு. எங்கே யாவது ஞாபக மறதியா வெச்சிருப்பே. சரியா தேடிப் பார்—"

"அடே, எனக்கா ஞாபக மறதி?"

"யானைக்கும் அடி சறுக்கும் அம்மா. எப்பவுமே நீயே எல்லாம் தெரிஞ்சவளா இருக்க முடியுமா?"

"நிறுத்துடா உன் பிரசங்கத்தை! மறுசாவி போட்டுத் திறந்திருக்கு— எனக்கென்னவோ சொல்ல வந்துட்டான் பெரிசா!"

"காக்கா கீக்கா கொத்தி—"

"ஆமாண்டா! கொத்திண்டுபோய்க் கடையிலே கொடுத்து, 'செட்டியாரே செட்டியாரே! எனக்கு ஒரு வடை கொடுத்து மீதி சில்லறை தாங்கோ'ன்னு கேட்டுதா? இங்கே என்னவோ சூது நடக்கிறதுடா! தெரியாத்தனமா மாட்டிண்டுட்டோண்டா!"

அவளுக்கு முதுகுத் தண்டு சில்லென்றது. இதுக் கென்ன அர்த்தம்? அம்மா புழுவாய்த் துடிக்கறார். நின்ன இடத்தில் நிற்காமல் பரவாட்டல் ஆடறார். ஒண்ணா ரெண்டா, நூறு ரூபாய்கள். தட்டித் தட்டிச் சுண்டி சுண்டி எண்ணினால் நூறு, அம்மாவுக்குத் தனியாய்ப் பண லேவா தேவி உண்டு. சீட்டுப் பிடிச்சு, தம்பிடிக்குத் தம்பிடி கந்து வட்டி விட்டு ஒண்ணைப் பத்தாக்கி பத்தை நூறாக்கி— அம்மா ஒண்ணு சொல்வதில் சந்தேகமில்லை அவர் இல்லாட்டா இந்த வீடு இல்லை.

"இல்லை. இன்னிக்கு இதை நான் சும்மா விடப் போற தில்லை, அடிவரை ஆராயத்தான் போறேன்—"

மாடிக்கும் கீழுக்குமாய்த் தேடாத இடமெல்லாம் தேடியாறது. தென்னை மரத்தில் புல் புடுங்கியாறது. வீட்டில் இருக்கிற பெட்டி பேழை, டப்பா, பானை எல்லாம் தலை கீழாகக் கொட்டியாறது. "கொண்டாடி உன் சாவியை,"— அவள் பெட்டிக்குச் சாவியேது. அத்துக்கு ஒரு கம்பியை வளைத்து மாட்டியிருந்தாள். அவள் பெட்டியில் என்ன இருக்கு முன்னாலே? ஏதோ ஒரு புடவை. நாலு ரவிக்கை, போன வருஷத்துக் காலண்டரிலிருந்து அவளாக ஆசைப் பட்டுக் கத்தரித்து எடுத்த படம், வருஷப் பிறப்புக்கு நமஸ்காரம் பண்ணினதற்காக அம்மா கொடுத்த வெள்ளி நாலணாக்காசு; அவ்வளவுதான். ரூபாயா? அடே அம்மாடியோ! ரூபாய் இருந்தாலும் அவளுக்குச் செல் வழிக்கத் தெரியாது.

ஆனால் அம்மாவுக்குப் பதைபதைப்பு அடங்கவில்லை. "இங்கே என்னவோ சூது நடந்திருக்கு; சந்தேகமே யில்லை. ஒரு காலணாக் காசு காண, ஒரு சொட்டு ரத்தம் சிந்தறேன், ஒரு பச்சை நோட்டு வெச்ச இடத்திலே காணாம்னா வயிறு எரியறதே—" அம்மா சாப்பிடல்லே. ஆனால் அவர் மாத்திரம் இலையைப் போடுன்னு கேட்டு, மூக்கைப் பிடிக்க இழுத்து விட்டு, பேப்பரைத் தூக்கிண்டு வாசல் திண்ணைக்குப் போயிட்டார். புருஷாளே அப்படிதான்.

அம்மா கூடத்திலேயே, தூண்மேலே சாஞ்சுண்டு எங்கோ வெறிச்சுப் பார்த்துண்டு ரொம்ப நேரம் ஒண்ணுமே பேசாமே உட்கார்ந்திருந்தார். அவளுக்குத் தூக்கங்கூட கண்ணைச் சுத்த ஆரம்பிச்சுடுத்து. ஏதோ தீர்மானத்துக்கு வந்து அம்மா சட்டுனு எழுந்தார்.

"அம்பீ—"

"என்ன?" அவள் கணவன் உள்ளே வந்தான்.

"நான் ஒரு தீர்மானத்துக்கு வந்தூட்டேன். எல்லோருமா கல்பூரத்தை ஏத்தித் தட்டிடுவோம் எடுக்கல்லேனு. இல்லாட்டா என் மனம் சமாதானமாகாது. பைத்தியம் பிடிச்சுடும் போல் இருக்கு." அம்மாவின் வார்த்தைகளைக் கேட்டதும் மாம்பழத்துள் கத்தி யிறங்குவதுபோல் அடி வயிற்றுள்ளே சில்லிப்பு துண்டமிட்டது.

"ஒரு நூறு ரூபாய்க்கு இவ்வளவு ரகளை பண்ணுவது நியாயமாயிருக்கா அம்மா? அப்புறம்—?"

"நியாயம் அநியாயம் எல்லாம் எனக்குத் தெரியுண்டா. எனக்கு அப்புறம், என்னால்தான் நீ பிறந்தே. அதை ஞாபகம் வெச்சுக்கோ! எனக்குக் கத்துக் கொடுக்க வேண்டாம். மனசு வெளிச்சமாயிருக்கறவா எதுக்குமே பயப்பட வேண்டாம். எத்தனை ரூபாயிருந்தாலும் அவாளுக்கு ஒண்ணுதான்—"

"சரி, உன்னிஷ்டம்..."

அம்மா கர்ப்பூரத்தை சுவாமி விக்ரஹத்திற்கு எதிரில் ஏற்றிப் பலகையைத்தட்டி ஊதினார். விக்ரஹம் அதிர்ந்து கீழே விழுந்தது. அவள் வயிற்றுள் சுவர் இடிந்தது! அடி வயிற்றை அமுக்கிப் பிடித்துக் கொண்டாள். அம்மாவின் கண்கள் திரிகள் மாதிரி எரிந்தன: விக்ரஹத்தை நிமிர்த்தி வைத்துக் கர்ப்பூரத்தை ஏற்றினார்.

"ஊம்—ஆகட்டும்—"

அடுத்தாற் போல் அவர் தட்டினார்; வயிற்றுள் இன்னும் நாலு கற்கள் இடிந்தன. அவர் தட்டிய தினுசைப் பார்த்தால் இன்னும் எத்தனை முறை தட்டச் சொன்னாலும் அவர் தாயார். எப்படியாவது இன்னி ரகளைக்கு முடிவு கட்டினால் சரி. அவளுக்கே அப்படித்தானிருந்தது. ஆனால் சோடாக்கோலி மாதிரி பிதுங்கிய விழிகளுடன்

விக்ரஹம் அவளைப் பாாக்கையில், அவளுக்கு என்ன வென்றே தெரியவில்லை.

"ஊம்—ஆகட்டும்—"

"நான் மாட்டேன் அம்மா—"

"ஆ! பாத்தியா, பாத்தியா—பாத்தியாடா அம்பி!" அம்மா சிரிப்பில் புகை கிளம்பிற்று. இதுக்குத்தான் சொன்னேன்; இந்த வீட்டில் ஏதோ சூது நடக்கறதுன்னு! இப்போ விளங்கிப் போச்சோன்னே?"

அழுகை, தைரியம், ஆத்திரம் எல்லாம் ஒருங்கே அவளை அழுத்தின. "உங்களுக்கு என்ன வேணுமானா லும் விளங்கிக்கட்டும். நீங்கள் என்ன வேணுமானாலும் நினைச்சுக்கலாம். எனக்கு அதைப் பற்றி அக்கறையில்லை. நான் மாட்டேன். அவ்வளவு தான். சாமியே உங்களுக்குத் தானிருக்கிறார். மத்தவாளுக்கில்லைன்னு மூக்கைப் பிடிச்சுண்டு பூஜை பண்ணின்டு தலையில் தூக்கிவெச்சுண்டு நான் கூத்தாடவும் இல்லை. அடுத்த நிமிஷம் காலில் கட்டி இந்த மாதிரி அடிக்கவுமில்லை. ரெண்டுமே எனக்கு வேண் டாம்! மாட்டேன்னா மாட்டேன்—"

அவள் போட்ட கத்தலில் தொண்டை கிழிந்தது. கால் கட்டை விரலிலிருந்து ரத்தம் பாய் மாதிரி சுருண்டு கொண்டே வந்து தலைக்கேறிற்று. மடேரென்று அப்படியே குப்புற விழுந்துவிட்டாள். அப்புறம் என்ன நடந்ததென்று தெரியாது.

மறுபடியும் விழித்துக் கொள்கையில் அவளைக் கும்மிருள் சூழ்ந்திருந்தது. உடம்பைக் கல்மேல் அறைந் தாற்போல் கணுக்கணுவாய் முறித்து வலித்தது. "அம்மா—"

நினைவு மெதுவாய்க் கூட ஆரம்பித்தது. அவளோ அவள் தாயாரைக் கண்டதுகூட இல்லை. ஆனால் அதெப்படி ''அம்மா''ன்னுதான் முதலில் தோண்றது? 'அம்மா' என்கிறது ஆதிமூலக் குரலோ?

அந்தச் சமயம் அவள்மேல் ஒருகை பட்டது. ஸ்பரிசத்திலிருந்து கணவர் என்று அறிந்தாள்; ஆனால் வாய் திறக்க முடியவில்லை. பல் கிட்டிவிட்டது. அவர் தொடும் தினுசிலிருந்து தான் முழித்துக் கொண்டது அவருக்குத் தெரியவில்லை எனத் தெரிந்தது. அவர் கை அவள் தோளிலிருந்து மணிக்கட்டிற்கு இறங்கி, கைக் காப்பை கழற்ற ஆரம்பித்தது. முழுத் தங்கம்கூட இல்லை. உள்ளுக்குக் கட்டை கொடுத்து, மேலே அடித்ததுதான்.

நெஞ்சிலேயே சதை உரித்தாற்போல் அவளுக்கு ஒரு புது வெளிச்சம் உண்டாயிற்று. பயங்கர வெளிச்சம். முன்னது பின்னது, தற்போது எல்லாம் ஒருங்கே புரியும் அதிர்ச்சியில் வாயிலிருந்து வார்த்தையும் விடுபட்டது.

''இந்தாங்கோ, நானே தரேன்—'' சட்டெனக் காப்பை உருவி அவன் கைக்குள் திணித்தாள். கை சட்டெனப் பின் வாங்கிற்று. கால்கள் ஓடின. கதவு மூடிற்று. இப்போ எல்லாம் புரிந்தது. அம்மா இடுப்பில் சதா சர்வ காலமும் (தூங்கும்போதுகூட) சாவிக்கொத்து ஏன் தொங்குகிறது, அவள் கணவனுக்கு திடீர் திடீரென ஏற்படும் பண சௌகரியங்கள். அந்தச் சமயங்களில் 'ஆடு அன்னிக்கு, மாடு மத்தியான்னம்' என்று அவர் நடத்தும் தர்பார்கள், சேர்ந்தாற் போல் நாள் கணக்கில் காணாமல் போய்விடுவது, ஆட்கள் அவரை அடிக்கடி தேடி வருவது, சில சமயங்களில் எதற்கும் துணிந்த அவருடைய முரட்டு தைர்யங்கள், திடீர் உற்சாகங்கள், அடுத்தாற்போலேயே மூணு நாட்கள் மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கொண்டு யாருடனும் பேசாமல்

கூனிக் குறுகி உட்கார்ந்திருக்கும் ஒடுக்கங்கள், குடும்ப விவகாரங்களில் எதையுமே காதில் வாங்கிக் கொள்ளாமல் இருப்பது, அநியாயங்களுக்குக்கூட அம்மாவுடன் ஆட்சேபிக்காமல் இருப்பது, தன் சிந்தனையே தன்னை யடைத்துக் கொண்டிருப்பதால் பிறரோடு ஒட்ட இஷ்டமோ சக்தியோ இல்லாமல் இருப்பது, உறக்கத்திலும் விழிப்போடு இருக்கும் காட்டு விலங்குபோல் ஒரு சதா உஷார்—அவரிடம் எப்போதுமே நேர்ப்பார்வையில்லை, ஓரப் பார்வைதான்—குடும்பச் செலவுக்கு அம்மா ஏன் பிள்ளையை நம்பவில்லை, நூறு ரூபாய் நோட்டு எப்படிக் காணாமல் போயிற்று (அம்மாவுக்குத் தெரிஞ்சிருக்காதா என்ன? உள் மனசுக்கு உள் மனசு ஒண்ணு இருக்கே, அது தெரிஞ்சிண்டிருக்கும்) எல்லாமே, கும்மிருட்டில் திடீர்னு விளக்குப் போட்டாற்போல் புரிஞ்சுது. ஞானோதயம் என்பது இப்படித்தானிருக்குமோ?

அன்றிலிருந்து எதையுமே அவள் காதில் வாங்கிக் கொள்வதில்லை. காதிலே ஒரு சிறு அடைப்பு ஏற்பட்டு விட்டது. யாரோ சொல்றா, எதையோ சொல்றா, யாரையோ சொல்றா, என்ன சொன்னால் எனக்கென்ன?

ஆனால் அன்றிலிருந்து அம்மாவும் முன்மாதிரி அவ்வளவு கோபிப்பதில்லை, அவள் அன்று மூர்ச்சையாய் விழுந்ததில் அவர் கொஞ்சம் மிரண்டூட்டார்னு தோண்றது.

ஆமாம்; எது எப்படிப் போனால் என்ன, அதை நினைக்கக் கூட அவ்வளவு அலுப்பாயிருக்கு!

அதோ அன்னிக்கு—சரியா இன்னியோடே அறுபத்தி மூணு நாளாறது—ரேஸ் மைதானத்திலிருந்து, ஜட்கா வண்டியில் அவரைக் கட்டையாய்ப் போட்டுண்டு வந்து வீட்டில் சேர்த்தார்கள். குதிரை தோத்துப் போச்சாம்.

மார்த்துடிப்பு பட்டுன்னு நின்னு போச்சாம். எவ்வளவு பணம் கட்டியிருந்தாரோ? யார் யார் பணத்தையெல்லாம் கட்டியிருந்தாரோ? கடைசியில் மனுஷனுக்கு என்ன அவமானமான முடிவு! இப்படியெல்லாம் மனசு எண்ணறதே தவிர, 'ஐயோ போயிட்டாரே அநியாயமா' என்ற உணர்ச்சி பீறிட்டுக் கொண்டு எழுமாட்டேன் என்கிறது. எல்லாம் நியாயமாய்த்தான் போயிருக்கான்னுகூட நெஞ்சு, நெஞ்சுக்கு ரகஸ்யமா உண்மையை வெளியிடறது.

கிழவியைப் பார்த்தால்தான் பரிதாபமாயிருக்கு. நல்லதோ கெட்டதோ, ஒரே பிள்ளை. அவன் கைக் கொள்ளியை வாங்கிக்க அவருக்குக் கொடுப்பனையில்லை. ஆனால் அம்மாகூட அதிகம் அழவில்லை. அம்மா தைரியம் அசாத்தியம். பழைய காலத்து ராஜபுத்ர ஸ்திரீகளைச் சேர்ந்திருக்க வேண்டும். அதென்னவோ தெரியல்லே. கஷ்டத்தில் அவர் நெற்றியில் தேஜஸ் விளையாடற மாதிரி அவளுக்குத் தோணறது.

இப்போ ஒரு சந்தேகம் தோணறது. என் ஆம்படையானைப்பற்றி நான் நினைக்கிறப்போ அவர்னு நினைக்கிறேனோ, அவன்னு நினைக்கிறேனா, அதுன்னு நினைக்கிறேனா?

எதுவாயிருந்தால் என்ன? இனிமேல் எது எப்படிப் போனால் என்ன? செத்தமாட்டுமேலே எது ஏறினால் என்ன? என்னமோ உயிரோடு இருக்கிற மாதிரி தோணறதே யொழிய நிஜமாகவே நான் உயிரோடிருக்கேனா இல்லியோ? இதை எனக்கு நிச்சயமாச் சொல்ல யாரிருக்கா?

"நான் இருக்கிறேன்—!"

அவள் திடுக்கிட்டுப் போனாள். அது அம்மா குரல் இல்லை.

“யார் அங்கே?” எழுந்து நின்றாள். நெற்றியில் வேர்வை முத்திட்டது.

“யார் அங்கே?” யாருமில்லை. ஸன்னமாய் மூச்சுப் போல் குளிர்ந்த காற்று கிளம்பி முகத்து வேர்வையை ஒற்றியது. அவளுக்குப் புரிந்தது,

“அம்மா! அம்மா!” கதவைப் படீரென்று திறந்து கொண்டே உள்ளே ஓடி, இருளில் அவர்மேல் தடுக்கி விழுந்தாள். அவர் காலைக் கெட்டியாய் மார்போடு தழுவிக் கொண்டாள்.

“அம்மா, அம்மா, நான் உண்டாயிருக்கேம்மா!—”

அம்மா உடல் பூமிபோல் கிடுகிடென்று ஆடிற்று. மருமகளைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள்.

இருளில் அவள் முகத்தின்மேல் இரு இதழ்கள் உதிர்ந்தன. ▢

# உத்தராயணம்

ஆத்மகதியில் சற்று முன்னேற்றம் கண்டு விட்டால் முதலில் உணர்வது தன் தனிமை தான்.

நியாயமிருக்குமிடம் தெரிந்தும், தான் எடுத்துச் சொன்னால் செல்லாது என்ற தலை குனிவில் அடைத்துப்போன வாய்.

பாரதயுத்தம் இன்னமும் ஓயவில்லை. நாம் இன்னும் குருக்ஷேத்ரத்தில்தானிருக்கிறோம். காங்கேயர்கள் (பீஷ்மர்கள்) வீழ்ந்தவர்கள் வீழ்ந்தபடி; சாப்படுக்கை அன்று விரித்தது விரித்தபடி.

''Tommy எங்கிருந்தோ ஓடி வந்து என் முகத்தை ஓரிருதடவை முகர்ந்து பார்த்து பிறகு தலைமாட்டில் உட்கார்ந்து மூக்கை வானத்துக்கு நீட்டி ஒரு நீண்ட ஊளை—

இதுவேதான் என் உத்தராயணமா?

தூரத்தில் சிரிப்பு கேட்கிறது.

**தொகுதி: உத்தராயணம்**

அஜந்தா கொண்டைக்கு எல்லாருக்கும் கூந்தல் கொடுப்பனை இருக்காது.

நெற்றியிலிருந்து பின்னுக்கு இழுத்து, அழுந்த வாரி இறுகப் பிணைத்து எழுப்பிய கொண்டையின் கோபுரம் நெஞ்சை முட்டுகிறது. ஸ்தூபிபோல் உச்சியில் ஒரு குமிழ் வேறே; சிப்பைத் தப்பிவிட்ட பிடரிச் சுருள்கள் நினைவில் குறுகுறுக்கின்றன.

பிறப்போடு வந்து விட்டாற் போல் உடலோடு ஒட்டி வெள்ளை ரோஜா நிறத்தில் கடல் நுரையில் நெய்தாய ஆடையினூடே மார்க்கச்சு விண்ணென்று தெறித்துத் தெரிகின்றது. ரவிக்கை பூணாது, திரண்ட பனித்தோள் குமிழ்கள், கழுத்தின் விலாசம், யார் இவள் முகம் பார்க்கு முன்—?

''வயதானவர் மொட்டை மாடியில் படுக்கக் கூடாதுன்னு எத்தனையோ தடவை சொல்லியாச்சு. கேக்க மாட்டேன்கறேள் அப்பா—!''

தோளைக் குலுக்கும் கையைத் தூக்கக் கலக்கத்தில் திமிரப் பார்க்கிறேன். தூக்கம் கலையவில்லை, கனவு கலைந்துவிட்டது.

''எழுந்திருங்கோ அப்பான்னா!''

முடியை அள்ளிச் செருகிக் கொண்டு சாந்தா முகத்தில் தான் இன்று முதல் முழி. வெட்டுக்கிளி போல் லேசாக ஆகாயத்தைப் பார்த்து அஞ்சலி செய்யும் நாசிநுனியில், குந்துமணி. மண்ணைப் பிசைந்தவன் கிள்ளியெறிந்துவிட்ட தால் மூக்கு சற்றுமொண்ணை. முகத்தில் வெண்ணெய் பள பளக்கிறது. அவளும் பாவம் மாற்றி மாற்றிச் சந்தனத்தை அரைத்துப் போடுகிறாள்; மனமில்லாமல் மஞ்சளைப் பூசிக் கொள்கிறாள்; விக்கோ-டர்மரிக், கிளியர்ஸில், அப்பப்போ வர்த்தக ஒலிபரப்பில் என்னென்ன விளம்பரம் கேட்

கிறாளோ அத்தனையும் வாங்கியாகிறது. இன்று அமுங்கினாற்போல் இருந்தது; நளைக் காலை எழுந்து கண்ணாடியில் பார்த்தால் கிளைத்திருக்கிறது; உடனே உற்சாகம், அடுத்து உடனே அயர்வு. கொஞ்ச நாட்களாய் அவள் காலம் இப்படித்தான் தள்ளுகிறது. ஆயினும் பரந்த முகத்தில் பேரழகு ஒன்று உண்டு.

விடிவேளையின் அயர்த்தலில் கண்டது தோற்றம்!

இதன் தெளிந்த நிழல்தானோ?

கையை ஆட்டிவிட்டு சாந்தா இறங்கிப் போயாச்சு.

கீழ்வானத்தில் பெரிய யாகம் நடந்து கொண்டிருக்கிறது. மேகப்பாறைகள் நெகிழ்ந்து உடைந்து கரைந்து, ஆஹுதியில் கவிழ்கின்றன. தழல் ஆட்டம், வான் பூரா பரவுகிறது. சூடு உரைக்கவே நானும் எழுந்து இறங்குகிறேன்.

ஏணியிலிருந்து கால் தரையிலிறங்கினதுமே 'சுருக்' பல்லுக்கிடையில் தோன்றிய சாபத்தைக் கடித்து விழுங்குகிறேன். சேகரின் உபயம். பொழுது போகவில்லை. சொல்லச் சொல்ல வேளையோடும், வேளையில்லாமலும் முள் வேலிக்கு முடி வெட்டி (அவன்முடி சொல்லச் சொல்லத் தோளில் புரள்கிறது) மீசை ஒதுக்கி, வெட்டி வீழ்த்திய முள்ளை வென்னீரடுப்புக்காக, ஏணியடியில் சுவரோரம் சேர்த்து வைத்திருக்கிறான். வெய்யிலில் காய்வதற்காகத் தட்டிக் கொட்டிப் பரப்பி வைத்திருக்கிறான். வென்னீரடுப்புக்கும் அதை எரிக்கப் போவதில்லை. எனக்குத் தெரியும். முள்ளைக் கையில் குத்திக்கொள்ளாமல் எரிக்கத் தனிப் பொறுமை சிரத்தை, Knack வேண்டும்.

கிணற்றடியில் வாழை இலைகள் காற்றில் நர்த்தன மாடி வரவேற்கின்றன. சத்தியமா (விட்டேன்) அவை

என்னை அடையாளம் கண்டுகொண்டுதான் அப்படிச் செய்கின்றன. மாலையில் ஒன்றிரண்டு வாளிகள் நான் இழுத்துக் கொட்டுவதைக் கொண்டு, இலை ஒவ்வொன்றும் ஆள் படுக்கலாம். அல்ல பாவாடை கட்டிக்கலாம். என்ன ஜாதியோ தெரியவில்லை. தாருக்கு இன்னும் எத்தனை நாள் போகணுமோ?

எங்களை இலையைத் தொடக் கூடாதுன்னு பழியா நிக்கறேள், மத்யானம் பாருங்கோ பாளம் பாளமாச் காத்து கிழிச்சுடறதே, என்ன சொல்றேள்?

காற்றுக்கு அலங்கோலமாக அதற்கு இஷ்டம், அதற்காக உன் கத்திக்கிரையாகக் காத்திருக்குமா?

—நான் சொல்லவில்லை, வாய்திறந்து சொல்லிவிட்டால் பந்து என்மேலேயே திரும்பி வந்து மோதும்.

''பிராம்மணனுக்கு வயசுக்கேத்த பேச்சா இருக்கா பாரு!''

கண்ட கனவுக்கேற்ற வயது கடந்து எத்தனையோ வயதாகிவிட்டபோதிலும் வயதுக்கேற்ற கனவு என்று காண வருமோ?

நடுப்பிள்ளையும் அடுத்தவனும் பல் தேய்த்துக் கொண்டிருக்கிறான்கள்.

''இந்த வீட்டில் ஒரு பேஸ்டா, மண்ணா, ஒண்ணு உண்டா? எப்பவும் மாசக்கடைசிதானா?''

''ஏன், மண் இருக்கே,''

இவனுக்கு அவன், அவனுக்கு இவன், சமயத்துக்கேற்ப ஒருவனுக்கு ஒருவன் உடுக்கடி; இவர்கள் பாஷையில் 'Boss'.

Tommy வாலையாட்டிக் காலை வந்தனம் தெரிவித்துக் கொள்கிறது, எங்கிருந்தோ, என்றோ வந்தது. எங்கோ போகிறது, வருகிறது. திடீரென்று நினைத்துக்கொண்டு கனகாரியமாக ஓடுகிறது. எங்குபோனாலும், வந்தாலும் இரவு இங்குதான். எல்லாம் பகல் பத்துமணிக்கும். இரவு பத்துமணி வாக்கிலும், கிணற்றடியில் வைக்கும் ஒரு கவளம் சோறு பண்ணும் வேலை. "தோதோ" கூடக் கொட்ட வேண்டாம், எங்கிருந்தாலும் பறந்தோடி வந்து விடுகிறது. சொறி பிடிக்கறது, சொறி உதிர்கிறது. ஆனால் கண்களில் மட்டும் உள்ளொளியின் அழகு மங்கவில்லை. வாலையாட்டிக்கொண்டு நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு, 'நான் இருக்கிறேன் உனக்கேன் கவலை?' என்று கண்கள் பேசுகின்றன.

"சனியனே எட்டிப்போ! காலைச் சுத்திண்டு!"

உதையை வாங்கிக் கொண்டு, குரைக்கக் கூட இல்லை. தென்னை மரத்தடியில், தான் ஏற்கெனவே பறித்து வைத்திருக்கும் பள்ளத்துக்குப் போய்ப் படுத்துக் கொள் கிறது.

"டே, ரொம்பப் பொறுமையா இருக்குடா!"

"Yes, Yes, முன்ஜன்மத்தில் ஸ்வாமிஜியா இருந்திருக்கு மோடா?"

ஈதெல்லாம் நாயைக் குறிப்பிடுவன அல்ல. என் காது கேட்க என்னைக் கேலி பண்ணுகிறார்களாம். தனிப்பட்ட முறையில் அப்பாவை அல்ல, தலைமுறையைத் தலை முறையின் பழிப்பு. எங்களை அவர்கள் பங்கப் படுத்து கிறார்கள்.

நடுப்பிள்ளை என்னைக் கேட்கிறான்: 'என்ன அப்பா வாரம் ஒருநாள் மௌன விரதம் என்று வாயைஅடைச்சுட்டு

கண்ணால் பேசிக் கொண்டிருக்கிறாய். பேசுகிறாயா சுட்டெ ரிக்கிறாய். ஒரு கதவை மூடி விட்டு இன்னொரு கதவைத் திறந்து விடுகிறாய். அவ்வளவு தானே! இப்படிக் கண்ணால் கரிப்பதற்குப் பதிலாக வாயைத் திறந்து எங் களைத்திட்டிவிடலாம். ஆமாம் நாங்கள் கொம்மாளம் தான் அடிப்போம். ரேடியோ சிலோன் தான் கேட்போம். முழு வால்யூமில்தான் முடுக்கி விடுவோம். சினிமாப் பேச்சுத்தான் பேசுவோம். நீ பொறுத்துண்டு தானிருக்கணும். இல்லாட்டி இதென்ன மௌனம்? உனக்கு 'ததரினன்னா'ன்னா எங் களுக்கு "லலல்லா." நாங்கள் நீயா? வேலையும் கிடைக்க மாட்டேன்கிறது. எங்களுக்குப் பொழுது போக்குக்கு என்னதான் வழி? வீட்டுக்குவீடு போய்ப் பாருங்கள். சத்தம் உங்களுக்கு B.P. எங்கள் எங்கள் பீதிக்கு அதுதான் மறதி, வழித்துணை. கடன்வாங்கியோ, திருடியோ கலகலப்பாய் இன்னிக்கு இன்றையோடு போச்சா? நாளையை நாங்கள் எங்கே கண்டோம்? உங்களுக்கு நாளை இருந்தது.'

நான் பதில் பேசவில்லை. பேசுவதில்லை, பேச்சு நியாயம் எப்பவோ தாண்டியாச்சு.

கண்ணன் அந்த நாளிலேயே செல்லம், கொடுத்த சலுகைகளுடன், தானாக எடுத்துக் கொண்ட உரிமைகளும் இப்போ சேர்ந்துவிட்டன. அவன் தம்பி மௌனமாய் எனக்கு விழும் சாட்டையடியைப் பார்த்துக்கொண்டு நிற்கிறான். Boss இன் hatchet man.

நான் இன்னும் வெறுக்கவில்லை. ஆனால் இவர்கள் உலகத்தை வெறுத்தாச்சு.

நட்ட பயிர் அம்புகளாய்க் காய்க்கிறது. சரப்படுக்கை யில் படுத்து, உன் உத்தராயணத்துக்குக் காத்திரு.

"கிருஷ்ணா!" அது எங்கே கிருஷ்ணா என்று கத்து கிறது? அருவருப்பான, அபஸ்வர அழுகையின் தேம்பல்

போன்ற ஒரு சத்தம். ஆனால், அதைக் கேட்டதும் ஹரிணி பாதி பேசும் படத்தை மார்பில் கவிழ்த்துக் கொண்டு படுத்த வண்ணமே கன்னத்தில் போட்டுக் கொள்கிறாள். உண்மையிலேயே பக்தி சுபாவம் உள்ளவள்தான். அதுவும் இதுபோன்று நோகாமல் புண்ணியம் சம்பாதிப்பதில் பலே கெட்டிக்காரி.

காலைக்கும் மதியத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்!

இங்கேயே தெளித்தாற்போல் எட்ட எட்டத்தான் வீடுகள். மனைகளை வாங்கிப் போட்டவர்களுக்கு வீடு கட்ட இன்னும் வசதி கிட்டவில்லை. உச்சிவெய்யிலில் பூமி பாளம் பாளமாக வெடித்திருக்கிறது. தூரதூரக் கட்டடங்கள் கானலில் நடுங்குகின்றன. இது வரை இரண்டு தடவை கிணற்றிலிருந்து மொண்டு மேலே கொட்டிக்கொண்டாச்சு. காய்ஞ்சாச்சு, ஆனால் உடல் வாணலியாய்ப் பொரிகிறது. இனிமேல் ஈரம்பட்டால் இந்த வயதுக்கு மார்பில் கொலுசு தான். ஒரு தினுசான மயக்கமா? மதிய உறக்கமா?

அந்தந்த நாளுக்கு அதன் போக்கை நடாத்த தேவதை உண்டோ? உண்டெனில் அவள்தான் இன்றுகாலை எனக்குத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டனளோ?

சூரியனிடமிருந்து லகானை வாங்கிக் கொண்டா? பிடுங்கிக் கொண்டா? ரதத்தை அவள்தான் நடத்துகிறாளோ? இவன் பொக்கை வாயை இளித்துக்கொண்டு பக்கத்தில் உட்கார்ந்திருப்பான். ஒரு வேளை, இந்த வேளைக்கு ட்யூட்டி மாறி, தேவதையே வேறோ? நமக்குத்தான் காலடியில் இடறும் கூழாங் கல்லெல்லாம் சாமியாச்சே? அதனால் தான் வெய்யில் இப்படிக் காய்கிறதோ? இல்லை. நான் தப்பாய் நினைக்கிறேன். காயத்தானே வெய்யிலே.

வாழையடியில் ஒரே அமளி, எட்டிப்பார்க்கிறேன்,

இரு கழுத்துகளும் ஒரு கழுத்தாய்ப் பின்னிக்கொண்டு ஈருடல் இருதலையில் ஒரு புதுப் பட்சியை உருவாக்கிக் கொண்டு இரு வான்கோழிகள் சண்டையில் உருள்கின்றன. கழுத்துகளை லேசில் விடுவித்துக் கொள்ள முடியவில்லை போலும்! அந்த உருவிலேயே புரண்டு புரண்டு முள்வேலி யில் ஒரு சந்தின் வழி வெளியேறி, அப்பாடா! எப்படியோ ஒன்றினின்று ஒன்று விடுபட்டு உருவம் பிளந்து, தொப்பைப் பாட்டிகள் போல் லொங்கு லொங்கென்று ஓடுகின்றன.

பின்னால் ஒரு குடிசையில் ஒரு ஸாஹிபா வளர்க் கிறாள். ஆனால் அவற்றிற்கு வேட்டைக்காடு இங்கேதான். மல்லிச் செடியை மிதித்துக் கொண்டு, கொத்தமல்லி விதை யைக் கொத்திக் கொண்டு, கறிவெப்பிலைக் கன்றை வேரோடு சாய்த்து—ஹரிணி வாய் விட்டு அழுதே விட்டாள்—கண்ட சேற்றை மிதித்துக்கொண்டு ஏமாந்தால் சமைய லறைவரை நீளும் கால்கள்.

Tommy தென்னங்கன்றடியில் அதுவே பறித்துக் கொண்ட குழியில் படுத்திருக்கிறது. வெய்யில் தாங்காது வயிறு கொல்லன் துருத்திபோல் குபுக் குபுக். என்றைக்கு ஒரு நாள் மண்டை கலங்கி வெடுக்கென்று பிடுங்கப் போகிறதோ? இப்போது அதற்குக் கோழிகளைத் துரத்தக் கூடத் தெம்பு இல்லை. எனக்குத் தெரிந்தவரை இது குரைக்கிற நாயுமல்ல, கடிக்கிற நாயுமில்லை. நாய்களில் ஊமை உண்டோ? அப்போ இதன் பிறவிப் பயன்தான் என்ன? ஒரு காரியமுமில்லாமல் கனகாரியமாக குடுகுடு வென்று ஓடுவதும்...ஓடுவதும்...ஓடுவதும்...அவ்வளவு தானா?

அலமாரியிலிருந்து கைக்குத் தட்டுப்பட்ட புத்தகத்தை இழுத்துப் புரட்டுகிறேன். மத்வாசாரியரின் "சங்கர திக்

விஜயம்.'' வயதுக்கேற்ற புத்தகம்தான். ஆனால் இந்த வேளைக்கு மண்டையில் ஏறுமா? ஏதாவது ஜேம்ஸ் பாண்ட் வரும் என்று நினைத்தது போக! தோல்வி காணாத பாண்ட். அடி, வெட்டு, குத்து, சுடு, 007 சட்ட பயமில்லாமல் யாரை வேணுமானாலும் கொல்லலாம். சூப்பர் மேன் பாண்ட்.

மண்டை இடிக்கிறது, பெருமாள் எப்பவோ வந்து தயாராக வைத்திருந்த ஏனத்தில் பாலை ஊற்றி விட்டுப் போய் விட்டான். ஹரிணி தயவு பண்ணணும். ஆனால் அவள் அயர்ந்து தூங்குகிறாள்!

பிற்பகல் வாடைக் காற்று கிளம்பி விட்டது. வாச லுக்கு வெளியே புல் தரையில் சாய்வு நாற்காலியைக் கொணர்ந்து போட்டுக் கொள்கிறேன். வானத்துக்கும் வெய்யிலுக்கும் காற்றின் மத்யஸ்தம் நடந்து கொண்டிருக் கிறது. வெறிச்சிட்டுக் கிடந்த வான வீதியில் போக்கு வரத்து தொடங்கி விட்டது. மேகங்களின் பவனி. பட்சி ஜாலங்களின் விதவிதமான வரிசைக் கட்டுக்கள். ஆட்டத் தில் கையிலிருந்து துள்ளிக் கம்பளத்தில் விழும் சீட்டில் காண்பது போல, பட்சிக் கூட்டங்கள் மேகத்தின் பின்னணி யில் விதவிதமான பொட்டுகள் வைக்கின்றன. மேற்கு, மணக்கோலம் பூணுகிறது. பெண்ணுக்கு எந்தப் புடவை யும் பிடிக்கவில்லை. அவிழ்த்துப் போட்ட புடவைகள், வித விதமாய் போர் போராய்க் குவிகின்றன. ஜரிகைகள், கலர் கள், மோஸ்தர்கள் மிளிர்கின்றன.

வானத்தின் கவானில் லேசாய் ஒரு தேமல் படர்ந்திருக் கிறது.

கிணற்றடியிலிருந்து, வாய் குழறியபடி எங்கேயோ சுட்டிக் காட்டிக்கொண்டு ஹரிணி ஓடி வருகிறாள். பதறிப்

போய்ப் பார்க்கிறேன். தோய்க்கிற கல்லின்கீழ் விட்டிருக்கும் சந்தில் பாம்பு சட்டை.

ஹரிணி குதிக்கிறாள், துள்ளுகிறாள், துடிக்கிறாள், முற்றுப்புள்ளியில்லாமல் கத்துகிறாள். "அத்வானம் பிடிச்ச இந்த இடத்தில் வீட்டை வாங்கிப் போட்டுட்டு, ஒரு நாளைப் பார்த்தாப்போல் நான் வயத்தில் நெருப்பைக் கட்டிண்டு... ஐயையோ என்னால் இனிமேல் முடியாது. உங்கள் வீட்டை நீங்கள் காவல் காத்துண்டு கிடங்கோ. எங்களை எங்கானும் மயிலாப்பூரில் குடி வெச்சுடுங்கோ"—மூச்சு விடாமல் வார்த்தைகளின் கோவை கூட சரியாகப் புரியாமல் இன்னும் ஏதேதோ குளறுபடி.

"ஆமாம் அதென்ன மயிலாப்பூர் கணக்கு? மாம்பலம், சைதாப்பேட்டை, வடபழனி, சாலிக்ராமம், நங்க நல்லூர், வேளச்சேரி-பேர்களுக்கா குறைச்சல்? இடம்தான் ஊசி முனைக்குக்கூட வழியில்லை.

"நான்தான் லப லப லபன்னு அடிச்சுக்கிறேன். ஆனால் அழுத்தமா உங்களுக்கு எல்லாத்துக்கும் ஒரு பதில் தானே! மௌனம் ஸர்வார்த்த ஸாதகம்—"

தைரியத்துக்கு அவள் முதுகில் ஒரு 'ஷொட்டு' கொடுக்கிறேன். அவளுக்கு முகக்கடுப்பு இதற்குமேல் சாத்தியமா? என் கையை உதறுகிறாள்.

"காடு வாவா என்கிறது. என்ன வேண்டிக் கிடக்கு?" ஹரிணிக்கு என்றைக்குமே ஒரு வழிப் பாதைதான். வீட்டுக்கு வந்த புதிதில், அந்த முகக்கடுப்பே அவளுக்கு ஒரு களை கொடுத்தது. அவள் வீட்டில் ஆறு அண்ணன் தம்பிகளுக்கிடையில் அவள் ஒரே பெண். உடன் பிறந்தான்கள் எல்லாம் நல்ல நிலையில் இருக்கிறார்கள். அந்தச் செல்லம் அவளுக்குக் இன்னமும் செல்கிறது. அந்தக் கோபத்தின்

அழகே என் நெஞ்சை எத்தனை முறை அள்ளியிருக்கிறது! ஆனால் இப்பவோ—

தோளை வியர்த்தத்தில் தூக்குவதைத் தவிர என்னிடம் வேறு பதில் இல்லை. வெய்யிலடித்தால், மழை பெய்தால், பாம்பு சட்டையுரித்தால், அசல் வீட்டுக் கோழி இங்கு மேய்ந்தால், Tommy-க்கு என்றேனும் பைத்தியம் பிடித்தால் சைக்கிளைப் போட்டுக் கொண்டு கறிவேப் பிலைக் கொத்துக்குக் காய்கறிக் கடைக்குப் போனால், அங்கு கடைக்காரன் கைவிரித்தால், வழியில் சைக்கிள் பங்க்ச்சர் ஆனால், வேலைக்காரி ஒரு வேளைக்கு வரா விட்டால், சினிமாவுக்குக் கிளம்பிப் போய்ச் சேருவதற்கு முன் படம் ஆரம்பித்து விட்டால், தையல்மெஷின் ரிப்பேர் ஆனால், திடீரென்று மின்சாரம் தோற்று விட்டால், எல்லாம் என் குற்றம்தான். "அத்வானம் பிடித்த"— பல்லவிக்கு ஈதெல்லாம், இன்னும் சொல்ல விட்டுப்போன தெல்லாம் சரணங்கள் தாம்.

"மொட்டைமாடியில் காத்து வாங்கலாம்னா படிகிடை யாது. என்ன வீடுகட்டி வாழறோமோ?"

மாடிப்படி கட்டுவதற்குள், பணம் போண்டி. அப்படி யும் விடவில்லை. ஏணி வைத்து ஏறுகிறோம்.

"பிராமணன் bar விளையாடற வயசைப்பார்!" ஹரிணிக்கு ஏணியில் ஏறமுடியாத எரிச்சல். என்றுமே அவளுக்கு எல்லாரைக் காட்டிலும் உசிர் வெல்லம். உடம்பு வேறே தடித்து விட்டது.

ஆனால் அவள் பயங்களை மறுப்பதற்கில்லை. இங்கு இயற்கை, தன் ஆட்சியை பட்டண வாசத்தின் தடங்க லின்றிச் செலுத்துகிறது. வீட்டைச் சுற்றி முள்வேலி. பூமி யில் வளைகள். எதிலிருந்து எது வேண்டுமானாலும் வர

லாம். என்னைக் கேட்டால்? பூமியென்றிருந்தால், வளைகள், குழிகள், வெடிப்புகள், ஏன் இங்கிருந்து மயிலாப்பூரில் அப்பர் சாமி கோவில் தெரு, பழைய நெ. 20, அடுக்குள் தொட்டி முற்றத்தில் ஜலதாரைவரை சுரங்கமே ஓட வழியுண்டு. நானென்ன செய்ய?

பாட்டி ஆசையாகப் பேரக்குழந்தைகளுக்கு, வடாம், வற்றல் வறுத்து பொட்டலங் கட்டி அங்கு போட்டால், அந்தப் பக்கம் மேடாயிருந்தால், அந்த மேடு ஒரே சீராய் இந்தப் பக்கம் தாழ இறங்கினால்— எந்த மூஞ்சூரைக் கேட்பேன்? உஷ், வேண்டாம். தமாஷுக்கு அங்கும் லாயக்கில்லை. இங்கும் லாயக்கில்லை! சிரிக்கத் தெரிந்திருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம்?

சென்ற மூன்று வருடங்களாக சென்னைக்கும் லண்டன் வெதர் வந்து விட்டது, 'திடீர்' கோபம் திடீர் அழுகை; திடீர் மூக்கைச் சிந்திப் போடு, உடனே சிரி எல்லாம் நம் மாதிரிதான்.

நெற்றி கொப்புளிக்கிறது. இந்த திடீர் மூட்டம் எப்படி வந்தது? புழுக்கம் எனக்கு மூச்சுத் திணறுகிறது. காற்றின் ஓட்டத்தை ஆகாயப் போலீஸ்காரன் 'ஹோல்ட் ஆன்' பண்ணிவிட்டு என்ன கேஸ் எழுதுகிறான்?

தரையிலிருந்த குப்பை எல்லாம் வாரி, முகத்தில் தூவிக்கொண்டு ஒரு பெருமூச்சுக் கிளம்பி, சுழல் காற்றாக மாறுகிறது. ரஸகுண்டு போல் நீர் கோர்த்துக் கொண்ட மேகங்கள் ஒன்றுடன் ஒன்று இடித்துச் சிர்குலைகின்றன. ஒன்றிரண்டு பாஷ்பங்கள் கூட மேலே உதிர்கின்றன. வானம் ஒரேயடியாய் இருள்கின்றது, இதோ ஆகாச கங்கை அவிழப் போகிறாள். ஈஸிச்சேரை மடக்கிட வேண்டியது தானா?

இல்லை. ஆர்ப்பாட்டத்துடன் சரி. எண்ணெய் கடைச் செட்டியார் சத்தம் போடாத சிரிப்பில் முகம், தோள், தொந்தியெல்லாம் பிசைந்த மாவாய்க் குலுங்குவது போல், தனக்கே உரிய ரகசிய சிரிப்பில் மூட்டம் கலைந்து விட்டது. வானத்தில் இங்குமங்குமாய்ப் பிசுபிசு பஞ்சு மிட்டாய்ப் படர்ச்சிகள். புலு புலு ரோஜா மொக்குகள். கசங்கிய மாலியங்கள் சிதறிக் கிடக்கின்றன. இருளை இதமாய், நல்ல வார்த்தை சொல்லி ஒதுக்கிவிட்டு மலர்ந்த மினுமினு வெளிச்சம், இடத்துக்கே தண்ணொளியை வர்ணமாய்த் தீட்டுகிறது. ஏதோ ஒரு abstract ஓவியம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

பகல் கனிந்து பழம் போல் நழுவி இருளின் திறந்த வாய்க்குள் விழப்போகும் ஒரு தினுசான அச்சம்தரும் இசை கேடான முகூர்த்தம். கயிறு மேல், கழைக் கூத்தாடியின் கர்ணத் தருணம் எனக்குச் சொல்லத் தெரியவில்லை. சமயங்கள் ஒருங்குகின்றன. சாமக்ரியைகள் சேர்கின்றன, காத்திருந்த ஓரையும் வருகின்றது, நேர்கிறது, கடக்கிறது. கழிகிறது. இருளும் ஒளியும் கலந்த வேளை, ஆனால், இதோ இரவு தோன்றி விட்டேன் எனும் அந்தக் கலவை நேர்ந்த அந்த அசல் சமயம், அந்த ரஸாயனம், நம் இத்தனை காவலையும் நழுவி விடும் ஜாலம் என்ன?

ஆனால், இதெல்லாம் என்ன அசட்டு யோசனை? யாருக்கு என்ன பயன் எனச் செவிட்டில் அறைந்து விளக்குவதுபோல் புறப்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன.

கண்ணன் Bond box உடன் நிற்கிறான். எப்போ கையில் பெட்டியைத் தூக்கி விட்டானோ இரவு வீடு திரும்பப் போவதில்லை என்று அர்த்தம். பாட்டி வீடோ, மாம்பலத்தில் ரவியோ மூன்றாம் காட்சி பார்த்து விட்டு மிச்சம் போதுக்குத் தலைக்கு அணை, பெட்டியை வைத்துக் கொண்டு ப்ளாட் பாரத்தில் தூங்கினால்-எனக்கென்ன?

அவர்களும் அதைத்தான் விரும்புகிறார்கள். தங்களுடைய சந்தோஷம் தங்களுக்குச் செலுத்திக் கொள்ளும் முதல் கடமை, மிச்சமெல்லாம் துச்சம் எனப்பாவிக்கும் அவர்கள் தத்துவத்தில் ''எங்கே போகிறாய்? எப்போ வருவாய்?'' எனும் கேள்வியே அவர்களுடைய அல்வாத் துண்டில் மயிர் சிக்கினாற் போல். எனக்கும் வயிற்றைக் குமட்டுகிறது.

கண்ணன் என் எதிரே நின்று கொண்டிருக்கையிலேயே, சேகர் அவனைத் தாண்டி அவசரமாகப் போகிறான். Boss அவனுக்கும் சேர்த்துச் சொல்லி விட்டதாக அதனுடைய அர்த்தம். ஆகையால் அவன் தனியாகச் செலவு பெற்றுக் கொள்ளத் தேவையில்லை.

இப்போ எனக்கு நினைவு வருகிறது. எல்லாம் ஏற்கெனவே நினைப்பிலிருப்பவைதான். படங்கள் திடுக்கென்று எகிறுகின்றன.

இப்போ தான் மூன்று வருடங்களுக்கு முன் என் தாய் காலமானாள்.

நான் வழக்கமாய் வீடு திரும்பும் வேளைக்குச் சற்று நேரம் தப்பி வந்தாலும் வாசற்படியில் வந்து உட்கார்ந்து விடுவாள்.

''என்னம்மா இங்கே உட்கார்ந்திருக்கே?''

''ஒன்றுமில்லை. உள்ளே புழுக்கமாயிருந்தது. ஏதோ காத்து சில்லுனு வரதேன்னு...''

நானும் பக்கத்தில் அமர்கிறேன். பாஷையே பரிபாஷை. உண்மைக் காரணம் எங்களுக்குத் தெரியும். ஆனால் வெளிப்படுத்திக் கொள்ளமாட்டோம், உள்ளேயிருந்து குரல்கள் வேணுமென்றே எங்களுக்குக் கேட்கும்படிக் கிசுகிசுக்கின்றன.

"அம்மாவும் பிள்ளையும் பேசிக்கறா பார்த்தையா?"

நாங்கள் எங்கே பேசிக்கிறோம்? எங்களைப் பிணைக் கும் மௌனச் சரடே எங்கள் பேச்சென்றால் நாங்கள் நிறையப் பேசுகிறோம்.

'அம்மாவும் பிள்ளையும்' என்கிறார்கள். ஆனால் அவர்கள் பொருள்படுத்துவது வேறு, பல்லைக்கடித்துக் கொண்டு 'கிழங்கள்! அசடுகள்!'

அட, இங்கே இன்னொரு செட் கிளம்புகிறதே!

சாந்தா, தோள்பட்டையில் மேலாக்கு மடிகளைச் சீண் டிய வண்ணம், "அப்பா, கட்டை தொட்டி நாடார் டி. வி. செட் புதுசா வாங்கியிருக்கார். எங்களை வரச்சொன்னார். போயிட்டு வரோம்."

என் புருவங்கள் என்னையுமறியாமல் கேள்வியில் உயர்ந்திருக்க வேண்டும், ஏனெனில், காட்சி முடிந்து திரும்பப் பத்து, பத்தரை ஆகிவிடுமே! தனி வழி, பெண்டு கள், இரவு வேளை...

"அதெல்லாம் ஒண்ணுமில்லை." —வெடுக்கென் கிறாள். இத்தனைக்கும் நான் வாய் திறக்கவில்லை. ஆனால் சாந்தா இந்த வருடம் 10+1. ஏற்கெனவே நிறைய மார்க்கு வாங்குவாள். ஆகையால் நான் வாய் திறக்கு மளவுக்கு அவள் மக்கு இல்லை. என் வாயை அடைக்கவும் அவளுக்குத் தெரியும். பக்கபலம் வேறு இருக்கிறதே!

"முன் நிலாத்தான். நியூஸ் வரைக்கும் இருக்க மாட்டோம். மெயின் முடிஞ்சவுடனே திரும்பிடறோம். அப்பா, நீங்கள் டி. வி. வாங்கியிருந்தால், பிறத்தியார் வீட்டில் எங்களுக்கென்ன வேலை?"

ஹரிணி, கொண்டையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டே "மோருஞ் சாதம் கரைச்சு, பழையது மூலையில் வெச்சிருக்கேன். வீடு ஜாக்கிரதை!"

இப்போ வீட்டில் நான் மட்டும்தான். அரணை ஒன்று என் காலில் உராய்ந்து விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிறது. ஒன்று திடீரெனப் புலனாகிறது. மனிதனைத் தவிர மற்றெந்தப் பிராணியும் எப்பவும் ஏதோ ஒரு ஜோலியில் ஈடுபட்டுத்தானிருக்கிறது. பொழுது போகவில்லையே எனும் நிலை அதற்கில்லை, காலப்ரமாணத்தில் மிகச் சிறிய அளவைக்கூட அதன் முழுமைக்கு வாழ்வதனால், அதற்குப் பொழுது போதவில்லை. மனிதன் தான், மோவாயைக் கைக் கிண்ணத்தில் ஏந்திக் கொண்டு, காலைக் கால் மேல் மடித்துப் போட்டுக் கொண்டு, அல்லது. ஒடுக்கிக்கொண்டு, Rodin அப்படியே ஒரு சிலை வடித்து, அதையே காயமான நியாயமாகச் சாதித்துக் கொண்டு...

நான் இப்போது உணர்வது என் தனிமையையா வெறுமையையா!

வானத்துத் தேமல் நிலவாகப்பூத்து விட்டது. ஆனால் என் கண்ணில் சதையால், பார்வையின் சிதைவில், எட்டாய் விண்டு தெரிகிறது. பூசனிபத்தைகள்.

முள்வேலியில் காட்டாமணிச் செடி, இடையிடையே பூவரசு, நுணா, ஒதிகை மரங்கள் நெருக்கமாக இலை பின்னிக் கொண்டு, நான் ஒரு குஞ்சுபோல், ராக்ஷஸக் கூட்டில் காத்திருக்கிறேன். எதற்கு?

கொஞ்ச நேரம் மொட்டைமாடியில் காற்று வாங்குவோமா!

ஏன் கனத்தடியில் ஏணி படிக்குப்படி முனகுகிறது.

மாடியில் உடம்பை நீட்டுகிறேன். ஆ! இஸ் திஸ் பியூட்டிபுல்!

தோள்மேல் சுதந்திரமாய்ப் போட்ட கைப்போல்; தண்டவாளம், எட்ட, தொடுவானை அணைத்து ஓடுகிறது.

திடீரென வானத்தில் பூக்கள் மண்டிக் கிடக்கின்றன. மொட்டுக்கள், மலர்கள், பிய்ந்த இதழ்கள், மூச்சுவிடும் விண்மீன்கள், சின்னதும் பெரிதுமாய்ச் சீனாக்கற்கண்டு கட்டிகள், வைரச்சிதறல்கள், உறைந்துபோன கண்ணீர்த் துளிகள்—இதய உதிரிகள் — இவற்றிலிருந்து இழுத்த ஜிகினாச்சரடுகளில் ஏதேதோ நினைவுகள், தோற்றங்கள் சம்பந்தா சம்பந்தமில்லாமல் கோவிலில் விதவிதமான காய் கறிகளைக் கட்டித் தொங்கவிட்டு ஒரு உற்சவமாமே! அது மாதிரி—

—என் பையல் பருவத்தில், நான் வளர்த்த ஒரு குச்சுநாயின் சடைமறைத்த முகம்;

—இளம் வயதில் மரித்த என் தம்பி;

—ரீதி கௌளையின் ஒரு சொகுஸு வளைவு;

—ஹரிணி கொடியாயிருந்த நாளில் அவள் கூந்தலி லிருந்து பிய்த்தெறிந்த தாழம்பூ மடல்;

—இரவுவேளை கடலோரம் அலைகள் மோதி மீள்கை யில் விட்டுச் செல்லும் நுரைத் துளிகள். பொரியும் முத்துக் கொதிகள்;

—டெலிபோன் மணியோசை;

—தச்சன் இழைப்புளியிலிருந்து கூடம்பூரா சிதறும் மரச் சுருள்கள்;

—குப்பையில் மாணிக்கக் கற்கள்;

—கண்ணீரும் கம்பலையுமாக அம்மாவின் முகம்; (என்?)

—கன்யாகுமரியின் மூக்குத்தி—

இன்னும் ஏதேதோ சொல்லுக்குள் அடங்கினவை, அடங்காதவை. திடீரென இதுவரை எப்படியும் தோன்றாத எண்ணம் ஒன்று அதன் பெருமிதத்தில் தானே உடல் விம்முவதாகத் தோன்றுகிறது. இந்த மொட்டைமாடியின் அடைப்பில் அடங்கிய வானவரைக்குள் அடங்கிய இத்தனை சொத்துக்களும் என்னுடையதுதானே?

சரி, என்ன செய்யப் போகிறாய்! அத்தனை நட்சத்திரங்களையும் வாரிக் கூடையில் அள்ளிப் போட்டுக் கொண்டு, பீச்சில் சுண்டல் விற்கப் போகிறாயா! அல்லது நட்சத்திரப் பூக்கள் தொடுக்கப் போகிறாயா!

இந்த எண்ணத்தின் மிதப்பே அரை மயக்கம். கால் தூக்கம். கால் நினைவில் எல்லாம் ஒன்றி குழம்பி விழித்துக் கொண்டிருந்தேனா, மயங்கிக் கிடந்தேனா, தூங்கியே போய் விட்டேனோ?-திடீரென Brindavan Express இன் அறை கூவலில்தான் நினைவின் இயக்கம், தடுத்த நீர்வீழ்ச்சி போல் தடதடவென என்மேல் இறங்கிற்று.

புகைப் போக்கியின் வழி சமையலறையில் ஏதோ பண்டம் உருளும் சப்தம்.

இரண்டு நாட்களாக ஒரு மஞ்சள் பூனையின் நடமாட்டம் இருக்கிறது என்று எனக்குத் தெரியும்.

ஏணிப்படியில் கால் வைத்ததும்—

ஏணிதான் தரையில் சரியாகப் பதிந்ததில்லையோ,

ஏற்கெனவே நைந்து, கட்டு முறிந்ததோ,

இசைகேடாய், தூக்கக் கலக்கத்தில் நான்தான் ஒரு பக்கமாய்ச் சாய்ந்து விட்டேனோ? —

ஏணி நிலை பிசகி, ஏணியோடு, சேகர் வெட்டிச் சுவரோரமாய்ப் பரப்பி வைத்திருக்கும் முள்படுக்கையில் சுமார் இருபது அடி உயரத்திலிருந்து—

முட்கள் வாழைப்பழத்தில் ஏறுவதுபோல் முதுகில், பின் மண்டையில், சப்பையில் நுழைகையில் என்னையறியாமல் வீறலில் வாய் திறந்தது. ஆனால் சத்தம்வரவில்லை, ஒருக்களிக்க முயன்றேன். முடியவில்லை. இடது பக்கம் மறுத்துவிட்டது ! Oh my God! வாய் பொத்திய நிசப்தம். பயத்தில் இலை கூட அசையவில்லை. எனக்கு என்ன நேர்ந்து விட்டது. No, No. No.

பல்லிவாயில் தும்பிபோல், வார்த்தைகள், அலறல்கள் தொண்டைக்குள் இறக்கையடித்துக் கொண்டன.

இனி என்ன?

சாந்தியும் ஹரிணியும் வரும்வரை இங்கேதானா?

வந்தாலும் அவர்கள் என்னை அவர்களிடையே தூக்கிக் கொண்டு போய் உள்ளே சேர்க்க முடியுமா?

முடியாவிட்டால், இரவு பூரா இங்கேயே இப்படித் தானா?

Tommy எங்கிருந்தோ ஓடிவந்து என் முகத்தை ஓரிரு தடவை முகர்ந்து பார்த்து பிறகு தலைமாட்டில் உட்கார்ந்து, மூக்கை வானத்துக்கு நீட்டி ஒரு நீண்ட ஊளை—

இதுவேதான் என் உத்தராயணமா?

தூரத்தில் சிரிப்பு கேட்கிறது.

# அரவான்

இரண்டாவது உலகயுத்த சமயத்தில், அது பற்றி இருந்த அப்போதைய மன நிலையில் இக் கதை உருவாகியது.

மனிதாபிமானமும், சமுதாய போராட்டமும் என் எழுத்தில் பிரதிபலிக்கவில்லை என்று என் மேல் ஒரு புகார்உண்டு. மனிதாபிமானம் என்றால் தனியாகத் தன் பேரைச் சொல்லிக்கொண்டு மேலிருந்து இறங்குமா? அறியேன்.

''எல்லாம் பாரதயுத்தம் மாதிரிதான்— எல்லாரும் தோத்தாங்க; எல்லாரும் ஜெயிச்சாங்க. தோத்தவனும் கஷ்டப் பட்டான்; ஜெயிச்சவனும் சொகப்படல்லே. என்னவோ காரியம் சாதிக்கிறாப்போல சண்டை போட்டதிலும் கொறைச்சலில்லே. நாள் பாத்ததிலே கொறைச்சலில்லே. பலி போட்டதிலே கொறைச்சலில்லே—அரவான் பலி!''

**தொகுதி: ஜனனி**

குழந்தையின் வீறலைக் கேட்டு கிணற்றின் பிடிச் சுவரின்மேல் தவலையுடன் தாம்புக் கயிற்றை அப்படியே போட்டுவிட்டு, உள்ளே ஓடி வந்து குழந்தையை வாரினான். பொங்கி வழியும் வியர்வை, மூலவர்மேல் பூசிய எண்ணெய் போல் அவன் கறுப்புடல் மேல் பளபளத்தது.

அவனுடைய பரந்த கைகளினிடையில், குழந்தை சின்ன மாவுப் பொம்மை போல் தானிருந்தது. இழுத்துப்

பழக்கமில்லாததால், தாம்புக் கயிறு உள்ளங்கைகளை வீறு வீறாய் அறுத்திருந்தது.

அணைத்துக் குலுக்கி அதன் அழுகையை அடக்க முயன்றான். ஆசைப் பெருக்கில் அர்த்தமற்ற சப்தங்கள் அவன் வாயினின்று பிறந்தன. ஆயினும் குழந்தையைத் தேற்ற அவை வகையற்றுப் போயின. அதன் கத்தல் இன்னமும் அதிகரித்தது.

''என்ன! தாயில்லாக் குளந்தையா?''

அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஏற்கெனவே உள்ளூற வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறான்: •காலையில் வேலை பார்க்கப் போன பெண்பிள்ளை—சூரியன் உச்சிக்குப் போயிட்டது—இன்னமும் திரும்பின பாடில்லே. இந்தப் பட்டணத்திலே ஊருக்குப் புதுசு. ஆண் புள்ளைக்கே இத்தனை மோட்டார் வண்டிக்கும் டிராம் வண்டிக்கும் சடுக்கா வண்டிக்கும் ரிக்ஷா வண்டிக்கும் நடுவுலே ஆளைப் பம்பரம் சுத்தி விட்டாப் போலே இருக்குது. அவளை எது வாரி வாயிலே போட்டுக்குதோ? யார் இந்த ஆள் அவசகுனி மாதிரி?...

அந்த ஆள் எதிர்த் திண்ணையிலே உட்கார்ந்து கொண்டு ஒரு துண்டுப் பீடியைப் பிடித்துக்கொண்டிருந்தான். அவன் முகத்தைப பார்த்து வயதையோ அந்தஸ்தையோ நிர்ணயிப்பதற்கில்லை. கால்மேல் காலை மடித்துப் போட்டு உட்கார்ந்துகொண்டு வெகு ஆத்திரத்துடன் பீடியைக் குடித்துக் கொண்டிருந்தான்.

''இல்லே? காலைலே போனா—இன்னும் வரல்லே—குளந்தை வவுத்திலே ஒண்ணுமில்லே.''

''யார் வவுத்திலே தானய்யா இப்போ என்ன இருக்குது? எரிச்சல் தானிருக்குது. ஊருக்குப் புதிசா? ஏதேனும் வேண்டுதலையா?...''

“இல்லே; பட்டணத்துக்குப் புளைக்க வந்தோம்.”

அந்த ஆள் ஆத்திரத்துடன் பீடியை விசிறி எறிந்தான்.

“ஆமாய்யா, வெளியூரிலே இருக்கிறவன் புளைக்கறத்துக்குப் பட்டணத்துக்கு வந்துடுங்க. பட்டணத்திலேயே இருக்கிறவன் பட்டினி கிடக்கட்டும்! ஊரிலே இருக்கிறவனுக்கு இடமில்லை; வந்துடராங்க வரிஞ்சு கட்டிக்கிணு—புளைக்கறத்துக்கு.”

‘மனுசனுக்கு மனுசன் ஏன் இப்படி இருக்குதுன்னு புரியல்லே. யார் யாருக்குத் தீங்கு இளைச்சுட்டது என்ன? அவன் யாரோ நான் யாரோ, இவனுக்கு என் மேலே என்னத்துக்குக் கோவம்? இந்த மாதிரி இடத்துலே தன்னந் தனியா மாட்டிக்கிட்டு எப்படிப் புளைக்கறது? ஊரிலே ஒரு மாதிரி கஷ்டமின்னா, ஒண்டவந்த இடம் இப்படி இருக்குது. துணையுமில்லே, துப்புமில்லே. ஒண்ணும் புரியவும் மாட்டேன்னுதே......’

அவன்படும் வேதனையும் குழந்தையின் ஓயாத அழுகையும் ஆத்திரத்தைத்தான் விளைவித்தன. ‘இதும் கழுத்தை முறிச்சுப் போட்டுடவா? ஒரு வளியா ஒளிஞ்சுது ஒரு தொந்தரவு......’

‘போனா போனா, காலைலே போனா—புடிக்கப் போன வேலையை வேரோடு புடுங்கிக்கிட்டு வந்துடற மாதிரி—என்னடாது ஆண்புள்ளெகிட்டே குளந்தையை விட்டுட்டுப் போனமே, வேளா வேளைக்கு அவன் என்ன பண்ணுவானின்னு நெஞ்சிலே பயமிருக்கணும். ஊரைச் சுத்தணும்னா போதும் இந்தப் பொம்புளெங்களுக்கே...?

அவன் பொருமிக் கொண்டிருக்கையிலே நிழல் வாசற்படியில் தட்டியது.

"வந்தூட்டியா?"

"வராமே? சாக்கடைத் தண்ணிக்குப் போக்கெடம் ஏது? என்னா கொளந்தையெ அளவிட்டுட்டியே. இதான் சாமார்த்தியமா? கொடு இப்படி—"

கோபம் அவன் வாயை அடைத்துவிட்டது. 'ஆளைத் தூக்கி எறிஞ்சு பேசறதுலே அவுங்களுக்கு நிகர் அவுங்க தான். ஒண்ணு முதுகிலே வெச்சா சரியாப்போயிடும். என்ன தைரியமா கேக்கறா பாரு! இருக்கட்டும். இப்போ கொளந்தைக்கிப் பசி அடங்கட்டும். அதான் இப்போ முக்கியம். அவளுக்குத்தான் அந்த எண்ணமில்லேன்னா நமக்குக் கூடவா இல்லே! நான் பெத்த மகன்.'

அந்த 'ஆள்' அப்பொழுதே போய்விட்டான். அவள் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு குழந்தையை எடுத்து விட்டுக் கொண்டே கேட்டாள்.

"நீ எங்கயாவது புளைப்புத் தேடினயா? என்ன வாச்சு?

அவள் கேள்விக்குப் பதில், அவன் முக வாட்டத் திலேயே கிடைத்து விட்டது.

"இண்ணக்கி கடைத்தெருவைச் சுத்தினேன். சித்தாள் வேணுமான்னு கடைகடையா ஏறிக் கேட்டேன். ஒவ்வொருத்தன் என்னென்ன சொல்றான்கறே?— ஏதோ வேலையில்லேன்னு சொல்லிக் களிச்சால் போச்சு. எடக் காகப் பேசறான்க!

"சித்தாள் வேலையா? இங்கே இருக்கிறவனே ஈ ஓட்டறான்! யுத்தம் வந்தாலும் வந்தது, என்ன சாமான் இங்கே இருக்குது வியாபாரம் பண்ண? என்கிறான் ஒருத்தன்.

"ஒரு கடைக்காரன் வேலையில்லேன்னு சொல்லிட்டு நான் படியிறங்கினப்புறம் என்னை மெனக்கெட்டு மறுபடியும் கூப்பிட்டு, 'நான்தான் கடைக்காரன்—நான் இங்கே என்னாத்துக்குக் குந்திக்கிட்டு இருக்கேன் தெரியுமா?'ன்னு கேட்டான்.

" 'தெரியாதே' இன்னேன். எனக்கெப்படித் தெரியும்?

'''சாமான் வாங்க வரவங்களுக்கெல்லாம் அது இல்லே, இது இல்லேன்னு சொல்லியனுப்பத்தான் குந்திக்கிட்டு இருக்கேன். இல்லை இல்லை இன்னு கத்திக் கத்தித் தொண்டை வத்திப்போச்சு. இல்லைப் பாட்டுப் பாடத்தான் இனிமேல் ஒரு ஆள் போட்டுக்கணும்போல் தோணுது. போப்பா, புளைக்க மாட்டாதவனே! பொட்டலங் கட்டக்கூட காயிதமில்லாத காலமிது— அதுகூட யுத்தத்துக்கு வேணுமாம்—நீ கூடப் போறதுதானே! இன்னு சொல்றான்.

"இந்தப் பட்டணத்துப் பேச்சு நமக்குப் புரிய மாட்டேன்னுது! எல்லாத்துக்கும் எடக்காப் பேசறாங்க. கொஞ்ச நேரத்துக்கு முன்னாலேதான் ஒரு ஆள் என்னை ஒரு காரணமுமில்லாமலே விரட்டிட்டுப் போனான். அத்தோடே கொளந்தையெத் தனியா விட்டுட்டு எவ்வளவு நேரம் வெளிலே சுத்த முடியுது? உன் மாதிரியா? காலைலே போன பொம்புள்ளே, திரும்பி வர இத்தனை நேரமாச்சுதுன்னா என்னத்தை சொல்றது!"

"என்னாத்தை சொல்லப்போறே? யாராவது இஸ்துக்கிட்டு ஓடிட்டாங்கன்னு பாத்தியா?"

அவன் மனம் 'சுருக்'கென்றது. 'வயித்துக்குக் கஷ்டம் வந்துட்டுதுன்னா, கொண்டவளுக்குக்கூட இவ்வளவு ஏளக்காரமாப் போயிடுமா?...'

குழந்தை மறுபடியும் கத்த ஆரம்பித்துவிட்டது! அவன் கண்கள் ஜ்வலிக்க ஆரம்பித்தன. 'இண்ணைக்கு அவன் மனம் நோவடிக்கறத்திலேயே அவளுக்குச் 'சந்தோசமா?'

''ஏன் அதுக்குள்ளேயும் விலக்கிட்டே?''

''சரிதான்! என் புளைப்பும் உன் புளைப்பும் அதிலே தானிருக்குது.''

''என்ன அம்மே ,வந்ததே மொதக்கொண்டு ஒரு மாதிரியாயிருக்கே. புதிர் போட்டுப் பேசுறே—என்ன? உடம்புக்கு பூசைக்காப்பு போடணுமா?''

அவள் குழந்தையை இடுப்பில் வைத்துக் குலுக்கிய வண்ணம் திண்ணையில் உலவியபடி, சமாதானப்படுத்த முயன்றுகொண்டே சொன்னாள்.

''கொஞ்சம் அவசரப்படாமெ நான் சொல்றதைக் கேளு—இன்னிக் காலையிலே இப்படி போனேனா—இந்த ரோட்டோடே போனேன்—அப்புறம் ஒரு சந்துலே நுழைஞ்சேன். ஆனால் அது சந்தில்லே. ஆள் நடமாட்டம் அதிகமாயில்லே. ரெண்டு பக்கமும் தனித்தனியா பங்களா வுங்க இருந்திச்சு. அப்புறம் அப்படித் திரும்பினேன். இப்படித் திரும்பினேன். எனக்கு வளி மறந்து போச்சு. சுத்துமுத்தும் பாத்தா ஒருத்தருமில்லே. எனக்கு ஒரே அழுகையா வந்திட்டது. நான் ரோட்டோரமா நின்னிட்டு அழுதுகிட்டு இருந்தேன்.

''அப்போ ஒரு ஆள் அந்தப் பக்கமா வந்தான். என்னைத் தாண்டி போனான். அப்புறம் திரும்பிப் பார்த் தான். நின்னான். மேலே இன்னும் கொஞ்சம் நடந்து போனான். மறுபடியும் என்னை முளிச்சுப் பார்த்தான். அவன் பார்வை ஒரு மாதிரியாயிருந்திச்சு. என் முகத்தைப்

பாக்கல்லே. களுத்துக்குக் கீளே, இடுப்பு வரைக்கும்தான் கண்ணோட்டம் நின்னுது. அப்புறம் எண்ணத்தை என்னவோ திடம் பண்ணிக்கிட்டுத் திரும்பி நேரே வந்தான்.

" 'ஏன் அழுவரே? எந்த ஊர்?'

" 'ஐயா, ஊருக்குப் புதிசு—நாட்டுப்புறம். வளி தப்பிப் போச்சு' இன்னேன் விக்கிக்கிட்டே.

" 'ஏன் வந்தே இந்த ஊருக்கு?'

" 'புளைக்க வந்தேனுங்க. எங்கேயாச்சும் பத்துப் பாத்திரம் துலக்கிப்போட்டு வாசக்கூட்டி வேலையவப் பட்டா போதுங்க.'

" 'அந்த ஆள் என் களுத்தைப் பார்த்துகிட்டே 'கலியாணம் ஆயிட்டுதா'ன்னு கேட்டான்.

" 'கையிலே ஒரு குளந்தை யிருக்குதுங்க—என் எசமானர்கிட்டே விட்டுட்டு வந்திருக்கேனுங்க.'

" 'எத்தனை வயசு?'

" 'இரண்டு மாசங்க—'

" 'சரி வா. உன்னதிர்ஷ்டம் இந்தப்பக்கமா நான் வந்தேன். உனக்கு வேலை வாங்கித் தரேன். என்னோடு வா' இன்னுட்டு நடந்தான். எனக்குக் கொஞ்சம் பயமாய்த் தானிருந்திச்சு. இருந்தாலும் ஆள் நடமாட்டமிருக்கிற இடமா வந்து சேர்ந்துட்டா சமாளிச்சுக்கலாம்னு மனதைத் தைரியம் பண்ணிக்கிட்டுப் பின்னலே போனேன்.

"நீ முளிக்காதே! அவன் ஒண்ணும் தப்பா நடந்துக் கல்லே. ஒரு பங்களாக்குள்ளார நுளைஞ்சோம். பெரிய தோட்டம். பூவும் செடியும் பாத்தியும் பச்சையும் எங்கே பார்த்தாலும் ஒரே குளுமையா யிருந்திச்சு, கன்னுக்குட்டி

யாட்டமா ஒரு பெரியநாய் என்னைப் பாத்து ஓடிவந்துது. அந்த ஆள் அதை விரட்டிட்டு என்னை வாசல் தாவாரத் திலே நிறுத்தி வச்சுட்டு உள்ளே போனான்.

''கொஞ்ச நேரம் பொறுத்து மூணு பொம்புள்ளைங்க உள்ளேருந்து வந்தாங்க பாப்பாரு. பணக்காரு. நகையும் நட்டும் நல்ல புடவையும் கட்டிக்கிட்டு இருந்தாங்க. அவங் களுக்குள்ளே என்னவோ வெள்ளைக்காரன் பாஷைலே பேசிக்கிட்டாங்க. அவுங்களுக்குள்ளே ஒரு பெரிய அம்மா இருந்தாங்க. அந்த ஆள் என்னை மொதமொதல்லே விசாரிச்ச மாதிரியே, அவுங்களும் விசாரிச்சாங்க. இன்னும் ஒன்னுரெண்டு பொம்புள்ளே விஷயங்கூட விசாரிச்சாங்க. அப்புறம் அங்கேயே குந்தவெச்சு, ஆளு வந்து சோறு போட்டான், குளுகுளுன்னு பழஞ்சோறு, என் வயிறு குளுந்துது. ஒன்னே நெனச்சுக்கிட்டேன்.

''கை கழுவி, தண்ணி யேந்திக் குடிச்சுட்டு, முந்தானை யிலே கையைத் தொடச்சிக்கிட்டேன். உடனே இங்கிலீ ஸுலே என்னவோ பேசினாங்க. பொம்புள்ளேங்க ஆம்புள்ளே மாதிரி இங்கிலீஸு பேசி இண்ணக்கித்தான் நான் பார்த்தேன். உடனே ஒரு அம்மா உள்ளே போய் ஒரு குளந்தையை ஏந்திவந்து என் மடியிலே வெச்சு, 'பாலைக் கொடு' இன்னாங்க.

''எப்படி மாட்டேன்றது? சோறு போட்டிருக்காங் களே! உப்புந் தண்ணியும் உலர்ந்த வயத்திலே ஊத்தியிருக் காங்களே'—

''குளந்தையா அது? நம்ம ஊரிலே முருங்க மரத்துலே இடையன் கொம்பு ஊறல்லே? அது மாதிரி ஒரே குச்சியா, உயிர் தொண்டையிலே நூலாட்டமா ஓடிக்கிட்டிருக்குது. தொடவே அச்சமா யிருந்திச்சு.

" 'தாய்ப்பாலில்லே. குழந்தைக்கி வேறே குத்தம் இல்லே. உனக்கு ரெண்டு வேளை சோறு, ரெண்டு வேளை தீனி, மாசம் எட்டு ரூபாய் கொடுக்கறேன். இங்கே இருந்து இந்தக் குழந்தையை நீ காப்பாத்தணும். வீட்டுக்கு ஒரே பிள்ளை இது. இருந்திருந்து பெத்த மகன். நீ இருந்து காப்பாத்தணும்' இன்னாங்க அந்தப் பெரியம்மா.

" 'அம்மா! என் குளந்தை?—நானறியாமலே அந்தக் கேள்வி என் வாயிலேருந்து வந்திட்டது.

" 'உன் குழந்தைக்கு மாவு கரைச்சுக்கொடு—மாவு நான் கொடுக்கறேன் இந்தக் குழந்தைக்கு வயிற்றிலே கட்டி விழுறது. உன் குழந்தை இது மாதிரி மோசமாயிருக்காது. என்ன சொல்றே? சட்டு புட்டுனு உன் புருஷன் கிட்டே சொல்லிட்டு வந்துடு. காலையிலே ஒரு வேளை சாயந்தரம் ஒருவேளை ஒன் குழந்தையையும் பார்த்துட்டு வா—நான் ஒன்னும் அப்படியாப்பட்ட பாவி இல்லே— என்ன சொல்றே?'

"நான் என்ன சொல்றது? எத்தனையோ விசயம் கவனிக்க வேண்டியிருக்குது, நம்ப புளைக்க வந்துட்டோம்- உனக்கு சரியா புளைப்புக் கிட்டற வரைக்கும் வவுத்தெ ரெண்டு பேரும் கட்டிப்போட்டுகிட்டிருக்க முடியுமா? என் வவுத்தே அவுங்க வீட்டிலே களுவிட்டாலும் என் சம்பளம் உனக்கு மிச்சம் தானே. நான் ஒப்புக் கிட்டேன்."

மௌனம் இருவரிடையிலும் தேங்கியது. சத்திரத்தில் மூட்டையும் முடிச்சுமாய் இறங்குபவரும் வெளியே போவாருமாய்ச் சண்டை போடுபவரும், கொட்ட மடிப்ப வருமாய் இரைச்சல் காதைப் பொளிந்தது. ஆயினும் இவ்விருவருக்கு மாத்திரம் அது தூரத்துச் சத்தமாய்த்தானிருந்தது.

"நீ ஒப்புக்கிட்டது தப்பு" என்றான் அவன்.

"அப்படியானால் நாம்ப இங்கே வந்ததே தப்பு."

"நாம்ப புளைக்க வந்ததே தப்பானால், நம்ப ஊரிலே மொத மொதல்லே ஒருத்தரையொருத்தர் சந்திச்சோமே, அதுவே தப்பு—"

"இப்படி ஒருத்தரை யொருத்தர் கசந்துக்கிட்டுப் பேசினால் என்ன பிரயோசனம். புளைக்க வந்திட்டோம்; புளைச்சு ஆகணும். இந்தா, மூணு ரூபா முன் பணம் வாங்கி வந்திருக்கேன். செலவுக்கு வெச்சுக்க—"

"இதென்ன, நீ எனக்கு சோறு போடணும்னா நான் ஆண் புள்ளையா பிறந்துட்டு இருக்கேன்!— என்னான்னு நினைச்சுட்டே உன் மனசிலே என்னை?"

அவள் தொண்டை கம்மியது.

"நீ வேறே நான் வேறேன்னு துட்டு வாங்கறப்போ என் நெனைப்புலே படல்லே!"

"ஆமா—அப்போ நம்ம ரெண்டு பேரும் கூடிப் பொறந்த கொளந்தெதான் வேறாப் போயிட்டுது—இல்லையா?"

கரையினின்று திரும்பும் அலைகள் போல் நினைவுகள் பின்னோக்கிச் சுருண்டன.

—'நல்லபடியா நாலுபேர் பேசி முடிச்சுத் தாலி கட்டின கலியாணமா யிருந்தால் இத்தனை கஷ்டம் ஏன் படணும்? ஒரு இமைப் பொளுது வெறியிலே ஏமாந்து போன தோசத்துக்காக, ஊரை விட்டு ஓடி வந்து இங்கே இருக்க இடமும் புளைக்க வளியுமில்லாமே அல்லாடறோம்...'

வாய்வழி புறப்படாத விதவிதமான கேள்விகள் அவரவர் மனசை இடித்தன.

—'நம்ம ஊரே நல்ல ஊர்.'

—'நான் பாட்டுக்கு நிம்மதியா ஊருக்கு முதலாளி வெச்சிருக்கும் மளிகைக் கடையிலே வேலை செஞ்சுக்கிட்டு வேளா வேளைக்கு அவர் வீட்டிலேயே சாப்பிட்டு வேட்டி யுடுத்திக்கிட்டு கைச் செலவுக்கு நெதம் கால் ரூவா கல்லாப் பெட்டியிலேருந்து எடுத்துகிட்டு ராசாமாதிரி யிருந்தேன்.'

—'எனக்கு மாத்திரம் என்னா கொறவு? வீட்டு வேலையை செஞ்சிக்கிட்டு அவுங்க கொளந்தையெ கொஞ்சிக்கிட்டு குசாலாய்த்தானே யிருந்தேன்! அப்பன் ஆயி இல்லேன்னு ஒரு நாளாவது நெனச்சிருப்பேனா! அந்த ஊட்டு அம்மாதான் எனக்கு எல்லாமா இருந்தாங் களே—!'

—'இருந்து என்னா பிரயோசனம்? உன்னை எங்கே யாவது கட்டிக்கொடுத்து ஒழிச்சிருக்கணும்!'

—'ஐயோ பண்ணையிலே ஒரு ஆளுக்குத்தான் என்னை முடிச்சுப் போட்டு வெச்சிருந்தாங்களே— அதுக்குள்ளார நீதானே என் மேலே கண்ணெப் போட்டே!'

—'நீமாத்திரம் சும்மா யிருந்தியா? அடிக்கடி கடைக்கு வந்து கடிச்சுக்க ஒரு துண்டு கட்டைப் புகையிலே கொடுன்னு என் கையை இடிச்சு வாங்கிப் போனையே, மறந்து போச்சா?'

—'ஒருத்தரை யொருத்தர் ஏன் குத்தம் சொல்லணும்? ஏமாந்து போனோம். அவ்வளவுதான்'.

—'எல்லாந்தான் போச்சு, அண்ணக்கி என்னவோ சீக்கிரமாக் கடையைக் கட்டிக்கிட்டு அண்ணக்கின்னு ரயில் டேஷனுக்குப் போற வழியிலே நான் ஏன் வரணும்? நீ

கடலைக்காய் கொல்லையிலே காவல் காத்துட்டு, நான் வந்த வளியே நீ ஏன் வரணும்?'

—'களத்து மேட்டிலே வக்கிறதுக்கு முத்திரையைக் கொடுத்திட்டு வந்தேன்.'

—'வந்ததுதான் வந்தியே, சும்மாப் போனியா? மடிலேருந்து பிடி கடலைக்காயை எடுத்து இந்தான்னே. சிரிச்சுக்கிட்டே. நான் நினைவு மங்கிப் போய் உன் கையைப் பிடிச்சேனே! கையை உதறி என் கன்னத்திலே ஏன் ஒண்ணு விடலே? அப்படியே என் தோள் மேலே சாஞ்சுட்டே. அண்ணக்கின்னு நெலவு ஏன் அப்படி காயணும்! ஆத்தோரத்துக்கப்பால் சினிமாக் கொட்டகை லேருந்து அம்பிகாபதிப் பாட்டு காதண்டை மோதி ஆளை ஏன் அப்படி சொக்கடிக்கணும்!''

—'நான் என்னாத்தெக் கண்டேன்? பிள்ளைப்பூச்சி உடனே கடிச்சிடும்னா கண்டேன்! இந்தப் புள்ளையைப் பத்தி அப்பொ நெனச்சமா? வவுத்தெ எத்தனை நாள் மறைச்சு வைக்க முடியும்?

—'உடலும் மனசும் ஒண்ணாக் கொழுஞ்சு நாம் ஆசையாய் பெத்த குளந்தையை உலகத்துலே எல்லாரும் பெத்து வளக்கற மாதிரி வளர்க்க முடியல்லே. களுத்துலே மஞ்சக்கவுறு ஏர்றதுக்கு முன்னாலே வவுத்துலேருந்து இறங்கற குளந்தையெ யார் மதிக்கிறாங்க? திருட்டுப் புள்ளைன்னு ஊரெல்லாம் சிரிக்க மானம் போய் உசிர் போகாமெ ஊரைவிட்டு ஓடியாந்துட்டோம். வந்து இங்கே மாட்டிக்கிட்டோம்.'

—'விதி—விதி'

மனத்தின் பேச்சுக்கு முடிவே கிடையாது.

# 2

அந்தக் குழந்தையின் பசியை ஆண்பிள்ளை தானாக எவ்வளவு தூரம் சமாளிக்க முடியும்? அவள் மாலையில் வந்து ஒரு வேளை ஊட்டுவாள்; காலையில் மாவையும் தண்ணீரையும் கரைத்துப் புட்டியில் போட்டுவிட்டுப் போவாள். புட்டியை எந்தப் பக்கம் குழந்தையின் வாயில் வைப்பது என்றுகூட அவனுக்குத் தெரியாது.

'காலைலே வேலைக்கு அலையணும். கொளந்தையைத் தனியா விட்டுட்டு எத்தனை நேரம் வெளியிலே சுத்த முடியும்? மாலை வறது எப்போ? அவள் வறது எப்போ? அந்தக் கொளந்தையை அவள் மார்மேலே அணைப்பது எப்போ? தொண்டையைக் கிளிச்சுக்கிட்டு ஓயாமெ அலறும் அதன் அலறல் ஓயறது எப்போ? ஓரே வேளையானாலும் பெரிய வேளை!'

இன்று அவள் குழந்தை தலைமீது மேலாக்கைப் போட்டு மூடியும் அதன் கத்தல் ஓயவில்லை. அவனுக்கு வயிறு கொதித்தது.

'ஏன் ஏமாத்தறே? நீ வந்து ஊட்டறது ஒரு வேளை. அதிலே ஏன் வஞ்சனை பண்ணறே? பங்களா வீட்டுப் பையன் மாதிரியில்லையா நீ பெத்த மவன்?''

''ஏன் இப்படியெல்லாம் பேசறே? நான் என்ன பண்ணுவேன்? அந்தப் பையன் என்னை அட்டை மாதிரி உறிஞ்சிப் போடுதே. ஊறக்கூட நேரம் விடமாட்டேன்னுதே. மூக்காலே பாலு வந்தாலும் வச்ச வாய்க்கடி விடமாட்டேன்னுதே!''

''இங்கேயும் இருக்குதேன்னு கொஞ்சம் வெச்சுக்கிட்டு வர்றது.''

"அவங்கதான் என் எதிரேயே உக்காந்து கவுனிக்கிறாங்களே! மடியிலே புள்ளையை விட்டுட்டு அந்தப் பெரியம்மா என் எதிரே சட்டமா குந்திக்கறாங்க. 'கொடுடீ கொடுடீ; குழந்தைக்குக் கொடுடீ. இந்தப் பக்கம் வத்திப் போனா அந்தப் பக்கம் மாத்திப் போட்டுக்கோ'ண்ணு ஈவு இரக்கமில்லாமெ பேசறாங்க."

"சோத்திலே நெய்யைக் கைநிறையா அள்ளித்தானே விடறேன்! ஆப்பிள் பழமும் ஆரஞ்சிப் பழமுமா வாங்கி வாங்கிக் கொடுக்கல்லே! என் எதிரிலேயே உரிச்சித் தின்னுடணும். என் குழந்தைக்கு ஊறும்பாலை என் குழந்தைதான் குடிக்கணும், என் வீட்டுக்கே ஒரு குழந்தைடீ—'

"அவுங்க விதவிதமாத் தீனி வாங்கிப் போடறாங்க; சொகம் சேக்கராங்க. ஆசை உனக்கு அங்கேதான் பொங்கு தாக்கும்!"

"ஏன் இப்படி சொல்றே? அங்கே துண்றது விஷமாயிருக்குது போதாதுன்னு நீ வேறே இங்கே வந்தா விஷத்தைக் கக்கணுமா? என் வவுத்திலே சுமந்த என் குளந்தையை நான் மறந்துட்டேன்னு நீ எனக்குப் போதிக்கவேணாம்—"

"அடிபோடீ பாவி—"

# 3

அவன் தெருவில் மனம்போனபடி போய்க் கொண்டிருந்தான்.

அந்த ஒரு வாரத்துக்குள் அவனுக்கும் அவளுக்கும் பேச்சு பட்டென அறுத்து போயிற்று. அவன் கண்ணெதிரே

படிப்படியாய் அவன் குழந்தை தேய்ந்துபோகும் கோரம் காணக் காண அவனுக்குச் சகிக்க முடியவில்லை. அவள்மேல் குற்றமில்லை என்று அவன் மனம் புரியாமலே அறிந்தது. இருந்தும் அவள் தனக்காகச் செய்யும் தியாகம் அருவருப்பையும் பயங்கரத்தையும் தான் விளைவித்தது. அவ்விருவருக்காக அக்குழந்தை தியாகம்...

ஒவ்வொரு சமயம் அவள் அவ்வீட்டில் எஞ்சிய ஆகாரங்களை அவன் சாப்பிடுவதற்காகக் கொண்டு வருவாள். அதைச் சீந்தக்கூட அவன் மனம் சிலிர்க்க ஆரம்பித்து விட்டது.

'சீ! இதுவும் ஒரு புளைப்பா! இப்படி இந்த உசிரையும் உடலையும் ஒண்ணாத்தான் வெச்சு வாளாமே இருந்தா தான் என்ன?'

—"டேய், நாட்டுப்புறம்! எங்கே பார்த்துக் கிட்டுப் போறே? வண்டியிலே மாட்டிக்கிட்டு சாவறத்துக்கா? சாவணும்னா சண்டையிலே போய் சாவறது தானே!"

டாணாக்காரன் போட்ட அதட்டல் அவன் மனசில் அசரீரி மாதிரி பாய்ந்தது. 'இந்த யோசனை எனக்கு ஏன் அப்பவே தோணலே! சம்பளத்தை அவ பேருக்கு எளுதி வெச்சோம்னா அவ அந்த வீட்டிலே போய் சாகவேணாம். சம்பளத்தை வாங்கி சாப்பிட்டுக்கிட்டு அவ நிம்மதியா யிருப்பா. நம்ப மவனாவது புளைப்பான். திரும்பி வந்தா பார்ப்போமில்லியா?'

—'திரும்பி வராமெ போனா?'

—'திரும்பி வராமெ போனாலும் நம்ப மவன் இருப்பான், இல்லியா!'

அவன் மனசிலேயே ஒரு பெரும் கனம் குறைந்தது. சந்தோஷம்கூடப் பிறந்தது. அந்தப் போலீஸ்காரனை அணுகினான்.

''சண்டையிலே சேக்கற ஆபீஸுக்கு வளி எந்தப் பக்கம்?''

# 4

அவன் திரும்பிவரும் வேளைக்குள் அஸ்தமித்து விட்டது. குழந்தையை நினைத்துக் கொண்டே அவன் ஓடோடி வந்தான். இன்றைக்கென்று அவள் அவனுக்கு முன்னாலேயே வந்திருந்தாள்; அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுக்கு முகம் மலர்ந்தது. ஆனால் அவள் முகம் மாறித் திகில் பிடித்துப் போயிருந்தது. ''ஐயோ, கொளந்தையைப் பாரேன்!'' என்றாள் கையைப் பிசைந்துகொண்டே. அவனுக்கு அடிவயிற்றில் 'சுரீ' லென்று ஜில்லிட்டது. உள்ளே ஓடினான். அதன் காதில் ஒரு நூல் ரத்தம் வழிந்திருந்தது. வயிறு உப்பி...

அதன் அருகே உட்கார்ந்தான். அவளும் குழந்தையின் அந்தண்டைப் பக்கம் உட்கார்ந்து கொண்டாள். ஆனால் அதை அவன் உணர்ந்தானே யொழிய, காணவில்லை. அவன் பார்வை குழந்தையின்மேல் நிலை குத்திப்போயி ருந்தது.

''என்ன சுருக்கனா வந்துட்டே?''

''எனக்கு இன்னிக்கு மனம் தாளலே. சண்டை போட்டுகிட்டு வந்துட்டேன்.''

அவளும் சண்டை போட்டுக்கொண்டு வந்து விட்டாள். அவனும் சண்டையிலேபோய்ச் சேர்ந்து விட்டான். ஆனால் பிரயோசனம் என்ன? ஒன்றுமில்லை.

குழந்தையைப் பார்த்தவுடனேயே அவனுக்குத் தெரிந்து போய்விட்டது. அதற்கு மூச்சு சத்தம் போட ஆரம்பித்து விடடது, 'கொர்-கொர்' என்று. அவள் வயிற்றிலேயும் வாயிலேயும் அடித்துக்கொண்டு அழுகிறாள். ஆயினும் அவன் மனம் பளிங்கெனத் தெளிந்து சிந்திக்க ஆரம்பித்து விட்டது.

எல்லாம் பாரதயுத்தம் மாதிரிதான். ஊரிலே தரும ராஜா கோவுல்லே காப்புக்கட்டி பாரதம் உபன்யாசம் வெச்சாங்களே—எல்லாரும் தோத்தாங்க. எல்லாரும் ஜெயிச்சாங்க. தோத்தவனும் கஷ்டப் பட்டான்; ஜெயிச்ச வனும் சொகப்படல்லே. என்னவோ காரியம் சாதிக்கிறாப் போல, சண்டை போட்டதிலே கொறைச்சலில்லே, நாள் பாத்ததிலே கொறைச்சலில்லே—பலி போட்டதிலே கொறைச்சலில்லே—அரவான் பலி!'

''—கொர்—கொர்—ர்—''

'மொதல்லே புளைக்கிற வளியைக் கண்டுட்ட மாதிரி குளந்தையைப் பலி வெச்சோம். அப்புறம் அதுக்குமேலே ஓசத்திக் காரியம் பண்றாப்போல சண்டையிலே போய் சேர்ந்தாச்சு. இனிமேல் தப்ப முடியாது. கைநாட்டுக் கொடுத்தாச்சு. நாளை மத்தியான வண்டிக்குப் புறப் படணும். அப்புறம் அந்த வண்டியிலே எங்கேபோய் தள்ள றானோ. போவாமே இருந்தோம்னா நாளைக்கு கைக்கு விலங்கோடே வந்துடுவான். பூட்டுமேல் பூட்டு. புளைக்கற வழி என்ன? சாவுற வழிதான்.

'சண்டைக்குப் போய் சேர்ந்த சமாசாரத்தை இவ கிட்டே சொல்லலே. அது வேறே பாக்கியிருக்குது. குளந் தையைப் புதைச்சுட்டு வந்தப்புறம் இருக்குது அந்த ரகளை.

'ஆனால் சண்டையிலே போய்ச் சாவறதுக்குன்னு ஒரு சாவு பாக்கியில்லே; இப்போ நான் செத்துப் போயாச்சு. உசிரோடு இருக்கிறது உசிரில்லே, உடல்தான். இதுவும் மடியறது இண்ணைக்கில்லாட்டி நாளைக்கு; அண்ணைக்கி யில்லாட்டி அதுக்கு மறுநாள்.'

விடியிருட்டில்தான் குழந்தையின் 'கொர்கொர்' சத்தம் அடங்கியது. அவள் முகத்தை அவன் பார்க்க முடிய வில்லை. அவள் கன்னத்தை ஒரு தடவை வருடினான். அவன் மனம் நெகிழ்ந்தது. குழந்தையை அதன் கந்தையில் சுற்றிக்கொண்டு கிளம்பினான்.

வெளியிலும் இருட்டு. ஒரு பீடிப்பொறி மாத்திரம் தெரிந்தது.

''யாரய்யா?''

''நான்தான் பட்டணம்.'—குரலிலிருந்து தன் மேல் சீறி விழுந்த ஆள் என அறிந்தான்.

''சுடுகாட்டுக்குப் போற வழி எது ஐயா?''

அந்த நெருப்புப் பொறி எழுந்தது. ''நான் காண்பிக் கிறேன், வா—''

'பட்டணம்' காண்பித்த வழியூடே அவன் பின்பற்றிச் சென்றான்.

# புற்று

*1947—1951 :* என் எழுத்தின் கோபாவேசத்தின் உச்சக் கட்டம் என்று தோன்றுகிறது. இந்தக்கதை அந்தக் காலவரையைச் சேர்ந்தது தான். இது வெளிவந்து, கொஞ்ச நாட்களுக்கு என் நண்பர்கள் என்னைப் 'புற்று' என்றே அழைத்து வந்தார்கள். இப்படியும் ஒரு கற்பனையா? என்று அவர்களுக்குப் பாதி ஆச்சர்யம், பாதி அச்சம்.

ஒவ்வொரு கதையும், எழுத்தாளனின் அவ்வப்போதைய மனநிலை-என்று இதை ஒரு பொது வாக்கு மூலமாக (Statement)ச் சொல்லி விடலாமா என்று எனக்கு நிச்சயப் படவில்லை. Subjective Writingக்கு இது பொருந்தலாம், ஆனால் Objective Writer இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வதை எதிர்பார்க்கலாமா? தெரியவில்லை.

நான் ஒரு Subjective Writer.

"நானாக அழிந்தாலும் அழிவேனே தவிர, பிறர் என்னை அழிக்கவிடேன்".

**தொகுதி: ஜனனி**

காலை வைத்த பிறகுதான் அது வழுக்கிய திணுசி லிருந்து, வந்தது ஆபத்து என்று உணர்ந்தான். உடனே காலை எடுத்துவிட மூளையிலிருந்து காலுக்குத் தந்தி

பறக்குமுன், புறங்காலில் அடி விழுந்துவிட்டது. ஒரு துள்ளுத்துள்ளிப் பத்தடிதூரம் அப்பால் போய்விழுந்தான். வயலில் அறுத்து விட்டிருந்த கதிர்களின் முளைகள் உடல் முழுவதும் முள்ளாய்க் குத்தின. அவன் மிதித்த விடத்திலிருந்து 'புஸ்' ஸென ஒரு சீறல்! அவ்வளவுதான். விஷயம் மிஞ்சிவிட்ட தென்று உணர்ந்தான்.

ஆனால் சமயபுத்தி ஓடிவிடவில்லை. அவசர அவசரமாய்ச் சட்டைப் பையில் தேடினான். விஷம் 'கிர்' ரென்று ஏறிக்கொண்டு வந்தது. எப்பொழுதும் கையுடன் இருக்கும் பேனாக்கத்தி இன்று ரயில்வே ஸ்டேஷனில் விட்டிருக்கும் கைப்பெட்டியில் மாட்டிக் கொண்டு விட்டது. உள்ளே நம்பிக்கைச் சுவரில் நாலு கற்கள் இடிந்தன. இருந்தும் சுடுமையான சந்தர்ப்பங்களிலே உழன்று பழகியதால், அவ்வளவு சீக்கிரம் தன்னைத்தான் கைவிடத் தோன்றவில்லை. மறுபடியும் பைகளில் தீப்பெட்டியைத் தேடினான். கடித்தவிடத்தைச் சுட்டு எரித்து விடலாம் என்று ஒரு எண்ணம். சிகரெட் பெட்டியிலிருந்து சிகரெட்டுகள் அந்தி யிருட்டில் வெண்மையாய்ச் சிதறின. தீப்பெட்டியில் ஒரே ஒரு குச்சி தான் இருந்தது. சபித்துக்கொண்டு இரு முறைகள் கிழித்தான்; இரண்டு பொறிகள் தாம் தெறித்தன. சுடர் உடனே குதிக்கவில்லை. மருந்து கிழிப்பதிலேயே உதிர்ந்து விட்டது. உள் சுவர் தரை மட்டமாய் இடிந்தது. ஓடிப்போய் ஊரையும் பிடிக்க முடியாது; ரயிலடிக்கும் திரும்ப முடியாது. சம தூரத்தில், இரண்டுக்கும் வெகு தூரத்தில் மாட்டிக் கொண்டோம் எனக் கண்டு கொண்டான். விஷம் ஏறிக் கொண்டே வருகிறது.

"எங்கே யிருக்கிறோம்?"—சுற்று முற்றும் நோக்கினான்,

"எங்கே யிருக்கிறோம்?"

"எங்கிருந்து வந்தோம்?"

"எதற்காக வந்தோம்?"

"எங்கே போகிறோம்?"

"இனி வரப்போவது என்ன?"

சில சமயங்களில் மனத்தில் ஒரு எண்ணம் எழுந்ததும், சமயமும் சம்பந்தமுமற்று, அதையொட்டி, அதே மனத்தில் வாக்குத் தொடர்கள் எழுகின்றன. எழுந்ததும் அவைகளே எண்ணங்களாகவும் மாறி, தாமே தம்மைத் தனித் தனித் தொடர்புகளுடன் பெருக்கிக் கொண்டு விடுகின்றன.

"எங்கிருந்து வந்தாய்?"—திடீரென்று அவனுள்ளிருந்து ஏதோ பிரிந்து, எதிரில் நின்று கொண்டு, அவன் கேள்வியை அவனையே திருப்பிக் கேட்பதை உணர்ந்தான். உடனே அவனுக்கிஷ்டத்துடனோ, இஷ்டமில்லாமலோ, அக் கேள்விக்குப் பதிலை அவனிடமிருந்து, அது பன்னிப் பன்னிக் கேட்கும் முறையிலேயே கட்டாயப் படுத்திற்று.

"எங்கிருந்து வந்தாய்?"

"புற்று! புற்று! புற்று!"—ஒரே வார்த்தை அவன் கண்ணெதிரில் மாறி மாறிச் சுற்றி வந்தது. அதன் சப்தம் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது.

"புற்று! புற்று! புற்று! நீ புற்று! நான் புற்று! எல்லாம் புற்று! உலகமே புற்று! புற்று, புற்று!"

"அடே உன்னைப் புத்துக்குப் பால் வாத்துப் பெத்தேண்டா!"—இங்கு அவன் தாயின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டான்.

"அடே, என் வயிறு திறந்த வேளை என்ன வேளையடா?"

சின்னப் பையனாயிருக்கையில், துஷ்டப் பையனா யிருக்கையில், கெட்ட சகவாசம் பண்ணிப்பண்ணி ஊர்ச் சண்டையை எல்லாம் இழுத்துக்கொண்டு வீட்டுக்கு வருகையில், அவன் தாய் கஷ்டம் தாங்காமல் இப்படிச் சலித்துக் கொள்வாள். இதைக் கேட்டுக் கேட்டு அலுத்து ஒருநாள், "எந்தப் புத்துக்குப் பால் வார்த்தாய், அம்மா?" என்று இடம் கேட்டுத் தெரிந்துகொண்டு— என்ன ஆச்சரியம்—தன்னையே சின்னப் பையனாய், இதே இடத்தில், அதோ மரத்தடியில் ஓங்கி வளர்ந்திருக்கும் புற்றை, அதற்குச் சற்றுத் தொலைவில் மேட்டு நிலத்தில் கவிழ்ந்து படுத்துக் கொண்டு சுவாரஸ்யமாய்க் கவனிப் பதைக் கண்ணெதிரில் கண்டான்! கிழிந்த அழுக்குச் சட்டையுடனும், அரை நிஜாருடனும், இடுப்பில் செருகிய கவணுடனும். முழங்கையை நிலத்தில் ஊன்றி, மோவாயைக் கையில் ஊன்றி, புற்றில் என்ன நேரப் போகிறதெனச் சுவாரஸ்யமாய்ப் பார்த்துக் கொண் டிருந்தான்.

ஆனால் அவன் என்ன நினைத்தானோ, எதுவும் நேர வில்லை! ஒரே நிசப்தம்தான் நிலவியது. சுற்று முற்றும் வயல்களும், ஏரிக்கரை மேட்டில் இருபுறமும் பனை வரிசை களுக்கிடையில் ஒற்றையடிப் பாதையும், களத்து மேட்டில் வைக்கோற் போரும்.........

கொஞ்ச நாழிகை காத்திருந்தான்; பிறகு கையும் காலும் சும்மாயிருக்கவில்லை. அதுவும் கையில் கவண் இருக்கையில்! உருண்டைக் கல்லாய் ஒன்று பார்த்துப் பொறுக்கி, குறி பார்த்து லேசாய் அடித்தான். மண் கொஞ்சம் உதிர்ந்தது. உள்ளிருந்து படத்தை விரித்துக் கொண்டு ஒரு தலை எட்டிப் பார்த்தது. கண்களில் சிந்தும்

பச்சைக் குரூரத்தையும், அதன் பட்டை தீட்டிய அழகையும், பிளந்த நாக்கையும் கண்டு அதிசயித்து நின்றான். கொஞ்சநேரம் அவனைச் சிந்தித்துவிட்டுத் தலையை உள்ளுக்கிழுத்துக் கொண்டது. ஆனால் அவன் இயற்கைச் சேஷ்டை போகவில்லை. இன்னொரு கல்லை விட்டெறிந்தான். சீறிக்கொண்டு அது எழுந்ததுதான் அவனுக்குத் தெரியும்; அங்குப் பிடித்த ஓட்டம், வீட்டுக்கு வந்து, கதவைத் 'தடா' லென்று சாத்தித் தாளிட்ட பிறகுதான் நின்றது. உடல் நாய் போல் இரைத்தது. அன்றைக்கு அவனுக்குச் சாதம்கூட வேண்டியில்லை. தூக்கத்தில்கூட உளறினான்.

பிறகு அடிக்கடி, அல்லது அப்போதைக்கப்போது, அது அவன் கனவில் வந்துகொண்டிருந்தது. ஒரு சமயம் தவளையைப் பிடித்துக்கொண்டிருக்கும்; அல்லது ஆடிக்கொண்டிருக்கும்; அல்லது உடம்பை முறுக்குப் போல் சுற்றிக்கொண்டு, ஒருமுழ உயரத்திற்குத் தலையை மாத்திரம். தூக்கி அவனையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கும். ஒவ்வொரு சமயம் அவனுடனேயே படுக்கையில் குளிருக் கடக்கமாய், ஒட்டிக்கொண்டு படுத்திருக்கும். அவன் கண்களிலோ, வாயிலோ முத்தமிட்டு, முகத்தை நக்குவது போலுமிருக்கும். திணறித் திணறி அதனின்று விடுபட முயன்று விழிக்கையில், உடல் முழுவதும் வேர்வையில் குளித்திருக்கும்.

ஆனால் காலை வெயில் உடலில் படவேண்டியதுதான்; மறுபடியும் மனத்தில் தைரியம் பிறந்து, பல்லைக்கூட விளக்காமல் விளையாட ஓடிப்போய் விடுவான். அவனுக்கு வீடு பிடிக்கவில்லை. சுற்று முற்றும் இருப்பவரையும் பிடிக்கவில்லை. முக்கியமாய் ஸ்திரீகளைக் கண்டாலே பிடிக்கவில்லை. ஒன்று அவனை ஒரே குழந்தையாகவே நடத்தினார்கள்; அல்லது எதற்குமே மதிக்கவில்லை.

இப்பொழுது திடீரென ஒரு பழைய சம்பவம் அவன் கண் முன் நின்றது. செத்துக்கொண்டிருக்கையில்கூட, அதை மறுபடியும் மனத்திரையில் பார்க்கையில் சிரிப்பு வந்தது.

தன் வீட்டுக்கு நாலு வீடு தாண்டி ஒரு வீட்டில், அந்த வீட்டுப் பையனுடன் அவன் விளையாடிக் கொண்டிருந்தான். சவுக்காரக் கட்டியைத் தண்ணீரில் கரைத்து, துடைப்பக் குச்சியை அதில் தோய்த்து, மறு நுனியில் ஊதி, கொப்புளங்கள் உண்டாக்கிக் களித்துக் கொண்டிருந்தான். அடிக்கடி கிணற்றுக்குப் போய், இன்னும் கொஞ்சம் சோப்பைக் கரைத்துக் கொண்டு திண்ணைக்கு வருவான். அந்தாத்து மாமா திண்ணையில் இன்னும் நான்கு நண்பர் களுடன் சீட்டாடிக் கொண்டிருந்தார்.

திடீரென்று அந்தாத்து மாமி, வாயிலும் கன்னத் திலும் அடித்துக்கொண்டு உள்ளிருந்து ஓடி வந்தாள், "ஐயோ என் வைரத் தோட்டைக் காணுமே!"—மாமி ஊளறி யடித்தாள். "ஐயோ பாவி என்ன பண்ணே?" உடனே கூட்டம் கூடி விட்டது.

"ஸ்னானம் பண்ணறத்துக்காகக் கழட்டிக் கிணத்தடி யிலே வச்சேன். தலையைத் துவட்டிண்டதும் மாட்டிக் கலாம்னு சமயலறைக்குப் போய்ப் புடவையை மாத்திண்டு வரத்துக்குள்ளேயே மாயமாய்ப் போயிடுத்தே, இதென்னடி யம்மா அக்கிரமம்!"

"வாசக்கூட்டி எங்கே?"

"அவ அப்பவே போயிட்டாளே!"—திடீரென்று அவள் பார்வை அவன்மேல் விழுந்தது. ஒரே பாய்ச்சலாய் அவன்மேல் பாய்ந்தாள். "இந்தக் குருக்களாத்துப் பையன் தான் கிணத்தடிக்குச் சும்மா வந்திண்டிருந்தான்—"

மாமா கண்களில் பொறி பறக்க அவன் பக்கம் திரும்பி னார். "அட பயலே! நிஜத்தைச் சொல்லு!"

பையன் திகைத்தே போனான். "எனக்கொண்ணும் தெரியாதே—"

"அவன் இடுப்பு முண்டை அவிழுங்கள்—எங்கேயாவது மறைச்சு வச்சிருப்பான்—"

"பேசாமெ ரெண்டு புளியமிலாறு கொண்டு வாருங்கள்—முற்றத்தில் உலத்தியிருக்கே—வீறு வீறுன்னு வீறினா, பையன் பேசாமே தோட்டைக் கக்கறான்—பாம்பு மாணிக்கத்தைக் கக்கற மாதிரி—"

இதற்குள் ஒருவர் பிரியமாய், அவனை மடியில் வைத்துக்கொண்டு மிகவும் சாமர்த்தியமாய், "சொல்லுடா கண்ணா, எங்கிட்ட மாத்திரம் சொல்—பெப்பர்மிண்டு வாங்கித் தரேன். எங்கே ஒளிச்சு வச்சிருக்கே? உனக்கு என்னத்துக்கு அது? உனக்கு வேறே சாமான் எல்லாம் வாங்கித் தரேன்—"

"எனக்கு ஒண்ணுந் தெரியாது— எனக்கு ஒண்ணுந் தெரியாதே—!" முள்ளிலை மாட்டிக் கொண்ட ஆட்டுக் குட்டியின் அபலைக் குரல் மாதிரி யிருந்தது அவன் கத்தல். கண்கள் பயத்தால் சுழன்றன.

நகையைக் கெட்டுப் போக்கின மாமி, உடம்பெல்லாம் ஆட்டிக்கொண்டு ஆத்திரத்துடன் அவனிடம் வந்தாள். "ஒண்ணுமே தெரியாதாடா உனக்கு—குழந்தைக்கு ஒண்ணு தெரியுமோ! வாயில் விரலை வச்சால் கடிக்கத் தெரியுமோ?" என்று சொல்லிக்கொண்டே, அவன் வாயில் விரலை வைத்தாள். அவ்வளவுதான்; பையன் ஆத்திரத்துடன் விரலைக் கடித்துவிட்டான். அவனுள் உறங்கியிருந்த ஏதோ ஒரு உணர்ச்சியை அவள் அனாவசியமாய்த் தட்டி யெழுப்பிவிடவே, அது உடனே அவனையும் மீறித் தன்னைத் திருப்தி செய்துகொள்ள ஆரம்பித்து விட்டது.

அவன் முதுகில் அறைமேல் அறை விழுகிறது. முகத்தைக் கைகள் பிராண்டுகின்றன. கண் இமைகளில்கூட ஒருநகம் பதிந்து எரிகின்றது. தலைமயிரை யாரோ பிடித்து உலுக்குகின்றார்கள். இருந்தும் கடியை விடமாட்டேன் என்றான். 'வீல் வீல்' என்று கத்திக் கொண்டு, அவன் வாயில் கொடுத்த விரல் மேல் அவள் அங்கங்கள் முழுவதும் நெளிவதைக் காணக் காண, அவன் உடலில் ஒரு பயங்கர இன்பம் பரவியது.

கடைசியில் மிருக பலத்தில் அவனை அவளிடமிருந்து பிய்த்தெறிந்தார்கள்.

இந்தச் சமயத்தில் அந்த வீட்டு மாமா, தொப்பை குலுங்க, கையில் ஒரு கிண்ணத்துடன் உள்ளிருந்து ஓடி வந்தார். "ஏண்டி, சமையலறையில் நெய்க் கிண்ணத்திலே போட்டுட்டு, கிணத்தடியிலே தேடினா அகப்படுமா? உன் சந்தம் தெரிஞ்சு ஒரு தடவை நான் போய்த் தேடினேன். தோட்டை வாங்கினவனுக்குன்னா அதன் கவலை! போட்டுக்கிறவளுக்கு என்ன?"

எல்லோரும் 'திருதிரு'வெனத் திருட்டுக்களை சொட்ட ஒருவரை யொருவரும், அவனையும் பார்த்து விழித்தனர். குருக்கள் வீட்டுப் பையனாகையால், ஏழைப் பையனாகை யால், அவனை இத்தனை அடி அடித்துவிட்டு, இத்தனை சொல் சொல்லிவிட்டு, இப்பொழுது என்ன செய்வதென்று அவர்களுக்குத் தெரிய வில்லை. ஆனால் அவனுக்குத் தாங்க முடியவில்லை. திடீரென்று மாமா முகத்தில் கொத்து எச்சிலைக் காறி உமிழ்ந்துவிட்டு, பீறிட்டு வரும் அழுகை யுடன் வீட்டுக்கு ஓடியே வந்து விட்டான். ஆனால் ஆங்கு மாத்திரம் எந்தக் கை அணைக்கிறது? மானம் போன ஆத்திரத்தில் அம்மா அவனை முதுகில் இரண்டு அறை வைத்து, அறையுள் தள்ளிக் கதவைச் சாத்தினாள்.

சாப்பாடுமில்லாமல், தூக்கதுமில்லாது, செய்யாத குற்றத்திற்குட் பட்ட அவமானத்தில் இரவு முழுவதும் பொருமிப் பொருமி, அவனுள் என்ன நேர்ந்ததோ, அன்று மறுநாள் முதல் மெய்யாகவே திருடத் தலைப் பட்டான்.

ஆத்திரத்துக்காகத் திருட்டு; முதலில் சின்னச் சின்னத் திருட்டு; சிங்காரத் திருட்டு, சாமான்களுக்காகத் திருட்டு; பிறகு திருட்டுக்காகத் திருட்டு; அந்தச் சமயத்து நெஞ்சுப் படபடப்பும், இரத்தம் உடலில் குதித்துப் பாயும் ஆனந்தத் திற்காகவும் திருட்டு!

போகப்போக வெறும் திருட்டுடன் அவன் பழக்கங்கள் நிற்கவில்லை. புதுப்புதுப் பழக்கங்கள்; புதுப்புது இன்பங் கள். இன்பத்தின் புதுமை; புதுமையின் இன்பம். அதுவும் பிறருக்கு இழைக்கும் துன்பத்தின் இன்பம். அவன் செய்கைகளால் பிறர்படும் சங்கடத்தைப் பார்க்கப் பார்க்க, அவனுக்கு அவர்கள் மேல் இருந்த கரிப்பு அதிகரித்துக் கொண்டுதான் போயிற்று. நாளடைவில் அவன்மார்புள் ஏதோ கனமாய் இறங்கி, பிறகு அங்கே கெட்டிப்படுவது போல்கூட அவனுக்குத் தோன்றியது. துளித் துளியாய், படிப்படியாகத்தான்— ஆனால் நிச்சயமாய்.

அவனை ஒருவராலும் அடக்க முடியவில்லை.

"ஐயோ, நீ எனக்கு ஒரே பிள்ளைடா! உங்கப்பா கூட இப்போ இல்லேடா. என் பேரைக் கெடுக்காதேடா. நான் கண் மூடுகிறவரையிலுமாவது சரியாய் இரேண்டா—, என்று கண்ணீர் வழிந்தோட, அம்மா மன்றாடுவாள். இருந்து இருந்து, தவங்கிடந்து ஒரு பிள்ளையைப் பெற்றாள் என்றாலும், பையன் பிறந்தராசி, குடும்பம் திடீரென க்ஷீண தசை யடைந்துவிட்டது. கணவன், திடீரென ஜுரம் அடித்து, நடுத்தர வயதிலேயே காலமானார்.

இருக்கும்போதே வருவாய் வெகு சொற்பம். இருந்தும், பையனுக்கு வயது வந்ததும் மலையைப் பெயர்த்துவிடப் போகிறான் எனும் அபார நம்பிக்கை. அதன் ஒரே தூண்டுதலில், படாத கஷ்டங்கள் எல்லாம் பட்டு, மானத்தையும் அவனையும் காப்பாற்றி வந்தாள். ஆனால் பையன் வழியே தனி வழியாய்ப் போய்விட்டது. சுவாமி பாடே வேளா வேளைக்கு நைவேத்தியமில்லாமல், தகராறாய்ப் போய்விட்டது. பையன் சோற்று மூட்டையை மரக்கிளையில் எங்கேயாவது தொங்க விட்டு விட்டு, சஹாக்களுடன் கூத்தடிக்கப் போய்விடுவான். வீட்டில் சாப்பாட்டுக்கு அந்த மூட்டை வந்தாக வேண்டும். தெய்வம் எப்பொழுது கண் திறக்குமோ என்றுகூட இல்லை—பையனுக்கு வீட்டுப் பக்கம் எப்பொழுது மனந்திரும்புமோ என்று அம்மா, கண்ணில் உயிரை வைத்துக்கொண்டு, காத்துக் கிடப்பாள்.

அப்படியே அவன் இஷ்டப்பட்ட சமயத்தில் வீட்டுக்கு வந்தவனையும், கனிவாகவோ கண்டனமாகவோ ஒரு வார்த்தை கேட்டுவிட முடியுமா? அவன் சீறி விழுகையிலேயே நாடி ஒடுங்கிவிடும். "சுவாமி நீதான் கண்ணைத் திறக்க வேண்டும்—குழந்தையைக் கொடுத்தே—கூட அவனுக்குக் குணத்தைக் கொடு—"

மிடிவாயும், பிள்ளைக் கவலையும் பட்டுப் பட்டு, அவளுக்கு வயதுக்குமீறிய கிழம் விழுந்து விட்டது. இதைத் தவிர ஆசாரம், சீலம் எல்லாம் அதிகம். தானாய் நேரும் பட்டினிகள் தவிர, நாள் கிழமை யென்று உபவாசம் இருப்பாள்—எல்லாம் பிள்ளைக்காக. 'பிள்ளைக்கு நல்ல புத்தி வரணும். பிள்ளைக்கு கல்யாணம் ஆகணும். பிள்ளை குலம் வளரணும்.'— ஆனால் அவள் சாமியை வேரோடு பிடுங்கப் பிடுங்க, அது அவள் விஷயத்தில் கடுமையாய்த்தானிருந்து. தரித்திரம்தான் பிடுங்கி யெடுத்தது. அப்பளமிட்டு, இலை தைத்து விற்கும்

நிலையிலிருந்து மாறவே முடியவில்லை.

ஆனால் அவள் பையனுக்கு யார் பெண் கொடுப்பார்கள்? எதை நம்பிக் கொடுப்பது? குணத்தையா, குடும்ப சம்ரக்ஷணையிலும் கௌரவத்திலும் இருக்கும் பொறுப்பிற்கா, படிப்புக்கா?

பையன் என்னவோ ராஜா மாதிரிதான் இருந்தான். ஒற்றை நாடித் தேகம். நெருப்புச் சிவப்பு. நடை, நடையாயிருக்காது; ஏதோ காற்றில் மிதப்பது போலத்தான் இருக்கும். அதன் அழகு அவ்வளவு லாகவம். உடை பாவனைகள் எல்லாம் அப்படித்தான். கோவில் குருக்களாய் இருப்பதால், 'கிராப்பு' வைத்துக்கொள்ள முடியவில்லை. மயிரை நீளமாய் வளர்த்து மேல் நோக்கி வாரி விட்டிருந்தான். கஞ்சிக்கு 'லாட்டரி'யா யிருந்தாலும் நல்ல உடைதான் உடுத்துவான். கண்களின் ஒளி ஊடுருவும். அவனுடைய கத்திப் பார்வைக்குப் பயந்தே அண்டை வீட்டார் எல்லோரும் தங்கள் பெண்டிரை அடைகாத்து வந்தனர்.

அவன் தெருவழியே போகையில், பெண்கள், வீட்டு ஜன்னல் வழியே ஆசையுடன் திருட்டுப் பார்வை பார்ப்பார்கள். அதுவும் அவனுக்குத் தெரியும்; தெரியாததுபோல், ஒரு அலட்சியப் புன்முறுவலுடன், மிதந்துகொண்டே போவான். அத்தனைக்கும் அவன் அவர்களை நாடிச் சுற்றியதில்லை. ஆனால் ஊரில் மற்றக் காலிகளைவிட அவனிடம் தான் பயந்தார்கள். அவனுக்கும் அவன் சஹாக்களுக்குமே வித்தியாச மிருந்தது. அவர்களுக்கே அவனிடம் ஒரு எல்லைக்கு மேல் நடுக்கந்தான். அவனிடம் ஒரு நெருங்க முடியாத தன்மையும், அடிப்படையான குரூரமும் இருந்தன. ஏதோ கத்தியோடு பழகுவது போல்தான்! அதை எவ்வளவு அன்போடு அணைத்தாலும் அதற்கு வெட்டத்தான் முடியும்; அதன் இயல்பே அது

தான். அவனுக்கு அவனைப்பற்றியே அநாவசியமாய் இருந்தது. அவன் எதற்கும் தயாராய் இருந்தான். அதனால் அவன் மற்றக்காலிகளை விட அபாயகரமானவனாய் இருந் தான். கருணை என்பதே அவனிடமில்லை.

அவன் தாயின் வேதனையோ, மற்றவர்கள் வேதனையோ, அவனைப் பாதித்த மாதிரி தெரியவில்லை. அவனுடைய முறையீடும், மற்றவரின் முறையீடும், ஏதோ பாறையின் மீது மோதும் அலைகளின் வியர்த்தமாய் இருக்கும். அசைந்துகூடக் கொடுக்காத அப்பாறையே போல, அவனுடைய மௌனமும் அச்சத்தை விளை வித்தது. தவறிழைத்தவனின் மௌனமாயிலாது, அது அலட்சியத்தின் மௌனமா யிருந்தது. மார்மேல் கையைக் கட்டிக் கொண்டு எங்கேயோ பார்த்துக் கொண்டிருப்பான். ஜலத்துள் அமுங்கிய குடம்போல், அவன் தன்னுள் மூழ்கிக் கிடப்பான்.

''என்னடா உன்கிட்டத்தானே சொல்றேன், இப்படிப் பண்ணலாமாடா?'' என்று அவன் தாய் எரிந்தால், ''ஊம்?—என்னம்மா சொல்றே?'' என்று விழித்தெழு வான். அதுவரை என்ன யோசனை பண்ணிக் கொண்டிருந் தான் என்று கேட்டால், அவனுக்கே தெரியாது, முகத்தில் சுளிப்பு என்று இல்லாவிட்டாலும், அதில் சிரிப்பு என்றும் இல்லை.

ஆனால் எந்தப் புற்றுக்குப் பால் வார்த்து அவனைப் பெற்றெடுத்தாளோ, அப்புற்றின் வழி அவன் போகையில், அதைப் பார்க்கையில், எரிமலையின் சுண்டிய கற்குழம்பு தனக்குள் தளைப்பதுபோல் அவனுள் ஏதோ அசைந்து கொடுக்கும். கொஞ்ச நாழியாவது அங்கு நின்று அதைச் சிந்தியாமல் போகமுடியவில்லை.

அப்புற்று முன்பைவிட இப்பொழுது மிகவும் வளர்ந்து விட்டது. உயரமும் அதிகம். சிறுசிறு மண் குன்றுத் தொடர்கள் ஓங்கி நின்றன. அவைகள் தாமே வளருந் தன்மைதான் என்ன? அவைகளின் உள் பக்கம் எப்படி யிருக்கும்? எதுவரை தான் போகும்? அதன் உள் இருள் எவ்வளவு ஆச்சரியமானதாய் இருக்கும்? அந்த உள் இரு ளுடன் ஐக்கியமாய்விடின்—!

மண்டையை வெடித்துக்கொண்டு கிளம்ப முயன்றா லும், அதற்கு மேல் இடமில்லாததால் யோசனை எட்ட மறுத்துவிடும். பெரு மூச்செறிந்து திரும்புவான்.

போகப் போகக் குருக்கள் பையன் சமாசாரம் தாங்கக் கூடியதாயில்லை. திடீரென்று ஒரு நாள் ஒரு கூட்டம் திரண்டு வீட்டு வாயிலையடைந்தது, ஏக இரைச்சலுடன். அப்பொழுது அவன் வீட்டில் இல்லை. தாய்தான் இருந் தாள். அரவங் கேட்டு, அடுப்பங்கரையிலிருந்து கைச் சாமானோடு ஓடிவந்தாள். குழம்புக்குப் புளியைக் கரைத் துக்கொண்டிருந்தாள். கும்பலைப் பார்த்ததும் வயிற்றில் புளியைக் கரைத்தது. கூட்டத்தின் திரண்ட கோபாவேசத் தில், அவ்விடத்தில் ஆடிய காற்றே விறுவிறுத்தது.

ஆரவாரத்திலிருந்து ஒரு குரல் பிரிந்து வந்தது. அதன் சப்தம் அவள் மேல் மோதியது.

"பெரியம்மா—இனிமேல் உங்கள் பையன் கோவில்படி தாண்டினால், நாங்கள் காலை ஒடித்துப் போட்டு விடு வோம்—உங்கள் பையனை நீங்கள் இனி பார்த்துக் கொள் ளுங்கள். பிறகு எங்களைக் குறை சொல்ல வேண்டாம்—"

"ஐயோ இப்போ என்ன நடந்துடுத்து?"

கையில் பாத்திரத்தை ஏந்திக்கொண்டு வாசற் குறட்டில், ஒண்டியாய் அவர்கள் எதிரில் நிற்கையில் அவளைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது.

"உங்கள் பையனும் இன்னும் நாலு சோம்பேறிகளு மாய்ச் சேர்ந்து, நேற்று ராத்திரி, எருவுக்காகக் கழனியில் மடக்கிவிட்டிருந்த ஆட்டு மந்தையிலிருந்து ஒரு ஆட்டுக் குட்டியைப் பிடித்து, ஏதோ வெங்காயம், வேர்கடலை, பலாக்கொட்டை சுடுவதுபோல், நடுவயலில் குழியை வெட்டி நெருப்பை மூட்டிச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டார் களாம், இந்த அக்கிரமம் எங்கே அடுக்கும்? பிராமணப் பிள்ளையாய்ப் பிறந்துவிட்டு இந்த மாதிரி பண்ணிப்பிட்டு, கோவிலில் மணியாட்ட வந்துவிட்டால், ஊர் உருப்பட்டு விடுமா?"

அவளுக்கு உடல் பரபரத்தது: "இன்னிக்கு எனக் காச்சு, அவனுக்காச்சு. நான் கவனிச்சுக்கறேன். நானே உங்களுக்குச் சொல்கிறேன். அவனைக் கோவிலில் சேர்க்கா தீர்கள். இன்றையிலிருந்து பூஜைக்கு வேறு ஏற்பாடு பண்ணிக் கொள்ளுங்கள்."

அவன் வீட்டுக்கு வருகையில் அவள் பூஜையில் உட் கார்ந்திருக்கிறாள். கட்டுக் கட்டாய் விபூதியணிந்து, துல்லி யமான வெண்மை யுடுத்தி, சிவப் பழமாய் மணையில் உட் கார்ந்திருந்தாள். எதிரே கோலத்தின்மேல் பூஜை சம்புடம் இருந்தது.

"அடே! இங்கே வா—"

அவள் குரல் அவளுக்கே 'கணீ'ரென்றது. அவன் மௌனமாய் வந்து நின்றான். புருவங்கள் வினாவில் நெரிந் தன. இடமே இருவரின் அந்தர பலத்தின் வேகத்தில் சிலிர்த்தது. இரு குஸ்திக் காரர்கள், தாக்குவதற்குமுன் ஒருவர் பலத்தை யொருவர் வெறும் கண்ணோட்டத் திலேயே ஆராய்வது போல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

"இப்போ நான் பூஜையில் உட்கார்ந்திண்டிருக்கேன் அதனாலே என் வாயால் சொல்லக்கூட அஞ்சறேன். ஆனால் இன்னிக்கு உன்னைப் பத்தி நான் கேள்விப்பட்டது வாஸ்தவமா?"

அவன் முகம் சஞ்சலிக்கவில்லை; சிந்தனையில் ஆழ்ந்தது. அவனுடைய மௌனத்தால்தான் குழப்பம் உண்டாகியது. தன் மகனாயிருப்பினும் அவனை அறியமுடியாதது அவளுக்குப் பெருந் தோல்வியாயும் ஆத்திரமாயு மிருந்தது.

"நான் எதைக் குறிச்சுக் கேக்கறேன்னு புரியறதா?"

புன்னகை புரிந்தான் "புரியாமல் என்ன?"

"என்ன சொல்றே?"

"உனக்கு என்ன தோன்றுகிறது?" இப்பொழுது அவன்தான் பூனை; அவள்தான் எலியாக. அவன் திடீரென்று மாற்றியதும், அவள் தன்னை அடக்கிக்கொள்ளச் செய்யும் முயற்சிகள் எல்லாம் பறந்தன.

"அடே, இந்தச் சங்குப்பாலைக் கையிலே வெச்சுண்டு சொல்றேன்—நீ அழிஞ்சி போயிடுவே—என் வயிறு எரியக் காணாதே—"

அவன் குரலும் பதிலும் அமைதியாய்த்தானிருந்தன—"மற்றவாள் என்னை அழிக்கறதைவிட நானா அழிஞ்சு போறது மேல் இல்லையா? அதுவே ஒரு வைராக்கியந்தான், அம்மா—அதற்கு ஒரு சத்தியமுண்டு—"

அம்மாவுக்கு உச்சி மண்டை இரத்தத்தில் முத்துக் கொதிகள் வந்தன. தொண்டையைக் கிழித்துக்கொண்டு கத்தினாள்:

"அழிஞ்சேதான் போயிடுவே. நான்தான் சொல்றேனே—"

"இப்போ என்னம்மா வந்துடுத்து? அழிஞ்சால்தான் இப்போ என்ன முழுகிப் போயிடுத்து? ஏன் இப்படி பிரமாதப்—"

"ஹா, பாவி! என்ன பண்றே?—" அவள் கண்கள் பயங்கரத்தில் அகல விரிந்துவிட்டன. அவள் அவன் முகத்தைப் பார்க்கவில்லை. அவள் கண்கள் அவன் கையைத்தான் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. அப்பொழுதுதான் அவனுக்கு என்ன செய்தோம் எனத் தெரிந்தது. பேசிக்கொண்டே பூஜை விளக்கில் சிகரெட் பற்ற வைத்துக் கொண்டிருந்தான்...

அவள் தன் வசமிழந்து விட்டாள். அவள் எதிரில் திடீரென்று திரை கிழிந்து, அவளுக்கு மாத்திரம் தரிசனம் ஆவதுபோல், முகம் மாறியது. கன்னத்தில் 'பளீர் பளீர்' என்று அறைந்து கொண்டாள். கண்கள் அமானுஷ்யமான ஒளியுடன் ஜொலித்தன.

"ஹே சுப்பிரமணியா! என்னை மன்னிச்சுடு—நான் இவனைப் பெத்தே யிருக்கப்படாது! என்னத்தைப் பெத்தேன்னு இப்பொழுதுதான் கண்டேன்! நான் பெரும் பாவத்தைப் பண்ணிப்பிட்டேன்—என்னை மன்னிச்சுக்கோ ......மன்னிச்சுக்கோ—"

'தடா'லென்று அவள் கீழே விழுந்துவிட்டாள்.

அவன் சிரித்துக்கொண்டே புகையை ஊதிக்கொண்டு அவ்விடம் விட்டு அகன்றான்.

வீடு திரும்பும் வேளைக்கு அஸ்தமித்து விட்டது. அவன் வீடே ஊருக்குக் கொஞ்சம் ஒதுக்கு. மேட்டு நிலத்தில் இருந்தது. அதில் சாயந்தரம் திண்ணைப் புரையில் ஏற்றிவைக்கும் அகல் விளக்குச் சுடர் தொலைவிலேயே தெரியும். ஆனால் இன்று விளக்கு எரியவில்லை. அதுவே

ஒரு ஆச்சரியமாய்த் தானிருந்தது. கிட்ட நெருங்க நெருங்க வீட்டின் தேக்க மௌனம் வாய்விட்டு அலறியது.

வெறுமெனச் சாத்தியிருந்த வாசற்கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றதும் இருட்டில் ஏதோ கனமாய் அவன்மேல் உராய்ந்து ஆடியது. காலின் கீழ் ஏதோ தடுக்கியது. பிடரி குறு குறுத்தது. சட்டென நெருப்புக் குச்சியைக் கிழித்தான்—அம்மா ரேழி விட்டத்திலிருந்து கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்தாள். காலடியில் ஒரு பித்தளை அடுக்கு உருண்டோடியிருந்தது.

அப்பொழுதாவது கலங்கியதோ மனம் என அவனையுமறியாமல் தன்னை ஆராய்கையில், அதில் ஏதோ ஒரு எண்ணம் லேசாய் மின்வெட்டுப் போல் பாய்ந்து மறைந்தது.

"சே, இன்னுங் கொஞ்ச நாளிருந்தால் தானாகவே செத்துப் போயிருக்கலாமே!"

அன்றிரவே, அவ்வூர் மண்ணை உள்ளங்காலினின்றும் உதறிக்கொண்டு நடந்தான்.

★

"பிறகு எங்கே போனாய்?"

அவனின்றும் பிரிந்த அது அவனுக்கிடும் தீர்மானமான கேள்விக்குப் பணிவுடன் பதில் சொல்லிக்கொண்டு போனான்.

"போனேன். போய்க் கொண்டேயிருந்தேன். கையிலிருந்த ஒன்று அரைக் காசும் செலவழிந்து போயிற்று, திருடித் தின்னவாவது தோன்றிற்றே தவிர, பிச்சை கேட்க மனம் மானம் பார்த்தது.

"மூன்று நாள் பட்டினி. கடைசியில் எங்கோ போய், ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு, பணங் கொடுக்காமல் நழுவப் பார்க்கையில், 'கல்லா'ப் பெட்டியிலிருந்த முதலாளி மலை போன்ற சரீரத்தைத் தூக்கிக் கொண்டு எழுந்து வந்து கையைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான். பிடி, இரும்புப் பிடியாய் இருந்தது. 'மரியாதையாய்ப் பணத்தை வெச்சிட்டுப்போ. இல்லாட்டா தின்னத்துக்குக் கூலியாக வேலை செஞ்சிட்டுப் போ... இரண்டு ஈடு உளுந்து இருக்கு, அரைச்சுக் கொடுத்துட்டுப் போ...' என்றான்.

"என்ன செய்வது? அரைத்துக் கொடுத்தேன். பிறகு அப்போதைக்கு வயிற்றுப் பாடு பெரும் பாடா யிருந்ததாலும், அவனுக்கும் ஒரு ஆள்வேண்டி யிருந்த தாலும் அங்கேயே அது சாக்கில் வேலைக்கு தங்கி விட்டேன்.

"ஆனால் அவனிடம் நான் வகையாய் மாட்டிக் கொண்டேன். தொட்டதற் கெல்லாம் எரிந்து விழுந்து கொண்டிருப்பான். ஆட்களைப் பம்பரமாய்ச் சுழற்றி வேலை வாங்குவான். கடைக்கு மாத்திரம் முதலாளியில்லை அவன்; தொழிலிலேயே அவன் முதல்தான்! அவன் சமையலுக்கும் பட்சணங்களுக்கும் ஏகப்பட்ட கிராக்கி. இங்கே கலியாணம், அங்கே பிறந்தநாள், இங்கே டீ பார்ட்டி, அங்கே விருந்து—என்று எப்பொழுதுமே கிராக்கி. அப்போதெல்லாம், அவனோடு அவன் பரிவாரம்—அதில் நானும்—கரண்டிகளையும், அண்டாக்களையும் தூக்கிக் கொண்டு போவோம்.

"கோட்டை யடுப்பருகில் மணைபோட்டு உட்கார்ந்து கொண்டு அதிகாரம் பண்ணுவான். வேலை யெல்லாம் ஆன பிறகு, அடுப்பிலிருந்து இறக்கும் சமயத்தில் ஓரொரு பதார்த்தத்திலும் ஒரு கரண்டி எடுத்து மூக்கண்டை

கொண்டுபோய்—முகர்ந்து கூட அல்ல—வெறுமென மூக்கண்டை கொண்டு போய், பதஞ் சொல்லிச் சரிப்படுத்து வான். மெய்யாகவே அவன் கையில் ஜாலமிருந்தது. அவன் ஒரு சாமானைப் பக்குவம் பண்ணின பிறகு, அதைச் சமைத்தவனே பிரமிக்கும்படி, அதன் மதுரம் அதிகரித் திருக்கும்.

''ஆனால் கோபம் வந்தால் பேய்க்கு வருவது போல் தான்!

''ஒரு சமயம் ஒரு உத்தியோகஸ்தன் வீட்டுக்கு வேலைக்குப் போயிருந்தோம். ஏதோ அவனுக்குச் சம்பள மும் வேலையும் உயர்ந்ததற்காக, நண்பர்களுக்கு விருந்தாம்.

''அடுப்பு மிகவும் புகைந்தது என்று அதில் 'சட்'டென ஒரு கரண்டி எண்ணெய் ஊற்றியதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, நேரே வந்து, சுழற்றி என்னைக் கன்னத்தில் விட்ட அறையின் வேகத்தில் தொலை தூரத் தில் 'தொப்' பென்று விழுந்தேன். அறையின் கனம் என் மேல் ஒரு வண்டி செங்கல் சரிந்தாற்போலிருந்தது.

'' 'யார் வீட்டு சொத்துப் போச்சுன்னு பண்ணறே? அடுப்பு எரிய விடறானாம், விடறான்—மடையன்!'

''பின்னாலிருந்து 'களுக்'கென்று சிரிப்பு ஒலித்தது. திரும்பிப் பார்த்தேன். அந்த வீட்டுக்காரரின் பெண் நின்று கொண்டிருந்தாள். இரட்டைப் பின்னல், உள்பாவாடை தெரியச் சல்லாப் புடவை, தனி மேலாக்கு, ஸ்னோ, பவுடர், நாகரிகத்தின் மற்றச் சின்னங்களுடன்—

''மனிதன் அழிவதற்குக்கூட அவ்வளவு பயப்பட வில்லை. அவமானப் படத்தான் அஞ்சுகிறான், அதுவும் பெண்ணெதிரில். அவமானத்திலும் அடி மயக்கத்திலும் கண்

கள் இருண்டன. என் கண் எதிரில், என் ஊரில், வயற் புறத்தில், மரத்தடியில் புற்று எழுந்தது— என்னுள் ஏதோ சீறி எழுந்தது.

" 'என்னடா முழிச்சுப் பாக்கறே, சுட்டெரிச்சுட றாப்போல! நல்ல பாம்புப் பார்வை! நீ பாம்பாயிருந் தால், உனக்கு ராஜா மூங்கில் தடி இருக்குன்னு தெரியுமா?

"வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று அப்பொழுதே தோன்றிவிட்டது. சமையல் வேலை முடிந்து விட்டது. சாப்பாட்டிற்குக் கொஞ்ச நேரமிருந்தது. காற்று வாங்கவும், குளிக்கவும், உடை மாற்றவும் பரிசாரகர்கள் வெளியே போனார்கள். ஆனால் நான் மாத்திரம் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தேன். அவமானம் தாங்காமல் மனம் புழுங்கிக் கொண்டிருந்தது. அந்தக் கேலிச் சிரிப்பு இன்னமும் காதில் ஒலித்தது.

" 'என்ன பண்ணறே, இருட்டில் உட்கார்ந்துண்டு? உடுத்திக்கப் போகல்லே?'

"என் முதலாளிதான்; கருவேப்பிலைக் கொத்தை அண்டா ரசத்தில் உருவி உதிர்த்துக் கொண்டு, ஏதோ சொன்னான். அவன் குரலில் இப்பொழுது கோப மில்லை.

" 'எந்தத் தொழிலிலும் ஒண்ணு தெரிஞ்சிக்கணும்; தெரியா விட்டால் அதைக் கத்துக்கற வழியைப் பார்க் கணுமே தவிர, ஏமாத்கற வித்தை கூடாது. இன்னொண்ணு என்னன்னா, பண்ணின தவறுக்குத் தண்டனை யடைஞ்சப்புறம் அத்தோடு அது போச்சு. அப்புறம் மேல் காரியத்தை ஓட்டணும். நீ மாத்திரம் இந்தத் திருட்டுப் புத்தியை யெல்லாம் விட்டுட்டுத்

திருந்தறதாயிருந்தால், உன்னை நான் 'கல்லா'ப் பெட்டியில் உட்கார்த்தி வைப்பேன்— என் பெண்ணைக்கூடக் கொடுப்பேன்—போ, போ—சொக்காயையும் வேஷ்டியையும் மாத்திண்டு கோகர்ணத்தை எடு—'

"அவன் எப்பொழுதும் இப்படிப் பேசியதே யில்லை. நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். அவசர அவசரமாய் அங்கு விட்டுப் போனேன்.

"எனக்குச் சமைக்க சரியாய்த் தெரியாவிட்டாலும், பரிமாற என் எஜமான் என்னை நன்றாய்ப் பழக்கி யிருந்தான். ஏனெனில், நான் உருவா யிருப்பதாலும், சரியாய் உடுத்துவதாலும், பந்திக்கு எடுப்பாய் இருப்பேன். ஆகையால் அவன் பேருக்கும் எடுப்பா யிருந்தது. முக்கியமான சாமான்களைத் தூக்குவதற்கு நான்தான் முதலில் போயாக வேண்டும். மற்றவர்கள் இதைப்பற்றி அவனிடத்தில் அலுத்துக்கொண்டால், 'அதெல்லாம் உங்களுக்கு தெரியாது; வியாபார சூட்சுமம். சரக்குப் பாதி ஆள் பாதி—இது ரெண்டும் சேர்ந்தால்தான் முக்கியமாய் இந்தச் சமையல் தொழிலுக்கு ரஞ்சகம். இல்லாவிட்டால் இவன் சமையல் லட்சணத்துக்கும் கை வாசனைக்குமா இவனைக் கட்டிண்டு அழறேன்?' என்பான்.

"அதுவே நான் சாம்பார் எடுத்தேன், கூட்டெடுத்தேன், கறி எடுத்தேன், ரஸம் எடுத்தேன்.

"பந்தியில் அவளும் உட்கார்ந்திருந்தாள். அவள் இலைக்கு நான் வரும்போதெல்லாம் என்னைக் குறும்பாகப் பார்த்துக்கொண்டே சிரித்துக் கொண்டிருப்பாள். எனக்கு எரிச்சலா யிருந்தது. 'இரு இரு மகளே—' என்று கறுவிக் கொண்டே பாதாம்கீரை எடுத்தேன்.

“ஒவ்வொருவருக்கும் ஊற்றிக்கொண்டு வருகையில் அவர்கள் வாயில் வைத்ததும் அவரவர் முகங்கள் விதவிதமாய் ஆச்சரியமும், அசடும் வழிய, தூக்கி வாரிப் போட்டாற்போல் சவுங்கி, சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் சவுங்குவதைக் காண்கையில் உள்ளூற ஆனந்தம் பொங்கியது.

“ஓ Damn! இதென்ன, பாயசம் உப்புக் கரிக்கிறது—' என்று விட்டு எஜமான் கத்தினார். நேரே என் பார்வை, பின்னால் கை கட்டிக் கொண்டு பந்தி நடுவில் நின்று கொண்டு மேற்பார்வை பார்த்துக் கொண்டிருக்கும் என் முதலாளி மேல் பாய்ந்தது. நான் அவனைப் பார்த்ததை அவள் பார்த்து விட்டாள். ‘பக்' கென்று அந்தப் பெண் வாய் விட்டுச் சிரித்துவிட்டாள். என் முதலாளி திகைத்து நின்றான்.

“சிரிப்பு என்ன வேண்டியிருக்கு—பார்ட்டி குட்டிச் சுவராப் பேச்சே—சமையல்காரன் யார்' என்று அவள் தகப்பனார் கர்ஜித்தார்.

“ ‘இதில் ஒரு நீதியிருக்கு, Papa! ஒரு கரண்டி எண்ணெய் ஒரு படி உப்பில் கொண்டுபோய் விட்டு விடும்—'

“ ‘இது என்ன புதிர்?'

“அவள் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே ‘இல்லை; இது எனக்கும் இங்கே இன்னும் ரெண்டு பேருக்கும் தான் புரியும்—இது ஒரு பெரிய தமாஷ்!' என்றாள்.

“அவள் வார்த்தைகளின் அர்த்தம் என் எஜமான் மண்டையில் ஊறுகையில் அவன் முகம் மாவாய்ப் பிசைந்தது. ஓசைப்படாமல் நழுவினேன். எங்கள் விடுதிக்கு

ஓடினேன். மறு சொக்காயையும் வேஷ்டியையும் அவசர அவசரமாய்க் கைப்பையில் திணித்தேன். அவன் கண்ணில் படுமுன் கிளம்பியாக வேண்டும்! பையைத் தூக்கிக்கொண்டு திரும்புகையில் வாசற்படியில் நிழல் தட்டியது. அவள் நின்று கொண்டிருந்தாள்!

" 'ஓ!'

—நான் பின்னடைந்தேன். என்னை நோக்கி இரண்டடி வைத்தாள்.

" 'எங்கே அவ்வளவு அவசரம்?'—அவள் வாயின் வார்ப்பே சிரிப்பா?

" 'வேடிக்கையை மௌனமாய் அனுபவிக்க முடியாமல், நீ தான் புத்திசாலி மாதிரி, அர்த்தத்தையும் விளக்கி விட்டதால், நான் மறுபடியும் என் எஜமானிடம் வேலைபார்க்க முடியாதபடி பண்ணி விட்டாய். உன்னாலான உபகாரம்—'

" 'இதானே? என் வீட்டுக்கு ஒரு ஆள் தேவையாயிருக்கிறது. அப்பாகிட்டே சொல்லி உன்னை வைக்கச் சொல்லுகிறேன். ஓடிப்போய் விடாதே. இருந்தாலும் நீ பண்ணின வேலையை நினைக்க நினைக்கச் சிரிப்பு தாங்க முடியவில்லை— அடேயப்பா! என்ன நெஞ்சுக் கனம் உனக்கு!—'

"என் பையைப் பிடுங்கிக் கொண்டு சிரித்துக் கொண்டே போனாள்.

"நான் அங்கேயே நின்றுகொண்டிருந்தேன். ஆனால் நான் அங்கு இல்லை. வயற்புறத்தில், மரத்தடியில், புற்றெதிரில் நின்று கொண்டிருந்தேன். புற்றுநாகம் சட்டையுரித்துக் கொண்டிருந்தது. மினுமினுக்கும் புத்துடம்புடன் பழஞ்சட்டையினின்றும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது."

* * *

"அங்கு நான் கொஞ்ச நாள் வேலை பார்த்தேன். வேலையொன்றும் கிடையாது. செலவுக்கு மீறிய காசு கையில் இருந்ததும், செல்லப் பெண்ணும் தான் என்னை வேலையில் வைத்துக் கொண்ட காரணமேயன்றி, வேலைக் காக என்றல்ல. சுகமாய்க் காலத்தைக் கழித்தேன். நிறைய அவகாசமிருந்தது. என் இஷ்டப்படி வெளியில் சுற்றினேன்.

"ஒரு தடவை தெருவில் போய்க் கொண்டிருக்கையில் என் மேலேயே ஏறிவிடுவது போல் என் பின்னால் ஒரு கார் வந்து 'சடக்'கென்று நின்றது. அவள் மாத்திரம் உட்கார்ந்துகொண்டிருந்தாள், சிரித்த வண்ணம். அவள் தான் ஓட்டிக்கொண்டிருந்தாள். அவள் மேலிருந்து வீசும் வாசனையில் எனக்கு மயக்கம்கூட உண்டாயிற்று. பென்ஸிலால் வெகு ஜாக்கிரதையாகத் தீட்டியிருந்த புருவங்கள் வெகு ஒழுங்காய் வளைந்திருந்தன. உதடுகள் முகத்தில் முளைத்த இரத்தப் பூவாய்த்தானிருந்தன.

" 'ஏறி உட்கார்—பின்னால் இல்லை; இங்கே—கிட்ட!'

"முழு வேகத்தில் பறந்தோம். கடைகளும், வீடுகளும், தூரத்தில் பங்களாக்களும், பிறகு வெறும் மரங்களும் வரிசை வரிசையாய் எங்கள் இருமருங்கிலும் பறந்தன. அந்தி சூரியன் வானத்தை இரத்த விளாறாக்கிக் கொண்டிருந்தான். அதைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுப் பிறகு சுற்றுமுற்றும் நோக்குகையில் நாங்கள் கடற்கரையில் ஒரு ஒதுக்கிடத்துக்கு வந்திருந்தோம்.

" 'சட்'டெனக் காரை நிறுத்தினாள். அப்படியே சற்றுநேரம் என்னை ஏற இறங்கப் பார்த்தாள், புன் சிரிப்புடன்.

" 'உம்—நீ நன்றாய்த்தானிருக்கிறாய்— இந்தச் சந்தனக் கலர் ஜிப்பா உனக்கு ஒத்துத்தானிருக்கிறது—'

‘‘எவ்வளவு உண்மையா யிருந்தாலும்கூட நேர்ப் புகழ்ச்சி, லஜ்ஜையைத்தான் உண்டாக்குகிறது. அதுவும் இம்மாதிரிப் புகழ்ச்சியால் அருவருப்புத்தான் தட்டுகிறது. நான் வானத்தைப் பார்த்துக் கொண்டே—‘நேரமாய் விட்டாப்போலிருக்கிறதே, திரும்பலாமா?—’ என்று கேட்டேன்.

‘‘சின்னக் குழந்தை மாதிரி உதட்டைப் பிதுக்கிக் கொண்டே, ‘இப்பத்தானே வந்தோம். என்ன அவசரம்? இந்த இடம் ஜோராயில்லே?’ என்று கேட்டுக்கொண்டே என்மேல் சாய்ந்தாள். அவள் குரல் வெறும் மூச்சாகவே ஒடுங்கிப் போயிற்று. உடுக்கு அடித்து ஆவேசத்தை வரவழைத்துக் கொள்பவன்போல இமைகள் அரைக்கண் மூடி, விழிகளின் ஒளி மங்கிப் படலம் படர்ந்தது.

‘‘ ‘ஓஹோ!’

‘‘நெட்டிபோல் ‘கனமில்லாமல்தானிருந்தாள். கழுத்தில் இரட்டைவடச் சங்கிலிகள் இரண்டும், ஒரு வைரச் சங்கிலியும் மின்னின. ஒவ்வொரு கையிலும் இரண்டு ஜோடி தங்க வளையல்கள். அவைகளைத் தொட்டுக் கொண்டே நான்—‘ஏது’ கையின் அளவைவிடப் பெரிதா யிருக்கிறதே!’ என்றேன்.

‘‘சிரித்துக்கொண்டே ‘அதுதான் இப்பொழுது பாஷன்’ என்றாள் அவள். நான் அவள் பார்வையைச் சந்திக்காமலே. ‘உனக்கும் எனக்கும் அந்தஸ்தில் எவ்வளவு வித்தியாசம் என்று தெரியுமோ?—’என்றேன்.

‘‘ ‘இருந்தால் என்ன?’

‘‘ ‘அப்படியானால் உன் தகப்பனார் இப்படி உன்னையும் என்னையும் பார்க்கச் சம்மதிப்பாரா?

" 'அதைப்பற்றி இப்போ என்ன?'

" 'அவ்வளவு லேசாய் ஒதுக்கிவிடற விஷயமா?'

"வங்கி வங்கியாய்க் கத்தரித்திருக்கும் நெற்றி மயிரை லேசாய் ஒதுக்கிக்கொண்டு, எங்கேயோ பார்த்துக்கொண்டு 'வாழ்க்கை ஒரு விளையாட்டு. 'நாளையக் கவலை நாளை' என்றாள்.

" 'இல்லை. விளையாடும் சமயத்தில் விளையாட்டு; வினையா யிருக்கும் சமயத்தில் வினை—'

" 'என்னை என்ன பண்ணச் சொல்லுகிறாய்?'

" 'என்னுடன் வந்துவிடு—'

"தன் மூக்கில் விரலை வைத்தாள், கேலி ஆச்சரியத்துடன். 'ஏது, உன் நெஞ்சுத் துணிச்சல், என்னைக்கூடத் திக்குமுக்காடச் செய்கிறது—' என்றாள்.

" 'ஏன், நீ ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? உன்னை வெறுமெனச் சோதித்துப் பார்த்தேன். உன் அந்தஸ்துக்கு ஒரு நாளும் நான் குறைந்தவனல்ல. நீ நினைத்துக் கொண்டிருக்கிற மாதிரி நான் ஒன்றும் அன்னக் காவடி இல்லை. என் அண்ணன் ஜமீன்தார். நான் வீட்டில் கோபித்துக்கொண்டு ஓடிவந்து விட்டேன். கோபம் தணிந்ததும், என் இடத்துக்கு நான் போக வேண்டியதுதானே!—'

" 'ஓஹோ!' அதற்குமேல் பேச அவளுக்கு நா எழவில்லை.

"எங்கள் மேல் இருள் இறங்க ஆரம்பித்தது."

* * *

“அன்றிரவு நாங்கள் இருவரும், ரயிலில் முதல் வகுப்பு வண்டியில் போய்க்கொண்டிருந்தோம். தொலை தூரத்துக்கு டிக்கட் வாங்கி விட்டேன்.

“நான் வெகு நாழிகை எழுதிக் கொண்டிருந்தேன். தூக்கக் கலக்கத்துடன் கைகளை முறித்துக் கொண்டு என்னிடம் அவள் வந்தாள்.

“ ‘என்ன எழுதுகிறாய்?’ என்றாள்.

“ ‘உன் தகப்பனாருக்குக் கடிதம்—’ என்றேன்.

“அவள் திரும்பிப் படுத்துக்கொண்டு தூங்கி விட்டாள். படுக்கையில் உறுத்துமென்றும், பொது ஜாக்கிரதைக்காகவும் நகைகளைக் கழற்றிப் பெட்டியில் வைத்துவிட்டாள். பெட்டிச் சாவி என்னிடமிருந்தது,

“கடிதத்தை முடித்ததுப் ஒருமுறை படித்துப் பார்த்தேன். எனக்கு ஒரு பிரதி வைத்துக் கொள்ளாமல் போனேனே என்றுகூடத் தோன்றியது. அவ்வளவு நன்றாய் அமைந்திருந்தது—”

—“என்ன எழுதியிருந்தாய்?” என்று அவனின்றும் பிரிந்த அது கேட்டது.

“அது எப்பவோ நடந்தது; இப்பொழுது கேட்டால் எப்படித் தெரியும்?” என விசித்தான்.

“இல்லை. இப்பொழுதுதான் உனக்குத் தெரியாததெல்லாம் தெரியும்—புரியாததெல்லாம் புரியும் சொல்; உனக்கு வரும், பார்—”

அது சொல்லியது போலவே, அவன் படிக்கப் படிக்க, நெருப்பில் எழுதியதுபோல் எழுத்துக்கள் படர்ந்து கொண்டே போயின!

" 'அநேக ஆசீர்வாதம்; அல்லது நமஸ்காரம்—அல்லது கடிதத்தை ஆரம்பிக்க எதுவோ, அது.

" 'நீ எவ்வளவு சாமார்த்தியசாலியா யிருப்பினும், எப்படியும் நீ என்னைவிட மூத்தவள் தான் என்று தோன்றுகிறது. உன் வயதை மறைக்க நீ படும்பாடும், நிரந்தர இளமையாக நீயே உனக்குத் தோன்றுவதற்காக, உன்னையே நீ ஏமாற்றிக் கொள்வதற்காக, தனியாக நடையுடை பாவனைகளையும், திரிசங்கு சுவர்க்கத்தையும் நீ சிருஷ்டித்துக்கொள்வதிலிருந்து, நீ உனக்கு ஒப்புக்கொள்ளா விட்டாலும், உனக்கே தெரியும். அதில் உன்னுடைய சௌகரியத்திற்காக எனக்குக் கொடுத்திருக்கும் அல்லது கொடுக்கப் பார்க்கும் வேஷமும் எனக்குத் தெரிகிறது.

" 'மிருகங்கள் பசி வேளைக்கும், தற்காப்புக்கும் தான் ஒன்றை யொன்று அழித்துக்கொள்கின்றன. மற்றப் பொழுதில் ஒன்றையொன்று, வேறு காரணங்களாகப் பயன்படுத்திக் கொள்ளும் குணம் அவைகளுக்குக் கிடையாது. இந்தக்கெட்ட குணம் மனித ஜன்மத்துக்குத்தான் இருக்கிறது. மன்னிக்க முடியாத குணம்.

" 'அன்றைக்குச் சமையலறையில் அடிப்பட்டு விழுந்திருக்கும் என்னைப் பார்த்து நீ சிரித்தபொழுதே நீ என்னை ஒரு புதுப்பொம்மையாக கருதினாய் என்று கண்டுகொண்டேன். உடனே அந்தப் பொம்மை வேண்டுமென்று ஆசைப் பட்டாய். வாங்கவும் வாங்கினாய். உடனே அதையுடைத்து அதில் என்ன வேலைப்பாடுகள் இருக்கின்றன என்று ஆராயவேண்டும் என்றுகூட உனக்குத் தோன்றி விட்டது. எல்லாமே உனக்கு விளையாட்டுத்தானே; இந்தப்பொம்மை உடைந்து போனால் இன்னொரு பொம்மை.........

"விளையாட்டுப் பொம்மையாக எந்த ஆணும் மனமாரச் சம்மதியான். இதைவிடப் பெருந்தீங்கு பெண்கள்

ஆண்களுக்கு இழைக்க முடியாது. கடைசியில் அது தங்களுக்கே இழைத்துக் கொள்ளும் தீங்காய்த்தான் முடிகிறது. நீ என்னுடன் விளையாடுவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், என்னைக் கருவியாய் உபயோகப்படுத்த நான் சம்மதியேன். என்னுள் ஏதோ ஒன்று அம்மாதிரி உடன்பட மறுக்கிறது. என் இயல்பிலேயே அது இல்லை. நானாக அழிந்தாலும் அழிவேனே தவிர, என்னைப் பிறர் அழிக்கவிடேன். எனக்கும், நீங்களெல்லாம் இல்லாத வேளையிலும் இருக்கும் வேளையிலும் கூப்பிடும் தெய்வத்துக்கும்கூட இதேதான் தகராறு! நாம் எல்லாம் தெய்வத்தின் கருவிகள் என்கிறார்கள். அதுதான் எனக்கு ஒப்ப மாட்டேன் என்கிறது. தெய்வமேயானாலும் சரி, நல்ல தற்கேயானாலும் சரி, அதுகூட என்னைக் கருவியாக்க என் மனம் இடங்கொடுக்க மாட்டேன் என்கிறது. நான் அதன் வழிக்குப்போகவில்லை; அதுவும் என் வழிக்கு வர வேண்டாம் எனபதுதான் என் சித்தாந்தம்.

" 'வாழ்க்கையே விளையாட்டு' என்று எந்தச் சினிமா சம்பாஷணையையோ என்னிடம் உபயோகித்தாய் அல்லவா? சரி, இந்த விளையாட்டை இப்பொழுது கேள்.

" 'உன் நகைகள் எல்லாம் என்னிடம் பத்திரமாய் இருக்கின்றன. டிக்கட்டுகளும் என்னிடமிருக்கின்றன! உன்னிடம் உன் அரைப்புடைவையைத் தவிர வேறு எதுவும் நான் வைக்கப்போவதில்லை. நீ திரும்பி வீடுதான் போய்ச் சேருவாயோ, எங்கே தான் போவாயோ, எப்படித் தான் போவாயோ, அதில்தான் விளையாட்டு இருக்கிறது! இந்த விளையாட்டு உனக்குப் பிடிக்காமல் இருக்கலாம்; ஆனால் நீ இதிலிருந்து ஒன்று தானே தெரிந்துகொள்வாய்; எந்தப் பொம்மையையும் அநாவசியமாய் உடைத்துப் பார்க்காதே. தவிட்டுப் பொம்மை என்று நீ நினைத்துக் கொண்

டிருந்தாலும், நீ யறியாத எஃகுச் சுருள்கள் அதனுள் இருந்து, நீ வகை தெரியாமல் சுழற்றுகையில் குதித்து உன் முகத்தில் அடித்துவிடும்—'

"கடிதத்தை மடித்து அவள் கண்ணும் கையும் உடனே படும்இடத்தில் வைத்தேன். நகைகளையும் பணப் பையையும் எடுத்துக்கொண்டு, பாக்கி சாமான்களை ஜன்னல்வழி வீசி எறிந்தேன். கை வளையல்கள் கழற்றச் சுலபமாய் வந்தன. வண்டியின் வேகம் குறைய ஆரம்பித்தது. எட்டிப் பார்த்தேன். ஏதோ ஒரு சின்ன ஷ்டேஷனின் விளக்கு இரவில் மினுக்கியது. ஒரு முறை அவளிடம் சென்று முகத்தைக் குனிந்து பார்த்தேன்.

"ஆழ்ந்த தூக்கத்திலிருந்தாள். வாயோரத்தில் கொஞ்சம் எச்சில்கூட வழிந்திருந்தது. மேல் உதட்டோரத்தில் ஒரு மறு இருந்தது. மேல்பூச்சுக்களால் தெரியாமல் அவள் மறைத்திருந்த சாமர்த்தியத்தை அந்தச் சமயத்தில் கூட வியக்காமல் இருக்கமுடியவில்லை. வண்டியிலிருந்து குதித்துவிட்டேன்.

" 'பிறகு அவள் எப்படியானாள் என்று எனக்குத் தெரியாது. அத்துடன் அவளை மறந்துபோனேன்."

* * *

"பிறகு என்ன நடந்தது?" என்று அவனின்று பிரிந்த அது கேட்டது. மார்பைப் 'பக் ' கென்று' அடைக்க ஆரம்பித்துவிட்டது. இடுப்பு வரை உடல் செத்துவிட்டது அவனுக்கே தெரிந்தது.

"பிறகு எங்கே போனாய்? சுருக்கச் சொல். உனக்கு நேரமில்லை—சுருக்கச்சொல்—"

"எங்கெங்கோ போனேன். என்னென்னவோ செய்தேன்; கடலையும் தாண்டினேன்; எத்தனையோ பேர்

எத்தனையோ விதமாய் என்னை ஏமாற்றினார்கள். அவர்களைப் பதிலுக்குப் பதில் அதைவிடக் கடுமையாக ஏமாற்றினேன்.

''ஒரு சமயம் ஒருவனுடன் கூட்டு வியாபாரம் செய்ய நேர்ந்தது. எனக்கு அரை ரூபாய்க்குக் கணக்கு ஏமாற்றினான். ஆத்திரத்தில் கடையையே இரவில் பற்ற வைத்துவிட்டுப் போய்விட்டேன். காரிய நஷ்டத்தைவிட எண்ணத்தின் துரோகம் தான் தாங்கமாட்டேன் என்கிறது.

''ஆனால் எங்குச் சென்றால் என்ன! தனிமை என்பது தனியாய்த்தானிருக்கிறது. நாளடைவில் கருமேகம் திரளுவதுபோல் திரண்டு பின்னாலேயே வந்து குரல் வளையைப் பிடித்துவிடுகிறது. மனிதன் தனது காரியங்களைச் செய்யும்படி அவனை இயக்கும் சக்திக்கு அலுப்பு இல்லாவிட்டாலும், காரியங்கள் அலுத்துவிடுகின்றன. அந்தச் சமயத்தில் தான் உலகம் எவ்வளவு பெரிதாயிருந்த போதிலும், தனிமையின் சுவர்கள் நான்கு புறங்களிலும் முளைத்துத் திமிர்த்து நின்று, ஆள் திரும்பக்கூட இடம் இல்லாத படி நெருக்குகின்றன. வாழ்க்கையை விட்டு எட்டி நின்றாலும் குமட்டுகின்றது. அத்துடன் இழைந்தாலும் குமட்டுகின்றது. அதில்தான் அதன் எதிர் பாராத தன்மையிருக்கிறது.

''பரமபத படத்தில் ஏணிகளிலெல்லாம் ஏறிவிட்டு, பெரிய பாம்பில் மாட்டிக்கொண்டு திடீரென்று அடிக் கட்டத்திற்கு வந்துவிட்டாற்போல் ஆகிவிட்டது. பழைய பாடங்களைத் திருப்புவதுபோல் சென்றுபோன நாட்களும், சம்பவங்களும் நான் சிந்திக்க நேராத சமயங்களில் கூடத் திரும்பத் திரும்ப நினைவில் முளைக்க ஆரம்பிக்கின்றன. நான் என்னுள் கலகலக்க ஆரம்பித்து விட்டேன்.

'திடீர் திடீர்' என்று என் தாய் விட்டத்திலிருந்து தொங்கும் காட்சி என் கனவில் தோன்றித் தோன்றி மறைந்தது. என் சின்ன வயது விளையாட்டுகள், அடக்குவாரின்றித் திரிந்த அநுபவங்கள்......பிறகு அந்தப் புற்று..."

"ஆ!"

"இப்பொழுது எனக்குத் தோன்றுகிறது. பாம்பு எல்லாவற்றையும் விழுங்கிவிட்டு, பிறகு தன் வாலைத் தானே கவ்விக்கொண்டு, தன்னையே விழுங்கப் பார்த்தது போல் நான் என்னையே விழுங்க ஆரம்பித்து விட்டேன் என்று நினைக்கிறேன்-"

"சொல், சொல், உன்கேள்விகளுக்கு நீயே பதில் கண்டுபிடி—"

"ஒன்றுமே செய்யாமலிருத்தலின் பிரதிக் கிரியையும், எல்லாம் செய்தாலும் அக்காரியத்தின் பிரதிக்கிரியையின் பிரதிக்கிரியையும் கடைசியில் அதில்தான் கொண்டுபோய் விட்டுவிடுகிறது, பரமபத படத்தின் பெரிய பாம்பு. ஆகவே நான் ஊர் திரும்பினேன்—"

"எதற்கு?" என்று அது கேட்டது.

"புற்றைப் பார்க்க—"

"பிறகு?—தயங்காதே; நீ என்னிடம் மறைக்க முடியாது. உன்னை அறியாமல் உன்னுள்ளே நான் இருக்கிறேன். உன் காரியங்கள் அனைத்தையும் நான் கவனிக்கிறேன். உன் தூக்கத்தில் உன் நினைவு அற்று நீ அசையும் ஒரு சிறு அசைவு முதல் என்னை ஊடுருவித்தான் செல்கிறது. ஆகையால் நீ இன்னும் எதற்காக வந்தாய் என்று சொல். நான் அடியெடுத்துக் கொடுக்கக் காத்திருக்க வேண்டாம்."

"ஊரில் ஒருத்தி யி-ரு-ந்-தா-ள்—" என்று மன மில்லாமல் மனம் முனகியது.

"ஆ! அப்படி வா வழிக்கு—"

விஷம் தொண்டைவரையில் ஏறிவிட்டதால், வார்த்தைகளும் மூச்சும் தங்கித் தங்கி வந்தன. ஆனால் அசுரத்தன்மையான திடத்துடன் நினைவை யிருத்திக் கொண்டான்.

"என் வீட்டுக்கெதிர் வீடுதான். என்னுடனே விளையாடி, என்னுடனே வளர்ந்தவள். கறுப்புத் தான். ஆனால் களை; வயதுக்கு மீறிய வளர்ச்சி; ரொம்பத் துடி— ஆனால் வயது ஆக ஆக, எங்களிருவரிடையே யிருக்கும் பழக்கமும் குறைந்து, கடைசியில் அற்றும் போயிற்று. நானும் ஊருக்குப் பொல்லாதவனாய் விடவே-ஊர்ப் பெண் கள் அத்தனை பேரும் என்னைப் பொறுத்த வரையில், முக மூடிகள் ஆகிவிட்டார்கள்.

"ஆனால் சில சமயங்களில் அவள் ஜன்னலிலிருந்து என்னைப் பார்ப்பாள். கண்களின் பேச்சை எப்படி விஸ்தரிப்பது!

"ஒருநாள், நான் குளத்தில் குளித்துக் கொண்டிருந் தேன். குளக்கரையில் ஒரு அரசமரம். அதன் அடியில் ஒரு நாகப் பிரதிஷ்டை. அவள் அதைச் சுற்றிக் கொண்டிருந் தாள். அங்கு ஒருவருமில்லை. அவள் இன்னும் என்னைப் பார்க்கவில்லை.

"எனக்கு என்ன தோன்றிற்றோ, தெரியவில்லை. அப்பொழுது வெறும் வேடிக்கை எண்ணம் தான் என்று நினைக்கிறேன். இரண்டு தாவில் கரையேறி, அவள் எதிரில் போய் வழியை மறித்துக்கொண்டு நின்றேன். இடுப்பில்

ஈரமுண்டு; புடைத்தமாரிலும் புஜங்களிலும் ஜலம் துளித்து நின்றது.

"தூக்கி வாரிப்போட்டாலும், யார் என்று கண்டதும் முகம் மலர்ந்தது. ஆனால் உடனே அடக்கிக் கொண்டு விட்டாள்.

" 'சௌக்கியமா?' என்றேன்.

" 'சௌக்கியந்தான். வழியை விடறையா?' என்றாள்.

" 'இத்தனை நாள் கழிச்சு இப்பதான் பார்க்கிறோம். அதற்குள் ஓடணுமா?'

" 'எனக்கு நேரமாச்சு; ஆத்தில் தேடுவாள்—'

"நான் சிரித்துக் கொண்டே அவள் கையை உரமாய்ப் பிடித்தேன். அவள் உடல் 'வெட வெட' வென உதறிற்று—ஆனால் பயத்தாலா? பிடித்த கையின் விரல்கள், பாதாளக் கொலுசின் கொக்கிகள் போல் வளைந்தன— ஆனால் பயத்தாலா? பிரதிஷ்டையிலிருந்து நாகம் என் கையையும் என் பிடியில் அவள் கையையும் பார்த்துக் கொண்டிருந்தது.

" 'உஷ்—என்னை விட்டுடடா—விட்டுடடா—'

"நான் சிரித்தேன். 'உன்னை என்ன, கடிச்சு முழுங்கிடுவேனா? ஆமாம், முழுங்கிவிடப் போகிறேன்!' என்றேன்.

" 'ஐயோ! என் பேரைக் கெடுக்காதேடா! என் குடியை அழிக்காதேடா—' என்று உளறிக் கொண்டே, திமிறிக்கொண்டு ஓடினாள். கொஞ்ச தூரம்போய் திரும்பிப் பார்த்தாள். முகத்தில் பயந்தான்; வெறுப்பு இல்லை. என் சிரிப்பு எதிரொலித்தது. மறுபடியும்

ஓடினாள். அவள் ஓடுவது வெகு அழகாயிருந்தது. அதற்கப்புறம் அவள் வழிக்கு நான் போகவில்லை. ஆனால் அவள் தீர்மானமாய் என்னை ஒதுக்கினாள். அவள் மனத்தில் இடம் கொடுத்துவிட்டாள் என்றாலும், அதற்கு மேல் அவளுக்குப் பயம்!

''பக்கத்தூரில் ஒரு பையனுக்கும் அவளுக்கும் கலியாணம் நடந்து, அவள் புக்ககம் போய்விட்டாள். பிறந்த வீடு கிட்ட இருப்பதால் அடிக்கடி வந்து போவாள். நான் ஊரைவிட்டுப் போவதற்கு முன் ஒரு குழந்தையைக் கூடப் பெற்றெடுத்துவிட்டாள். அவள் மணவாழ்க்கை மிகச் சந்தோஷமாயிருந்தது என்று அவள் உடற் பொலிவிலும், முகமலர்ச்சியிலும் தெரிந்தது.

''இப்பொழுது திடீரென்று அவள் நினைவு வந்தது. எல்லாவற்றையும் விழுங்கியபிறகு அவள் ஒரு எட்டாப் பழமாய் எனக்குத் தோன்றினாள். உடனே அதைப் பறித்து ஆகவேண்டும் எனக்கு. அதனால் இங்கு வந்தேன்.''

''எப்படிப் பறிப்பதாய் உன் எண்ணம்?''

''அதை இட்பொழுது எப்படிச் சொல்ல முடியும்? தனியாய்ச் சந்திக்க முயன்றிருப்பேன். அவள் சம்மதிக்காவிட்டால், அவள் கணவனுக்கெதிரில் 'உன்னை அன்று, குளக்கரையில் நாகப் பிரதிஷ்டைக்கெதிரில் கையைப் பிடித்தேனே, எப்படி?—' என்று கேட்டு, அவள் புருஷனுக்குச் சந்தேகத்தை உண்டாக்கி யிருப்பேன். சமயத்துக்குத் தக்கவாறு நடந்து கொண்டிருப்பேன். இப்பொழுது எப்படி சொல்வது?''

''மொத்தத்தில் அவள் வாழ்க்கையைக் குலைத்திருப்பாய் அல்லவா?''

''ஆம்—'' என்றான் வசியங்கண்டவன்போல்; நினைவு மங்க ஆரம்பித்துவிட்டது.

"உன் சௌகரியத்திற்காக, அவளைக் கெடுக்கவும் துணிந்தாய் அல்லவா?"

"ஆம்."

"அவளை உன் கருவியாய் உபயோகித்துக் கொள்ள எண்ணிவிட்டாய் அல்லவா?"

"ஆம்—"

"ஆகையால்தான், நீ அவளைக் கெடுக்குமுன் அதாவது நீ கெட்டுப் போகுமுன், உன்னை நான் என்னிடம் அழைத்துக்கொண்டுவிட்டேன்—"

அவனின்றும் பிரிந்த அது திடீரென்று பெரிதாக ஆரம்பித்தது.

"மகனே—என்னிடம் நீ உண்மையை ஒப்புக் கொண்டாய். எங்கெங்கோ ஓடியாடிக் களைத்து வந்தாய். இனி நீ என்னிடம் இளைப்பாற வேண்டும்—" அவன் மேல் இருள அது ஆரம்பித்தது.

"நீ யார்?"

தப்பிப்போகும் நினைவின் முழுப்பலமும், அவன் உடலின் பலமும் அக்கடைசிக் கேள்வியில் பிரதி பலித்தன.

அது இதற்குள் அவனுக்கும் அதற்கும்கூட வித்தியாசம் தெரியாதபடி வியாபித்துவிட்டது.

"நீ எங்கிருந்து வந்தாயோ, அங்கே திரும்பிப் போகும் இடம் என்று வைத்துக்கொள்ளேன். நீ பாம்பானால், உன்னை விழுங்கும் பெரிய பாம்பு என்றுதான் வைத்துக்கொள்ளேன். அல்லது கருடன் என்று வைத்துக் கொள்ளேன். எந்தப் புற்றின் இருளுடன் இழைந்துவிட வேண்டுமென்று நீ ஒரு சமயம் விரும்பினாயோ, அந்த

இருள் என்று வைத்துக் கொள்ளேன். அல்லது, தன் குஞ்சுகளை அன்புடன் சிறகடியில் அணைக்கும் தாய்ப் பட்சி என்று வைத்துக்கொள்ளேன். அல்லது, நீ சொல்லியபடி, நீ உன்னை விழுங்கிய பிறகு, மிச்சம்இருக்கும் மீதி என்று வைத்துக் கொள்ளேன்!''

ஆலிங்கனத்தில் அவன்மேல் அது கவிந்தது. □

# பாற்கடல்

சுமார் முப்பது வருடங்களுக்குமுன் ஒரு தீபாவளி மலரில் இந்தக் கதை வெளிவந்ததும் இது அடைந்த பிரபலம் ஒருபக்கம் இருக்கட்டும்.

இதில் விவரிக்கப்படும் கூட்டுக் குடும்பம் என்ற ஸ்தாபனமே இப்போது முறிந்து போய் ஆயிற்று.

கணவன் மனைவி இருவரும் தனித்தனி இடங்களில் வேலைக்குப் போய்க் கொண்டு, வீட்டில் விட்டுச் சென்ற குழந்தை, பக்கத்து வீட்டுப் பாஞ்சாலை, எதிர் வீட்டு எல்லம்மாளின் பொறுப்பிலும் இரக்கத்திலும் எடுப்பார் கைப் பிள்ளையாக வளர்ந்து உருவாகிக் கொண்டும் இந்தத்தலைமுறைக்கு, இந்தக் கதையில் சொல்லப்படும் வாழ்க்கை, வாழ்க்கைமுறை, வெறும் தகவல் ரீதியாகவும் ஆச்சரியமாகவும் இருக்கக் கூடும்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு-முக்குணங்களின் நிதர்சனம் கூட்டுக்குடும்ப வாழ்க்கை.

Dedicated, Benevolent dictatory ship க்கு எடுத்துக் காட்டு.

The world is a family, one family of man என்பதெல்லாம் பின் வேறு என்ன, கூட்டுக் குடும்பம் அலாது?

இன்னும் பின்தலைமுறைக்கு, இந்தக்கதை escapist fantasy, fasytale என்று தோன்றினாலும் ஆச்சரியமில்லை. தனிவளை தோண்டிவேர்களைக் கெல்லுவதற்கும், முதுகெலும்பை முறிப்பதற்கும் இருக்கவேயிருக்கிறது காலம். அதன்மேல் பழியைப்போடு.

''குடும்பம் ஒரு பாற்கடல். அதிலிருந்துதான் லக்ஷ்மி, உச்சஸ்ரவஸ், ஐராவதம் எல்லாம் உண்டாயின. ஆலஹால விஷமும் அதிலிருந்துதான் உண்டாயிற்று. உடனுக்கு அதற்கு மாற்றான அம்ருதமும் அதிலேயேதான்.

**தொகுதி : பச்சைக் கனவு**

நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்திற்கு எழுத வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். நீங்களோ எனக்குக் கடிதம் எழுதப் போவதில்லை. உங்களுக்கே அந்த எண்ணமே இருக்கிறதோ இல்லையோ? இங்கே இருக்கும் போதே, வாய் கொப்புளிக்க, செம்பில் ஜலத்தை என் கையிலிருந்து வாங்க, சுற்றும் முற்றும் திருட்டுப் பார்வை, ஆயிரம் நாணல் கோணல். நீங்களா கட்டின மனைவிக்கு கடிதம் எழுதப்போகிறீர்கள்? அதனால் நானே முந்திக் கொண்டதாகவே இருக்கட்டும். அகமுடையான் உங்கள் மாதிரியிருந்தால்தானே, என் மாதிரி பெண்டாட்டிக்குப் புக்ககத்தில் கெட்ட பேரை நீங்களே வாங்கி வைக்க முடியும்? ''அவள் என்ன படிச்ச பெண், படிச்ச படிப்பு எல்லாம் வீணாய்ப் போகலாமா? ஆம்படையானுக்குக் கடிதாசு எழுதிக்கறாள்!'' என்று வீட்டுப் பழைய பெரியவாள், புதுப் பெரியவாள் எல்லாம் என் கன்னத்திலிடிக்காமல், தன் கன்னத்திலேயே இடித்துக்கொண்டு, ஏளனம் பண்ணலாம்! பண்ணினால்

பண்ணட்டும், பண்ணட்டும்; நான் எழுதியாச்சு. எழுதினது எழுதினதுதான். எழுதினதை நீங்கள், தலை தீபாவளியு மதுவுமாய், அவ்வளவு தூரத்திலிருக்கிறவர், படித்தது படித்ததுதான். எழுதினதைப் படித்தபின், எழுதின வாளும், படித்தவாளும் குற்றத்தில் ஒண்ணுதானே? வேறு எதிலும் ஒற்றுமையிருக்கிறதோ இல்லையோ?

இதென்ன முதல் கடிதமே முகத்தில் அறையற மாதிரி ஆரம்பிக்கிறது என்று தோன்றுகிறதோன்னோ? சரி, நான் அசடு, போங்கோளேன்; திருப்திதானே? நான் வெகுளி, எனக்கு மனசில் ஒன்னும் வைத்துக் கொள்ளத் தெரியாது. அப்பாகூட அடிச்சுப்பார்: "ஜகதா கிட்டே யாரும் அசதி மறதியாக்கூட ஒரு ரகஸ்யத்தைச் சொல்லிடாதேயுங்கள். ஒருத்தர் கிட்டேயும் சொல்லக் கூடாது என்றால் ஒரு கடிதாசுத்துண்டிலாவது அதை எழுதி எறிந்து விடுவாள். இல்லாவிடில் அவளுக்கு மண்டை வெடித்துவிடும். ஜகதா அவ்வளவு ஆபத்தான மனுஷி." ஆமாம், அப்படித்தான் வைத்துக்கொள்ளுங்கள். நான் பின் யாரிடத்தில் சொல்லிக் கொள்வது, தலை தீபாவளிக்கு என் கணவர் என்னுடன் இல்லாத கஷ்டத்தை? என் அப்பா அம்மாவுக்கு எழுதலாமா? எழுதினால், புக்காத்து விஷயங்களைப் பிறந்த வீட்டுக்கு விட்டுக் கொடுத்தேன் என்கிற பொல் லாப்பை கட்டிக்கவா? நான் அசடாயிருக்கலாம்; ஆனால் அவ்வளவுஅசடு இல்லை. அப்புறம் எனக்கு யாரிருக்கா; நீங்களே சொல்லுங்களேன்!

தீபாவளிக்கு இரண்டு நாளைக்கு முன்னால் அம்மா வந்திருந்தாள், ஆசையா பெண்ணையும் மாப்பிள்ளையையும் தலை தீபாவளிக்கு அழைத்துப் போகணும் என்று. நீங்கள் ஊரில் இல்லை, இருக்கவும் மாட்டேள் என்று தெரிந்ததும் அவள் முகம் விழுந்ததைப் பார்க்கணுமே, எடுத்து மறுபடியும் சேர்த்து ஒட்ட வைக்கிற தினுசாய்த்தானிருந்தது.

"சரி, மாப்பிள்ளைதான் இல்லை. ஜகதாவைக் கூட்டிக் கொண்டு போகிறேனே! நாங்களும் பிரிஞ்சு கொஞ்ச நாளாச்சு. உங்களிஷ்டப்படி கல்யாணமாகி நாலாம் நாள் கிருஹப் பிரவேசத்துக்கு விட்டதுதானே!" என்று சொல்லிப்பார்த்தாள்.

ஆனால் அம்மா (உங்கள் அம்மா-இப்போ எனக்கு இரண்டு அம்மான்னா ஆயிட்டா!) ஓரக் கண்ணால் என்னைப் பார்த்துண்டே, "என் பிள்ளை எப்போ அங்கே வர முடியல்லியோ உங்கள் பெண் இங்கேயே நாலு பேரோடு ஸல்லோபுல்லோன்னு இருந்துட்டுப்போறாள்! இனிமேல் எங்கள் பெண்ணும் தானே! அப்புறம் உங்க ளிஷ்டம். அவளிஷ்டம். இங்கே ஒருத்தரும் கையைப் பிடிக்கிறதாயில்லே!" என்றார்.

இதென்ன கன்றுக் குட்டிக்கு வாய்ப்பூட்டைப் போட்டுப் பாலூட்டற சமாசாரமா? என்னை அம்மா ஆழம் பார்க்கிறது தெரியாதா, என்ன? நான் ஒண்ணும் அவ்வளவு அசடு இல்லை. இந்த வீட்டிலேயே யார் பளிச்சுனு பேசறா? இங்கேதான் பேசினதுக்குப் பேசின அர்த்தம் கிடையாதே! எனக்குத்திடீர்னு சபலம் அடிச் சுண்டது, என் கையொட்டின தம்பி சீனுவைப் பார்க் கணும்னு. ஒரு நிமிஷம் என்னைப் பிரிஞ்சு இருந்ததில்லை. காலையில் கையலம்பி நனைஞ்ச சட்டையை மாத்தறதி லிருந்து, ராத்திரி தொட்டிலில் அவன் படுக்கையை விரிக்கிற வரைக்கும் அக்காதான் எல்லாம் பண்ணியாகணும். இப்போ குழந்தை என்ன பண்றானோ? ஆனால் நான் இங்கேயே இருக்கேன்னு சொல்லிவிட்டேன். அம்மா கண்தளும்பிற்று. அம்மா பேசாமே போயிட்டாள். நான் கொஞ்ச நாழி திக்பிரமை பிடிச்சு நின்றேன். அம்மா குஞ்சிரிப்புடன் என்னை ஒரு நிமிஷம் ஆழ்ந்து நோக்கி விட்டுக் காரியத்தைப் பார்க்கப் போயிட்டார். அவருக்கு

உள்ளூற சந்தோஷம். எனக்குத் தெரியும், நான் பரீட்சை யில் ஜெயித்து விட்டேன் என்று. என்ன பரீட்சை? பெண்ணாய்ப் பிறந்தபின் ஸ்வதந்திரம் ஏது என்கிறது தான்.

ஆமாம்; நான் கேட்கிறேன்— இதென்ன உத்தி யோகம், ஒரு நாள் கிழமைக்குக் கூட பெற்றவர் உற்றவர் கூட இல்லாமல்படிக்கு? என்னதான் 'காம்'பில் கிளம்பிப் போனாலும் சமயத்துக்கு லீவு வாங்கிக்கொண்டு திரும்பிவர முடியாதா?

ஆனால் எனக்கே தெரிகிறது; பெண்கள் என்ன, புருஷர்களுக்குந்தான், என்ன சுதந்திரம் இருக்கிறது? எங்களுக்கு வீடு என்றால் உங்களுக்கு உத்தியோகம். பார்க்கப் போனால் யார்தான் விடுதலையாயிருக்கிறார்கள்? எல்லோரும் சேர்ந்து ஒரு பெரும் சிறையிலிருக்கிறோமே, இந்த உலகத்தில்! பணக்காரன் தங்கக் கூண்டில். இந்த இரண்டு ஸ்திதியிலுமில்லாமல் நம்மைப்போல் இருக்கிறவர் கள் இதிலுமில்லை; அதிலுமில்லை; காலை ஊன்றக்கூட ஆதாரமில்லாமல், அந்தரத்தில் தவித்துக் கொண்டிருக்கி றோம். இல்லாவிடில் இந்தச்சமயத்தில் நாம் பிரிந்து நீங்கள் எங்கேயோ இருப்பானேன்? நான் ஏங்கி உருகித் தவித்துக் கொண்டு? உத்தியோகத்தை உதறிவிட்டு ஓடிவந்துவிட முடிகிறதா? நான் ஒண்ணும் அவ்வளவு அசடு இல்லை. மனஸு வெச்சேன்னா எல்லாம் எனக்குத் தெரியும். இப்போ மனஸு வெச்சிருக்கேன்!

ஆனால் அதற்காக என்னோடு பேசக்கூடாது என்று இருந்ததா? போகிற சமயத்தில் என்னிடம் வந்து, "ஜகதா, நான் போயிட்டு வரட்டுமா?" என்று என்னிடம் ஒரு வார்த்தை சொல்லிக்கொண்டு போனால், தலையைச் சீவிவிடுவார்களா? அதையும்தான் பார்த்துவிடுகிறது;

என்ன ஆகிவிடும்? சாந்தியைத் தைக்குத் தள்ளிப்போட்டு விட்டாலும் வாய் வார்த்தை கூட பேசிக்கக் கூடாது என்றால் பிள்ளைகள் கலியாணம் பண்ணிக்கொள் வானேன்? இந்த வீடே வேடிக்கையாய்த்தானிருக்கிறது. நீங்கள் எல்லாம் இப்படியிருக்கிறதால்தானே நாங்கள் எல்லாம் வெட்கம்கெட்டவர்களாகி விடுகிறோம்?

ஆனால் அம்மாவே சொல்லியிருக்கிறாள். கூட்டுக் குடித்தனம் என்றால் அப்படித்தானிருக்கும் என்று. அவளும் சம்சாரி வீட்டில்தான் வாழ்க்கைப் பட்டாளாம். இடம் போதாத வீட்டில் நாலுஜோடிகள் வாசம் பண்ண ணுமானால் என்ன பண்றது? வீட்டுக்கு விருந்தாளி வந் தூட்டால் கேட்கவே வேண்டாம். திடீர்னு ஒரு ஜோடி யின் ஒரு படுக்கை தானாகவே திண்ணையில் வந்து விழுந்து விடுமாம். சீட்டைப் போட்டுக் குலுக்கினாற்போல் யார் படுக்கை என்று போட்ட பிறகுதான் தெரியுமாம். சொல்ல வும் முடியாது, மெல்லவும் முடியாது; திருடனுக்கு தேள் கொட்டின மாதிரி வாயை மூடிண்டிருக்க வேண்டியது தான். அம்மா சொல்றப்போ எனக்கு சிரிப்பாய் வரும், இந்தச் சம்பந்தம் பண்ணுவதற்கு முன்னால் அப்பா கூடச் சொன்னார்: ''இதென்னடி, இது அவ்வளவு உசிதமோ? ஓரே சம்சார வீடாயிருக்கிறது. பையன் நாலுபேருக்கு நடுவில் நாலாமவனாயிருக்கிறான். இன்னும் கலியாணத் துக்கு ஒன்று இரண்டு பெண்கள் காத்திருக்கிறாப் போலி ருக்கிறது.''

''இருக்கட்டும், இருக்கட்டும், நிறையக் குடித்தனமாயி ருந்து நிறையப் பெருகட்டும். நாளாவட்டத்தில் இதுதான் நம் பெண்ணுக்கு நல்லதா விளையும், பாருங்கோ. இப்போ நமக்கு என்ன குறைஞ்சு போச்சு? எடுத்தவுடனே இக்கு பிடுங்கல் இல்லாமல், கையை கோத்துண்டு போனவாளெல்

லாம் கடைசியில், உலகம் தெரியாமல். எது நிலைச்சுது தெரியாமல், நாயும் பூனையுமா நாறிண்டிருக்கிறதை நான் பார்த்துண்டுதானே இருக்கேன்! பையன் நல்ல வேளையா நாலாம் பிள்ளையாத்தானே இருக்கான்? என் மாதிரி, என் பெண், வீட்டுக்கு மூத்த நாட்டுப்பெண்ணாய் வாழ்க்கைப் படவேண்டாமே?''

அம்மா அப்படிச் சொல்றப்போ நன்னாத்தானிருக்கு; நாவலில் கதாநாயகியாயிருக்க யார்தான் ஆசைப்பட மாட்டார்கள்? ஆனால் தனக்கென்று வரப்போத்தானே தெரியறது? நிஜம்மா நீங்கள் அன்றைக்கு ஆதரவாய் எனக்கு ஒரு வார்த்தை கூட இல்லாமல் வண்டியிலேறிப் போயிட்ட பிறகு, எனக்கு அழுகையா வந்துவிட்டது. என் நெஞ்சின் பாரத்தை யாரிடம் கொட்டிக்கொள்வேன்? எல்லாரும் எனக்குப் புதிசு, வாயில் முன்றானை நுனியை அடைச்சுண்டு கிணற்றடிக்கு ஓடிப்போயிட்டேன்.

எத்தனை நாழி அங்கேயே உட்கார்ந்திருந்தேனோ அறியேன்.

''என்னடி குட்டீ, என்ன பண்றே?''

எனக்குத் தூக்கிப் போட்டது. அம்மா எதிரே நின்னுண்டிருந்தாள். உங்கம்மா செக்கச்செவேல் என்று நெற்றியில் பதக்கம் மாதிரி குங்குமமிட்டுக்கொண்டு கொழு கொழுன்னு பசுப்போல் ஒவ்வொரு சமயம் எவ்வளவு அழகா யிருக்கிறார்!

''ஒண்ணுமில்லையே அம்மா!'' என்று அவசரமாய்க் கண்ணைத்துடைத்துக்கொண்டேன். ஆனால் மூக்கை உறிஞ்சாமல் இருக்க முடியவில்லை.

''அடாடா! கடுஞ் ஜலதோஷம். மூக்கையும் கண்ணை யும் கொட்டறதா? ராத்திரி மோர் சேர்த்துக்காதே'',

(கபடும் கருணையும் கண்ணில் கூடி அம்மா கண்ணைச் சிமிட்டும்போது, அதுவும் ஒரு அழகாய்த்தானிருக்கிறது!) "என்னவோ அம்மா, புதுப் பெண்ணாயிருக்கே; உன் உடம்பு எங்களுக்குப் பிடி படறவரைக்கும், உடம்பை ஜாக்கிரதையாப் பார்த்துக்கோ—அட; குட்டி இதென்ன இங்கே பாருடீ!"

அம்மா ஆச்சரியத்துடன் கிணற்றுள் எட்டிப் பார்த்தார். அவசரமாய் நானும் எழுந்து என்னென்று பார்த்தேன்; ஆனால் எனக்கு ஒன்றும் தெரியவில்லை.

"ஏ குட்டி, எனக்குத்தான் கண்சதை மறைக்கிறதா? கிணற்றில் ஜலம் இருக்கா?"

"இருக்கிறதே!"

"குறைஞ்சிருக்கா?"

"இல்லையே, நிறைய இருக்கே!"

"இருக்கோன்னோ? அதான் கேட்டேன்; அதான் சொல்ல வந்தேன், கிணற்று ஜலத்தை சமுத்திரம் அடித்துக்கொண்டு போக முடியாதுன்னு! நேரமாச்சு. சுவாமி பிறையின் கீழ் கோலத்தைப் போடு—" என்று குஞ்சிரிப்புடன் சொல்லிக் கொண்டே போய்விட்டார்.

நான் கிணற்றடியிலேயே இன்னும் சற்று நேரம் நின்றிருந்தேன். நெஞ்சில் சின்னதாய் அகல் விளக்கை ஏற்றி வெச்ச மாதிரி யிருந்தது. மேலே மரத்திலிருந்து பவழமல்லி உதிர்ந்து கிணற்றுள் விழுந்து கொண்டிருந்தது. தும்பையறுத்துக்கொண்டு கன்றுக்குட்டி முகத்தை என் கையில் தேய்த்துக் கொண்டிருந்தது.

இந்த வீட்டில் யார்தான் பளிச்சென்று பேசுகிறார்கள்? வெளிச்சம் எல்லாம் பேச்சில் இல்லை. அதைத் தாண்டி அதனுள்தான் இருக்கிறது.

ஆனால் ஊமைக்கு மாத்திரம் உணர்ச்சி யில்லையா? அவர்களுக்குத்தான் அதிகம் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் நீங்கள் அசல் ஊமையில்லையே, ஊமை மாதிரிதானே! எனக்கு 'ரெஸ்பெக்டே' இல்லை யோன்னோ? ஆமாம், அப்படித்தான். போங்கோ நான் உங்களுக்கு இப்போ கடிதம் எழுதவில்லை. உங்களுடன் கடிதத்தில் பேசிக் கொண்டிருக்கிறேன். இல்லை. கடிதாசியில் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். என் யோசனை என்னுடையது. அதை யாராலும் தடுக்க முடியாது. என்னாலேயே தடுக்க முடியாதே, நான் என்ன செய்வேன்? நான்தான் அப்பவே சொல்லிவிட்டேனே, என் நெஞ்சிலிருக்கிறதை அப்படியே கொட்டிவிடுவேன் என்று!

எனக்கு மாத்திரம் தெரியாதா, நீங்கள் நெஞ்சில் முள் மாட்டிண்ட மாதிரி, கண்டத்தை முழுங்கிண்டு, முகம் நெருப்பாய்க்காய, வாசலுக்கும் உள்ளுக்குமா அலைஞ்சது? அப்போ உங்களுக்கு மாத்திரம் என்னோடு பேச ஆசையில்லை என்று நான் சொல்ல முடியுமா? அதை நினைத்தால்தான் எனக்குத் துக்கம் இப்போகூட நெஞ்சை அடைக்கிறது. என்ன பேச வேண்டும் என்று நினைத்தீர்களோ? அதைக் கேட்கும் பாக்கியம் எனக்கு இல்லை. இதற்கு முன்னால் நீங்கள் யாரோ, நான் யாரோ? பரதேசிக் கோலத்தில் படி தாண்டி உள்வந்து நீங்கள் என் கை பிடித்ததும் ஜன்மேதி ஜன்மங்கள் காத்திருந்த காரியம் நிறைவேறிவிட்டாற்போல் எனக்குத் தோன்றுவானேன்?

அப்படிக் காத்திருந்த பொருள் கைக்கூடிய பின்னரும், இன்னமும் காத்திருக்கும்பொருளாவே இருப்பானேன்? இன்னமும் ஜன்மங்களின் காரியம் நிறைவேறவில்லையா? இப்பொழுது நெருப்பு என்றால் வாய் வெந்து போய்விடாது. தாலி கட்டின வீட்டில் அடித்து விழுகிறாயே என்று

கேட்காதேயுங்கள். இப்போ நான் சொல்லப்போவதைத் தைரியமாகத்தான் சொல்லவேணும். நீங்கள் எங்கேயோ 'காம்ப்' என்று தூரதேசம் போய் விட்டீர்கள். இந்த நிமிஷம் எந்த ஊரில், எந்த ஹோட்டலில், சத்திரத்தில், எந்தக் கூரையை அண்ணாந்து பார்த்தபடி என்ன யோசனை பண்ணுகிறீர்களோ? நானும் புழுங்கிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் திரும்பி வருவதற்குள் எனக்கு எதுவும் நேராது என்று என்ன நிச்சயம்? நினைக்கக் கூட நெஞ்சு கூசினாலும், நினைக்கதான் செய்கிறது. உங்களைப் பற்றியும் அப்படித்தானே? அந்தந்த நாள் ஒரு ஒரு ஆயுசு என்று கழியும் இந்த நாளில், நாமிருவரும், இவ்வளவு சுருக்க, இவ்வளவு நாள் பிரிந்திருக்கும் இந்தச் சமயத்தில், நம்மிருவரிடையிலும் நேர்ந்திருக்கும் ஒரு ஒரு பார்வையி லும், மூச்சிலும் தாழ்ந்த ஒன்றிரண்டு பேச்சுக்களும், நாடியோ, அகஸ்மாத்தாவோ, ஒருவர் மேல் ஒருவர் பட்ட ஸ்பரிசமோ, நினைவின் பொக்கிஷமாய்த்தான் தோன்று கிறது. நாங்கள் அம்மாதிரி பொக்கிஷங்களைப் பத்திரமாய்க் காப்பாற்றுவதிலும் அவைகளை நம்பிக் கொண்டிருப்பதி லும்தான் உயிர் வாழ்கிறோம்.

என் தகப்பனாருக்கு வாசலில் யாராவது வயதானவர்கள் போனால், அவரை அறியாமலே அவர் கைகள் கூம்பும். "என்னப்பா?" என்று கேட்டால் சொல்வார், "அம்மா இந்தக் கிழவனார் வயது நான் இருப்பேனா என்று எனக்கு நிச்சயமில்லை. காலமோ அல்பாயுசுக் காலமாயிருக்கிறது. இந்த நாளில் இத்தனை வயசு வரைக்கும் இருக்கிறதே, காலத்தையும் வயசையும் இவர்கள் ஜயம் கண்ட மாதிரி தானே? இவர்களுடைய அந்த வெற்றிக்கு வணங்கு கிறேன்." அவர் வேணுமென்றே குரலைப் பணிவாய் வைத்துக் கொண்டு அப்படிச் சொல்கையில் ஏதோ ஒரு தினுசில் உருக்கமாயிருக்கும்.

ஏன், அவ்வளவு தூரம் போவானேன்? இந்தக் குடும்பத்திலேயே, ஆயுசுக்கும் ரணமாய், தீபாவளிக்குத் தீபாவளி தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளும் திருஷ்டாந்தம் இல்லையா? நீங்கள் இப்போது நால்வராயிருப்பவர்கள். ஐவராயிருந்தவர்கள் தானே.

கடைசியில் எதைப் பற்றி எழுத வேண்டுமென்று நினைத்திருந்தேனோ, அதுக்கே வந்துவிட்டேன். நீங்கள் இல்லாமலே நடந்த தலை தீபாவளிக் கொண்டாட்டத்தைப் பற்றித்தான்.

அம்மாவைப் பார்த்தால் ஒரு சமயம் பிரமிப்பாய்த்தானிருக்கிறது. அந்த பாரி சரீரத்துடன் அவர் எப்படிப் பம்பரமாய்ச் சுற்றுகிறார், எவ்வளவு வேலை செய்கிறார், ஓய்ச்சல் ஒழிவில்லாமல்! சிறிசுகள் எங்களால் அவருக்குச் சரியாய்ச் சமாளிக்க முடியவில்லையே! மாடிக்குப் போய் அவர் மாமியாருக்குச் சிசுரூஷை பண்ணிவிட்டு, மலம் முதற்கொண்டு எடுக்க வேண்டியிருக்கிறது—வேறொருவரையும் பாட்டி பணிவிடைக்கு விடுவதில்லை—உங்கள் அப்பாவுக்குச் சிசுரூஷை பண்ணி விட்டு......அப்பாவுக்கு என்ன, இந்த வயசில் இவ்வளவு கோபம் வருகிறது! ஒரு புளியோ, மிளகாயோ, துளி சமையலில் தூக்கி விட்டால், தாலத்தையும் சாமான்களையும் அப்படி அம்மானை ஆடுகிறாரே! அவரைக் கண்டாலே மாட்டுப் பெண்களுக்கெல்லாம் நடுக்கம். அழகாயிருக்கிறார், வழித்த கழி மாதிரி, ஒல்லியாய், நிமிர்ந்த முதுகுடன்; இந்த வயசில் அவர் தலையில் அவ்வளவு அடர்த்தியாய்த் தும்பை மயிர்! கண்கள் எப்பவும் தணல் பிழம்பாவே யிருக்கின்றன. அம்மா சொல்கிறார்: "என்ன செய்வார் பிராம்மணன்? உத்தியோகத்திலிருந்து ரிடையர் ஆன பிறகு பொழுது போகவில்லை. ஆத்தில் அமுல் பண்ணுகிறார். ஆபீஸில்

பண்ணிப் பண்ணிப் பழக்கம்! இனிமேல் வளைக்கிற வயசா? வளைத்தால் அவர் 'டப்' பென முறிஞ்சு போவார். நான் பொத்தைப் பூசனிக்காய், 'பொட்' டென உடைஞ்சு போவேன். நாங்கள் இருக்கிற வரைக்கும் நீங்கள் எல்லாம் ஸஹிச்சுண்டு போகவேண்டியதுதான். இந்த மாடியிலிருக்கிற கிழவியை வந்த இடத்துக்குச் சேர்க்க வேண்டிய பொறுப்பு ஒண்ணு இருக்கு. அப்புறம்—''

''ஏன் அம்மா இப்படியெல்லாம் பேசறேன்?'' என்பார் மூத்த ஓர்ப்படி.

''பின்னே என்ன, நாங்கள் இருந்துண்டே யிருந்தால், நீங்கள் உங்கள் இஷ்டப்படி எப்போ இருக்கிறது?''

''இப்போ எங்களுக்கு என்னம்மா குறைச்சல்?''

அம்மாவுக்கு உள்ளூறச் சந்தோஷந்தான். ஆனால் வெளிக் காண்பித்துக் கொள்ளமாட்டார். ''அது சரிதாண்டி, நீ எல்லோருக்கும் முன்னாலே வந்துட்டே. பின்னாலே வந்தவாளுக்கெல்லாம் அப்படியிருக்குமோ? ஏன், என் பெண்ணையே எடுத்துக்கோயன்; அவளுக்குக் காலேஜ் குமாரியா விளங்கணும்னு ஆசையாயிருக்கு. இஷ்டப்படி வந்துண்டு போயிண்டு, உடம்பு தெரிய உடுத்திண்டு...நான் ஒருத்திதான் அதுக்கெல்லாம் குந்தகமாயிருக்கேன். அவள் பிறந்ததிலிருந்தே அப்பா உடன் பிறந்தமார் செல்லம். நான் வாயைப் பிளந்தேன்னா முதன் முதலில் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பவள் அவள்தான். என்வயிற்றுப் பிண்டமே இப்படியிருந்தால், வீட்டுக்கு வந்தவா நீங்கள் என்ன என் பேச்சைக் கேட்டுடப்போறேள்?''

''இல்லேம்மா; நாங்கள் நீங்கள் சொன்னத்தைக் கேட்கறோம்மா...'' என்று ஏகக் குரலில் பள்ளிப் பையன்

கள், வாய்பாடு ஒப்பிப்பது போல், கோஷ்டியாய்ச் சொல்லுவோம்.

"ஆமா என்னமோ சொல்றேள்; காரியத்தில் காணோம். என்னைச் சுற்றி அஞ்சுபேர் இருக்கேள். முதுகைப் பிளக்கிறது; ஆளுக்கு அஞ்சு நாள்—ஏன், நானும் செய்யறேன். என் பெண் செய்யமாட்டாள்; அவள் வீதத்தை நான்தான் செஞ்சாகணும். ஆளுக்கு அஞ்சு நாள் காலையிலெழுந்து காப்பி போடுங்களேன் என்கிறேன். கேட்டதுக்குப் பலன் எல்லோரும் இன்னும் அரை மணி நேரம் அதிகம் தூங்கறேள்."

எங்களுக்கு ரோஸமாயிருக்கும். இருந்து என்ன பண்ணுகிறது? அம்மாவை எதிர்த்து ஒண்ணும் சொல்ல முடியாது. நாங்கள் 5½மணிக்கு எழுந்தால் அவர் ஐந்து மணிக்கு எழுந்து அடுப்பை மூட்டியிருப்பார். ஐந்து மணிக்கு எழுந்தால் அவர் 4½மணிக்கு எழுந்து காப்பியைக் கலந்துகொண்டிருப்பார். நாலரை மணிக்கு எழுந்தால் அவர் 4 மணிக்கு; இந்தப் போட்டிக்கு யார் என்ன பண்ண முடியும்?

"வாங்கோ, வாங்கோ; காப்பியைக் குடிச்சிட்டு போயி டுங்கோ,ஆறி அவலாய்ப்போய் அதை மறுபடியும் சுட வைக்காதபடிக்கு; அதுவே நீங்கள் பண்ற உபகாரம். நான்தான் சொல்றேனே; நான் ஒண்டியா யிருந்தப்போ எல்லாத்தையும் நானேதானே செஞ்சாகணும்; செஞ்சிண்டிருந்தேன். இப்போ என்னடான்னா கூட்டம் பெருத்துப் போச்சு: வேலையை ஏலம் போட்டாறது. ஊம். ஊம்......நடக்கட்டும்...நடக்கட்டும் எல்லாம் நடக்கிற வரையில்தானே? நானும் ஒரு நாள் ஒஞ்சு நடு ரேழியில் காலை நீட்டிட்டேன்னா, அப்போ நீங்கள் செஞ்சுதானே ஆகணும்?

நீங்கள் செஞ்சத்தை நான் ஏத்துண்டுதானே ஆகணும்? மடியோ விழுப்போ ஆசாரமோ அநாசாரமோ—''

அம்மா அவர் காரியத்தைப்பற்றிச் சொல்லிக்கட்டும். எல்லாமே அவரே செஞ்சுண்டாத்தான் அவருக்குப் பாந்தமாயிருக்கிறது. எங்களைப் பெற்றவர்களும் ஏதோ தங்களுக்குத் தெரிஞ்சதை எங்களுக்குச் சொல்லிதான் வைத்திருக்கிறார்கள். எங்களுக்குத் தெரிஞ்சதை, எங்களால் முடிஞ்சவரை நன்றாய்த்தான் செய்வோம். ஆனால் அவர் ஆசாரத்தைப் பற்றிப் பெருமைபட்டுக்கொள்வதில் கடுகளவு நியாயம்கூட கிடையாது. ஜலம் குடிக்கும்போது ஒரு வேளையாவது பல்லில் டம்ளர் இடிக்காத நாள் கிடையாது; இதை யாராவது சொன்னால்—இதற்கென்று கொஞ்சம் தைரியமாய் மூத்த ஓரகத்திதான் கேட்கமுடியும்—ஒப்புக்கொள்ள மாட்டார். ''எனக்குக் காது கேட்கல்லையே!'' என்றுவிடுவார். இதென்ன காதுக்குக் கேட்காவிட்டால் பல்லுக்குத் தெரியாதா என்ன?

உங்கள் தங்கை எங்கேயாவது திரிந்துவிட்டு, ரேழியில் செருப்பை உதறிவிட்டு, காலைக்கூட அலம்பாமல் நேரே அடுப்பங்கரையில் வந்து ''என்னம்மா பண்ணியிருக்கே?'' என்று வாணாயிலிருந்து ஒற்றை விரலால் வழித்துப் போட்டுக் கொண்டு போவாள். அதற்கு கேள்விமுறை கிடையாது. அதுக்கென்னசெய்வது? நான் அப்படியிருந்தால், என் தாயும் என்னிடம் அப்படித்தான் இருந்திருப்பாளோ என்னவோ? ஆனால் அம்மா ஏதோ, தன் வார்த்தை செல்றனுன்னு சொல்லிக்கலாமே ஒழிய, இவ்வளவு பெரிய சம்சாரத்தில் இத்தனை சிறுசுகள், பெரிசுகள் விதவிதங்களினிடை உழல்கையில். எந்த சீலத்தை உண்மையா கொண்டாடமுடியும்?

ஒரொரு சமயம் அம்மா சொல்வதைப் பார்த்தால், என்னவோ நாங்கள் அஞ்சுபேரும் வெறுமென நின்று தெறித்து வளைய வருகிற மாதிரி நினைத்துக் கொள்ள லாம். ஆனால் இந்த வீட்டுக்கு எத்தனை நாட்டுப் பெண் கள் வந்தாலும், அத்தனை பேருக்கும் மிஞ்சி வேலையிருக் கிறது. சமையலை விட்டால், வீட்டுக் காரியம் இல்லையா, விழுப்புக் காரியம் இல்லையா, குழந்தைகள் காரியம் இல்லையா, சுற்றுக் காரியம் இல்லையா? புருஷாளுக்கே செய்யற பணிவிடைக் காரியங் கள்,......... இதெல்லாம் காரியத்தில் சேர்த்தியில்லையா? இந்த வீட்டில் எத்தனை பேர்கள் இருக்கிறார்களோ அத்தனை பந்திகள். ஒவ்வொருத்தருக்கும் சமயத்துக்கு ஒரு குணம். ஒருத்தருக்குக் குழம்பு, ரஸம், மோர் எல்லாம் கிண்ணங்களில் கலத்தைச் சுற்றி வைத்தாக வேண்டும்; ஒருத்தருக்கு எதிரே நின்று கொண்டு கரண்டி கரண்டியாய்ச் சொட்டியாக வேண்டும். நீங்களோ மௌன விரதம்! தலை கலத்தின்மேல் கவிழ்ந்துவிட்டால் சிப்பலைச் சாய்க்கக்கூட முகத்துக்கும் இலைக்கும் இடையில் இடம் கிடையாது; ஒருத்தர் சதா சளசளா வளவளா. கலத்தைப் பார்த்துச் சாப்பிடாமல் எழுந்த பிறகு இன்னும் பசிக்கி றதே, ரஸம் சாப்பிட்டேனோ? மோர் சாப்பிட்டேனோ?' என்று சந்தேகப்பட்டுக்கொண்டே இருப்பார். குழந்தை களைப் பற்றியோ சொல்ல வேண்டாம்.

எல்லோர் வீட்டிலும் தீபாவளி முந்தின ராத்திரி யானால் நம் வீட்டில் மூணு நாட்களுக்கு முன்னதாக வந்து விட்டது. அரைக்கிறதும், இடிக்கிறதும், கரைக்கிறது மாய் அம்மா கை எப்படி வாஸிக்கிறது? மைஸூர்ப்பாகு கிளறும்போது கம்மென்று மணம் கூடத்தைத் தூக்கு கிறது. நாக்கில் பட்டதும் மணலாய்க் கரைகிறது. அது மணல்கொம்பா, வெண்ணெயா? எதை வாயில் போட்டா

லும் உங்களை நினைத்துக் கொள்வேன். நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? மௌனம் ஒன்றைத் தவிர வேறெதைத் தனியாய் அநுபவிக்க முடியும்? மௌனம் கூட ஒரு 'ஸ்டேஜ்'ஜிக்குப் பிறகு அநுபவிக்கிற விஷயமில்லை. வழியில்லாமல் ஸஹித்துக் கொள்ளும் சமாசாரம்தான். உங்களுக்கும் எனக்கும் மௌனமாயிருக்கிற வயசா? நெஞ்சக் கிளர்ச்சியை ஒருவருக்கொருவர் சொல்லச் சொல்ல, அலுக்காமல், இன்னமும் சொல்லிக்கொள்ளும் நாளல்லவா? நீங்கள் ஏன் இப்படி வாயில்லாப் பூச்சியாயிருக்கிறேள்? நீங்கள் புருஷாள்-உங்களுக்கு உண்மையிலேயே விரக்தியிருக்கலாம். நான் உங்களைவிடச் சின்னவள்தானே! உங்கள் அறிவையும் பக்குவத்தையும் என்னிடம் எதிர்பார்க்கலாமா? உங்களுக்காக இல்லாவிட்டாலும் எனக்காகவாவது என்னுடன் நீங்கள் பேசணும். எனக்குப் பேச்சுவேணும், உங்கள் துணைவேணும்... ஐயையோ, இதென்ன உங்களைக் கையைப் பிடித்து இழுக்கிற மாதிரி நடந்துகொள்கிறேனே! என்னை மன்னிச்சுக் கோங்கோ, தப்பா நினைச்சுக்காதேங்கோ. ஆனால் எனக்கு உங்களையும் என்னையும் பற்றித் தவிர வேறு நினைப்பில்லை, 'நானும் நீயும்' எனும் இந்த ஆதாரத்தை ஒட்டின சாக்குத்தான் மற்றதெல்லாம் எனக்கு. இதைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்துவிட்டால், எழுத வந்ததுகூட மறந்துவிடுகிறது.

ஆனால், 'நானும் நீங்களும்' என்று எல்லாம் எண்ணவும் எழுதவும் சுவையாயிருந்தாலும் குடும்பம் என்பதை எங்கே ஒதுக்கிவைக்க முடிகிறது, அல்லது மறந்துவிட முடிகிறது? குடும்பம் என்பது ஒரு க்ஷீராப்தி. அதிலிருந்து தான் லக்ஷ்மி, ஐராவதம், உச்ரவஸ் எல்லாம் உண்டாகிறது. குடும்பத்திலிருந்து நீங்கள் முளைத்ததனால்தானே எனக்குக் கிட்டினீர்கள்? ஆலகால விஷமும் அதிலிருந்து

தான்; உடனே அதற்கு மாற்றான அம்ருதமும் அதில் தான். ஒன்றுமில்லை, அல்ப விஷயம்; இந்தக் குடும்பத்தி லிருப்பதால்தானே, தீபாவளியை நான் அநுபவிக்க முடி கிறது! நீங்கள் எங்கேயோ இருக்கிறீர்கள்.

எனக்குத் தோன்றுகிறது. நானும் நீயுமிலிருந்து பிறந்து பெருகிய குடும்பத்தில் நானும் நீயுமாய் இழைந்து மறுபடியும் குடும்பத்துள்ளேயே மறைத்துவிட்ட நானும் நீயின் ஒரு தோற்றமான சாக்ஷிதான் தீபாவளியோ? குடும் பமே நானும் நீயாய்க் கண்ட பின், இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

எனக்கு இப்படித்தான் தோன்றிற்று. தீபாவளிக்கு முதல் ராத்ரி, கூடத்து ஊஞ்சலில் புது வேஷ்டிகளும் புடவைகளும் சட்டைகளும் ரவிக்கைகளும் போராய்க் குவிந் திருப்பதைப் பார்த்ததும் ஏன் இத்தனை துணிகளையும் நானே உடுத்திக் கொண்டுவிட்டால் என்ன? பொம்ம னாட்டி துணிகளை நானும் புருஷாள் துணிகளையும், உங்களுக்காக நானே! நீங்கள்தான் இல்லையே. எல்லாமே இந்த விசுவரூப நானும் நீயுக்குந்தானே?

அம்மா ஒரு மரச்சீப்பில் கரும்பச்சையாய் ஒரு உருண் டையை ஏந்திக்கொண்டு என்னிடம் வந்தார்.

"குட்டீ, சாப்பிட்டுட்டையா?"

"ஆச்சு அம்மா."

"தின்னவேண்டிய தெல்லாம் தின்னாச்சா?"

"ஆச்சு—" (அந்தக் கோதுமை அல்வாவில் ஒரு துண்டு வாங்கிட்டால் தேவலை. நான்தான் துண்டு போட்டேன். ஆனால் கேக்கறதுக்கு வெக்கமாயிருக்கே!)

"அப்படியானால் உக்காந்துக்கோ, மருதாணியிட றேன்."

அம்மா என் பாதங்களைத் தொட்டதும் எனக்கு உடல் பதறிப்போச்சு. "என்னம்மா பண்றேள்?" அம்மா கையிலிடப் போறாராக்கும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் என் பேச்சு அம்மாவுக்குக் காது கேட்கவில்லை. என் பாதங்களை எங்கோ நினைவாய் வருடிக்கொண்டிருந்தார். வேலை செய்தும் பூப்போன்று மெத்திட்ட கைகள்; எனக்கு இருப்பே கொள்ளவில்லை. அம்மா திடீரென்று என் பாதங்களைக் கெட்டியாப் பிடித்துக் கொண்டு அவை மேல் குனிந்தார். அவர் தோளும் உடலும் அலைச் சுழல்கள் போல் விதிர்ந்தன. உயர்ந்த வெண் பட்டுப்போல் அவர் கூந்தல் பளபளத்தது. என் பாதங்களின் மேல் இரு அனல் சொட்டுக்கள் உதிர்ந்து பொரிந்தன.

"அம்மா! அம்மா!" எனக்கு அழுகை வந்துவிட்டது. அதுவே ஒட்டுவாரொட்டி. எனக்கும் தாங்கிக்கிற மனசு இல்லை.

"ஒண்ணுமில்லேடி குட்டி பயப்படாதே." அம்மா மூக்கை உறிஞ்சிக்கொண்டு கண்ணைத் துடைத்துக்கொண்டார். "எனக்கு என்னவோ நினைப்பு வந்தது. எனக்கு ஒரு பெண் இருந்தாள். முகம் உடல்வாகு எல்லாம் உன் அச்சு தான். இப்போ இருந்தால் உன் வயசுதான் இருப்பாள் என் நெஞ்சை அறிஞ்சவள் அவள்தான். மூணு நாள் ஜுரம், முதல் நாள் மூடிய கண்ணை அப்புறம் திறக்கவேயில்லை. மூளையில் கபம் தங்கிவிட்டதாம். இப்பொத்தான் காலத்திற்கேற்ப வியாதிகள் எல்லாம் புதுப்புது தினுசாய் வரதே! பின்னால் வந்த விபத்தில் அவளை மறந்துவிட்டேன் என்று நினைத்தேன். ஆனால் இப்போத்தான் தெரியறது. உண்மையில் எதுவுமே மறப்பதில்லை. எதுவுமே மறப்பதற்கில்லை. நல்லதோ கெடுதலோ அது அது, சாப்பாட்டின் சத்து ரத்தத்துடன் கலந்துவிடுவதுபோல்,

உடலிலேயே கலந்துவிடுகிறது. நாம் மறந்துவிட்டோம் என்று மனப்பால் குடிக்கையில், 'அடி முட்டாளே! இதோ இருக்கிறேன், பார்!' என்று தலைதூக்கிக் காண்பிக்கிறது. உண்மையில் அதுவே போகப்போக நம்மைத்தாக்கும் மனோ சக்தியாய்க்கூட விளங்குகிறது. இல்லாவிட்டால் என் மாமியாரும் நானும், எங்களுக்கு நேர்ந்ததெல்லாம் நேர்ந்தபின் இன்னும் ஏன் இந்த உலகத்திலே நீடிச்சு இருந்திண்டிருக்கணும்?''

இதைச் சொல்லிவிட்டு அம்மா அப்புறம் பேசவில்லை. தன்னை அமுக்கிய ஒரு பெரும் பாரத்தை உதறித் தள்ளினாற் போல் ஒரு பெருமூச்செறிந்தார்; அவ்வளவுதான். என் பாதங்களில் மருதாணி இடுவதில் முனைந்தார். ஆனால் அவர் எனக்கு இடவில்லை. என் உருவத்தில் அவர் கண்ட தன் இறந்த பெண்ணின் பாவனைக்கும் இடவில்லை; எங்கள் இருவரையும் தாண்டி எங்களுக்குப் பொதுவாய் இருந்த இளமைக்கு மருதாணியிட்டு வழிபட்டுக்கொண்டிருந்தார். இந்த சமயத்துக்கு அந்த இளமையின் சின்னமாய்த்தான் அவருக்கு நான் விளங்கினேன்; எனக்கு அப்படித்தான் தோன்றிற்று. இப்படியெல்லாம் நினைக்கவும் எனக்குப் பிடிக்கும். அதனால்தான் எனக்கு அப்படித் தோன்றிற்றோ என்னவோ?

இந்த வீட்டில் சில விஷயங்கள் வெகு அழகாயிருக்கின்றன. இங்கே நாலு சந்ததிகள் வாழ்கின்றன. உங்கள் பாட்டி, பிறகு அம்மா-அப்பா, பிறகு நாங்கள்-நீங்கள், பிறகு உங்கள் அண்ணன் அண்ணிமார்களின் குழந்தைகள். ஆனால் இங்கே எல்லா உயிரினங்களின் ஒருமையின் வழிபாடு இருக்கிறது. இங்கே பூஜை புனஸ்காரம் இல்லை. ஆனால் சில சமயங்களில், இந்த வீடு கோவிலாகவே தோன்றுகிறது. மலைக்கோட்டை மேல் உச்சிப் பிள்ளையார் எழுந்தருளியிருப்பது போல் பாட்டி மூன்றா

மாடியில் எழுந்தருளியிருக்கிறார். அங்கிருந்து அவர் செலுத்தும் ஆட்சி எங்களுக்குத் தெரியவில்லை. பாட்டிக்குத் தொந்தரவு கொடுக்கலாகாது எனக் குழந்தைகளுக்கு மூன்றாமாடிக்கு அனுமதி கிடையாது. அது அம்மா தவிர வேறு யாரும் அண்டக்கூடாத ப்ராகாரம். ஆறுகால பூஜை போல், அம்மா பாரி சரீரத்தைத் தூக்கிக்கொண்டு, குறைந்தது நாளைக்கு ஆறு தடவையாவது ஏறி இறங்குகிறார். பாட்டிக்கு ஆகாரம் தனியாய் அம்மாவேதான் சமைக்கிறார். அது கஞ்சியா, கூழா, புனர்ப்பாகமா, சாதமா—எதுவுமே எங்களுக்குச் சரியாத் தெரியாது. அதை ஒரு தட்டிலே, நிவேதனம் மாதிரி, இலையைப் போட்டு மூடித் தாங்கிக்கொண்டு, முகத்திலும் காலிலும் பளிச்சென பற்றிய மஞ்சளுடன், நெற்றியில் பதக்கம்போல் குங்குமத்துடனும், ஈரம் காயத்தளர முடிந்த கூந்தலில் சாமந்திக் கொத்துடனும் அம்மா மாடியேறுகையில் எனக்கு உடல் புல்லரிக்கிறது.

சில சமயங்களில் அம்மா அப்பா இரண்டு பேருமே மேலே போய் ஒன்றாய்க் கீழிறங்கி வருகிறார்கள், ஸ்வாமி தரிசனம் பண்ணி வருவதுபோல். ஒரு சமயம் அவர்கள் அப்படி சேர்ந்து வருகையில் 'சடக்'கென்று அவர்கள் காலடியில் விழுந்து நமஸ்காரம் பண்ணிவிட்டேன். அம்மா முகத்தில் ஒரு சிறு வியப்பும் கருணையும் ததும்புகின்றன. அப்பாவின் கன்னங்களில் இறுகிய கடினம்கூடச் சற்று நெகிழ்கிறது.

"என்னடி குட்டீ, இப்போ என்ன விசேஷம்?"

எனக்கே தெரிந்தால் தானே? உணர்ச்சிதான் தொண்டையை அடைக்கிறது; வாயும் அடைச்சுப் போச்சு. கன்னங்களில் கண்ணீர் தாரை தாரையாய் வழிகிறது. அன்புடன் அம்மா முகத்தில் புன்னகை தவழ்கின்றது. என் கன்னத்தைத் தடவிவிட்டு இருவரும் மேலே

நடந்து செல்கிறார்கள். அம்மா தாழ்ந்த குரலில் அப்பா விடம் சொல்லிக் கொள்கிறார்:

"பரவாயில்லை பெண்ணைப் பெரியவா சின்னவா மரியாதை தெரிஞ்சு வளர்த்திருக்கா."

அதனால் ஒன்றுமில்லை. என்னவோ எனக்குத் தோன் றிற்று, அவ்வளவுதான். இந்தச் சமயத்தில் இவர்களை நான் நமஸ்கரித்ததால், மேலிருந்து இவர்கள் பெற்று வந்த அருளில் கொஞ்சம் ஸ்வீகரித்துக் கொள்கிறேன். சந்ததியி லிருந்து சந்ததிக்கு இறங்கி வரும் பரம்பரை அருள்.

எங்களுக்கெல்லாம் எண்ணெய்க் குளி ஆன பிறகு மாடிக்குப் போன அம்மா, வழக்கத்தைவிடச் சுருக்கவே திரும்பிவருகிறார். சமாசாரம் தந்தி பறக்கிறது. "பாட்டி கீழே வர ஆசைப்படுகிறார்". அப்பாவும் அம்மாவும் மேலேறிச் செல்கிறார்கள். நாங்கள் எல்லோரும் சொர்க்க வாசல் தரிசனத்திற்குக் காத்திருப்பது போல் பயபக்தி யுடன் மௌனமாய்க் காத்திருக்கிறோம். சட்டென நினைப்பு வந்தவனாய் ஒரு கொள்ளுப்பேரவாண்டு 'ஸ்டூலை' வைத்து மேலேறி, மாடி விளக்கின் 'ஸ்விட்சைப், போடுகிறான்.

திடீரென மாடிவளைவில் பாட்டி தோன்றுகிறார். விமானத்தில் சுவாமியை எழுப்பினாற் போல் நாற்காலியில் அவர் இருக்க, அம்மாவும் அப்பாவும் இருபக்கங்களிலும் நாற்காலியைப் பிடித்துக் கொண்டு வெகு ஜாக்கிரதையாய், மெதுவாய், கீழே இறங்குகிறார்கள். பிறகு பத்திரமாய் அப்பா பாட்டியை இரு கைகளிலும் வாரித் தூக்கிக் கொண்டுபோய் மணைமீது உட்காத்தி வைக்கிறார். அப்பா பிடித்துக்கொண்டிருக்க, அம்மா, பதச்சூட்டில் வெந்நீரை மொண்டு மொண்டு ஊற்றி, பாட்டி உடம்பைத்தடவினாற் போல தேய்க்கிறார். நாங்கள் எல்லோரும் சுற்றி நின்று பார்க்கிறோம்.

இது ஆதாரனை இல்லாது எது? ஆமாம், பாட்டியின் உடல் நிலை அடிக்கடி குளிப்பதற்கில்லை, எந்த சாக்கில் மாரில் சளி தாக்கி விடுமோ எனும் பயம். உத்ஸ வருக்கு விசேஷ நாட்களில் மாத்திரம் அபிஷேகம் நடப்பது போல், பாட்டிக்கு, நாள், கிழமை, பண்டிகை தினம் போது தான், சர்வ ஜாக்கிரதையாய்க் குளிப்பாட்டு நடக்கும். சற்று அழுத்தித் தேய்த்தால் எங்கே கையோடு சதை பிய்ந்து வந்துவிடுமோ எனும்படி உடல் அவ்வளவு நளினம். அந்த உடலில், மானம் வெட்கம் எனும் உணர்ச்சி விகாரங் களுக்கு எங்கே இடம் இருக்கிறது? எந்த நேரத்தில் இந்த உடல் விலங்கைக் கழற்றி எறியப் போகிறோம் என்றுதான் அந்த உயிர் காத்துக் கொண்டிருக்கிறதே! மரம் சாய்ந்து விட்டாலும் வேர்கள் பூமியிலிருந்து கழல மாட்டேன் என் கின்றன. பாட்டி நூறு தாண்டியாச்சென்று நினைக் கிறேன். வருடங்களின் ஸ்புடத்தில், அங்கங்கள், சுக்காய் உலர்ந்து, உடலே சுண்டிய உருண்டை ஆகி விட்டது.

பாட்டியின் உடம்பைத் துவட்டி அவர் மேல் புடவையை மாட்டி நாற்காலியில் வைத்துக் கூடத்து வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறார்கள். நாங்கள் எல்லாரும் நமஸ்கரிக்கிறோம். பாட்டி மேல் கல்லைப்போல் மௌனம் இறங்கிப் பல வருஷங்கள் ஆகிவிட்டன. வாதத் தில் கைகால் முடங்கி நாக்கும் இழுத்து விட்டபின், கண்கள் தாம் பேசுகின்றன. கண்களில் பஞ்சு பூத்து விட்டாலும், குகையிலிட்ட விளக்குகள் போல், குழிகளில் எரிகின்றன. நான் தலை குனிகையிலே எனக்குத் தோன்றுகிறது: இவர் இவரா, இதுவா? கோவிலில் நாம் வணங்கிடும் சின்னத்திற் கும், இவருக்கும் எந்த முறையில் வித்தியாசம்? கோவிலில் தான் என்ன இருக்கிறது?

—''ஐயோ ஐயோ—'' என ரேழி அறையிலிருந்து ஒரு கூக்குரல் கிளம்புகிறது. என்னவோ ஏதோ எனப் பதறிப்

போய், எதிரோலமிட்டபடி எல்லோரும் குலுங்கக் குலுங்க ஓடுகிறோம். 'வீல்' என அழுதபடி குழந்தை அவன் பாட்டி மேல் வந்து விழுகிறான். ''என்னடா கண்ணே!'' அம்மா அப்படியே வாரி அணைத்துக் கொண்டார். சேகர் எப்பவும் செல்லப் பேரன். இரண்டாமவரின் செல்வ மில்லையா?

''பாட்டி! பாட்டி!'' பையன் ரோஸத்தில் இன்னமும் விக்கி விக்கி அழுகிறான். ''அம்மா அடி அடின்னு அடிச் சூட்டா—''

''அடிப் பாவீ! நாளும் கிழமையுமாய் என்ன பண்ணீட் டாடா உன்னை!'' அம்மாவுக்கு உண்மையிலே வயிறு எரிந்து போய்விட்டது, கன்னத்தில் அஞ்சு விரலும் பதிஞ் சிருந்ததைப் பார்த்ததும்.

''காந்தீ! ஏண்டி காந்தீ!!—''

ரேழியறை ஜன்னலில், காந்திமதி மன்னி உட்காந்திருந் தாள். ஒரு காலைத் தொங்கவிட்டு ஒரு காலைக் குந்திட்டு, அந்த முட்டிமேல் கைகளைக் கோத்துக்கொண்டு. கூந்தல் அவிழ்ந்து தோளில் புரள்வது கூட அவளுக்குத் தெரிய வில்லை. அவள் கண்களில் கோபக்கனல் வீசிற்று. உள் வலியில் புருவங்கள் நெரிந்து, கீழ் உதடு பிதுங்கிற்று. அம்மாவைக் கண்டதும் அவள் எழுந்திருக்கக் கூட இல்லை.

''ஐயையோ!'' என் பக்கத்தில் சின்ன மன்னி நின்று கொண்டிருந்தாள். முழங்கையைப் பிடித்துக் காதண்டை, ''காந்தி மன்னிக்கு வெறி வந்திருக்கு'' என்றாள்.

காந்தி மன்னிக்கு இப்படி நினைத்துக் கொண்டு, இம் மாதிரி முன்னறிக்கையில்லாது குணக்கேடு வந்துவிடும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ, ஆறு மாதங்களுக்கு

ஒரு முறையோ மூன்று நாட்களுக்குக் கதவையடைத்துக் கொண்டு விடுவாள். அன்ன ஆகாரம், குளி ஒன்றும் கிடையாது. சந்திரனை ராகு பிடிப்பதுபோல் பெரிய மனச் சோர்வு அவளைக் கவ்விவிடும். அப்போது அம்மா உள்பட யாரும் அவள் வழிக்குப் போக மாட்டார்கள்.

காந்தி மன்னியின் வாழ்வே தீராத் துக்கமாகி விட்டது. சின்ன மன்னி அப்புறம் என்னிடம் விவரமாய்ச் சொன்னாள். என்னால் நிஜமாகவே கேட்கவே முடியவில்லை. காதையும் பொத்திக் கொண்டு கண்ணையும் இறுக மூடிக் கொண்டு விட்டேன். அந்தக் காக்ஷியை நினைத்துப் பார்க்க முடியவில்லை. உங்கள் இரண்டாவது அண்ணா, தீபாவளிக்குச் சீனி வெடி வாங்கப்போய்ப் பட்டாசுக் கடையில் வெளி விபத்தில் மாட்டிக் கொண்டு விட்டாராமே! எந்த மஹாபாவி சிகரெட்டை அணைக்காமல் தூக்கி எறிந்தானோ, அல்லது வேறு என்ன நேர்ந்ததோ?

வெடித்த வெடியில் கடை சாமான்கள் பனைமர உயரம் எழும்பி விழுந்தனவாமே! அண்ணாவுக்குப் பிராணன் அங்கேயே போய் விட்டதாம். அண்ணாவுக்கு முகமே இல்லையாம். சில்லு சில்லாய்ப் பேந்து விட்டதாம். முகமிருந்த விடத்தில் துணியைக் போட்டு மூடிக்கொண்டு வந்தார்களாம்.

சேகர் அப்போ வயிற்றிலே மூணு மாசமாம். இப்போ சேகருக்கு வயது ஏழா, எட்டா?

நிஜம்மா கேக்கறேன்; இந்தக் கஷ்டத்தை நீங்கள் எல்லோரும் எப்படி ஸஹிச்சிண்டிருந்தீர்கள்? அம்மாவும் அப்பாவும் எப்படி இதிலிருந்து மீண்டார்கள்? நீங்கள் எல்லாரும் முதலில் எப்படி உயிரோடிருக்கிறீர்கள்? காந்திமதி மன்னி கருகிப் போனதற்குக் கேட்பானேன்?

இது நேர்வதற்கு முன்னால் அவள் தான் ரொம்பவும் கல கலப்பாய், எப்பவும் சிரிச்ச முகமாய் இருப்பாளாமே!

இப்போக்கூட, அந்த முகத்தின் அழகு முற்றிலும் அழியவில்லை. அவள் சீற்றம் எல்லாம் அவள் மேலேயே சாய்கையில், நெருப்பில் பொன் உருகி நெளிவதுபோல, வேதனையின் தூய்மையில்தான் ஜ்வலிக்கிறாள். அவளுக்கு அவள் கதி நேர்ந்த பின், மற்றவர் போல் தெறித்துக் கொண்டு பிறந்தகம் போகாமல், எங்களோடு ஒருவராய், இதுவரை இங்கேயே அவள் தங்கியிருப்பதிலும் ஒரு அழகு பொலிகின்றது.

அவளை அவள் கோலத்தில் கண்டதும் அம்மாவுக்குக் கூடச் சற்றுக் குரல் தணிந்தது.

''ஏண்டி காந்தி, இன்னுமா குளிக்கல்லே? வா வா, எழுந்திரு. குழந்தையை இப்படி உடம்பு வீங்க அடிச்சிருக் கையே, இது நியாயமா?''

நியாயமாம் நியாயம்! உலகத்தில் நியாயம் எங்கேயி ருக்கு?''

காந்திமதி மன்னி குரலில் நெருப்பு கக்கிற்று.

''அதற்குக் குழந்தை என்ன பண்ணுவான்?''

''பாட்டி! பாட்டி? நான் ஒண்ணுமே பண்ணல்லே. ஊசி மத்தாப்பைப் பிடிச்சுண்டு வந்து 'இதோ பாரு அம்மா'ன்னு இவள் முகத்தெதிரே நீட்டினேன். அவ்வளவு தான்; என்னைக் கையைப் பிடிச்சு இழுத்துக் குனியவெச்சு முதுகிலேயும் மூஞ்சிலேயும் கோத்துக் கோத்து அறைஞ் சுட்டா, பாட்டீ!'! பையனுக்குச் சொல்லும் போதே துக்கம் புதிதாய்ப் பெருகிற்று. அம்மா அவனை அணைத்துக் கொண்டார்.

''இங்கே வா தோசி, உன்னைத் தொலைச்சு முழுகிப் பிடறேன்! வயத்திலே இருக்கறபோதே அப்பனுக்கு உலை வெச்சாச்சு. உன்னை என்ன பண்ணால் தகாது?''

அம்மாவுக்குக் கன கோபம் வந்துவிட்டது,

"நீயும் நானும் பண்ணின பாபத்துக்குக் குழந்தையை ஏண்டி கறுவறே? என் பிள்ளை நினைப்புக்கு, அவனை யாவது ஆண்டவன் நமக்குப் பிச்சையிட்டிருக்கான்னு ஞாபகம் வெச்சுக்கோ. ஏன், இன்னிக்குத்தான் நாள் பார்த்துண்டையா துக்கத்தை கொண்டாடிக்க? நானும்தான் பிள்ளையைத் தோத்துட்டு நிக்கறேன். எனக்குத் துக்கமில்லையா? நான் உதறி எறிஞ்சுட்டு வளைய வல்லை?"

மன்னி சீறினாள். "உங்களுக்குப் பிள்ளை போனதும் எனக்கு கணவன் போனதும் ஒண்ணாயிடுமோ?"

நாங்கள் அப்படியே ஸ்தம்பிச்சுப் போயிட்டோம். 'அம்மாவை நேரிடையாகப் பார்த்து அப்படிப் பேசற வாளும் இருக்காளா? இன்னிக்கு விடிஞ்ச வேளை என்ன வேளை?'

அம்மா ஒன்றும் பதில் பேசவில்லை, குழந்தையைக் கீழே யிறக்கி விட்டு நேரே மருமகளை வாரியணைத்துக் கொண்டார்.

மன்னி பொட்டென உடைந்து போனாள். அம்மாவின் அகன்ற இடுப்பைக் கட்டிக்கொண்டு குழந்தைக்கு மேல் விக்கி அழுதாள். அம்மா கண்கள் பெருகின. மருமகளின் கூந்தலை முடித்து நெற்றியில் கலைந்த மயிரைச் சரியாய் ஒதுக்கிவிட்டார்.

"காந்தி, இதோ பார், இதோ பாரம்மா—"

சேகர் ஒரு ஊசி மாத்தாப்பை அம்மாவுக்கும் பாட்டிக்கும் முகத்துக்கு நேர் பிடித்துச் சிரித்துக் கொண்டிருந்தான். அவன் கன்னத்தில் கண்ணீர் இன்னும் காயு வில்லை.

எங்களில் ஒருவர் விலக்கில்லாமல் எல்லோருக்கும் கண்கள் நனைந்திருந்தன.

குடும்பம் ஒரு பாற்கடல். அதிலிருந்துதான் லக்ஷ்மி, ஐராவதம், உச்சஸ்ரஸ் எல்லாம் உண்டாயின. அதிலிருந்து முளைத்துத்தான் எனக்கு நீங்கள் கிட்டினீர்கள். ஆலஹால விஷமும் அதிலிருந்துதான் உண்டாகியது; உடனே அதற்கு மாற்றான அம்ருதமும் அதிலேயே தான்...

# ராக் விளம்பித் அபிராமி

தினமும் படுக்கப் போகுமுன், ஒரு வெகுநாளைய பழக்கம், வானத்தைப் பார்த்துக் கொள்வேன்.

ஜன்னலண்டை கட்டில்; அல்லது கட்டிலண்டை ஜன்னல், இப்படி ஒரு காரணம் சொல்லிக் கொள்ளலாம்.

அல்லது

ஜன்மேதி ஜன்மமாய் ஆனால் ஜன்மாவுக்கே புரியாமல், அதன் அடி உணர்வில், அதன் அடிப்படை பயம். அடுத்த முறை எட்டிப் பார்க்க வானம் இருக்குமோ?

யோசித்துப் பார்க்கையில், இது ஒன்றும் அவ்வளவு பயித்தியக்கார பயம் அல்ல. பரஸ்பர ஆகர்ஷணத்தில் தானே ஒன்றையொன்று இழுத்துப் பிடித்துக்கொண்டிருக் கின்றன. கிரகங்கள்! இந்த ஈர்ப்பு என்றேனும் எள்ளுப் பிசகட்டும்!?????

வானமாவது, பூமியாவது—அப்புறம் அவனுடைய ஊழிச் சிரிப்புத்தான் மிச்சம். ஆனால் அதையும் கேட்க யார் இருப்பார்?

நான் இருப்பேன். ஏனெனில், அவன் ஒன்று உண்டென வகுத்து, வரித்து, வஹிப்பவனே நான். நானில்லாது அவனேது? ஆகையால் இருக்கிறேன். இருப்பேன் என் பதற்கு என்னிலும் சான்று என்ன வேண்டும்?

ஆனால் அந்தச் சிரிப்பு நேரும் போது, எனக்குக் கேட்காது. அவனில் ஆகையால், அந்தச் சிரிப்பில் நானாக இருப்பேனன்றி எனக்குச் சொந்தமான நான், என்னைக் காண இராது.

சிரிப்பு ஒன்று உண்டு, தெரிகிறது.

அதைக் காணவோ, கேட்கவோ, நான் இருந்தும் இரேன்.

இந்த ஏமாற்றமே ஒரு துக்கம் இல்லையா?

மீனாட்சி கல்யாணத்தின் போது, அகத்தியனை பொதிகை மலைக்கு விரட்டினாற் போல்.

''கல்யாணம் இங்கு நடப்பதை, நடக்கிறது நடக்கிற படியே அங்கு பார்ப்பாய்.''

டி.வி. அப்பவே வந்தாச்சு.

ஆனால் அது அசல் ஆகுமோ?

பிம்பம்.

இன்று படுக்கப் போகுமுன், வழக்கப்படி, வானத்தை உறுதிப் படுத்திக் கொள்ள ஏன் மறந்தேன்?

வேலையிலிருந்து வந்த அலுப்பு. ஆடையைக் கூடப் பூராக்களையாமல், ரா உணவுக்கும் அலுப்பாகி பொத்தென்று விழுந்தவன் தான்.

இது இன்று மாத்திரம் இல்லை.

அடிக்கடி வர வர வானம் பார்க்கும் நேரம்காட்டிலும் பாராத நேரங்களே...

லக்ஷியங்களின் கதியே இப்படித்தான். என் அனாவசிய நேரங்களில் சிந்திக்கையில், எல்லாமே வாணாளின் வீணாள். நாய் வைராக்கியம்.

குப்பை மேடில் இலை விழும் சத்தம் எப்போ? வைராக்கியம் மட்டும் இருந்தால் தருமபுத்திரனுக்குத் துணையாகப் போவேனே! தொண்டை அடைக்கிறது; சிரிப்பு கேட்கிறது''?''—ஆம். தொண்டைக்குள் அவன் தான். அசல் நேரும்போது இருக்க மாட்டாய். ஆகையால் இப்பவே, சிரிப்பைக் கேள்.''

அசல் நேரும் முன்னரே அதன் பிம்பம்.

மாதிரி (Sample)

அவன் மனசு வைத்தால் என்னதான் முடியாது?

ஆனால் இப்போது, அப்போது, எப்போதும் மனம் வைப்பவன் அவனா?

நானா?

மனஸ்(ஆண்)

மனஸா(பெண்?)

மானஸா(பெண்?)

மானஸி(பெண்?)

சேவலைச் சுற்றிப் பெட்டைகள்.

ஒன்றைச் சுற்றி ஒன்பது

''கொக்கரக்கோ''

என்ன வெண்மை, என்ன சுத்தம்!! என்ன வெற்றி!!!

கொண்டையும் கழுத்தைச் சுற்றி செதில்களும்.

என்ன சிலிர்ப்பு!

என் கூவலே என் கொடி.

உடல் ஆணாய் இருக்கலாம். ஆனால் மனம் பெண்ணாய் இருக்கலாம் அல்லவா?

உடல் பெண்ணாய் இருக்கலாம். ஆனால் மனம் ஆணாய் இருக்கலாம் அல்லவா?

இல்லை. மனம் அவ்வப்போது மாறி மாறி அந்தந்த சமயத்திற்கேற்ப ஆண்—பெண் அர்த்தநாரீசம். நீயே நான். நானே நீ.

நித்திரை நிலையில் நான் ஆணா? பெண்ணா?

வெறும் நான். ஒரே நான்.

இன்று படுக்கப் போகுமுன் வானத்தை உறுதிப் படுத்திக் கொள்ள, வானம் பார்க்க மறந்ததால், வயிறும் வெறும் வயிறு ஆனதால், ஜன்மேதி ஜன்மமாய், ஆனால் ஜன்மாவுக்கே புரியாமல், அதன் அடி உணர்வின் அடிப் பயத்தில்,

திடுக்—

விழித்துக்கொண்டேன்.

நீர்வீழ்ச்சியின் இரைச்சல். எங்கிருந்து இது? எழுப்பியது அதுதானோ?

நடு நிசி—

ரேடியோவை அணைக்க மறந்து அதன் "கடபுடா கடபுடாவா?"

கட்டிலருகே குட்டி மேசை மேல் எட்டித் தொட்டுப் பார்க்கிறேன். அணைக்க மறக்கவில்லையே!

விழித்துக் கொண்டதில் சந்தேகமில்லை. ஆகையால் இந்த ஓசை கனவல்ல. அதனாலேயே மனமெனும் திகைப்பு, திக்குத் தெரியாமல் திரிந்து, இங்கு வந்து விட்ட புரியாத ஏதோ ஒரு வேளையின் பெரு மூச்சு. அதில் மனத்தின் மயக்கு. மனமெனும் மயக்கு. பக்கத்துத் தலையணையிலிருந்து கம்மென்று மல்லி. உடல் பரபரக்கிறது. இருளில் கைத்துழாவலுக்குப் பக்கத்துத் தலையணை காலி. சில நாட்களாகவே காலி. பிறந்தகம். அவள் கூந்தலின்று உதிர்ந்து அவளுடைய வழக்கமான அசிரத்தையில் விட்டுச் சென்றவையென்று சொல்ல வாடிய உதிரிகள் கூட இல்லை. இது ஜாதி ஜாது. மனத்தின் ஜவ்வாது. விளக்கைப் போட துணிவு இல்லை. தருணம் நலுங்கிவிட்டால்?—

தூரத்தில், தூர், தூர் பஹுதூர் எட்டிப் போய் விட்ட நீர்வீழ்ச்சி. ஓசை நரம்புகள் பிரிந்து, நரம்புகள் தனித்தனி விதிர் உதிர்ந்து, இசை காட்டி, கரககீதம்; பரஸ்பர ஆகர்ஷணத்தில், கிரகங்கள் ஒன்றையொன்று வலிக்கும் பிகித்தனில் ஹம்ம்ம்ம்ம்ம்ம். இதுவே நீர்வீழ்ச்சி. இதுவே நரம்பிசை. இதுவே அந்தர் கானம். இதய மீட்டல், சோகஸுகா ராக்விளம்பித் இசைப் பாகுகள்

நெஞ்சில் கொக்கி மாட்டி இழுக்கின்றன. நெஞ்சு கேவு கிறேன்.

இசைப்பாகுகள், இசைப்பாடுகள், இசைக்காடுகள். இசையேடுகள், பட பட ஸரி ஸம மத ரிந்து பம கம.

சித்தம் ஒரு பித்தம்.

சித்தரங்கத்தில் படுதா அசைகிறது. எழுகிறது. மெல்ல அதுவே ஒரு சொகுசு, ஆனால், மேடையினின்றும் இருள்தான். இருளின் பின்னணியில் இழையும் ராக்விளம் பித் ஸர்ப்பம். அதன் வழுவழுப்பில் அதன் அந்யோன்யத் தில், அதன் ரகஸியத்தில், அது என்னிடம் தேடும் உறவில், அதை அறிகிறேன்.

நாத ஸர்ப்பம் இருளினின்று இழிந்து என்மேல் வழிந்து, தவழ்ந்து, குழைந்து, விளையாடுகிறது. கன்னங் களில் மாறி மாறி முத்தமிடுகிறது. பிளந்த நாக்கு முகத்தை நக்குகிறது. என்னிடம் எதையோ தேடுகிறது. அந்த ஏக்கம் என்னால் பொறுக்க முடியவில்லை. விக்கி விக்கி அழுகிறேன். என் கண்ணீரில் மனதின் சருகுகள் நனை கின்றன.

பக்கத்துத் தலையணையிலிருந்து மோதும் மணம் ராக்மல்லி.

நாகாநந்தம், நாகாநந்தி, நாகஸ்வராளி, நாகவராளி, நாக கந்தாரி, நாக விளம்பித்.

ஸ்மரணை பயத்துடன், பரவசத்துடன், இன்பத் துடன், முரடுகிறது.

மூர்ச்சையின் சிறகுகள் கம்பீரமாய் விரிந்து ஸ்மரணை மேல் கவிகின்றன.

மனம் ஒரு கல்லறை. அதனுள் ஸ்மரணை—ஸ்மரணை என்று என்ன தனி? நான்தான்.

மூர்ச்சையிலிருக்கிறது.

மூர்ச்சத்திலிருக்கிறது.

நித்திரையிலிருக்கிறது.

சிறையிலிருக்கிறது,

நிஷ்டையிலிருக்கிறது.

சின்ன வயதில் அப்பா சொன்ன கதை இப்போ நினைவுக்கு வருகிறது.

மானொன்று உண்டாம். யார் கண்ணிலும் படாதாம். அதன் அழகு அத்தனை கற்பாம். அப்படியும் தப்பித் தவறி, வழி தப்பி, எவனேனும் அடவியில் அதனிடம் வந்து விட்டால், அவனைச் சுற்றிச் சுற்றி வந்து ஆசை காட்டுமாம். உறவாடுமாம். முகத்தை மேல் உராய்ந்து முனகி கையை நக்குமாம். என்ன சுகம்! என்ன சுகம்!! நக்க நக்க, ரத்தம் பீறிட, அந்த வலியையும் மீறிய சுகத்தில் எலும்பின் வெள்ளை தெரிவது தெரிந்தும் தாபம் அடங்காமல், நக்கலுக்கு உடம்பைத் திருப்பித் திருப்பிக் காட்டி, படிப் படியாக மான் உடல் பூரா நக்கி, ஆள் மாமிசப் பிண்டமாகி, கீழே விழுந்து நக்கல் சுகம் இன்னும் தணியாமல், பிண்டம் புரண்டு புரண்டு நக்கலுக்குத் தன்னை இன்னும் காட்டிக்கொண்டு.........

ராக் விளம்பித்தின் ராக நக்கலில் ஸ்மரணை நெளிகிறது. துவள்கிறது. துடிக்கிறது. ஸ்மரணையின் இந்த அதிர்வுகள் தாம் ஸ்வரங்கள்.

அவஸ்தை ஸ்வரம் ஸ்வரமாக அடங்குகிறது. அடுத்து அமைதியின் வியாபகம் அற்புதமான அமைதி.

நாதாந்த மோனத்தினின்று ஒரு புஷ்பம் என் மேல் உதிர்கிறது. அத்தனை மெத்தான அமைதி.

ஸ்மரணைக்கு நாதாஞ்சலி.

நாதத்துக்கு ஸ்மரணாஞ்சலி.

உயிரின் பின்னணி ஓசை 'ராக்விளம்பித்.'

உனக்கு நான் எனக்கு நீ.

நெஞ்சில், கண்ணீரில் நனைந்த சருகுகள் சலசலக்கின்றன. அவைகள் மேல் யாரோ நடக்கிறார்கள்.

அபிராமி (!)?(!)(?)(!)(!)(!)

முன்பின் காரணம் தெரியாது. மோனத்தின் உச்சரிப்பில் உதிர்ந்த நாமம். உடனே அதன் உருவை, அதன் சூழ்நிலையுடன் எடுக்கின்றது. சித்தரங்கத்தில் அபிராமியின் பிம்பம் புலுபுலு புலர்கின்றாள்.

சொந்தமாயும், கடன் வாங்கியும், பூட்டிய நகைகளுடன், முழங்காலுக்கும் கீழிறங்கிய திண்டுமாலை அசைய ஸர்வாபரண பூஷிதையாய் கர்பக்ரஹத்தினின்று மூலவிக்ரஹம் உயிர்த்துப் புறப்பட்டாற் போன்று, கல்யாண கோலத்தில் காக்ஷியளிக்கிறாள். ராக் விளம்பித்திலிருந்து அவதாரம் எடுத்திருக்கிறாள். அவதாரச் சூட்டில் வேர்வை அவள் நெற்றியில் முத்திட்டிருக்கிறது. மார்பு லேசாக மிதப்பாடுகிறது.

ஆனால் ராக் விளம்பித் இன்னும் வாய் பிளந்தேயிருக்கிறது.

ராகங்கள் எப்படி பிறக்கின்றன?

உயிர்மேல் விரிந்த சிறகிருளில், ஸ்மரணை தன்னைத் தேடி அலைகையில் அந்தத் தேடல் அலைகளின் உச்சங்கள் வெவ்வேறாய், தனித்தனியாய்த் தவிக்கையில் அவைகளின் மறுபெயர் ஸ்வரங்கள், ஒன்றுக்கொன்று துணை தேடி, ஒன்றையொன்று பற்றிப் பிறக்கின்றன. அத்தனையும் பிந்து மாலைகள்.

ராக் பூபாளி
மோஹனம்
ராக்கலாவதி
மலயமாருதம்
ராக் அபிராமி

வெள்ளித் தாம்பாளத்தில் திருமாங்கல்யமும், கூறைப் புடவையும் ஆசிக்காக சபையோரைச் சுற்றி வருகின்றன. கலியாணக் கூடத்தில் ஓரமாக ஜமக்காளம் விரித்து, அதில் 'பெஸல்' நாயனமும், தவிலும் வெளுத்து வாங்குகின்றன. வாசல் திண்ணையில் பாண்டு. அதைச் சுற்றித்தான் கூட்டம். கிராமத்தில் பின் என்ன ஸங்கீதமா கேட்கப் போகிறார்கள்? இந்தமாதிரி சமயங்களில் சங்கீதம் ஏது? அதுதான் முதல் பலி. யார் 'கோஷ்டம்' கூட? போட்டியும் குஷியும் அதில்தான். நாயுடுவை குற்றம் சொல்லாதீர்கள். பக்கத்தூரிலே இந்த ஸெட்டைத்தான் வெச்சாங்க. நானும் வெச்சேன். அவருக்கு சங்கீதத்தைப் பற்றியோ, வேறு எந்த விஷயத்தில் ஆகட்டும், அவருக்குத் தெரிந்தது அவ்வளவுதான் வாழ்க்கையில் முன் ஏறுவதற்கு அவ்வளவு தெரிந்தால் போதும்.

இந்தக் கலியாணத்தில் செல்வத்தோடு செல்வம் மணம் புரிந்து கொள்கிறது.

இங்கு ஒரே பெண் அங்கும் ஒரே பிள்ளை.

நாயுடு அரிசி மொத்த வியாபாரம்.

சம்பந்தி தோல் வியாபாரம்.

லஷ்மி விலாசம் பொருளையும், இடத்தையும் தேர்ந்தா எடுக்கிறது? அதற்கு எதுவுமே அவசியமில்லை. அதற்கு கிறுக்குப் பிடித்தால் உங்கள் கொல்லைப்புறத்தில் மண்கட்டி திடீரெனத் தங்கக்கட்டி.

எங்கள் வீட்டுக்கு எதிர் வீடு நாயுடு. அப்பா போஸ்ட் மாஸ்டர். அவள் தகப்பனுக்கு வந்திருக்கும் தபாலை வாங்க எப்போதேனும் வருவாள். வேலைக்காரன் வேறு ஜோலியாகப் போயிருந்தால். நாயுடுவே எப்போதேனும் வருவார். தபாலை வாங்குவதோடு சரி. படித்துக் காட்டச் சம்பளத்துக்குக் கணக்குப்பிள்ளே இருக்கிறார். காசோலை

யில் கையெழுத்துப் போடமட்டும் நாயுடு எப்படியோ கற்றுக்கொண்டு விட்டார்.

அபிராமி, நாயுடு இவர்களின் இப்படியான அபூர்வ மான வருகையில் எங்கள் வீடு பெருமை கொண்டது.

வேர்த்துக் கொட்டுகிறது. அப்பா என்ன நெரிசல், என்ன நெரிசல்! மூச்சே திணறுகிறது. வெளியே இருப் பவர் உள்ளேவர முடியவில்லை. நான் உள்ளே மாட்டிக் கொண்டு விட்டேன்.

நாயுடு தலையில் முண்டாசு. காத்தவராயன் மீசை யுடன், ஆறடி உயரத்தில், தொந்தியும் தொப்பையுமாக, ஆட்களை இரைச்சலாக கார்வார் பண்ணிக்கொண்டு, கூட்டத்தில் புகுந்து வளைய வந்து கொண்டிருக்கிறார். சம்பந்தியும் அவ்விதமே. அவரும் ஆகிருதியில் நாயுடுவுக் குச் சளைத்தவரல்ல. இவர் இந்தப் பக்கம், அவர் அந்தப் பக்கமாக வந்து, இருவரும் கோயில் திருவிழாவில் பூதப் பொம்மைகள் போல, தொந்திகள் முட்டிக் கொண்டனர்.

மணப்பந்தலில் மாப்பிள்ளை இப்பவே தோசைமாவாக உடல் பொங்கி வழிகிறான். அப்பா வயசுக்கு எப்படி ஆவானோ?

விருட்டென மணமகனின் பக்கலினின்று அபிராமி எழுந்து, புன்முறுவல் மாறாமல் புழைக்கடைப் பக்கம் போகிறாள். தோழிப்பெண் ஜாடை அறிந்து பின் தொடர் கிறாள். ஆனால் அதற்குள் அபிராமி நாலடி முன் போயாச்சு. யாவரும் அவளுக்கு வழிவிடுகிறோம். என்ன நெரிசல்! என்ன புழுக்கம்!! மணப்பெண்ணுக்கே மூல வருக்கு எண்ணெய்க் காப்பு இட்டாற்போல் முகம் கசகசக் கிறது. அந்தப் பளபளப்பிலும் ஒரு பாந்தம் இருக்கிறது.

கூட்டத்தில் என்னைக் கண்டதும். அவள் நடை, இமைநேரம் தடைப்பட்டதோ? எங்கள் கண்கள் சந்திக் கின்றன. உடனே கடந்துபோய் விட்டாள்.

அப்பா, என்ன கூட்டம்! என்ன கூட்டம்!! நாயுடு கல்யாணத்துக்கு அழைக்கவில்லை. உத்தரவு போட்டு விட்டார். யார் வீட்டிலும் அடுப்பு மூட்டக்கூடாது. முதல் நாள் இரவு; இன்று பூரா. சமையல் பெருமாள் கோயில் மடப்பள்ளியில் நடக்குது. பந்தியும் கோவில்லேதான். தவசிப் பிள்ளைங்க நாற்பது பேரு பட்டணத்திலிருந்து ஜமாவா வந்து இறங்கி இருக்காங்க.

"இதென்ன முகூர்த்த வேளை நெருங்கிக்கொண்டிருக்கிற சமயத்தில் மணப்பெண்ணுக்கு ஏதோ அவசரம் வந்துட்டதே!"

வாய்விட்ட சொல்ல முடியாமல், புரோகிதர் கையைப் பிசைவதற்குப் பதிலாக அவ்வப்போது மேல்துண்டால் முகத்தைத் துடைத்துக்கொள்—

"ஐயோ! ஐயோ!! ஐயையோ!!!

கொல்லைப்புறத்திலிருந்து அலறல் வருகிறது. பயத்தில் எதிர் அலறல்; அலறிக்கொண்டு எல்லோரும் புழைக் கடைக்கு ஓடுகிறோம்.

தோழிப்பெண் வாயில் அடித்துக்கொண்டு அதோ கிணற்றைச் சுட்டிக்காட்டுகிறாள். அவளுக்கு விழிகள் பிதுங்கிவிட்டன.

"ஐயோ! ஐயோ!!"

நாக்கு வேறு சத்தத்துக்கு எழவில்லை. வாயில் அடித்துக் கொள்வதோடு சரி. கிணற்றைச் சுட்டிச் சுட்டி, காட்டுவதோடு சரி. கைவேறு செயல்படவில்லை.

முகூர்த்தம். அபிராமி அப்படித்தான் வேளை பார்த்திருக்கிறாள்.

ராக் விளம்பித்துள் மறைய!

அதை அவள் ஸ்மரணை பூர்வமாக அறியாள்.

ஆனால் எப்பவும் நடப்பதென்னவோ அதுதான்.

ஒவ்வொரு பிறவியும் ஒரு ஸ்வரம் அல்லது விளம்பித் தினின்று ஜன்யராகம்.

விளம்பித் அனாதி.

பின் நேர்ந்தவைக்குத் தக்க பாஷை என்னிடம் இல்லை.

எப்படிச் சொன்னாலும் அது பாஷையை அசிங்கப் படுத்துவதாகும். அப்படியும், விகாரங்களையும் சொல்லித் தானே ஆகவேண்டி இருக்கிறது. பெற்றோர் உற்றோர் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்வது ஒரு பக்கம் இருக்கட்டும். ஊரே கொல் ஆனது ஒரு பக்கம் இருக்கட்டும்.

மணவறையே பிணவறையாய்—சம்பிரதாயப்பாட்டு ஒப்பாரி மேற்கோள்கள் ஒரு பக்கம் இருக்கட்டும்.

சாயந்தரமே எடுத்துடறதா? இல்லே, மறுநாள் காலையா? மேல் காரியத்தை ஓட்ட வேண்டுமே! அந்தக் கேள்வி ஒரு பக்கமிருக்கட்டும். நாயுடுவுக்கு வேண்டாதவர் களும் இருக்கிறார்கள் என்பது இப்போதுப்புறத் தெரிந் தது. சுட்டித்தான் காட்ட முடியாது. லக்ஷ்மி ஓரிடத்தில் வளருகையிலேயே, கூடவே ஒரு பொறாமைக் கும்பலையும் வளர்க்கிறாள். இனம் தெரியாது. கும்பலோடு கும்பல்.

வத்தி வைத்தது யார் தெரியவில்லை. மத்யானமே, போலீஸ்-மூன்றாவது மைலில் எங்களுக்குப் போலீஸ் ஸ்டேஷன்-வந்துவிட்டது ஆம்புலன்சுடன். வியாபார ரீதி யில்-மாமூல், நாயுடுவிடமிருந்து சேரவேண்டிய இடங்களில் சரியாகச் சேரவில்லையோ? சப்-இன்பெக்டர் புதுசோ?

நாயுடுவின் செல்வாக்கு, விஷயத்தை அப்படியே குரல் வளையைப் பிடித்து அமுக்க முடியவில்லை. தனியாக அழைத்துப் போய்ப் பேசாமல் இருந்திருப்பாரா?

"நீங்க விஷயங்களைக் குழப்பறீங்க. அது வேறே. இது வேறே. கொலையா, கொக்கா? எங்கள் ஒழுங்கு முறையை முழுக்க முழுங்க முடியாதுங்க. இதுவே ஒரு FORMALITY தானுங்களே! நாளைக் காலையிலேயே டெலிவரி எடுத்துடலாம். அதுக்கு வேண்டிய ஒத்தாசைக்கு என்னை நம்புங்க. நானும் புள்ளைக்குட்டிக்காரன் தானுங்க. உங்களுக்கு எப்படி இருக்கும்? எங்களுக்குத் தெரியாதுங்களா?"

சப்-இன்ஸ்பெக்டர் பயங்கொள்ளிதான் போலும்!

இல்லை, அவருக்கு விசை அப்படி முடுக்கி இருக்கிறது போலும்.

* * *

ஆனால் போஸ்ட மார்ட்டம் வெளிப்படுத்தியதற்கு யாருமே தயாராக இருந்திருக்க மாட்டார்கள். ஆம். நாயுடுவின் எதிரிகளையும் சேர்த்துத்தான். ஏதோ ஒரு விதத்தில் அது நியாயமாகக்கூட இல்லை. ஆனால் நியாயமோ இல்லையோ, இருந்ததை மறுக்கமுடியாதே!

நாயுடு குடும்பத்தின் மானக்குலைவு முழுமை அடைந்தது.

மானம் மட்டுமா குலைவு?

ஒன்று தட்டினால் அடுத்தடுத்து ஒன்றையொன்று தொட்டுத் தட்டிக்கொண்டு ஒன்பது விழுமே! அது ஒரு விளையாட்டு. NINE PINS!

லக்ஷ்மி அவள் ஒரு நம்ப முடியாத குதிரை.

ஒருவாரம் பொறுத்து நாயுடுவுக்கு ஒரு தபால். அப்பாவே எடுத்துச் சென்றார். நாயுடு ரேழித் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். நாயுடுதானா? ஒரு வாரத்துக்குள் இப்படியா? வயிறின் 'விண்' கரைந்து தொந்தி தோலாய்த் தொங்கிற்று. முகத்தில் அந்த முழியும் கார்த்தவராயன் மீசையும்தான் அடையாளமாய்த் தெரிந்தன. அவரிடமி

ருந்து ஜ்வாலை உஸ் உஸ்ஸென்று மூச்சாக எரிப்புடன் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

'நாயுடுவாள், உங்களுக்குப் பிள்ளை வீட்டாரிடமிருந்து ரிஜிஸ்த்தர் வந்திருக்கிறது.'

அப்பாவுக்குப் பயத்தில் குரல் கம்மிற்று.

''பிரியுங்க.''

''அதெப்படி-நான்-'' அப்பா தயங்கினார்.

''பரவாயில்லே. பிரியுங்க. கணக்கப்புள்ளே படிச்சுக் காட்டறத்துக்கு நீங்க மேலில்லையா? இனிமேமேல் என்ன, கீழ் என்ன? சாணித் தண்ணீயிலே தெளிவு என்ன? வண்டல் என்ன?''

கடிதத்தில் சுற்றி வளைத்தது போக சாராம்சம்:—

நீங்க உங்க மகளின் நெலமையே மறைச்சு வெச்சு எங்க தலையில கட்டப்பார்த்த மோசடி முயற்சியில் எங்க குடும்பத்துக்கு வந்திருக்கும் மான நஷ்டத்துக்கு ஒண்ணரை லச்சம்—

பிள்ளையின் தகப்பனார் தன் கைப்பட அவருக்கு கை வந்த பாஷையில் எழுதியிருக்காராம்.

பின்னால் வக்கீல் நோட்டீஸ் வருமோ என்னவோ?

கேஸ் இருக்குதா இல்லியா, திரிச்சவரைக்கும் கயிறு—முன்னால் பைலட் விட்டுப் பார்க்கிறார். ஏதாச்சும் தகைஞ்சால் பிஸினெஸில் போட்டுக்குவாரா? வீடு கட்டி வாடிக்கைக்கு விடுவாரா?

ஆனால் யார்?

கையில் அரிவாளுடன் நாயுடு தெரு தெருவாய்த் தேடி அலைகிறார். ஊரில் அபிராமிக்கு ஒத்த வயது காளைகள் அத்தனைபேர் தலைகளையும் சீவுவதற்குத் தயாராக இருக்கிறார். முதலில் தண்டனை. பின்னால் விசாரணை—தேவையானால் பார்த்துக்கலாம்.

ஆனால் இது புலன் அவ்வளவு சுலபமா? கடைசி வரை கிடைக்கவில்லை-கிடைக்கவே இல்லை.

ஒரு சமயம் பிற்பகல் மூன்று மணி இருக்கும். ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் ரோட்டில் ஒருவருக்கொருவர் எதிர்ப்பட்டோம். நாயுடுவின் காங்கை அடிக்கும் கண்களின் வசியத்தில் எனக்கு நடை தடைப்பட்டு கால்கள் நின்று விட்டன.

மௌனமாக, எதிருக்கெதிர், நாங்கள் நின்ற நிலை எப்படி நேர்ந்தது? எந்நேரம் நீடித்தது? தெரியவில்லை. எனக்குக் குலை நடுங்கிற்று. ஒரு ஈ காக்கை இல்லை. வெயில் முதுகைப் பட்டை உரித்தது. அவர் கையில் கத்தியில்லை. ஆனால் அவர் கையினாலேயே தீக்குச்சியாக ஒடித்து அங்கே பாலத்தடியில் தூக்கி எறிய அவருக்கு நான் எம்மாத்திரம்?

என்னைப் படிப்படியாகத் தன் ஆலிங்கனத்தில் இறுக்கிக் கொண்டிருக்கும் அந்தப் பார்வையின் வசியத்தினின்று, உயிர் முயற்சியில் ஒருவாறு என்னை உதறிக் கொண்டு, காலை அதில் கட்டிய கல்லோடு இழுத்துக் கொண்டு அவரைக் கடந்தேன். நான் பத்திரமாகிவிட்ட தூரத்துக்கு வந்து விட்டேன் என்று எனக்கு நிச்சயமான தானதும் திரும்பிப் பார்த்தேன்.

நின்றவிடத்திலேயே நின்றபடி, நெற்றிப் பொட்டைத் தேய்த்துக் கொண்டிருந்தார்.

ஆனால் அவளுடைய அந்தப் பார்வை—

ஆ! ஆனால் எனும் சொல் சமீபத்தில் இங்கு நிறைய நடமாடுகிறது.

ஒருவேளை அதுதான் 'ராக்அபிராமி'யின் ஜீவஸ் வரமோ?

அந்தப் பார்வை—

அதுவே ஒரு கருவூலம்

அது, என்னிடம் என்ன சொல்ல முயன்றது? அது இன்னும் என்னுடைய ப்ரத்யேக அதிசயம். எத்தனை வருடங்களாகி விட்டன. எத்தனை ஆனால் என்ன?

பல காரணங்களால், வீட்டுக்குத் திரும்ப விருப்பம் இல்லாமல், சில கோடை இரவுகளில், கடற்கரையில் தனியாக உட்கார்ந்திருக்கையில், வானத்தில் நட்சத்திரங்கள் கூடைகூடையாகக் கொட்டி வாரியிறைக்கின்றன. எனக்கு ஒரு சித்தாந்தம். உலகத்தின் அத்தனை உயிர்களுக்கும் கூடுகளாம். நக்ஷத்திரங்கள் இங்கு பிறவி நீத்தவுடன் ஒவ்வொரு ஆவியும் வானில் அதனதன் நக்ஷத்திரக் கூட்டை அடைகிறது. அங்கு தான் அதற்கு ஓய்வு. மறுபலத்தின் ஊறல். மறுபடியும் அதன் வேளையில், புட்கள் இரை தேடக் கிளம்புவது போல் பிறவியெடுக்கப் புறப்படுகிறது.

இங்கு இந்த நக்ஷத்திரக் கொள்ளையில் அபிராமி எங்கே?

ஜன்மாவின் இன்பத் திகைப்பு இதுதான்.

அவரவர்க்கு அவரவர் அபிராமி, வெவ்வேறு பெயர்களில். அதைப்போல் ஒவ்வொரு அபிராமிக்கும் அவளுடைய அபிராமன்.

ஒருவருக்கு மற்றவர் நக்ஷத்திரவாசம். "—எட்டாப் பழமடியோ தெவிட்டாத தேனடியோ"—

விளம்பித் வீறிடுகிறது.

'—கட்டுக் குழி படர்ந்த கருமுகில் காட்டுக்குள்ளே' மறுபடியும் கிட்டப்பா.

இந்த நக்ஷத்திரக்காடும் அப்படித்தான்.

அபிராமியை இங்கே எங்கென்று தேடுவேன்?

யார்?

முடிவற்ற கேள்வி; தொடர்பற்ற பதில்.

பக்கத்துத் தலையணையில் மல்லி மணம் பின் வாங்கி விட்டது.

நீர் வீழ்ச்சி தூர தூர தூர ஓய்ந்து போய்விட்டது.

எழுந்து ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்க்கிறேன்.

நக்ஷத்திரங்களைக் கூடை கூடையாய் கொட்டி வாரி இறைத்துக் கிடக்கிறது.

எனக்கு இடம் தெரியாது. தெரியவும் போவதில்லை என்று தெரிகிறது.

தேடுகிறேன். □

# ராக் த்ரோக்: நம்பி

அபிராமி. அன்றொருநாள், கிணற்றில் குடி ஜலம் மொள்ள வந்தாயே, நினைவிருக்கிறதா? எத்தனையோ முறை வந்திருக்கிறாய்? ஆனால் நான் குறிப்பிடுவது அந்த ஒரு நாளைத்தான்.

உன் திருமணத்தன்று, உன் கடைசிப் பிரயாணத்தில் உன் வீட்டுக் கிணற்றடிக்கு நீ போகும் வழியில் என்னைப் பார்த்த பார்வைக்கு இன்னமும் அர்த்தம் படித்துக் கொண்டிருக்கிறேன். உன் மணப்பந்தலின் தோரணங்கள் என்மேல் உராய்ந்து கொண்டிருக்கும் பிரமை இன்னும் தட்டுகிறது.

நாம் புகுந்து புறப்பட்டுக் கொண்டிருந்த வயது ரெண்டுங்கெட்டான் வயது. அதில் ஆண்களின் அவஸ்தை ஒருபாடு. பெண்கள் உங்களின் மன ஆழம் உங்களைப் படைத்த ஆண்டவனும் அறிய இயலாதது. நான் எம்மாத்திரம்?

என்றுமே நீ எனக்குத் தூரதர்சனி. இப்பத்தான் நீ உன் நக்ஷத்ரக் கூட்டுக்குள் புகுந்து விட்டாயே!

நானும் கொல்லைப்புறம் வந்து கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தேன். நீ தவலையை நிரப்பிவிட்டு, கிணற்றுச் சுவர் மேல் இருந்த தவலையை இடுப்பில் ஏற்றிக்கொள்ளத் தயார் பண்ணிக் கொண்டிருந்தாய்.

நீ கிணற்றுக்குள் எட்டிப்பார்த்து "என்னா பார்க்கறே?"

என்ன பார்த்துக் கொண்டிருந்தேன், உனக்குத் தெரியும். என்வயதில் நீ பெண். உன் உடல்வாகில் உணர்வு வாகில் என்னைவிடத் தெரிந்தவள் அல்லவா?

ஆனால் நான் பார்த்ததை நீ கேட்டும் சொல்ல எனக்கு நா எழவில்லையே! நாக்கு வாய்க் கூரையை முட்டி, நான் தவித்த தவிப்பு கண்டு, நீ வாய் விட்டு சிரித்து விட்டாய். தவிப்பு என்னுடையது. அதைத் தூண்டிய குரூர இன்பம் உன்னுடையது.

சட்டென்று தலையை சாய்த்து, கிணற்றுள் ஜலத்தைச் சிந்தி, அதில் தெரிந்த நிழல்களைகணத்தில் அழித்து விட்டு மறுபடியும் கக்கடகடவென உன்சிரிப்பு. தவலையை இடுப்பில் ஏற்றிக்கொண்டு, வேணு மென்றே முதுகை என் பக்கம் திருப்பிக் கொண்டு, சொகுசாய் இடுப்பை ஒடித்து ஒடித்து நடந்து போனாய்.

அந்த நேரத்தை உன் திருமண தினத்தன்று, உன் கடைசி பிரயாணத்தில் உன் வீட்டுக்கிணற்றடிக்கு நீ போகும் வழியில் என்மேல் வீசிய பார்வையில், நினைவு மூட்ட முயன்றாயோ? நான் நினைத்துக் கொள்வதுதான். ஆனால் நான் நினைத்துக் கொள்வதன் அகில் மணம் நக்ஷத்ரங்கள் வரை எட்டுகிறது.

நீ அப்படி என்பக்கம் முதுகைக் காட்டி, வேண்டு மென்றே இடுப்பை ஒடித்து ஒடித்து நடந்து செல்கையில், உன் பின்னலில் சூடியிருந்த பூச்சரத்தினின்று ஒரு தாழம் பூ மடல் கிழிசல் பூமியில் உதிர்ந்தது. அதை எத்தனை நாள் எனக்குப் பிரியமான புத்தகத்தில்-ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்ஸரின் உபதேச மொழிகள்-பொத்தி வைத்திருந் தேன்-தெரியுமா?

அந்தச் சின்னத்திற்கு அந்த இடம் தகுதி தான் என்று அச்சமின்றிச் சொல்வேன். முதல் மோகம், முதல் தாகம், முதல் தூய்மை, முதல் அர்ப்பணம், அம்பாளுக்கே உரித் தானது. உன் கூந்தலினின்று உதிர்ந்த பூ பொய் சொல்லாத பூ. ஆனால் நீ ஏன் பொய்த்துப் போனாய்? இருந்து

வாழ்பவர் ஒன்றும் சாதித்து விடவில்லை. ஏதும் அறியா அபிராமி, நீ கடைசியாக எடுத்த துணிவு கூட உனக்கு ஒரு கேலியாகத்தான் இருந்திருக்கும் என்றுத் தோன்றுகிறது. அந்த வயதில்வாழ்க்கையைக் கேலி காட்டிய நீ ஞானியா, பேதையா? உன் உயிரைப் போக்கிக் கொள்ள உன் உரிமையை நிலை நாட்டிய ஸ்வதந்தரியா?

அபிராமி, வானத்தில், இந்த நக்ஷத்ரக் கொள்ளையில் எங்கு இருக்கிறாய்? உன் கூடு எங்கே?

★ ★ ★

நினைவின் சருகுகள் சலசலக்கின்றன. அவை மேல் யாரோ நடந்து செல்கின்றார்கள். யாரேனும் நடந்து சென்று கொண்டே தானிருப்பார்கள். பாதை ஒருவருக்கு மட்டும் சொந்தமல்லவே!

காதல்-ஊஹூம். இந்தப் பெயர் எனக்குச் சரியாகப் படவில்லை. மீறிப்போன உதவுபடியில் அவலமாகி விட்டது. அது சுமக்கும் பொருள் கனம், வீச்சுக்கு ஓசையின் கார்வை எப்படி இருக்கவேண்டும்! காதல்!-சத்தத்தில் உப்பு சப்பு இல்லை. ஆனால் சொல்ல வந்தது இது அல்ல. வயது முற்ற முற்ற அனுபவம் கண்ட உண்மை. காதல் என்பது ஒருவரே பிடித்துக்கொண்ட கோட்டை அல்ல. நிரந்தரமாக ஒருவர் மேல் மட்டும் அது பதிந்திருக்க முடியாது. அது இயற்கையுமல்ல. மனிதனின் உண்மையுமல்ல. அப்போது அதன் பெயர் அதுவுமல்ல.

ஒரு கவிதா நேரம் தருணோதயத்தின் அனுக்ரஹம். லோகோஸ்ருதியினின்று தெறித்த ஒரு சொட்டு. பட்ட இடம் கன்றிப்போ. இந்த நேரங்கள், தெறிப்புகள் அவ்வப்போது நேர்ந்து கொண்டேயிருக்கும். பட்டவர் சுட்டவர் பாக்யவான்கள்.

த்யானம் என்பது என்ன? எண்ணங்களைப் போடும் அசையில், அவை ஒரே எண்ணத்தின் விழுதாகத் திரள் துவதானே! பிரிகளைத் திரித்து ஒன்றாக்கிய திருவடம்.

அவகாசத்தில் இந்தக் கவிதா நேரங்கள், தாமாக நினைவுக்கு வந்தோ, வரவழைத்தோ, புழுங்கிப் புழுங்கி, காதலே தியானமாகி விடுகிறது.

ஆகவே அபிராமி, வயது முற்ற முற்ற அனுபவம் கண்ட உண்மை, என் காதல் உன் மேல் மட்டும் சிறை கொள்ளவில்லை. யாழ் மீட்டுகிறது. உதிரும் நாதங்களில் நீ ஒன்று, நான் ஒன்று. ஒன்றொன்றாய் ஒன்றுகள், ஒன்றின் ஒன்றுமணிகள். ஜன்மாவின் ஜபமாலை. கோர்க் காமல் சிதறுண்ட மணிகள் ஒன்றொன்றாய் பொறுக்கு கிறேன். சிறியதும், பெரியதுமாக சிந்திக்கிறேன். ஒவ் வொன்றாய் உச்சரிக்கிறேன். ஒவ்வொன்றாய் நழுவி நினை வில் மூழ்கி விடுகிறது. அது அது அதனதன் படுகையில் ஜ்வலிக்கின்றது. அவை மேல் வரா. அவைகளின் ஆழம் அப்படி.

சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறேனோ? சொல்பவனுக்கும் கேட்பவனுக்கும் அலுக்காத வரை. இதுவேதான் என் கீதம். உள்ளமும் உடலும் ஒன்று நெகிழ்ந்த கற்கண்டு நேரங்களை விரும்பாதவன் இல்லை. ஒருதரமேனும் ருசி காணாதவன் இல்லை.

காதலுக்கு வியாக்யானம் பண்ற வயசைப்பாரு! காடு வா வாங்கறது.

காதல் உயிர்ச்சாம்பல் பூ.

★

வீட்டுக் கிணற்றைச் சமீபத்தில், தூர் வாரும்படி ஆகி விட்டது. சென்றுபோன மாதங்களில், கிணற்றுச் சுவரி லிருந்து உள்ளே விழுந்து விட்ட சோப்புக் கட்டிகள்,

ஒன்றிரண்டு துவாலைகள், வேப்பங்கிளையினின்று உதிர்ந்து உள்ளே அழுகிக் கொண்டிருக்கும் இலைகள், ராட்டின தூலத்தின் மேலிருந்து பறவையினங்கள் அவ்வப் போது சிந்திய பிரசாதங்கள்......

மறுநாள் காலை, பூஜையறையில்-இருக்கிற உழக்கு அது பெட்டி அறை, படங்கள் சுவர்களில் தொங்குகின்றன. ஓரத்தில் சிறு மேடைமேல் குத்துவிளக்கு, புவனேஸ்வரி படம், பூஜாதிரவியங்கள்-நான் மூக்கைப் பிடித்துக்கொண்டு கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் என்னென்னவோ பண்ணிப் பார்க்கிறேன். இமைத்திரையில் ஓடுவது நான் நினைக்க முயல்வது அல்ல, வேறு ஏதேதோ-சாரு பரக்கப் பரக்க ஓடி வந்தாள். அவள் கண்களில் தனி ஒளி; திடீரென சாரு அழகாகி விட்டாள்.

''தோ பாருங்களேன்! இதோ பாருங்கோளேன்!! அவள் கைகள் நடுங்கின குவிந்த உள்ளங்கைகளில்- ''கிணற்றிலிருந்து வாரிக்கொட்டிய கும்மி சேற்றை கிளறிண்டிருந்தபோது கிடைச்சது!''

இன்று சோமவாரமுமதுவுமாய்-

நின்று கொண்டிருக்கிறார். காலடியில் வாஹனம். லக்ஷணமான முகம், அந்தக் கண்களில் தான் எப்படி உயிர் சிந்துகிறது! கிரீடத்தின் நுனியில் ஒரு இம்மி மூளி. ரொம்ப ரொம்ப இம்மி. தேடிப் பார்த்தால்தான் தெரியும்.

சாரு குழந்தையாகி விட்டாள். முன் வாசற்படியை ஒட்டிச் சின்னகோயில் கட்டுவதில் முனைந்துவிட்டாள். எங்கிருந்துதான் சிமிட்டியும் செங்கலும் இறங்கினவோ? என்னிடமிருந்து ஒரு பைசா பெயர வழியில்லை. தன் கையாலேயே.........

அவளே கண்பட்டால் கை செய்யும் சுபாவத்தினள். ஆனால் முனைந்த காரியத்தை முடிக்கும் கையினள்

என்று சொல்லமாட்டேன். ஆரம்ப உற்சாகம் ஒடுங்குமுன் எடுத்த காரியம் முடிந்தால் அதிர்ஷ்டம்.

பரவாயில்லை. ப்ளானாய்த்தான் கட்டுகிறாள். இரண்டு குட்டி வாசற்படி தாண்டி, குட்டிக் கர்ப்பக்ரஹம் சிறுவன விழாவை நோக்கி வசூல் வேறு தனியாக நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு அவள் சைன்யம் இருக்கிறது. சந்தோஷமாய் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள்.

''சாரு மாமிக்கு அதிர்ஷ்டத்தைப் பாருடி! இனிமேல் அவளுக்கென்ன குறைச்சல்.''

★ ★ ★

நடு நிசி, கலைந்துவிட்ட தூக்கம் மீள மறுத்து விட்டது. கூடத்தின் சுவரொட்டிக் கடிகாரம், பெண்டுலம் தான் அதன் ஜபமாலை நொடிகளை சொடுக்கிக் கொண்டிருக்கிறது.

யாரோ என்னை அழைக்கிறார்கள். பேரைச் சொல்லி இல்லை மோனமானதோர் விளிப்பு சைகை அல்ல. உள்ளத்தில் உத்தரவின் எதிரொலிப்பு. கட்டுப்படாத வசியத்தில், அது ஈர்க்கும் வழி செல்கிறேன்.

டக் டக் டக்-நொடிகள். நொடிக்கு ஒரு நாமம். கோடி நாமம். நாமகோடி நொடியே நாமம்.

குறுகிய கூடத்தில், தூக்கத்தில் விதவிதமாய் மலர்ந்திருக்கும் உடல்களைத் தாண்டி, பூஜை அறையுள் நுழைகிறேன்.

மேடை மீது, குத்து விளக்கில், சுடர் நீலமுத்து. தொந்தியைத் தூக்கமுடியாமல் தூக்கிக் கொண்டு நிற்கிறார். ஒரு கையில் தும்பிக்கையின் கனத்தை மோதகத்துடன் தாங்கிக் கொண்டிருக்கிறார். கண்கள் பளபளக்கின்றன. அவைகளில் எப்படி உயிர் சிந்துகிறது! மார்பு மிதக்கிறதா? உடல் பரபரக்கிறது. கைகள் கூம்புகின்றன,

உத்திரவு?

கீச் கீச்- காலடியில் ஒரு மீஞ்சூறு, தன் வாடையை வீசிக்கொண்டு, விழுந்தடித்து ஓடுகிறது.

எல்லாம் ப்ரமையாகவே இருக்கலாம். இருந்துவிட்டும் போகட்டும். ஆனால் அந்தக் கண்களில் ஏதோ அர்த்தம், அந்த அர்த்தம் தரும் சேதி என்னை ஊடுருவுகிறது. அதன்படி, அவரை இரு கைகளிலும் வாரி எடுத்துக் கொண்டு,

பூஜையறையைக் கடந்து

கூடம் கடந்து

முருகன் காலண்டர் ஆணியில் தொங்கும் சாவியை எடுத்துக்கொண்டு

சமையலறையுள் நுழைந்து

கதவைத்திறந்த உடனேயே

கிணற்றடி.

கிளுக்-

வேப்பங்கிளையிலிருந்து அர்ச்சனையில், பூக்கொத்தும், இலைகளும் கிணற்றுள் உதிர்கின்றன. சந்திரன் அப்போதுதான் உதயமாகிக் கொண்டிருக்கிறான். பகுள பஞ்சமியின் பாலச்சந்திரன். என்னைக் கவ்விக் கொண்டிருந்த அதீத நிலை, படிப்படியாகத் தணிகிறது.

நாளைக்குப் பெரும் ரகளையிருக்கிறது. அவளுடன் சேர்ந்து நான் விக்ரஹத்தைத் தேட முடியாது. சாமி விவகாரம். பொய் கூடாது. அழுவாள், அமர்க்களம் பண்ணுவாள். அவர் கிணற்றுக்குத் திரும்ப விரும்பினார் என்றால், அவள் என்ன புரிந்து கொள்ளப் போகிறாள்?

காதலும் அப்படித்தான். என்னதான் விளக்க முயன்றாலும் யாரும் புரிந்து கொள்ளப் போவதில்லை.

காதல் புரிந்து கொள்வதில்லை.

★ ★ ★

பிள்ளையாரை மீட்க, சாரு பட்டபாடு! பாதாள கொலுசுக்கு விக்ரஹம் பிடிபடவில்லை. பிடிபடாது. வாளியை முங்கி முங்கிப் பார்த்தாள். அதிலே மாட்டிக் கொள்ள மாட்டாரா? பிள்ளையார் மிதந்து கொண்டா இருப்பார் இவளுக்காக? பால்க்காரப் பெருமாள் மூழ்கி எடுக்க மாட்டானா? ஆழம் இருபது அடிக்குப் பஞ்சமில்லை. கிணற்றின் மேல் குனிந்த அவள் முகம், அவ்வப்போது நிமிர்கையில் அவள் கண்கள் என்னைக் குற்றம் சாட்டின. அவைகளில் சாபம் சிந்திற்று. எரிக்க முடிந்தால் இவள்

கோவலனை எரிக்கும் கண்ணகி.

ஆழத்தின் பத்திரத்திலிருந்து சிரிப்பு கேட்கிறது, என் மட்டில்தான். சாரு பிள்ளையார் மேல் காதல் கொண்டு விட்டாள். காதல் சிரிக்கிறது. காதலின் சிரிப்பு, கண்ணீர் மணிகளின் மெல்லிய கிண்கிணி.

★ ★ ★

ராமனுக்கும் அனுமனுக்கும் இடை உறவு பற்றி இப்போது அடிக்கடி சிந்திக்கத் தோன்றுகிறது. சுந்தர காண்டம் படிப்பதன் விளைவு எனக்கு வேலை உருப்படியாகக் குதிரவேண்டும். நாலு மளிகைக் கடைகளில் கணக்கெழுதிக் கொண்டிருக்கிறேன். ஒரு விறகு மண்டியின் கல்லாவில் மாலை ஒரு மணி நேரம் உட்காருகிறேன். மத்யானம் ஹைகோர்ட் நிழல் ஒதுக்கத்தில் வேறு ஒருவர் டைப்ரைட்டரில் ஜாப் வேலை செய்கிறேன். பிழைப்பு

இப்படித்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. குழந்தைகள் மூன்று ஆகிவிட்டன. எனக்கும் உறுதியான வேலைக்கும் ராசி இல்லை. ராசிக்கு வழியில்லை. ஆகவே அனுமார்தான் எல்லாக்காரிய சித்தி.

ராமன் ஹனுமான்-எஜமான் வேலைக்காரனா? ஹனுமான் தன்னை ராமனுக்குப் பணியாளாகப் பாவித்துக் கொண்டாலும், ராமன் தன்னை எசமானாக நினைத்துக் கொண்டதில்லையே! ராமன் இல்லாமல் ராமாயணம் இல்லை, ஆனால் அனுமான் இல்லாமல் ராமகாரியமும் நடை பெற்றிருக்க முடியாது. அடிப்படை அனுமான் கடல் தாண்டி சீதையைக் கண்டிராவிட்டால் ராமாயணத்துக்கே திசைமாறிப் போயிருக்கும். பின்னரும் அனுமத் சாதனைகள் ஒவ்வொன்றும் சாமான்யமானவையா? இத்தனையும் செய்து, இனியும் எத்தனை செய்யவும் தயாராக, எதற்கும் கனவில்கூட கைம்மாறு எண்ணாது இது என்ன அனுமனின் தலையெழுத்து? எல்லாரும் அவதாரம் எனும் சமாதானத்தைத் தள்ளு. மனித இயல்பில் சீர் தூக்கிப்பார். இது காலம் பகுத்தறிவினுடையது.

ராமனுக்கும் அனுமனுக்கும் இடையில் இந்த அபிமானம் எந்த வகையைச் சேர்ந்தது?

பக்தி? அன்பு?? விசுவாசம்???
காதல்???? ஆணுக்கும் ஆணுக்குமா? கையை ஓங்காதீர்கள். எனக்கு அடைக்கலம் இருக்கிறது. காதலாகிக் கசிந்து. சம்பந்தர் பாடியாச்சு.

ஃப்ராயிடும், ஜங்கும் வந்த பிறகு, மனோதத்துவ ஆராய்ச்சியாளர்க்கு எல்லாமே SEX தான்

வளையிலிருந்து எட்டிப் பார்க்கிறேன்.

★ ★ ★

உடல் தாண்டி, அன்பு, விசுவாசம், பக்தி, அபிமானம், நட்பு, சிநேக தடங்கள் தாண்டி, வக்கிரம்தாண்டி ஆணுக்கும் ஆணுக்கும் கூட காதல் உண்டு. புரிந்தவர்க்குப் புரியட்டும்.

காதல் யாவரையும் கடந்தது.

★

நள்ளிரவில் எழுந்து கிணற்றடிக்குச் சென்றேன். பிள்ளையார் அழைக்கவில்லை. நானே தான்.

எட்டிப் பார்க்கிறேன். உள்ளே கும்மிருட்டு, எங்கும் நிசப்தம். அமைதி. என் மனதில் தவிர. ஆழம் இருபது அடி. குழந்தைகள் மூன்று. பெண்டாட்டி, ஊ-ஹூம். எவனும் எனக்கு இரக்கம் காண்பிக்க மாட்டான். கையாலாகாத கப்பி என்று தூற்றுவான். ரோசம் சாவையும் தாண்டி எட்டுமோ? இதென்ன உள்ளிருந்து சத்தம். நச்சென்று தும்முகிற மாதிரி? அச்சமாயிருக்கிறதே. உறைக்கு உறை இடை சந்தில் கிணற்றை வளைத்துப் படுத்திருக்குமா? கிணற்றடியிலிருந்து திரும்புகிறேன்.

வாசற்பக்கம் சிமிட்டி மேடை மீது அமர்கிறேன்: குளிர்ந்த காற்று நெற்றியை ஒற்றுகிறது. காற்றின் வழி அம்மா உனக்கு நமஸ்காரம்.

எட்ட, TENT சினிமாவிலிருந்து பின்னணி இசை. SUSPENSE கட்டம் போலும். டிரம்ஸ் திடு திடும் திடும் திடும், க்றீச்சில் அலறும் ஒற்றை வயலின்.

இந்த சினிமாப் பின்னணி இசையெல்லாம் எந்த ராகத்தைச் சேர்த்தி? ஏதோ சப்தங்களின் அவியல். எனக்குச் சிரிப்பு வருகிறது. உடனே தெளிகிறது. உணர்ச்சிக்கு முக்கியம் கொடுத்து, இதுவும் ஏதோ அடிப்படையில்

தான் உருவாகிறது. இன்று வேலை தேடிப்போன இடத்தில் எனக்கு நேர்ந்தது நினைப்பு வருகிறது.

ராக் த்ரோக்.

—தூக்கி வாரிப்போட்டது. அப்படி ஒரு ராகம் இருக்கிறதா என்ன?

இருக்கணுமா என்ன?

இதோ உண்டாகி விட்டதே!

துரோகம் இன்றைய வாழ்க்கையின் நியதியிலேயே புகுந்து விட்டது. சின்னச் சின்ன துரோகங்கள் செய்பவர்களுக்குத் தெரியும். செய்யப் பட்டவர்களுக்குத் தெரியும். ஆனால் சொல்லிக்காட்ட முடியாது. புதிய தலைமுறை ஏற்படுத்தும் புதிய மதிப்புகள்-வால்யூஸ் என்று எண்ணம்(!)

பெற்றோரிடத்தில் தங்கள் உண்மையான சம்பளத்தைச் சொல்லாத பிள்ளைகள்; போகும் இடம், திரும்பி வரும் நேரம் தெரிவிக்காத மக்கள்; நேரம் ஆக ஆக வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு வாசலில் நீ உட்கார்ந்திருந்தால் உன் தலையெழுத்து. படு.

நீ கொடுத்த பணத்திற்கு நீ கணக்குக் கேட்டால் உனக்குச் சொல்ல கௌரவம் பார்க்கும் தலைமுறை. செலவு கேட்டால் நான் அல்பன்.

பாடப்புத்தகத்திற்கு நடுவே சினிமாப் பாட்டுப் புத்தகம். இதைவிடப் பெரிய சமாச்சாரங்கள் இருக்கின்றன. வேண்டுமென்றே அவைகளை நான் இழுக்கவில்லை.

சிறு சிறு அலக்ஷியங்கள்- கூப்பிட்ட குரலுக்கு பதில் குரல்-? கிடையாது. என்னைப் பாம்பே கடித்திருக்கலாம். ஆனால் ''நான் என்ன கண்டேன்? நான் என்ன செய்ய முடியும்?''

புத்திமதி- யார் கேட்டது?

த்ரோக வின்னியாசம். எல்லையே இல்லை. ஆனால் இவைகளை நான் குறிக்க வில்லை. ராக்த்ரோக் (திடும் திடும் திடுதிடும்-ஒற்றை வயலினில் ஒற்றைத் தந்தியின் க்றிச்-இது உருவகத்துக்கு மட்டும்-ஸ்வரங்கள் இன்னும் பிடிபடவில்லை) இவைகளால் உருவாகவில்லை.

★ ★ ★

வேலைக்குப் பேட்டிக்கு அந்தக் காரியாலயத்தை நான் அடைந்தபோது, முன் அறையில் ஏழுபேர் காத்திருந்தனர். எல்லோரும் டிப்டாப். வண்ணானுக்கு வக்கில்லாமல் தோய்த்துத் தோய்த்து நிறமே மக்கிப்போன என் உடை மீது என்னை அறியாமலே என் கண்ணோட்டம் விட்டதும்—திரும்பப் போய்விடலாமா? இவர்களுக்கு எதிரே எனக்கென்ன சான்ஸ் இருக்கப்போகிறது? தீர்மான மாக ஸ்படிகப்படுமுன்-

''மிஸ்டர் ராதாகாந்த்!'' அட அதற்குள்ளேயா? எழுந்து உள்ளே சென்றேன். அவர் என்னை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. ஏதோ பேப்பர்களைத் திருப்பிக் கொண்டிருந்தார்.

''ஸிட் டௌன் ப்ளீஸ்.''

அவருக்கு ஏறக்குறைய என் வயது மூன்று நான்கு கூட இருக்கலாம். கறுப்பு லேசாய்த் தோய்ந்த மூக்குக் கண்ணாடி. எதிரே மேஜை சிறியது. அவர் புரட்டிக் கொண்டிருக்கும் பைலைத் தவிர துடைத்து விட்டிருந்தது. கருங்காலிப் பளபளப்பில் அடியில் பிம்பங்கள் தெரிந்தன. மேஜை இதற்கு மேல் தேவையுமில்லை. பதவி உச்ச உச்ச முக்கியமான ஒன்றிரண்டு கையெழுத்துக்குத்தானே! மிச்சத்தை நொந்து, மண்டையைக் குடைந்துகொண்டு, சத்தைப் பிழிந்து எடுத்துத்தர, கீழ்த் தடவாளங்கள்

இருக்கின்றனவே! இவர்களுக்கும் வீட்டுக்கும் ஆபீசுக்கும் என்ன வித்தியாசம்?

ஏஸி, மூலையில் ஃப்ரிஜ், ஒரு தடுப்பு ஸ்கிரீன், பின்னால் வாஷ்பேஸின் பாத் அட்டாச்ட். இவையெல்லாம் என் தரித்திரத்தில், என் பார்வை மூலம் தாக்கீது என்று சொல்லிவிடலாம்.

ஆனால் அவருடைய ஆகர்ஷம் அசாத்யமாக இருந்தது. பணத்துக்கும் 'பவருக்கும்' தனிக்களை என்கிற சம்பிரதாய வழக்கைத் தவிர இந்த மனுஷன் தனக்கே உரித்தான ஒரு ஒளிப்ரபையுள், அதன் மோனச் சொட்ட சொட்டப்பில் வீற்றிருந்தான்.

"ஆ, மிஸ்டர் ராதாகாந்த்!" குரல் வெகு அமைதி. அதிகாரம் வெளித் தெரியவில்லை. ஆனால் பட்டை வெட்டும் கூர்மையை மறைத்துக் கொண்டிருந்தது. நோ ஃபீலிங்ஹறியர். "பேர் சற்றுப் புதுமையாக இருக்கிறது. அதனால் தான் முதலில் கூப்பிட்டேன். உங்கள் பேர் லிஸ்டில் கடைசிக்கு முதல்."

"தாங்க்யூ ஸார்'

"உங்களுடைய எக்ஸ்பீரியன்ஸ்? ஹூ-ம், நீங்கள் எங்கும் ஸெட்டில்ட் ஆக இருந்ததாகத் தெரியவில்லையே! குவாலிபிகேஷன்ஸ், பீ.யூ.சி.க்கு மேல் இங்கே பேப்பர்கள் காணோம்! ஏதேனும் உண்டா? இங்கே வந்திருக்கிற காண்டிடேட்ஸ் எல்லாம் கொம்பன்களாக இருக்கிறார்கள். காரியரைப் புதிதாக ஆரம்பிக்கிற வயசும் தாண்டிட்டீங்க. Already three children-Why-what is the matter with you?"

கூனிக்குறுகி, உள் கூசி ஒட்டி, உலர்ந்து- கைப் புண்ணுக்குக் கண்ணாடியா? இவனுடைய சட்டாம்

பிள்ளைத் தனத்தைக்கேட்டுக் கொள்ள வென்றே வந்த அவமானம்தான் உறுத்துகிறது. வேலை கேட்க வந்து விட்டு இந்தச் சூடு சொரணையெல்லாம், என்று போமோ, அன்றுதான் கொஞ்சமேனும் விடிவு காணலாம்.

சம்பந்தா சம்பந்தமில்லாமல், சாருவின் உருவம் என் முன் எழுந்தது. பாவம் சாரு! தாலிச் சரட்டில் பொட்டு ஒன்றுதான் இருக்கிறது. வரும்போது, முழுச்சீருடன்தான் வந்தாள். ஒரு குறைச்சல் இல்லை. கொஞ்சமாயும் கொண்டுவரவில்லை.

"Speak up man, I haven't all the day for you!"

எழுந்தேன்.

"Sit down! நான் உங்களை இன்னும் போகச் சொல்ல வில்லை." Buzz!-

ஆள் தோன்றியதும்

"மத்தவங்களைப் போகச்சொல். Vacancy filled up."

என்னது? என் தொப்புளிலிருந்து தொண்டைக்கு ஒரு சிட்டுக்குருவி ஒரு தாவு தாவிற்று. தங்க வால் குருவி. நாக்கு நுனிக்கு வந்துவிட்ட கேள்வியை நல்லவேளை அப்பபடியே விழுங்கிவிட்டேன். தொண்டையில் அடைத்தது. அவசரப்படக் கூடாது. இது ஏதோ எலியுடன் பூனை விளையாட்டு, பெரிய மனுஷாள் விளையாட்டு. "வேலையா? உங்களுக்கா? உங்களுக்கென்று யார் சொன்னது?" என்று கேட்டு விட்டால் மூஞ்சியை எங்கே வைத்துக் கொள்வேன்?

அடுத்து அந்த ஆள் எங்கள் எதிரே இரண்டு coke, straw-வுடன் வைத்துவிட்டு மறைந்தான். ஒன்றும் புரியல்லே. இதென்ன நெருப்பில் சுட்டு நெய்யில் வதக்கல்? நான் பொரிகிறேன்; அவன் மணத்துக்கு.

அவர் உறிஞ்ச ஆரம்பித்து விட்டார். எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. வாயடைத்து விட்டது. எழுந்தேன். அவரும் எழுந்தார். பளார் என்று என் தோளில் ஒரு அறை.

“என்னடா ராது? என்னைத் தெரியல்லையா?” அந்தச் சிரிப்பு

“நம்பி!” பூமி மிதப்பலாடிற்று. மாபெரும் இருள் தூலங்கள் குறுக்கும் நெடுக்குமாய் ராக்ஷசக் கருஞ்சிலுவை யில் கண் எதிரே பாய்ந்தன.

“ஆ, ராது இந்த உலகம் ரொம்பச் சின்னதுதாண்டா! சந்தேகமேயில்லை!”

நம்பியேதான். என் நினைவின் தனிக் குளத்தில் அவன் குளிப்பதைப் பார்த்துக் கொண்டே இருந்துவிட்டு, நேரில் கண்டதும் ஏன் அடையாளம் மறந்து போயிற்று.

அவனைச் சிந்தித்துக் கொண்டு நின்றேன். இந்த cokeஐ எடுத்து அந்த முகத்தில் அப்படியே அடித்தால் என்ன? ஆனால் அது சினிமா ஆகிவிடும்.

“ஆ, இப்போ உன் மனசில் என்ன நினைக்கிறே என்று எனக்குத் தெரியும். உன் முகம் சொல்கிறது. முகம் படிப்பதில் நான் தேர்ந்துவிட்டேன் ராது!”

என் புருவங்கள் வினாவில் உயர்ந்தன.

“அன்னிக்கு எவ்வளவு பெரிய ஜோக்!” அவனுடைய அவுட்டுச் சிரிப்பு என்னை எத்தனையோ வருடங்களுக்கு முன் கொண்டுபோய்விட்டது. ஆனால் அவன் நினைவு மூட்டியும் எனக்கு ஏன் கோபம் மூளவில்லை? அங்குதான் நம்பியின் சொக்குப்பொடி. ஒரு விசன மேகம் என்மேல் படர்வது உணர்ந்தேன்.

"ஸ்பீக் அப் மேன்! ஸே ஸம்திங்."

ஒருமுறை ஏற இறங்க அவனைப் பார்க்கிறேன். இவன் அழகுதான். ஆனால் என் அழகு நம்பி எனக்குக் கிடைக்கவில்லை. கிடைக்கமாட்டாய். சிறுத்தைக்குத் தன் புள்ளிகளை மாற்ற இயலாது.

"ராது எங்கே போறே, நில் ராது, ராது!?"

திடுதிடுவென்று மாடிப்படிகள் இறங்கி, தெருவில் இறங்கி வேகமாய் நடக்கிறேன். 'டேய் ராது! எங்கே ஓடறே, கம்பாக்" அவன் குரல் பால்கனியிலிருந்து துரத்துகிறது. "என்னிடம் தவிர உனக்கு வேறு எங்கும் வேலை கிடைக்காது. ராது! ராது!!"

போனவிடம்கூடத் தெரியவில்லை. கால்கள் ஓடத் துடித்தன. பகுத்தறிவு தடுத்தது. ஜேப்படித்துவிட்டு ஓடு கிறேன் என்று ஜனம் நினைத்துக்கொண்டால்? அப்புறம் குற்றுயிர்தான். அப்பவும் என்னை மீட்க 'நம்பி' தான் வரவேண்டும். அவனுக்குத்தான் வெற்றி மேல் வெற்றி. 'ஸார்ஜண்ட் லீவ் ஹிம். ஐ நோ ஹிம்; இட் ஈஸ் ஆல் ரைட். யெஸ் ஸார்'. அந்த ஜாதக ராசி அப்படி. என் ராசி?

எனக்கேது ராசி? அதையும் சேர்த்துத் தான், நம்பி விழுங்கிவிட்டானே!"

பார்க்.

மறைவாக இடம் பார்த்து, ஒரு மரத்தடியில் குப்புற விழுகிறேன். அம்மா! அம்மாடி!!

ஒருநாள் கண்ணீரா? இரு நாளையதா? வருடக்கணக் கில் உறைந்துபோன கண்ணீர்ப்பாறை.

துரோக நம்பி.

நம்பித் துரோகம்
கண்ணீர் உடைந்துபெருகுகிறதே. இதுதான் ராக்துரோக்.

மரத்தினின்று சருகுகள் மேல் உதிர்ந்து என்னைத் தேற்ற முயல்கின்றன.

நினைவின் சருகுகள்மேல் நடந்து செல்கிறான்.

நம்பிராஜன்

மேடையில் புரண்டு மல்லார்கிறேன். இப்போது என் கண்கள் வீங்கி விளிம்பு கட்டிய வரட்சிக்குளங்கள். வீட்டைச் சுற்றி முள்வேலிப் புதர்கள். இரவோடு இழைந்து இதவாய் சலசலக்கின்றன. எங்கோ தூர, தண்டவாள மேட்டில் ஒரு வண்டித் தொடர், மலைப் பாம்பு போல், தன் வாலைச் சுற்றிக்கொண்டு, இஞ்சினின் விழிகள் ராக்ஷச ஒளித்தூலங்களை வீசியபடி நெருங்கிக் கொண்டிருக்கிறது.

இது இப்படி இருக்கமுடியுமோ என்று உண்மையையே சந்தேகிக்கற மாதிரி மாயா வினோதக் கதைப் புத்தகத்திலிருந்து ஒரு பக்கம் உயிர்த்ததுபோல் காக்ஷிநிலை. இதோ இந்த வீடுதான், அதன் விரிசல் வெடிப்புகளுடன், உதிரும் காரையுடன். ஆனால் ததும்பும் உயிருடன் சொந்தமென்ற மிச்சம். இதுவும் இல்லாவிட்டால், குடும்பம் மானத்தோடு பட்டினி கிடக்கக் கூரையு மில்லாமல், நடுத்தெருவில் நிற்க வேண்டியதுதான்.

மாமி ரொம்ப நல்ல மாதிரி.

"ஏண்டா, நீ மாத்திரம் இறங்கி வந்துட்டியே, அந்தப் பிள்ளையையும் கூப்பிடேன்," மாமி குரல் மாடிக்கு எட்டும்.

"அவன் சாப்பிட்டுத்தான் வந்திருப்பான், அம்மா!"

"நன்னாயிருக்குடா. நமக்கு காலையில் பலகாரம், மத்தியானம் சாப்பாடு பழக்கம். அவன் காலையிலேயே சாப்பிட்டிருப்பான். இப்போ அவனுக்கு மறுபடியும் பசிக்க நேரமாச்சு. அழைச்சுண்டு வா!"

மாமி இப்படிச் சொல்வதால், கூடவே பசிக்கும். ஏற் கெனவே தொப்புள் குழியில் பள்ளம் பெரிசாய்த்தானிருக் கிறது. எனக்கென்று எவர்சில்வர் தட்டை அவர்கள் வீட்டில் ஒதுக்கியும் ஆச்சு.

மாமி சொல்லும் வேளைப் பசியைத் தவிர ஏழைப்பசி என்று ஒன்று இருக்கிறது. எவ்வளவு கொட்டினாலும் நிறையாத குழி. கண்ட இடத்தில் கிடைத்தவரை சுருட்டு எனும் கொள்கைப் பசி. சினேகிதத்தின் சலுகையில், பூச்சில், மானங்கெட்ட பசி.

அவர்கள் குடும்பம் பெரிது. நம்பிக்கு ஒரு அக்கா, ஒரு அண்ணன், இரண்டு தம்பிகள், இரண்டு வேலைக்காரர், சமையல்காரன், சொந்த வீடு, நிலபுலன், வீட்டுச்செலவுக்கு ஊத்துக்குழியிலிருந்து மாதம் ஒரு டின் வெண்ணெய் வர வழைத்தார்கள். டெலிவரி எடுக்க சில சமயங்கள் நான் போவேன். சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போகவர பஸ் செலவு, டிபன்செலவுக்கு அவர்கள் கொடுத்ததை இடுப்பில் நிமிண்டிக் கொண்டு, டின்னைச் சுமந்து நடந்தே வந்து வீட்டில் சேர்ந்திருக்கிறேன். இது என் வாழ்க்கை வளம்!

சித்தாப்பாவுக்குக் கல்யாணமான கையோடு புதுக் குடித்தனம். நம்பி வீட்டுக்கு எதிர் ஸ்டோரில்தான் வந்தோம். ஆம். ஆறாவது ஒட்டு விரல்போல் நான் ஒரு வேண்டாத கொசிர். பி. ஏ. கடைசி வருடம். ஏழை உப காரச் சம்பளம், தகுதி உபகாரச் சம்பளம் என்று என் எட்டாவது வகுப்பிலிருந்து தொடர்ந்து வாங்கி எப் படியோ இந்தவரை, அங்கு இங்கு என்று அயலார் தயவில் தருமத்தில் எட்டிப் பிடித்து விட்டேன்.

சித்தாப்பாவுக்குக் கட்டைச் சம்பளம். வாடகை கொடுத்து மிச்சத்தில் மூன்றுபேர் வயிறு அலம்பியாக வேண்டும். எல்லாம் அப்படி இப்படித்தான். எல்லாவற்றையும் வெளியில் சொல்லிக் கொள்ள முடியாது.

நினைத்துப் பார்த்தால் சிரிப்பு வருகிறது. இருபது வருடம் வாழ்ந்தவனுமில்லை. இருபது வருடம் கெட்டவனுமில்லை என்று ஒரு வசனம் உண்டு. ஆனால் எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல், என் வாழ்க்கை எப்பவும் ஸோ-ஸோ. ஏன் அப்படி? இதுவே ஒரு வேடிக்கையாக இல்லை?

ஆகவே எதிர்வீட்டில் நம்பி எனக்குக் கிடைத்தது என் தனி அதிர்ஷ்டம்தான். சீக்கிரம் ஸ்நேகமாகி விட்டோம். என்னைக் காட்டிலும் நாலு வயது மூத்தவன். ஆனால் இரண்டு பேரும் ஒரே வகுப்பு. அவன் கல்லூரி வேறு. அவன் படிப்பு அவனை இரண்டு மூன்று இடங்களில் சறுக்கு மரம் விளையாடிவிட்டது. காரணம்? எதைவேண்டுமானாலும் சொல்லிக்கொள்ள வேண்டியதுதான். முக்கியமானது பணக்கார வீட்டுப் பிள்ளை. நான் அவனுக்குப் பட்ட பாவம் அவன் தனக்குப் பட்டுக் கொண்டானோ சந்தேகம்தான். என் நம்பி. அழகு நம்பி. புத்தகங்கள் வாங்க வக்கு இல்லாத எனக்கு அவன் புத்தகங்கள் பயன் பட்டன.

அந்நாட்கள், எத்தகைய நாட்கள்! என் வாழ்க்கையில் கில்ட்டு எழுத்துப் பக்கங்கள். அவ்வப்போது புரட்டிப் பார்க்கிறேன். பத்திரமாக மூடிக் காக்கிறேன். அடிக்கடி நினைப்பதால் செலவழிந்து போமோ எனும் அசட்டு எண்ணம்கூட.

சில இரவுகள், சாப்பாடு ஆனவுடன்—

நாங்கள் இருவரும் கடற்கரைக்குப் போய், அலை விளிம்பில் ஒரு ஓடத்தடியில் உட்கார்ந்து, அல்லது மணலில் மல்லாந்து படுத்து, அலுக்காது பேசுவோம். அல்லது மௌனமாக படுத்திருப்போம். ஆ, அந்த மௌனம், பேச்சைக் காட்டிலும் என்ன வன்மையான பரிமாறல்!

குளிர் சதையில் உறைக்க ஆரம்பித்ததும் எழுந்து பேசிக்கொண்டே மரீனா வழியே நடந்து, தங்க சாலைத் தெருவில் ஒரு குஜராத்தி பவன்-பூரி, பாஜி, சேறாட்டம் பால், அதன் மேல் கணிசமான ஏடு. அப்படியே பேசிக் கொண்டே, கோவிந்தப்ப நாயக்கன் தெரு விளக்கு வெளிச் சத்தில் இரவு பகலாகி இருக்கும். மார்வாரிப் பெண்டிர், வளையல்களும், பாதங்களில் தண்டையும் கொலுசும் குலுங்க, விதவிதமான வர்ணங்களில் மேலாக்குகள் சுழல, தெருவில் கும்மியடிக்கையில்-இது சௌக்கார் பேட் டையா, பிருந்தாவனமா?

—அப்படியே பேசிக்கொண்டே, கோட்டை ஸ்டேஷ னுக்குக் குறுக்கே வெட்டி, காந்தி-இர்வின் சாலை வழி பேசிக்கொண்டே War Memorial வந்து, இரும்புப்பாலம், மீண்டும் மெரினா. நள்ளிரவு. பட்டை வீறும் நிலா. பேசிக் கொண்டே நடந்து கொண்டே, பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, வந்தாச்சு. வீடு, ஏன் வருகிறது?

பேசுவோமோ, பேசுவோமோ, என்ன தான் பேசு வோமோ, பேசுவதற்கு என்னதான் அத்தனை இருந்ததோ, இப்போ நினைவு கூட்டலில் உருப்படியாக ஒன்று கூட நினைவு இல்லை. நெஞ்சின் மடைதிறந்து கொண்டால் வெள்ளம்தான் புரளும். வாய்க்காலா வடியும்?

நம்பி, நட்பு என்பது காதல் தாண்டா. நம்முடைய அந்த வயது நிலை அப்படி. அந்தப் பரிமளம் நீடித்து நிற்கக்

கூடியது அல்ல. அந்த லலிதம் அத்தனை நளினம், உள்ளுணர்வுக்கு அப்பவே தெரியும்.

நம்பி, உன்னுடைய, லேசான அலட்சியம் சிந்தும் கண்களும், எடுப்பான நாசியும், நடராஜா சிலையில் காணும் கூரிய மோவாயும், அதில் குழிவும், அலைபாயும் கேசமும்—என் அழகு நம்பியை தொடப் பன்முறை எழும் ஆசையை சிரமப்பட்டுத் தான் அடக்கிக் கொள்வேன்.

ஃப்ராய்டு வந்தாலும் வந்தான். பிறகு எல்லாமே ஸெக்ஸ்தான். ஆனால், இது அது அல்ல. நம்பி சத்தியமாக இல்லை.

இதுபோல் நள்ளிரவு தாண்டி கதவை யிடித்தால், சித்தப்பாவுக்கு ஏன் எரிச்சல் வராது? உனக்கென்ன, நீ தனிச் சாவி வைத்திருக்கிறாய்.

"இந்த மாதிரி ராக்கூத்து அடித்தால் பரீட்சை என்னவாகிறது?"

ஆம், மார்ச் நெருங்கிக் கொண்டேயிருக்கிறது. எனக்கு என் தலைவிதியில் திருப்பு முனை. இப்போது இரவு கூட நம்பி வீட்டிலேயே தங்கல். படிக்கிற சாக்கில் உணவும் படுக்கையும் அங்குதான்.

"அம்பி, நம்பியை கவனிச்சுக்கோ"—மாமி, பாவம் அப்பாவி. நம்பி பல்லைக்கடிக்கிறான். இரவு அவ்வப்போது ஆவிபறக்க, மணம் வீச "டீ" மாடிக்கு வரும்.

"டீ"க்காகப் படித்தோமோ? படிப்பதற்காகக் குடித்தோமோ?

ஆனால் நன்றாகத்தான் படித்தோம். நம்பிக்கு கணக்குத்தான் கால் வாரல். ஆகவே அதில் அவனைப் பலப்படுத்துவதில் இருவரும் முனைந்தோம். கடந்த வருடங்களின் வினாத்தாள்களை மீண்டும் மீண்டும் அவனைச்

செய்யச் செய்தேன். அதே கணக்கே அடுத்த வருடத் தாள்களில் வருவது புதிதல்ல. அவனோடு நானும் செய்தேன். அவன் தடுக்கி விழுந்த இடங்களை, நான் செய்த வழியில் காட்டி எச்சரித்தேன். பிற சமயங்களிலும் ஆழ்ந்து படிக்க, என் காகிதங்களை அவனுக்குக் கொடுத்தேன்.

ஆனால் நம்பிக்கு கணக்கு மட்டும் சாபம் என்று கண்டு கொண்டேன். சில சமயங்களில் எனக்கு பொறுமை இழந்து வார்த்தை தடிக்கும். அவன் கண்களில் தணல் பொறி பறக்கும். ஆனால் சாளரத்தைச் சட்டென இழுத்து விடுவான். எப்படியும் நாலு வயது மூத்தவன்; தவிர தடம் என்ன?

சொல்லிச் சொல்லி, எதிர்பார்த்து, எதிர்பார்த்து, புலி புலி, புலியும் வந்துவிட்டது.

நெற்றியில் உதிரி விபூதி. உச்சி மயிருள் வீட்டுப் பெரியவர்களின் அக்ஷதை, நெஞ்சில் திக்திக்—ஹாலுக்குள் நுழைகிறோம். அவரவர் இடங்களைக் குறித்த எண்களை டெஸ்க்களில் தேடுகிறோம். தற்செயலாக, நம்பியின் இடம் எனக்கு அடுத்த வரிசையில் எனக்கு ரெண்டு சீட் பின் தள்ளி.

பரவாயில்லை, கணக்குப் பரிட்சை கடைசி நாள்தான். மிச்சப் பாடங்களில் நம்பி அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லை.

இதென்ன கடைசீ நாள். தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் அசட்டு ஆறுதல், தூக்குதண்டனையை ஒத்திப் போடுகிற மாதிரி? கடைசி நாள் கதவு மூலையிலேயே ஒளிந்து கொண்டிருக்குமா? வெளியில் வரவே வராதா?

அன்று என்னவோ எனக்கு முன்னரே நம்பி ஹாலுக்குப் போய்விட்டான். அவன் பதைபதைப்பு அவனுக்கு. அவரவர் பதைபதைப்பு அவரவர்க்கு!

ஆனால் நாங்கள் எங்கள் இடங்களில் அமர்ந்தபின். மணி அடித்த பின்னர் வினாத்தாள் வழங்கி அதன்மேல் நான் முதல் கண்ணோட்டம் விட்டதும், அம்மாடி! பெரு மூச்சு என்னுடையது மட்டுமல்ல. என் முன்னோர்களுடைய தும் அதில் கலந்திருந்தது. என் பாட்டி உயிரோடிருக்கை யில் சொல்வாள், "அம்மா லலிதாம்பிகே, குழந்தையின் பேனா முனையில் இருந்து அவனைத் தேறவை!"

—அத்தனையும் லட்டுகள். உடனே எழுத முனைந்து விட்டேன். ஏக் 'தம்'.

முக்கால்வாசி முடிந்துவிட்டது.

—"ஸ்ப்! ஸ்ப்ப்!!"

முன்னிலும் அவசரமாக- "ஸ்ப்! ஸ்ஸ்ப்ப்!!"

யாரது? தலை நிமிர்ந்தேன்.

நம்பி கையைப் பரக்க பரக்க நீட்டினான், கடித்த பற்களிடையே.

'உன் டெஸ்க் அடியில்—'

திருதிருவென விழித்தேன்.

'யூ ஸ்டுபிட்' கொடு அதை!!'

குனிந்து பார்த்தேன். ஆம் என்னவோ சொருகி வெச்சிருக்கே? எடுத்தேன். என் கையெழுத்தில்-என்ன இது? இங்கே எப்படி வந்-

வெடுக்கென்று என் கையிலிருந்து பிடுங்கப்பட்டது.

'வாட் ஈஸ் கோயிங் ஆன் ஹியர்?' குரலின் இடிதான் என்மேல் முதலில் விழுந்தது. வார்த்தைகள் பின்னால்.

'ஸ்டாண்ட் அப்'

எழுந்து நின்றேன். அம்ருதாஞ்சன் பொம்மை மாதிரி என் செயல் என்னிட மில்லை.

'கப் வித் மீ'

என்னைக் கையைப் பிடித்துக் கையும் பிடியுமாக இழுத்துச் சென்றார். எல்லோரும் என்னைப் பார்க்கிறார்கள், நம்பி தவிர. பேப்பரில் என்னவோ அப்படி தலை குனிந்து முனைந்திருந்தான்.

அப்புறமே இன்றுதான். இன்று என்று சொல்வதா நேற்று என்று சொல்வதா, கிழக்கில் சாம்பல் பூக்க ஆரம்பித்து விட்டது. இன்றுதான் நம்பி முகம் பார்த்தேன்.

அன்றிலிருந்து இன்று வரை மண்டையைக் குடைந்து கொள்கிறேன். சரியான முன்யோசனையுடன்தான் செய்திருக்கிறான். நான் அகப்பட்டுக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் அவனுக்கு இருந்திருக்குமோ இல்லையோ? தான் மாட்டிக் கொள்ளக்கூடாது. அவன் பரீக்ஷையில் என்னவானானோ நினைத்தபடி நடத்திக் கொண்டு விட்டான். அவனுக்கு எப்பவும் மார்ச், செம்டம்பர் மாறி மாறி இருக்கிறது.

சித்தப்பா கடிதம்போட்டு, அப்பா வந்து என்னை அழைத்துக்கொண்டு போய்விட்டார்.

அடுத்த வாரத்துக்குள் சித்தப்பா இடமே மாறி, ஆதம்பாக்கத்துக்கு குடித்தனம் போய்விட்டார். திருவல்லிக்கேணியில் எங்கள் சுற்று வட்டாரமே பற்றி எரிகிறதே.

வீட்டில் என்னை நேரிடையாக யாரும் குற்றம் சாட்டவில்லை, கடியவில்லை கேட்கக்கூட இல்லை, விசாரிக்கவில்லை. ஆனால் என்னை நம்பினார்களா, நம்ப வில்லையா? அவர்களுக்குத்தான் வெளிச்சம்.

அப்பா, நானில்லை!

அம்மா, நானில்லை!

சித்தப்பா, நானில்லை!

வாய்விட்டு அரற்றவில்லை. வாய்விட்டுச் சொல்லாமல், அவர்கள் கண்களில் தெரியும் துயரத்தில், சந்தேக மூட்டத் தில், மூட்டத்துள் மூழ்கிக்கொண்டே மோனத்தின் அலறல்.

நானில்லை!

நானில்லை!!

நானில்லை!!!

Debarred for three years.

அதுவரை அப்பா இல்லை. 'உள்ளடி' நம்பி புண்ணியம்.

அப்புறமே நான் உருப்படவில்லை. உருபட முடிய வில்லை. செயலில் ஆற்றல், ஆர்வம் இழந்துவிட்டது என்று நினைக்கிறேன். சில சமயங்கள் வலதுதோள் கனக் கிற மாதிரியிருக்கிறது. கலிபுருஷன் ஸ்திரமாக உட் கார்ந்து விட்டான்.

—சே வெறுப்பு வந்துவிட்டது. கதை முடியுமா, முடியாதா?

★

காப்பியை எடுத்துக்கொண்டு என்னருகில் வந்தாள்.

"நானும் காத்துப் பார்த்தேன், நீங்களா சொல்லு வேள்னு. அதான் பழக்கமே கிடையாதே. நேற்றுப்போன காரியம் என்னவாச்சு?"

ஆதியோடு அந்தமாகச் சொன்னேன். ஒரு கதையே அல்லவா சொல்லவேண்டியிருக்கிறது.

சொல்லி முடித்தபின் இருவரும் மௌனமானோம். எதிரே, கற்பூரவாழைக் கன்றின் மேல் எங்கள் நாட்டம் ஒருமித்து நிலைத்தது. ஆனால் அவரவர் யோசனை தனித் தனி, எங்கெங்கோ...

வாங்கி வந்தபோது, நுனியில் முளை பச்சையாக' உக்கிரமாக (?) இருந்தது. நட்டுப் பதினைந்து நாட் களுக்கு மேலாச்சு. ஊஹூம். முளை கருகிக்கொண்டு வரு கிறது.

"யார் மேல் தப்போ? (அப்போ நீயும் என்னை நம்ப வில்லையா?) இப்போ வேலைதரேன் என்கிறான். ஏற்றுக் கொள்ள வேண்டியதுதானே! முறைப்பா வந்துட்டேள். கலிதீர்க்க வந்த பிள்ளையாரையும் கிணற்றில் தள்ளி யாச்சு! இனி இந்தக் குடும்பம் என்ன ஆகப்போறதோ?"

விர்ரென்று போய்விட்டாள்.

அடுத்து அடுப்பங்கரையிலிருந்து அவள் குரல் வந்தது.

"இடம் சொல்லுங்கோ, நான் போய் அவரைப் பார்க் கிறேன்."

இது எப்படி?

—விளம்பித், கயால், ராக்த்ரோக்.

# தூலம்

தூலம் முறிந்து-

அம்மா மட்டும் நெடு நாட்களாகச் சொல்லிக்கொண்டிருந்தாள்; "அடே, உளுத்துப் போச்சுடா. செல்லுப் புழு தாராளமா புகுந்து புறப்படறதடா. கவனிங்கோடா".

அப்பா வீடு வாங்கின சமத்தை மெச்சிக்கோ. (வெளியில் சொல்லவில்லை) "என்னை என்ன பண்ணச் சொல்றே? நானும் விசாரிச்சாச்சு. இரண்டு தூலங்களையும் மாற்ற, கூலி உட்பட 450 ரூபாய் ஆகுமாம். எதுக்கும் 500 ரூபாய் தயார் பண்ணி வெச்சுக்கிட்டு என்னைக் கூப்பிடுங்க. தச்சன் சிரிக்கிறான், தூலத்தைப் பார்த்து.

தூலம் முறிந்து-

ஆனால் அப்பாவின் அவசரத்துக்குக் காரணம் உண்டு. அவருடைய காரணம்-காரணங்களில் எப்பவுமே போது கிடையாது-அவரவர்க்கு அவரவர் காரணம்-தனித்தனிக் காரணம்.

பாட்டி அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாள். "அம்பி, இதுவரை வாடகையாக் கொடுத்தே, ஒரு ஆயுசுக்கு சேர்த்த சொத்து அழிஞ்சிருக்கும். நமக்குன்னு ஒரு வீடு-எலிவளையானாலும் தனிவளை பார்த்துட்டுக் கண் மூடுவேனா?

பாட்டி ஏங்கிண்டு இருந்த மாதிரி, அவள் காலத்திலேயே அவள் சொந்த வீடு காணமுடியவில்லை. அதற்காக அவள் காத்திருந்ததில் குறைச்சலில்லை, மூடுகையில் 74, எங்கள் குடும்பத்துக்கே ரிகார்ட் ப்ரேக்,

பாட்டி நாக்கில் என்ன கிரகம் ஏறிக்கொண்டிருந்ததோ, இது அசலாவே வளைதான்-வயல் எலிப்பொந்து.

இந்த ஊரே தள்ளியிருக்கிறதென்றால், இந்த ஊருக்கும் ஒதுக்கு இந்த வீடு.

அந்தப் பாட்டியையே அவளுடைய அந்திம கால உடல் நிலையில் கட்டிலோடு தூக்கிக்கொண்டு வந்து காண்பித்திருந்தால், சம்மதித்திருக்க மாட்டாள். ஆனால் பாட்டியின் கடைசி ஆசையை நிறைவேற்றுவதில் அப்பா முனைஞ்சாச்சே!

'பார்வதி விலாஸ்' (விலாஸ்! ஹு! 10×12 ஒரு அறையை ஒட்டி, 12×20 ஒரு கூடம்) சுவர்களில் வெடிப்பு சுற்றி கிரவுண்டு இருக்கிறது. அதைச்சுற்றி முள்வேலி. பூவரசமரம், ஒதிகை மரம், சதா கருகு உதிர்ந்தபடிதான் பெருக்கி மாளவில்லை. ஒரு கறிவேப்பிலைக் கொத்துக்குக் கிட்டக் கடைக்கு மேட்டுக்கு ஒரு கி.மீ. சைக்கிளில் மிதித்தாகணும். ஒருநாள் விட்டு ஒருநாள் அல்லது நாளுக்கு இரண்டு பங்க்ச்சர்.

அம்மாவுக்கும் கறிவேப்பிலை இல்லாமல் சமைக்க வராது.

மழைக்காலத்தில் நீராழி மண்டபம். மழை ஓய்ந்தாலும் சேறு காய இரண்டு மாதம்.

தபால்காரன் வரமாட்டான்.

பால்காரன் வரமாட்டான்.

'காஸ்' காரன் வரமாட்டான்.

(ஐயோ! அம்மா!)

அரிசிக்காரன் வரமாட்டான்.

மளிகைக்காரன் வரமாட்டான்.

மின்சாரம் அவுட்.

ஆனால் ஆபீஸ் போகிறவன் ஆபீஸ் போயாக வேண்டும்.

காலேஜ் போகிறவன் காலேஜ் போயாகவேண்டும்.

அப்பாவுக்கென்ன, ரிடையர் ஆகியாச்சு. ஈஸிசேரில் சாய்ந்தபடி- மடியில் கவிழ்ந்த ஓர் புத்தகம். மண்டோப நிஷத், கடோபநிஷத், கீதை, அரபிந்தோவின் சாவித்திரி அல்லது பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் - அத்தனையும் நம் மண்டைக்கு அப்பாற்பட்ட சமாச்சாரம்-எதிரே சுவரில் பாட்டி படம் அந்தப் பெரிசு இப்போ அப்பாவைப் பண்ண இயலாது-அதைப் பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்து விடுவார்.

எதுபற்றி? பாட்டியைப் பற்றித்தானிருக்கும்.

ஒரே பிள்ளை. இருக்கும்வரை இவரைப்பற்றி அவள் அவளைப்பற்றி இவர். அவள் போனபின் அவளைப் பற்றியே இவர்.

தூலம் முறிந்து

"இதோ பார் பெண்ணரசி, (அம்மா பெயர் அது வல்ல) தூலத்தைப் பார், கதவைப் பார் என்று என்னைக் கொத்திப் பிடுங்காதே. பிள்ளைகளைக் கேள். அவர்கள் தலையெடுத்தாச்சு. அவர்கள் போகிற தோரணையை, செலவு, ஆடம்பரம் எல்லாவிதத்திலும் பார்த்தால், அவர் கள் காலையும் பூமியிலிருந்து எடுத்தாச்சு. என் காலம் ஓய்ஞ்சு போயாச்சு. இனி என்னால் முடிந்தது பிறத்தியா ருக்கு என்னால் செலவையும் அசௌகரியத்தையும் எவ்வளவு தூரம் குறைத்துக் கொள்ள முடியுமோ..."

வாக்கியம் முடிவு பெறாது, படிப்படியாக அடங்கும் மூச்சுப் போல் ஓய்ந்துவிடும். அப்படி ஒரு சமயத்தில் பாணி.

அப்பா சொன்னபடியே அவருடைய தேவைகள், தாமாகவோ, அவர் முயற்சியிலோ வெகுவாய்க் குறைந்து விட்டன. சாதத்தைப் பருக்கையாக எண்ணினாற்போல், உணவு ஒரு அளவுதான். அதுவும் ஒரு வேளை. ஒற்றைக் கட்டை வேட்டி. மேல் துண்டு அக்கறையில்லை. அவசிய மில்லாமல் படிதாண்டுவதில்லை. பேச்சும் மட்டுக்கட்டித் தான். வீட்டு சன்யாசி.

சன்னியாசிக்கு வீட்டுள் என்ன வேலை? வெளியில் விரட்டவேண்டும். யார் சொன்னது? நான் சொல்கிறேன். பின்னே என்ன-குடும்பத்துடன் ஒட்டாமல், ஒட்ட முடியா மல் அப்பாவாயிராமல்...

ஆனால் அப்படியும் சொல்வதற்கில்லை. ஒரு நாள் ஓரே கலகலப்பு. கும்மாளம். முதுகையறைந்து (pais) பேச்சு.மறுநாள் வெளியே கக்காமல் உள்குமுறும்எரிமலை, பொறி பறக்கும் கண்கள். ஏன்? ஏன்? ஏன்? யாரறிவார்? அண்டமுடியாத அனல் வெம்மை. உள்ளேயே தளைக்கும் பிழம்பு முகத்தில் 'டால்' அடிக்கும். பயமாயிருக்கும் பவழ வண்ணன். ரூத்ரமூர்த்தி.

பாட்டி செத்த கையோடுதான் அப்பா மோச மாயிட்டார். சிதையில் கடைசி வரளி பாட்டி முகத்தை மூடும் வரை, மூடியபின்னரும் அப்பா அந்த இடத்தையே விறைத்துக்கொண்டிருந்த பார்வை பயமாயிருந்தது. எரிச்சலும் வந்தது.

என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார் மனுஷன்? இவருக்காகப் பாட்டி சதமாக இருந்து கொண்டேயிருக்க வேணுமா? இருக்கலாமா? பின்னால் அதனுடைய சிக்கல் களை அறியாரா?

அப்பா, பாட்டியிடமிருந்து அவளுடைய அம்சத்தை வாங்கிக்கொண்டுவிட்டாரோ? இருவருக்கும் முக ஒற்றுமை

கூடத் தெளிந்து காட்டுவது போல் தோன்றிற்று. என் பிரமையோ? நடை, பாவனைகள்கூட...

அந்த நீண்ட மௌனங்கள். மனமில்லாத புன்னகையில், தாடைகளின் லேசான இளக்கம். உள்ளடக்கிய உணர்ச்சியில் முஷ்டித்துத் திறந்து மூடும் கைகள்...அப்பா, வாயைத் திறந்து கத்திவிடுங்கள் அப்பா! எங்களை இரண்டு அடிகூட அடித்துவிடுங்கள்.

ரிஷிகேஷில் இமயச் சாரலுச்சியில் சூரியோதயத்தில் பசும் பொன் காட்டும் புற்றரைமேல், பாட்டியும் அவரும் நடமாட மற்றவரெல்லாம் மலையடிவாரத்தில் நின்று கொண்டு அவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பர். அல்லது பார்த்துக்கொண்டிருத்தல் வேணும். அப்பாவின் எண்ணம் எங்களைப்பற்றிய அபிப்பிராயம் அதுதான் என்று என் கணிப்பு.

காலத்தின்மேல் பழியைப் போடாமல் போக்குகள் மாறி விட்டன என்பதைப் பெரியவர்கள் எப்போது ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள்? ஆனால் எதையும் அப்பா காட்டிக்கொள்ள மாட்டார்.

நெஞ்சுக்கனம்... அப்பா! அப்பாவின் கழுத்து, நாயனக்காரன் கழுத்துப் பலம். நரம்புகள் புடைத்துக் விண்டு...

ஒரு நாள் மாலை, நானும் ராஜுவும் வெளியே போய்த் திரும்பி வீட்டுக்குள் நுழைந்ததும் அப்பா எங்களை விரலைக் கொக்கி காட்டி விளித்தார். நாங்கள் தற்செயலில் அவருக்கு இருபக்கத்திலும் நின்றோம். அப்பா, எங்கள் தோளில் கை போட்டுத் தாங்கிக்கொண்டு எழுந்தார். அம்மாடி! கைலாய மலைக்கடியில் ராவணன் நசுங்கிப்போனானாமே! அண்ணனும் தம்பியும் நசுங்கி னோமோ இல்லையோ, ஏதோ ஒரு தினுசில் குன்றிப்

போனோம். அப்படி எங்களை அழுத்தியது அப்பாவின் வெறும் உடல் வலிமை மட்டும் அல்ல; அப்பா தோள்களில் ரத்தம் சுண்ட ஆரம்பித்துவிட்டது. வயது!

இந்தச் சைகை எச்சரிக்கையா? ஆசீர்வாதமா? இது என் வயதின் அதிகாரம். எச்சரிக்கை, ஆனால் நீங்கள் என் விழுதுகள்; ஆசி.

அப்பா வாய் திறந்து பேசாவிட்டால் என்ன? அவருடைய பேசாத வார்த்தைகள் எங்கள் நெஞ்சில் பிம்பம் அடிக்கின்றனவே!

எங்கே போயிருந்தாய்?

எங்கே போனாலும் நேரத்தில் ஏன் கூட்டுள் அடங்கவில்லை?

இருப்பது ஐந்து பேர். ஆனால் பந்தி எட்டு.

உங்கள் அம்மாவை என்னவென்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்?

அவள் உங்கள் சமையல்காரியா? வண்ணாத்தியா?

டி.வி. உடம்புக்குக் கெடுதல்: குணத்துக்கும் கேடு. வாரத்துக்கு ஒரு தமிழ், ஒரு இந்தி, இரண்டு சினிமாவுக்கு ஈடில்லையா? இது, நீங்கள் உருப்படுவதற்கு அடையாளமா?

தன் காரியங்களைத் தானே கவனித்துக்கொள்வது தான் சுயகௌரவம்-கடமை, கண்ணியம், கட்டுப்பாடு-வாழ்வு மானத்தோடு மணக்க இதைவிட அழகிய சூத்திரம் இல்லை.

—அத்தனையும் எங்களுக்கு ஒவ்வாத வார்த்தைகள், நாங்கள் என் செய்வோம்?

அப்பா நாளடைவில் பேச்சடங்கிப்போய், எங்களுக்குப் பயம் தரும் மோனத்தில் மூழ்கிப்போனதற்குக் காரணம் நாங்கள்தான்.

எங்கள் இரைச்சல், நாங்கள் எங்கள் நண்பர்களை அழைத்து வந்து அடிக்கும் அரட்டை இரைச்சல்; எடை போட்டுப் பார்த்தால், உப்புசப்பு இல்லாத எங்கள் பேச்சின் சின்னத்தனம், ரேடியோவின் ஓயாத அலறல்- அவருடைய சுபாவத்துக்குவிரோதம். அது ஒரு பக்கம் இருக்கட்டும். அப்பா ஒரு முறை சொன்னதற்கு உடனே பதிலோ சம்மதமோ, கீழ்ப்படிதலோ இல்லாவிடின், அப்பா அதே வார்த்தை மட்டில் உறவை யாராயிருப்பினும் சரி துண்டித்துக்கொண்டு விடுவார். தன்னைத் தன் பத்திரத்தில் இழுத்துக்கொண்டு விடுவார்.

அப்பா, உங்களுக்கு வளைந்து கொடுக்கும் தன்மை இல்லை.

நான் எதற்கு, யாருக்கு, வளைந்து கொடுக்க வேண்டும்?

வாய் வார்த்தையாக நடக்காத சம்பாஷணை. ஆனால் அதனினும் கனமானது. அங்குதான் அப்பாவின் மோனத் சக்தி.

கேள்வி எங்களுடையது, அதற்கு அவருடைய பதிலும் எங்களினின்று-இது என்ன மாஜிக்?

குற்றம் சாட்டப்படவில்லை. உணர்த்தப்படுகிறது? இல்லை, நாங்களே உணருகிறோம்.

உணர்ந்து என்ன பயன்? நாங்கள் மாறுபவர்கள் இல்லை. விதி என்பது இதுதானா?

கடவுள் இருக்கிறாரோ இல்லையோசைத்தான் நிச்சயமாக இருக்கிறது. அவனுடைய ஆட்சி பூரணமாக எங்களிடம்தெரிகிறதே!

தூலம் முறிந்து -

தூலத்தை நான் கவனித்திருக்க முடியும், கவனித்திருக்கவேண்டும்.

ரூ. 560?

என் பஞ்சைபாட்டு பொய் என்று உணர்கிறேன்.

போனஸ்ஸை பிளாக் அவுட் பண்ணியிருக்க வேண்டாம்.

போனஸ் வந்தது அப்பாவுக்குத் தெரியாது என்று நினைத்துக்கொள்வதில் என்னை நான் ஏமாற்றிக்கொள்கிறேன்.

சூட்சம அறிவின் சக்தி எத்தகையதென அப்பாவின் மோனம் காட்டிற்று.

எல்லா நதிகளும் கடலில் விழுகின்றன.

அறிவுகள் யாவும் மோனத்தில் கலந்து விடுகின்றன.

தனியாக ஒளிய இடம் தேடலில் தன்னையே இழந்து விடும் அந்த மோன கர்ப்ப இருள் ஏன் அச்சம் தராது?

மறைத்தேனே ஒழிய அந்த போனஸ் தும்பாய்ப் பறந்துபோனவிதம் இன்னும் திகைப்பாயிருக்கிறது. உருப்படியாக ஒரு செலவும் ஆகவில்லை. Gone with the wind.

தோசைக்கல் கணக்கில் இப்போது மணிக்கட்டைக் கனக்கும் இந்த ஃபேவர் லுபாவுக்கு அவசரம் என்ன?

அதேபோல் தான் சுகுமார் டெயிலரிங்கில் மாதத் தவணையில் வாங்கின ஸூட்டிங். கொடியில் ஐந்தோடு ஆறாக லாலிபிலி.

இரண்டு தவணைகள் பாக்கி. ஆபீசிலிருந்து திரும்பி வருகையில் அவன் கடையைச் சுற்றிக்கொண்டு போகிறேன். என்றைக்கு வீட்டுக்குச் சீட்டு வருகிறதோ?

கண்டதே காட்சி கொண்டதே கோலம். இதைத்தான் வேண்டாம் என்று அப்பாவின் மோனம் ஆட்சேபிக்கிறது. இதுதான் வாழ்க்கை என்று நாங்கள் சாதிக்கிறோம். இன்று கைப் பிடி மூழ்க வாழ், நாளை தன்னைப் பார்த்துக் கொள்ளும். ஆபீஸில் என் பக்கத்து மேஜைப் பெண் விதம் விதமாக உடுத்தி வருகிறாள். அவளுக்கு நான் சளைக்கக் கூடாது எனும் ஃப்ளர்ட்டிங்குக்காகவன்றி இந்த ஆறாவது ஸூட்டிங் உண்மையில் தேவையா?

ஓ, மனசாட்சி என்பது இதுதானோ?

அப்பாவுக்கு எதுவும் தெரியாமல் இருக்க முடியாது, அவருடைய மோனம் எங்களுக்கு இருட்டு. அவருக்குக் கைப் பையில் விளக்கு. அதன் வெளிச்சத்தில் எத்தனையோ அந்தரங்கங்களை ஏடு புரட்ட அவரால் முடியும்.

இதை ஞானதிருஷ்டி என்று சொல்வதற்கில்லை, எங்களையே நாங்கள் ஏமாற்றிக் கொள்வதில், எங்களை நாங்களே காட்டிக்கொடுத்துக் கொள்கிறோம்.

அப்பாவுக்கு எங்கள்மேல் உள்ள கோபம் மட்டுமல்ல, அத்துடன் ஏதோ துயரமும் கலந்திருந்தது. குடும்பத் துயரம் அல்ல. அதனினும் பெரிது. மகத்தானது.

பட்டணத்தில் ஜனங்கள் தண்ணீருக்காகப் படும் தவிப்பு-அப்பா வாய்விட்டு அதுபற்றிப் பேசவில்லை. அன்

றொரு நாள்மெனக்கெட்டு கிணற்றடிக்கு வந்து கிணற்றுள் பார்த்துக்கொண்டு நின்றார். பிறகு தண்ணீரை இழுத்து ஆசமனம் செய்து கண்களில் ஒற்றிக்கொண்டு தன் இடத்துக்குத் திரும்பிப் போய்விட்டார். முகம் கைகளில் புதைந்து தோள்கள் குலுங்கின. அப்பா அன்று பூரா சாப்பிடவில்லை. ஜன்னல் வழி வானத்தில் மாறிமாறி விளையாடும் சாயங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். முகம் ஜெவ ஜெவ... அப்பா அன்று முதல் அருந்தும் ஜலம் வெகுவாய்க் குறைந்து போயிற்று. ஒரொரு நாள் அற்றே போயிற்று.

“அப்பா நாடகம் பண்றார்.” சிறிசுகள் தோள்களை இடித்துக்கொண்டு கிசுகிசுத்தாலும் அப்பா டோன்ட் கேர். என்றுமே அவர் செயல்களும் சொல்லும் பிறர் வழக்குக்கு அடங்கினவை அல்ல.

மரத்தினின்று ஒரு இலை உதிர்ந்தால் மாரைப் பிடித்துக்கொள்வார்.

அம்மா அவளுடைய பூஜைக்கு நந்தியாவட்டையைப் பறித்துக்கொண்டிருக்கையில் அவர் முகம் உள்வலியில் இறுகும். ‘ஏன் பறிக்கிறாய்?’ கேட்க மாட்டார். மோனத்தின் சுங்கம் கடுமையானதுதான். ஆனால் அப்பாவின் நோக்குப்படி நடப்பதாக இருந்தால் கோவில். கல்யாணம், நல்லது பொல்லாது, நாள், கிழமை எல்லாவற்றிலிருந்தும் பூவை பகிஷ்கரிக்கவேண்டியதுதான். பூவிலிருந்தமல்லியோ, மதுரை மல்லியோ, காஷ்மீர் ரோஜாவோ ஏரோப்பிளேனில் இடம் மாற வேண்டியதில்லை. பூக்கடையை இழுத்து மூடு. அப்பா தத்துவம் நடக்கிற காரியமா?

அப்பாவின் உள் புழுக்கத்தில் ஏதோ ஒரு செருக்கும் இருக்கும். உங்களிடம் சொல்லி என்னவாகவேண்டும்.

சொன்னால் உங்களுககு என்ன புரியப் போகிறது? அதுவும் வாஸ்தவம்தான்.

அபூர்வமாக ஒரு நாள் மாலை அப்பா உலாவப் போய் சுருக்கவே திரும்பிவிட்டார். நெற்றிப் பொட்டிலிருந்து ரத்தம் கொட்டியவண்ணமிருந்தது. கன்னம் வழி, தோளில் சொட்டி மார்பில் கிளை பிரிந்து— என்னவாச்சு? எங்கள் பதறலுக்கு மன்னன் வாய்திறந்தால்தானே! மார்பில் வழியும் குருதிமேல் குனிந்த கண்களில் ஏதோ திகைப்பு. சிந்தனை. லேசான புன்முறுவல்.

இது என் ஜீவநதி!

பார்த்தவர்கள் பின்னர் சொன்னார்கள், அப்பா நடந்து சென்ற வழியில் நாலு பையன்கள் பாம்பை அடித்துக் கொண்டிருந்தார்களாம். பாம்பு தலை குதறிப்போயும், பையன்கள் அடிப்பதை விடவில்லை. அப்பாவுக்குப் பொறுக்கவில்லை. துரத்திக் கொண்டு போயிருக்கிறார். மூன்று பேர்கள் ஓடி விட்டனர். ஒருவன் மட்டும் மாட்டிக் கொண்டான். அவன் பற்கள் கடகடக்க அப்பா அவன் தோள்களைப் பற்றிக் குலுக்கியதும் அவன் திமிறித் தப்பித்து ஓடிப்போய் வாயில் வந்தபடி வைது கொண்டு ஒரு கல்லைப் பொறுக்கி அப்பாமேல் விசியிருக்கிறான்.

அப்பாவுக்கு வரவர எந்த வலியும், வலிதரும் பிறரின் பிறரின் செயலுமே பொறுக்கவில்லை. புறவலியெல்லாம் அவருடைய அகவலியாக மாறின. இப்படியும் உண்டோ?

அப்பா மகான் ஆகிக்கொண்டிருந்தாரா? உலகத்தையே மகா மயானமாகக் கண்டாரா? அல்லது வயதாகி விட்டாலே இப்படி ஒரு கட்டம் வருமா? அல்லது அப்பா புத்தி நழுவல்ஸ்? அப்பாவோடு வாழ்வது சுலபமில்லை.

தூலம் முறிந்து ஃபேன் அப்பா மேல் விழுந்து-அந்த சப்தமே போதும் எல்லோரையும் எழுப்பிவிட-சுற்றிக்

கொண்டிருக்கும் ப்ளேடுகள் அப்பாவின் வலதுதோளை க்ளீனாகத் துண்டித்து...

ஐயோ! ஐயோ! அப்பா! அப்பா!

யாருக்குச் சட்டென விளக்கைப் போடத் தெரிந்தது? ஃபேன் ஸ்விட்சை 'ஆஃப்' பண்ணத் தெரிந்தது?

ஐயோ! அம்மா! அம்மா!

டாக்டர்-இந்த நள்ளிரவில்? எவ்வளவு தூரம்! 'கன்வேயன்ஸ்'? வரவழைக்கவும் முடியாது. அப்பாவைக் கொண்டுபோகவும் முடியாது. எதுவும் விடிந்தால் தான்.

இதுதான் 'பார்வதி விலாஸ்'!

துண்டிக்கப்பட்ட கை, பட்டாசுத்திரிபோல், கூடத்தில் எங்களைச் சுற்றிக் குதித்துத் துடித்த காட்சி-ஜன்மத்துக்கும் மறக்க முடியாதது.

அதனினும் மறக்க முடியாதது, கண்கள் செருகி, அதில் கண்ணாடி ஏறிக் கொண்டிருக்கையிலேயே அப்பாவின் கடைசி வார்த்தை.

"அரைத்துணி கலைஞ்சுபோச்சா?"

இன்னமும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அப்பா, உங்கள் வார்த்தைகளில் வாழ்வுக்கே ஒரு சேதி அடைந்திருக்கிறதோ?

அப்பா! உங்களால் என்னை மன்னிக்க முடியுமா? மன்னிப்பு கேட்கக்கூட எனக்கு அருகதையில்லை.

அப்பா! அப்பா!

எல்லாம் முடிந்தபின் அன்றிரவு என் கனவில் வந்தீர்கள். உங்கள் உடம்பு முழுமையாக இருந்தது. அப்பா முகம்

என்ன காந்தி! கண் கூசுகிறது. உங்கள் கண்களில் என்ன கருணை! தொண்டை அடைக்கிறது.

'அம்பி! எல்லோரும் சிருஷ்டி வழிப்படி, சுபாவத்தில் நல்லவர்கள் தான். அந்த சுபாவத்தின் வெளிப்பாடில்தான் வெவ்வேறு தன்மைகள். அந்தத் தன்மைகளின் மேடு அடிப்பின் கீழ் அந்த சுபாவமே புதைந்து போய், அதனால் ஒருவரையொருவர் புரிந்து கொள்வது சிரமமாகிவிடுகிறது.'

அப்பா! அப்பா! எனக்குக் கேட்கப் பயமாயிருக்கு. அப்படியானால் என்னை மன்னித்துவிட்டீர்களா?

வானம் இடிந்து விழாமல், நீங்கள் எங்களுக்குத் தூலம்!

# தாயம்

**உமா:**

இன்று பிற்பகல் மயிலாப்பூர் போயிருந்தேன். உள்ளே நுழைஞ்சதும் நுழையாததுமா அம்மா, "மாப்பிள்ளை இப்பத்தான் போனார். அவர் இந்தப் பக்கம் எட்டிப் பார்த்தே வருஷம் மூணுக்குமேல் ஆறது. என்ன விசேஷம்? ஒரு கேஸரி கிளறி, பஜ்ஜி போட்டுத் தரலாம்ன்னு பார்த்தால் இன்னிக்கு ரவையும் கடலைமாவும் கடையிலே இல்லே. தெரிஞ்சுண்டே மனுஷன் வந்தாரோன்னு எனக்கு அவர் மேலே ஆத்திரம் வந்தது. கடையிலே வாங்கினால் கடலைமாவா அது? வெறும் பட்டாணி மாவு. தோச்சுப் போட்டால் எண்ணெய் பொங்கி வழியும். நம்ம வாங்கி அரைக்கற மாதிரி ஆகுமா?"

"சரி சரி... நீ அவரிடம் பஜ்ஜியைப் பத்தித்தான் பேசிண்டிருந்தையா? இல்லை, நீ போட முடியாத பஜ்ஜியைத் தின்ன அவர் வந்தாரா?"

"நான் உன்னைக் கேட்டால், நீ என்னைக் கேக்கறே. வராத மனுஷன் வந்தால், விஷயமில்லாமல் வருவாரா? அதுவும் இந்த மாப்பிள்ளை?"

"அட, உனக்கு எத்தனை மாப்பிள்ளை, இந்த மாப்பிள்ளையைத் தனியாக குறிக்க? சரி, என்ன விசேஷம்?"

"அதுதான் தெரியல்லியே! ஆனால் என்னவோ சொல்லத்தான் வந்திருக்கார். அதுக்குள் சொல்லலாமா வேண்டாமா-ரெண்டு மனசு போலவோ? 'உமா சௌக்கியமா'ன்னு கேட்டேன். ஏதோ ஒண்ணு] ஆரம்பிக்கணுமே!

'ஏன், அவள் இங்கேவந்துண்டு போயுண்டுதானே இருக்காள் ...அவள் சௌக்கியம் உங்களுக்குத் தெரியாதா?' ன்னார். இடக்கன். நேர்க்கேள்விக்கு நேர்ப்பதில் சொல்லிட்டுப் போகட்டுமே...ஆனால் வம்பு அடிக்கற ஆளுமில்லே. யோசனைபண்ணிப்பண்ணி மண்டையைக் குடையறது.''

''அப்படியா? எனக்குப் புதுசாயிருக்கே! பேச்சுன்னா அலைவையே!''

''உமா, நீ இன்னும் கொஞ்சம் மரியாதையாயிருக்கலாம்னு உனக்குத் தோணல்லே?''

''எல்லாரும் பிறத்தியாருக்குத்தான் வாத்தியாரம்மா!''

''உமா, சற்றே நிதானத்தில் இரு. உன் சுபாவம் எனக்குத் தெரியும்னாலும் அவரிடமும் இப்படித்தான் நடந்து இருப்பாயா?''

''இது என்ன பயமுறுத்தல்?'' எனக்குக் கோபமாயும் இருந்தது. பீதியாவும் இருந்தது. அப்பா இருந்த நாளில், அவர் உத்தியோகமுறையில், 'Witness Turned Hostile' என்பார். அது மாதிரியா ஏதேனும்...

''நான் என்ன பயமுறுத்தி, நீ உக்கிராண உள்ளே ஒளிஞ்சுக்கறது?'' அம்மா சிரிச்சாலும் அவள் புருவ நெரிசல் இன்னும் நீவவில்லை. கூடவே சீண்டிவிட்டேனோ?

''என்னவோ குருவித்தத்தல் மாதிரி, முன்னுக்குபின் தாக்கல் மோக்கல் இல்லாமல் பேச்சு தாவிண்டே போச்சு. ரொம்பநாள் கழிச்சு சந்திக்கிறோம். பேச்சு சகஜமா வரதா? அதுவும் மாமியாரும் மாப்பிள்ளையும்! நான் என் அமரிக்கையில் கதவு மூலையில் நின்னுண்டு பேச; அவர் கூடத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்திருக்கார்.

பேச்சுவாக்கில் சொன்னார்: 'நான் நாலு தங்கைகளோடு பிறந்தேன். உங்கள் வீட்டில் நாலு உடன்பிறந்தார், நடுவில் ஒரு பெண்-இரண்டுக்கும் வித்தியாசம் இருக்காதா?'

'தாராளமா'ன்னேன் பதிலுக்கு.

'அவள் இன்னும், அப்படித்தான் இருக்காள்...'

எனக்கு 'சுருக்'குன்னுது. 'ஆமா, இத்தனை வருஷம் கழிச்சு, நான் உமாவைப் பத்திச் சொல்லி, நீங்கள் புதுசாகத் தெரிஞ்சுக்க என்ன இருக்கப் போறது?'

இந்த வார்த்தை எப்படி, எந்த சம்பந்தத்தில் என் வாயிலிருந்து வந்ததுன்னு எனக்கே தெரியல்லே. நான் இப்படிச் சொன்னதும் அவர் என்னை ஒரு மாதிரியாப் பார்த்தார். ஏதேனும் தப்பிதமாய் பேசிட்டேனோ? எனக்கு 'திக்'குன்னு ஆயிடுத்து.

'லக்ஷத்தில் ஒரு வார்த்தை. நான் ஏதோ யோசனை கேட்க வந்தேன். நீங்கள் உபதேசமே பண்ணிட்டேள்! வரேன்.'

'கிர்ர்'னு எழுந்து போயிட்டார். 'புதுப்பால் வந்தாச்சு, டிகாக்ஷன் இறங்கிண்டிருக்'குன்னு ஒரு வார்த்தை சொல்லத் தோணல்லே. நேரமேயில்லை...நான் வாசலுக்கு வரதுக்குள், அவர் முனை திரும்பிட்டார். ஆமாம்; உங்களுக்குள் என்னடி, உமா?''

''என்னவாம் என்ன? எலிக்கு ஜட்டி கட்டல்லே, குழாயில் தண்ணி சொட்டறது, செம்பருத்திப் பூவை பறிக்காமலே தரையிலே உதிர்ந்து கிடக்கு''ன்னு வேடிக்கை பேசற மாதிரி மழுப்பிட்டு—ரொம்ப நேரம் தங்கல்லே-உடனேயே கிளம்பிட்டேன். இருந்தால் பிடுங்கியெடுத்துடுவாள்.

ஓஹோ, என்னை முந்திண்டுட்டாரா? மாமியாரை மத்தியஸ்துக்கு. No...No மாட்டவே மாட்டார். அந்த அளவுக்கு அவரை எனக்குத் தெரியாதா? ஆனால் நானும் மெனக்கெட்டு, இதே காரியமாத்தானே இன்னிக்கு இங்கே வந்தேன்! ஆனாலும் இன்னது தான் நடந்ததுன்னு விரல் வெச்சு சொல்லிக்கற மாதிரி ஒண்ணும் கிடைக்கல்லியே? குணங்களின் மோதல்னா உருக் கிடைக்காமல் இப்படித் தான் இருக்குமோ?

இதெல்லாம் அடிப்படையில் எப்போ, எங்கே ஆரம்பிச்சுது? நினைவை முட்டி முட்டிப் பார்த்துக்கறேன். நூல்நுனி கிடைச்சால்தானே இழுக்கலாம்! இழுத்தால் தானே சிக்கு வழிபிரியும்! எவ்வளவு பெரிய சிக்கு ஆயி டுத்து? இனி பிரிஞ்சவரைக்கும்தானோ? ஒண்ணு, இருக்கிற முடிச்சோடு சமாளிக்கப் பார்க்கணும். இல்லை, இந்த இடத் தோடு வெட்டி எறியணும். வெட்டி எறியறதா? அப்புறம் மிச்சமே என்ன இருக்கப் போறது? அம்மாடி, பயமா யிருக்கே! இனிமேல் அடியாவது, நுனியாவது?

Be honest with yourself - நான் காலேஜ் படிச்சேன் என்பதற்காக, இது ஒரு கோட்பாடின் உச்சரிப்பாய்க் காட்டிக் கொள்ளலாம். ஆனால் இதையே நான் மனசாட்சி யின் குரல்னு சொல்லிக் கொள்ள முடியுமா? இதனால் நான் புதுமைப்பெண் ஆகிவிடுவேனா?

எங்கள் இடையே பேச்சு அனேகமா அறுந்து போச்சு. அவர் காரியத்தை அவர் பார்த்துக்கறார். என் காரியத்தை நான். எனக்குச் சௌகரியப்பட்டபடி. ஆமாம்; அது அதுக்கு அதனதன் வேலைன்னு. அவருடைய கட்டுப்பாடு, ஒழுங்கெல்லாம் என் சுபாவத்துக்கு ஒத்துவர சமாச்சார மில்லே. அவர் துணியை அவரே தோய்ச்சுக்கறார். அவ ருடைய சமையலை அவரே பண்ணிக்கறார். கும்மட்டி

யில்... கட்டம் அந்த அளவுக்கு முத்திப்போச்சு. ஆமாம்; ஒருநாள், 'சாப்பிடறதுன்னா இப்போ சாப்பிடணும். போட்டுட்டுப் போறேன். அப்புறம் எனக்கு வேலை யிருக்கு'ன்னேன். வேலையென்ன வேலை? டி. வி. யில் சிவாஜி. அவருக்குப் புருவம் தூக்கித்து. ஒண்ணும் பேசல்லே. படம் முடிஞ்சு நான் எதிர்வீட்டிலிருந்து வந்தால், அவர் இலையில் தனக்குப் பரிமாறிண்டிருக்கார். சாதம், குழம்பு, கறி எல்லாம் ஆவிபறக்க, என்னை நிமிர்ந்துகூடப் பார்க்கல்லே.

எனக்கு ஆத்திரம். அந்த நிமிஷத்தின் உஷ்ணத்தில், 'ஓஹோ, அப்படியா? எத்தனை நாள் நடக்கப் போறது பார்த்துடறேன்'னேன்.

இன்னும் பார்த்துண்டேயிருக்கே.

அன்னிக்கு டி.வி.யும் நன்னாயில்லே. போனதுதான் மிச்சம். ஒரு பாசமலர் என்ன, ஒரு பாகப்பிரிவினை என்ன, ஒரு பாலும்பழமும் என்ன... அந்த சிவாஜியை இனி காணப் போறோமோ? சிவாஜியே அந்த சிவாஜியை இனி கண்டுக்க முடியுமோ?

நடுராத்திரியில் திடுக்கென விழிப்பு வந்து, படுக்கையில் எழுந்து உட்கார்ந்தேன். சிவாஜியைப் பத்தி நினைச்சுண்ட தெல்லாம் ஒருவேளை எனக்கே பொருந்துமோ? அதனால் தான் நினைப்பே அப்படி வந்ததோ? அவனைச் சொல்லும் சாக்கில் என்னையே சொல்லிக்கிறேனோ?

எட்டிப் பார்க்கிறேன். ஆபீஸ் அறையில் விளக்கு எரியறது. ஃபைலா? புஸ்தகமா? சிந்தனையா? எதில் ஆழ்ந் தாலும் மனுஷன் தன்னை மறந்தான்.

ஃ ஃ ஃ

இன்னிக்கு லேடிஸ் கிளப்பிலிருந்து வீடு திரும்பறப்போ ராத்திரி நேரமே ஆயிடுத்து. அங்கேயும் என்ன? பேரென்னவோ கேரம், பூப்பந்து, லைப்ரரின்னு பேரு. ஆனால் அசல் என்னவோ அரட்டை தான்! கொள்ளைப் பசி. ஏதேனும் எனக்காகப் பொங்கித் தொலைச்சுக்கணும்—காரியம்னாலே வெறுப்பாயிருக்கு.

உள்ளே நுழைஞ்சதும் சமையலறையிலிருந்து வெளிப்பட்டு என்னிடம் ஒரு தம்ளரை நீட்டினார்.

Hot சேமியா பாயஸம், முந்திரிப் பருப்பு முழுசா, குங்குமப்பூ-ஆமாம் மிதந்துண்டு-நெய் சுமா கமாளிக்கறது.

ருசிச்சேன். "H'-im-Tops...ரொம்ப தாங்க்ஸ். இன்னிக்கு என்ன விசேஷமோ?"

"ஒரு Celebration. இன்னியோடு 52 வாரம் பூர்த்தி, Not Out..."

எனக்குத் 'திக்'குன்னது. அத்தனை நாள் ஆயிடுத்தா?

"ஒரே நிமிஷத்தில் தேவாமிர்தத்தையே விஷமாக்க உங்களால்தான் முடியும்!" என்றேன்.

"கசப்பது பாயஸம் அல்ல. என் எண்ணமும் அல்ல. ஒருவேளை, உனக்குப்படும் யதார்த்தமோ என்னவோ? உனக்கு அப்படித் தோன்றினால், குடிப்பதோ-தொட்டி முற்றத்தில் கொட்டுவதோ உன் இஷ்டம் தானே!"

கோபமே தெரியாத Matter of fact voice!

இந்த மனுஷனுடன் ரோசம் கட்டுப்படி ஆகாது. ஆனால் கோபம் மட்டும் இருக்கு. ஒரு பக்கம் ருசி பிடிச்சி மூக்கறது. பசியோ பிராணன் போறது. எதிரே குடிக்காமல் எடுத்துண்டு உள்ளே போயிட்டேன்.

**ரவி:**

தாரகராமன் ஸார் ஒரு நேர்த்தியான மனுஷன். நான் சொல்கிறேன்-A Real Son of a Gun- அவர் இல்லாது இப்போ எவ்வளவு கஷ்டமாயிருக்கு. இருந்தவரை அவர் ஸீனியர், அவரிடம் நான் ஜூனியர் என்றா பழகினோம்? எங்கள்வரை நாங்கள் எப்பவும் Chums தான், இப்போது இருந்தால் தாட்சண்யம் இல்லாமல் நியாயம் சொல்லக் கூடிய மனுஷன் அவர் ஒருத்தர்தான். ஆனால் நானும் வேறுயாரை அறிவேன்?

வரவர என் நெஞ்சுள் தினம் ஒரு கோர்ட் நடக்கிறது. நானே நடத்தும் எதிர்த்தரப்பு வாதத்தில் அவர் குரலைத் தேடுகிறேன்.

''புருஷன், மனைவிக்கு இடையே-No Thank you D-the Divorce Laws. ரவி, நீ ஒண்ணு கவனித்திருப்பாய். நான் Divorce Cases எடுத்துக்கறதில்லே. சமாதானமாப் போவையோ வெட்டி மடிவையோ-உங்கள் பாடு! மத்யஸ் தத்துக்குக்கூட என்னிடம் வராதீர்கள், எல்லாமே பரம ஒற்றுமையா அமைஞ்சுடறதா? ராமனுக்கும் சீதைக்குமே ஒற்றுமையில்லே என்கிறேன்... அதற்கு என்ன சொல்லப் போறே?

''அப்படி முழு ஒற்றுமை அமையவும் கூடாது. தராசு ஆடிண்டேயிருக்கணும். அதுதான் வாழ்க்கை. விவாகரத்து சட்டம் இருக்கிறது என்பதனாலே-அக்கினி சாக்ஷி, அம்மி மிதிக்கறது, அருந்ததி பார்க்கறது எல்லாத்துக்கும் அப்புறம் என்ன அர்த்தம் இருக்கிறது ஐயா? ஒவ்வொன் றாய் போய்க் கொண்டிருக்கிறது என்று சொல்லிக் காட்டு பவர் சொல்லட்டும்...அவர்கள் வழக்கெடுத்துக் கொண்டு இந்த மடிசஞ்சி பிராம்மணனிடம் வர வேண்டாம்!

"கல்யாணம் அவசியம், அத்தியாவசியம்கூட. ஆனால் கல்யாணம் ஒரு ஏற்பாடு. அவ்வளவுதான்! சமுதாயத்தின் சத்திய ஏற்பாடு. Marriages are not love Heaven. So, do not fall in love with your wife. அதேசமயம் அவளுக்குத் துரோகம் பண்ணாதே. அதுதான் நான் சொல்வேன். There is love. ஆனால் அது ஒரு சக்தி. அது பலத்தைத் தான் தருமோ அழிக்கத்தான் அழிக்குமோ அறியேன். ஆனால் உறவுக்குஅது ஒத்ததல்ல..."

கோர்ட்டில் வழக்காடும்போதுகூட இதுபோலத்தான் ஒரு மாதிரியா, வெடுக்கு வெடுக்கெனப் பேசுவார், பாலிஷ் இல்லாததுபோல். ஆனால் சட்டத்தில் நிபுணன். Approach, Argument, Summing up எல்லாமே ரத்னச் சுருக்கம். இதில் சத்து இவ்வளவு தான். மிச்சம் எல்லாம் சுத்தி வளைச்ச வெட்டிப்பேச்சு என்கிற மாதிரி, Cut and right ஆக இருந்ததனாலேயே அவரிடம் கேஸ்கள் குவிஞ்சு கிடந்தன என்று சொல்லும்படியில்லை.

'Oh I got along!' அவர் வண்டியும் நன்றாய்த்தான் ஓடிக் கொண்டிருந்தது. Company Law வில் அவரை மிஞ்சக் கிடையாது.

ஒருநாள்—ஒருநாள் என்ன, எனக்கு அது அந்த நாள், அவர் சேம்பர்ஸில்—

"இன்று மாலை நானும் மாமியும் உன் வீட்டுக்கு வர தாயிருக்கோம். Oh I know—நீ முழிக்க வேண்டாம். உன் தாயார் Invalid—நீதான் சமைக்கிறாய், அவளுக்கு வேண்டியதையெல்லாம் நீதான் பண்ணுகிறாய் என்று தெரியும். நீ ஒரு சிரமமும் படாதே. நாங்கள் சம்பந்தம் பேச வரோம். இந்தப் பெண் பார்க்கும் படலத்தைக் கட் பண்றேன். நீ தான் உமாவைப் பார்த்திருக்கையே?"

பார்த்திருக்கிறேனா?

அடுத்து என் தோள்மேல் கை வைத்துக் கொண்டு கண்சிமிட்டியபடி,

"ரவிச்சந்தர், இது உனக்கும் எனக்கும் இடையே. They think you are a fine catch. And you are, you know! உன் தங்கைகளைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டே. கடமைகளைச் செய்துட்டே... உனக்கு இக்கு பிடுங்கல் கிடையாது. ஆனால் உமா ஒரு Tough Assignment. உன் இஷ்டம். நான் கட்டாயப்படுத்த மாட்டேன். Up to you."

சார் ஒண்ணும் சமஸ்கிருதத்தில் பேசவில்லை, ஆனால் அவர் எச்சரிக்கையை ஏற்கும் நிலையில் நான் இல்லை.

அம்மாவிடம் தெரிவித்ததும் கண்ணீரே விட்டுட்டாள். "ரவி, நீ பட்ட சோதனைக்கு, அம்பாள் கண் திறந்துட்டாள்டா... இனி நான் நிம்மதியாக கண் மூடுவேன்."

In the name of all that is beautiful. நான், உமாவைப் பார்த்திருக்கிறேன், ஆனால் ஏதோ ஸன்னிதானம் என்கிற முறையில். ஆனால் எனக்குக் கிடைக்க இவ்வளவு அருகே இருக்கிறாள் என்று கனவில் கூட நினைத்திருப்பேனா? What a jolt!

சாம்பசிவனும் அவர்களுடன் வந்திருந்தான். அவன் தான் S.K.C. பண்ணினான். "என்ன மாப்பிள்ளே!" என்றே அவர்களுக்கெதிரேயே அழைத்து விட்டான். அவனுக்குஅங்கே அவ்வளவு சுதந்தரம் உண்டு.

சாம்பசிவன் இந்த சமயத்துக்கு விஸ்தாரமாவே நினைப்புக்கு வருகிறான். ஏன்? புரியவில்லை.

''சாம்பசிவன் திறமையெல்லாம் பத்து வருஷத்துக்கு முன்னாடியே போச்சு. இப்போ அவன் சமையலா செய்யறான்? என்னத்தையோ பொங்கிப் போடறான். நாங்களும் தின்று வைக்கிறோம். பழைய வாஸனைகளை ஞாபகப்படுத்திண்டு!''

ஸார் என்ன வேணுமானாலும் சொல்லிக்கட்டும். நான் அங்குபோக நேரிடும் போதெல்லாம், அவன் கொண்டு வந்து வைக்கும் டிபனும் காப்பியும் A.1. எனக்குத் தேவையும்கூட. இல்லாதவனுக்குத்தான் பசியும் கூடுதலாகக் காண்கிறது.

வீட்டைவிட்டுப் பதினைந்து வயதில் ஓடி வந்து ராவுக்கு இவர்கள் வீட்டுத் திண்ணையில் ஒதுங்கினவனை, தாரகராமனின் தாயார், முகம் பார்த்து உள்ளே அழைத்து சென்று அன்னமிட்டதுடன் அன்று தங்கினவன் தான்...

(''எங்கேடா போறே?'ன்னா காசிக்காம். காசிக்குப் போற வயசைப் பாரு! நானே இன்னும் போன பாடு இல்லே!''—பெரிய பித்தளைப் பீப்பாய் போல் பாட்டி குலுங்கக் குலுங்கச் சிரிக்க நானே கேட்டிருக்கிறேன்!)

சமையலே பாட்டியிடம்தான் கற்றுக்கொண்டேன். அவனைப் படிக்க வைக்க இவர்கள் எவ்வளவோ முயன்றும் அவனுக்குப் படிப்பு ஏறவில்லை 'கரண்டி ஆபீஸ் எனக்குப் போதும்' என்று திட்டவட்டமாகச் சொல்லி விட்டான்.

ஸாருக்கும் அவனுக்கும் பிடிப்பு கூட. ஏறக்குறைய இருவரும் சமவயது.

''என்னை ரொம்ப நாளைக்குப் பேரைச் சொல்லித் தான் அழைத்துக் கொண்டிருந்தான். 'கட்சிக்காரன்,

பெரிய மனுஷா நாலுபேர் வந்திருக்கிற சமயத்தில் மானத்தை வாங்காதேடா.' என்று எல்லாரும் சொல்லிச் சொல்லி, ரொம்பக் கஷ்டப்பட்டுத்தான் நாலுபேர் நடுவில் அவன் வாயில் நான் 'ஸார்' ஆக மாறினேன்... ஆனால் அவனை நம்ப முடியாது!''-அவுட்டுச் சிரிப்புச் சிரிப்பார்.

சாம்பசிவன் கல்யாணமெ பண்ணிக் கொள்ளவில்லை. அதிலும் இவர்கள் பாச்சா பலிக்கவில்லை.

''அதெல்லாம் ஏதுக்கம்மா? பெண்டாட்டி வந்துட்டா அப்புறம் என்னைத் தனிக்குடித்தனம் வெச்சுடுவேள்... உங்களையெல்லாம் துறக்கணும். எனக்குக் கொஞ்சறதுக்கு குழந்தைகள் வேணும்னா, உங்கள் பையனின் பசங்கள் இருக்கான்களே! இந்த சந்தோஷத்துக்கு கொடுத்து வெச்சிருக்கணும். என்னை ரொம்பக் கெடுபிடி பண்ணினேள்னா, என் காசிப் பயணம் ஒத்திதான் போட்டிருக்கு!' என்று பாதி தமாஷ், பாதி மெய்யாக—

ஒருநாள் நானும் அவனும் தனியாயிருக்கையில் கேட்டேன்: ஏன் சாம்பு, நீ பிரம்மசாரியா, கல்யாணம் ஆகாதவனா? உனக்கு செக்ஸ் தேவைப்படவில்லையா?'' நாங்கள் சகஜமாகவே பழகினோம்.

''சொல்லித்தான் ஆகணுமா?'' என்னை ஒருமாதிரியாகப் பார்த்தான்.

''சொல்லேன், என்ன ஆகிவிடப் போறது?'' ஆனால் அவன் பார்வை அலரிப் போயிருந்தது.

''சரி சொல்றேன். நான் வீட்டை விட்டு ஓடிவந்ததே அதே காரணம் தான். இவாளுக்குக்கூட உண்மை தெரியாது. உன்னிடம் சொல்றேன்.

நான் இப்போ சொல்ற கட்டத்தில், என் வீட்டில், ஒண்டுக் குடித்தனமா ஒரு ஜோடி வந்தது. குழந்தை குட்டியில்லை. மாமிக்கு முப்பது வயசிருக்கும் வாட்டசாட்டமாயிருப்பாள்.

ஒரு மத்தியானம் வீட்டில் எங்கள் இருவரைத் தவிர யாருமில்லை.

'சாம்பு, தாயக்கட்டான் ஆடலாமா?

ஆட்ட சுவாரஸ்யம். காய் நகத்தற சிக்கலான யோசனையில் மாமி எழுந்து போனதுகூடத் தெரியல்லே. கதவுத் தாழ்ப்பாள் விழுற சத்தம் கேட்டுத் தலைநிமிர்ந்தால்—

சாம்பு கண்களைப் பொத்திக் கொண்டான். அந்தத் தருணம் அவனை இப்போது ஊடுருவுகையில் உடல் பூரா ஒருமுறை அவனுக்குக் குலுங்கிற்று.

''அவள் என்னை அழிச்சாள்; நான் பஸ்மமாப் போனேன்னுதான் சொல்லணும். அந்தக் காரியத்துக்கு, அதுவும் அவளோடு, நான் இன்னும் தயாராகல்லே... என்னவோ அருவருப்பா, அசிங்கமா அந்த 'ஷாக்' தான் மிச்சம். அந்தச் செய்கையில் எனக்கு எந்தப் பங்குமில்லை.

அவளுக்குக் காரியம் முடிஞ்சதும் அவள் ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டே.

'சாம்பு நீ No Good. ஆனால் எனக்கு யாருமே No Good. என் அதிர்ஷ்டம்... சாம்பு, நீ சமத்தாயிருப்பேன்னு நினைக்கறேன். இல்லாட்டா, உன் பாடுதான் கஷ்டம். விவகாரம்னு வந்தால், உன்னை நம்புவாளா, நான் சொல்றதை நம்புவாளா? நீயே யோசனை பண்ணிக்கோ.'

என்னைச் செல்லமாகக் கன்னத்தில் தட்டினாள்,

அப்புறம் எனக்கு வீடே கிலி ஆயிடுத்து. எந்த சமயத்தில் என்ன பண்ணுவாளோ என்கிற பயத்தோடு அங்கே என்னால் வாழ முடியல்லே. வீட்டை விட்டு ஓடி வந்துட்டேன். அன்னி தாயக்கட்டானை ஆயுளுக்கும் என்னால் மறக்க முடியாது. அது தாயக்கட்டானே அல்ல. நான் மாட்டிக் கொண்டு, இன்னமும் வெளியேற முடியாமல் தவிக்கும் சிலந்திவலை! ரவி, நீ இப்போ சொல்லணும்'' என் கைகளைப் பற்றிக் கொண்டான். ''நான் பிரம்மசாரியா, கல்யாணமாகாதவனா?''

அவன் விழிகளைப் பார்க்க சகிக்கவில்லை. தலை குனிந்தேன்.

தாரகராமன் இறந்து அவன் அதிக நாளில்லை. ஆறு மாதங்களுக்குள் ஒருநாள்-ஒரேநாள் ஜுரம்...நான்தான் கொள்ளி இட்டேன். அப்படித்தான் அவன் கடைசி இஷ்டம். ஆயுளுக்கும் இளைக்க முடியாதபடி பஸ்பமாகி விட்டவனுக்கு என் கொள்ளி அதிகப்படி. அதனால்தான் அவன் இஷ்டம் அப்படியோ?

ஃ ஃ ஃ

**உமா :**

''ஹலோ, உமா ஸ்பீக்கிங்...அங்கே யாரு? ஓ ராதா என்ன விசேஷம்? ஓ! நோ, தாங்க்யூ. Don't feel like it. Not in the mood, sorry, some other time...வெட்சுட்டுமா? Bye; Bye...''

'ஷாப்பிங்காம்...'

I hate shopping.

I hate T. V.

I hate pictures.

I hate myself
above all
I hate you-you...

ஃ ஃ ஃ

எப்போ எங்கள் பாதை பிசகிப் போச்சு? இன்னும் வெளிச்சமாத் தெரியல்லே. எப்படியும் மாமியாரும் ஸ்ரீதரும் இருந்தவரை மேலுக்கு வரல்லே.

மாமியாரின் அந்திமகாலத்துலே அவர்தான் எல்லாம் செய்தார். எல்லாம்னா, எல்லாமே...ஆமாம், யாராவது ஒருத்தர் செய்யணும்! அம்மாவுக்குப் பிள்ளை செய்யறார் செஞ்சுட்டுப் போகட்டுமேன்னு நான் எனக்கு சமாதானம் சொல்லிண்டாலும், அம்மாவுக்குப் பணிவிடை விஷயத்தில் நான் இன்னும் ஆதரவாக இருந்திருக்கலாமோன்னு இப்போ தோண்றது. ஆனால் வியாதியஸ்தாளைக் கவனிக் கறது படு Bore. 'நீ ஒருநாள் படுக்கமாட்டியா...உனக்கு ஒருத்தர் செஞ்சாக வேண்டாமா?' என்கிற கேள்வி எனக்கே தெரியறது. அதென்னவோ சொல்லத் தெரியல்லே.

சொல்லத் தெரியாமல் இல்லை. உன்னையே நீ ஏமாத்திக்கறே...இந்த வயசில் நீ இப்படி சொல்லிண்டால், யாருமே சிரிப்பா. இது என்ன தெரியுமா? பிறரைப் பற்றியே எண்ணம் இல்லாத அப்பட்ட சுயநலம்.

அம்மாவின் கடைசி சமயத்தில் நான் பக்கத்தில் இல்லை. அவர் தான் ஒருவாரமா, அம்மாவின் படுக்கை யண்டைவிட்டு அசையாமல், அன்ன ஆகாரம்கூட மறந் துட்டு...

தற்செயலா அன்னிக்கு மயிலாப்பூர் போயிட்டேன். ஆமாம்: தினமும்தான் அம்மாவுக்கு அப்படியிருக்கு. அதற்

காக காரியங்கள் நின்னுட முடியுமா? அங்கேகூடக் கேட்டா : 'என்னடி இந்த சமயத்தில் நீ அங்கேதானே இருக்கணும்?' நான் ஒன்றும் பதில் பேசல்லே. மறுநாள் காலையே ஆள் வந்துட்டான். வீட்டில் மத்தவாளோடு சேர்ந்து தான் போனேன்.

எனக்குப் பிணம்னாலே பயம். ஆனால் இதை இவா கிட்டகூட என்ன சொல்லிக்க முடியும்... இந்த உண்மைக் காரணத்தை?

ஃ ஃ ஃ

அவர் எதுவுமே என்னைக் கேட்டுக்கல்லெ. அதுவே குத்திப்பிடுங்கறது. பாவி, ரெண்டு அடிவேணும்னா என்னை அடிச்சுடேன்!

ஃ ஃ ஃ

அப்புறம் இந்த ஸ்ரீதர் பண்ணின துரோகத்தை...

பெற்ற ஒரு பிள்ளையும் சம்பாதிக்கறேன்டா ராஜான்னு வாயில்கூட சரியா பேர் நுழையாத வெளி நாட்டுச் சீமைக்குப் போயிட்டான்னா, எனக்கு இருக்கற ஒரு பிடிப்பும் போயிடுத்து. போய்வருஷம், அஞ்சாறது. மாசம் ஒரு கடிதாசு என்னவோ வரது—என் பேருக்குத் தான் வரது, அவரும் என்ன எழுதினான்னு கேக்கல்லெ. அவர் கேக்கல்லே நானும் காண்பிக்கல்லே. அங்கேதான் என்னவோ ஒரு வரட்டு கௌரவம் தடுக்கறது. அவர்தான் கேட்டால் என்ன? அவருக்கு ஆபீஸ் அட்ரெஸ்ஸுக்கு தனியாப் போடறானோ என்னவோ? அப்படி ஒண்றிரண்டு அவர் என் டேபிள்மேல் வெச்சுட்டுப் போயிருக்கார். என்னிடம் அந்த பரஸ்பரம் இல்லேன்னு தானும் காண்பிக்கறதை நிறுத்திண்டிட்டாரோ என்னவோ? ஆனால்

எனக்குத் தெரியும். பிள்ளைக்கும் அப்பாவுக்கும் தான் என்னைக் காட்டிலும் ஒப்புறவு ஜாஸ்தி.

ஆனால் அவருக்கு தனியாப் போடுவான்னு தோணல்லே. எனக்கு எழுதறபோதே அப்பா, அம்மா வுக்கு நமஸ்காரம்னு சேர்த்துப் போட்டுடறான். தபால் செலவும் கொஞ்சமாவா இருக்கு? ஸ்ரீதர் இதெல்லாம் பாக்க றவன்தான். ஆள் சுபாவத்திலேயே கெட்டி. ஹூம்...

"நீங்கள் சொல்லக்கூடாதா... இவன் இப்படிக் கரை தாண்டிப் போய்த்தான் ஆகணுமா? நமக்கு இருக்கிறது இவனுக்குப் போதாதா?"ன்னு நான் விக்கி விக்கி அழுத போது இவர், "அவனுக்கு வயசாகல்லியா...நீ இப்போ சொல்றேதெல்லாம் ஏற்கெனவே அவனுக்குத் தெரியாதா? நான் தனியா எடுத்துச் சொல்ல மாட்டேன். அவனுக்குத் தோணினதை அவன் செய்யறான். அவன் விதியை அவன் நூற்றுக்கறான். அதுதான் முறை. உனக்கு நான், எனக்கு நீ, மிஞ்சறோமா பாரு..."

அப்போது என்னை அணைச்சாற் போல் என் தோள் மேல் அவர் கைப்பட்ட இடத்தைத் தொட்டுப் பார்த்துக்க றேன். பிரயோசனம்...? அது அந்தநாள்.

எந்த நாள்? அதுதான் புரியல்லை. நானா நெனைச்சுக் கற நாளோ?

அது அது அப்படி அப்படி விட்டுப் போச்சுன்னா விட்டுப் போனதுதான். அப்புறம் ஒட்றதுன்னா சதை யோடு சேர்ந்து வளர்றது கிடையாது. கோந்து, Fevicol போட்டு ஒட்டிக்கற சமாசாரம்தான்... அதுதான் பயமாயி ருக்கு.

'No sun in life
No fun in life

Life is not for fun, my gal.
It may be a big joke
But certainly no fun.'

இதை நான் சொல்லவில்லை. என்னிடம் இந்த பாஷை ஏது? ஆனால் நள்ளிரவில் விழிப்பு வந்து, இனி தூக்கத்தில் இமைகள் மூடாது எனத் தெரிந்தபின், ஜன்னல் வழி நிலவு மயக்கும் முழுநிழல் அரைஒளி முக்கால் இருள் நிலையில், நிலைக்கண்ணாடியிலிருந்து என் முகம், எனக்கே புதுமுகமாக—அப்பவும் என்னிடம் சொல்லவில்லை, இவ்வார்த்தைகளைச் சிரிக்கிறது. ஜன்னல் கம்பிகளின் நிழற்கோடுகளே புலியின் வரிக்கோடுகளாக மாறிக் காட்டும் மருள் நேரம்.

ஸ்ரீதர், இந்தநேரத்தில் நீ என்ன பண்ணிக் கொண்டிருப்பாய்? உன் ஊரில் இப்போ பகலா, விடிவேளையா? தனியாயிருக்கே. அம்மாவை நினைக்கிறாயோ? சிகரெட், சிகரெட்-? இந்த பழக்கம் எல்லாம் இங்கிருக்கும்போது உனக்கு இல்லை. ஆனால் தனிமையைக் கொல்லும் சாக்கில் தானே இந்தப் பழக்கம் ஆரம்பிக்குமாமே...? ஆனால் சிகரெட் இப்போ யார் பிடிக்கல்லே? அதைக் கெட்டபழக்கம், பாபம் என்று சொன்ன நாளெல்லாம் போயிடுத்து. அத்தோடு நிக்கறயா...இல்லை, இன்னும் வேறு ஏதானும்?

நானா நெனச்சுக்கறேன், நானே என்னைப் புண்படுத்திக்கறேன், நானே அனாவசியமா அநியாயம் நினைக்கிறேன். எனக்கே தெரியறது. ஆனால் மனசு என்கறது அதற்குத் துணையுமில்லாமல்—சும்மா இருக்கமாட்டன்கறதேடா... என்னடா செய்வேன், என் மகனே? சுருக்க வந்துடேன்! முடியல்லேடா!

ஃ ஃ ஃ

இன்று பிற்பகல் சுமார் மூணுக்கு பழைய ட்ரங்கை—எதுக்குன்னுகூட மறந்து போச்சு. இப்போ கொஞ்ச நாளா

அடிக்கடி Current Off-னு மெழுகுவத்திக்கா...? கொசு உபத்ரவம் பொறுக்காமல் டார்ட்டாய்ஸ் பாக்கெட் டுக்கோ? வேலைக்காரிக்குப் பழம்புடைவைக்கா? இல்லை, அது அது அப்பப்போ அகப்படறப்போ எல்லாத்துக்கு மேவா? ட்ரங்கைக் குடையறப்போ, ஒரு ப்ளாஸ்டிக் தம்ள ரில் பித்தளைத் தாயக்கட்டை ஒரு ஜோடி, சோழி, புளியங் கொட்டை, ஒரு சாக்பீஸ் உள்பட...இது இங்கே எப்படி வந்தது? அம்மாவின் வேலையாத்தான் இருக்கும்.

மாகாளிக்கிழங்கு ஊறுகாயோடு Biz பவுடர்! வடாத் துடன், கருவேலம் பட்டைப்பொடி! (இங்கே தேய்க்கறது பேஸ்ட், ஆனால் அது பற்றி அவளுக்குக் கவலையில்லை.) விளக்குக்குப் பஞ்சுத்திரிக்கட்டு. இதுமாதிரி அப்பப்போ அனுப்பற சீரோடு இதுவும் வந்து இங்கு அடைச்சிருப் பேன்—

வாசற்கதவு Bell சத்தம் கேட்டுப் போய்த் திறந்தால் இவர் நிக்கறார். ஆனால்... 'இதென்ன கூத்து?' ஆச்சரியத் தில் பின்னடைந்தேன்.

அம்முகத்தில், லேசாக லஜ்ஜையின் திட்டு. நான் கதவைத் திறந்திருந்த இடைவெளிக்குள் உடம்பை இடுக்கிக் கொண்டு உள்ளே வந்தார். "கையில் என்ன? ஆ, How Strange! ஒரு ஆட்டம் போடுவோமா?"

"இது எந்த சாமிக்கு வேண்டுதலை? எந்தக் காரிய சித்திக்குக் காணிக்கை? ஸ்னானம் ஆச்சா, இனிமேல் தானா?"

எனக்கு ஒரு பக்கம் சிரிப்பு; கூடவே வெறுப்பு. இதென்ன கோணங்கித்தனம்? ஆனால் ஆசாமி இடிச்ச புளி. ஏதோ காரணம் இருக்கணும்.

''ஸ்னானம் பண்ணலாம். ஆனால் முன்னால் ஒரு தாயக்கட்டான் போடலாம்...''

''அதுக்கென்ன அவசரம்? ஸ்னானம் கூடப் பண்ணாமல்?''

என்மேல் படாது, என் கை தம்ளரைப் பிடுங்கிக் கொண்டு, உடனே தாழ்வாரத்தில் உட்கார்ந்து கட்டானை வரைய ஆரம்பித்து விட்டார். நானும் எதிரே உட்கார்ந் தேன். திடீரென இவரிடம் ஒரு ஈர்ப்புசக்தியை உணர்ந்தேன்.

''உன் கையில் தாயக்கட்டையைப் பார்த்தவுடன் என் தலையையும், நம் தலை விதியையும் இணைத்த ஏதோ ஒரு சேதியை-நம்மை மீறிய சக்திகள் அனுப்பியிருக்கும் சேதியைப் படிக்கிறேன்—''

கேலியில் என் கீழ்உதடு சுருண்டது; ''என்னைச் சினிமாப் பித்துனு கேலி செய்வதில் குறைச்சலில்லே. ஆனால் எனக்குக் கூட இப்படி ஒரு சினிமா டயலாக் தோணாது!''

''Perhaps So...வாழ்க்கையில் சில நெருக்கடி கட்டங்கள் நேர்கையில், வேஷங்கள் உரிந்து அந்த சமயம் நிர்வாணம் ஆகும்போது, அது Unreal ஆக Melodramatic ஆகப் படத்தான் செய்கிறது. அப்படிப்பட்ட ஒரு கட்டத்துக்கு நாம் வந்திருக்கிறோம், கொஞ்சநாட்களாகவே-உனக்குத் தெரியவில்லையா?''

குரலில் ஓர் அசாதாரண நிதானம். அமைதி வாயடைத்துப் போனேன்.

''என்றேனும் ஒரு நாள் நாம் இந்த வேளையை நேருக்கு நேர் சந்தித்துத்தானே ஆக வேண்டும்...? வேளை வந்துவிட்டது.''

எனக்கு உடம்பு பூரா 'ஜிவ்.' This Man Means Business. இந்த மனிதன் திடீரென அன்னியனாகி விட்டான். நடுக்கூடத்தில் உட்கார்ந்திருக்கையிலேயே, ஏதோ ஒரு வகையில் மேல்கூரையைப் பிரிக்கிறான்...இந்த மனிதன் அஞ்சத் தக்கவனாகி விட்டான்.

அஞ்சுகையிலேயே மனம் ஏதோ ஒரு விடுதலையில் துள்ளிற்று. என் உண்மையைச் சந்திக்கப் போகிறேன். காத்திருந்த இத்தனை நாட்களும் ஒரு வழியா பின்னால் போச்சு... அப்பாடா! உங்கள் பயமுறுத்தல் இப்பவோடு சரி.

"Yes உமா... இந்தப் பொய்மையைக் கலைச்சாகணும். நாம் விவரங்களுக்குள் போய் அலசிக் கொண்டு ஒருவரையொருவர் குற்றம் சொல்லிக் கொண்டு, ஒருவரையொருவர் இன்னமும் ரணமாக்கிக் கொண்டிருக்க வேண்டாம். கட்டம் முற்றிப் போச்சு. நாம் கணவன்- மனைவியாக வாழவில்லை. ஒருவரையொருவர் பலப்பரீட்சையில் இறங்கி விட்டோம். இது கணவன் மனைவியிடையே வரக்கூடாது. ஆனால் வந்துவிட்டது. யார்மேல் தப்போ யார் மேலானும் இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் வந்து விட்டபின் பரீட்சை நடந்தே ஆகணும். நடக்கட்டும். இதற்கு ஒரு முடிவு கண்டாகணும். அதற்காகத்தான் இப்போ சொக்கட்டான் ஆடப் போகிறோம், பணயத்துக்கு!"

"பணயமா?"—ஆச்சரியத்தில் நிமிர்ந்தேன்.

"Yes"

"அஞ்சு பைசா, பத்து பைசா?"

"ஏன், அதைவிடப் பெரிதாக உன்னால் நினைக்க முடியல்லையா?"

"ரூபாய்."

புன்னகை புரிந்தார்.

"பெரிய ரூபாய்க்கு நான் எங்கே போவது? என் நகைகளைக் கேக்கறேளா?"

பெருமூச்செறிந்தார். "ஆட்டத்தைத் துவங்குவோம். முடிந்து, கெலிப்பு தோற்பு நிச்சயமான பின் சொல்கிறேன்."

"நலமே. Childish."

"அதென்ன அவ்வளவு சுலபமாகச் சொல்லிட்டே?" கட்டானின் நடுக்கோடுகளையும் மலைகளையும் பட்டை தீட்டிக் கொண்டு அதைத் தெளிவாக்குவதில் அவர் கவனம் ஆழ்ந்து—

அந்த நெற்றியில் அகலமும், கறுகறு புருவங்களும், புருவமத்தியில் ஒரு வடு—செதுக்கினாற்போன்ற அந்த வாயும்—இப்பத்தான் பளிச்செனத் தெரியறது. Mr. G. ரவிச்சந்திரன், You are a Handsome Man.

"இந்த விளையாட்டின் பரம்பரை வேதகாலத்தையே அல்லவா தொடறது! பரமேஸ்வரனும் பார்வதியுமே கைலாசத்தில் ஆடினதாக ஐதீகம் பேசறது. பாரதக்கதையின் அச்சே, இந்தச்சொக்கட்டான் ஆட்டத்தில் தானே சுழல்கிறது! 'பொறுக்கவா? கோர்க்கவா?' சினிமாப் பிரியர்களின் Favourite moment அல்லவா? Enough-முதல் ஆட்டம் சாமிக்கு..." கட்டை உள்ளங்கைகளில் பரபர வென்று தேய்த்து உருட்டினார். பன்னிரண்டு—இரண்டுக்கும் Blank Side. Faceless. சுவாமி ஆட்டம் Correct. இப்போநீ?"

"ஆடினேன். ஆடிவிட்டுக் கை கொட்டினேன்.

"எடுத்தவுடனேயே தாயமா? Beginner's Luck!"

எடுத்து ஆடினேன். மறுபடியும் தாயம்.

"Good, Good! தாயம் என்கிறது லேசான சமாச்சாரமா? தாயமோ தலைவிதியோ..."

"இதுக்கென்ன அவ்வளவு பெரிய வார்த்தை!?"

"Why not? ஒவ்வொரு தாயமும் காய்க்கு ஒரு பிறவி. Then the Excitement! அடுத்து விழப்போகும் தொகையின் மர்மம் கட்டைக்குள் அடக்கம். No wonder, It is the Game of Life itself. மறுபடியும்தாயமா? So your luck holds on?"

எனக்கு மூன்றுகாய்கள் இறங்கிய பின்னர்தான் அவருக்கு முதல் தாயமே விழுந்தது. அப்புறம் நேரம் பொறுத்துக் கட்டைகளுக்கு மனமே இல்லாதுபோல் இன்னொரு தாயம். ஆனால் அவர் காய் இறங்கி வெளி வந்ததும் என் காய் காத்துக் கொண்டிருந்தது. 'பன்னிரண்டு, ரெண்டு, இரண்டுக்கு வெட்டி, பன்னிரண்டுக்கு முதல் பழம் ஏறினேன்.

அவருக்கு அடுத்த ஆட்டத்திலேயே இரண்டு தாயங்களும், ஒரு மூச்சில் சொல்லி அடங்காத மாதிரி நீண்ட தொகையும்—

எனக்கு ஆட்டத்தில் சூடும், ரோஷமும் பிடித்து விட்டன. கட்டைகளை வீசிப் போட்டேன். நெருக்கிப் போட்டேன். அவர் காய்களை என் காய்கள் வெட்டின. வீழ்த்தின. துரத்தின, மடக்கின, தப்பின...pincer moves.

எதிர்க்காய்களை வெட்டும் ஒவ்வொரு சமயமும் என்னுள் ஒரு குரூர மகிழ்ச்சி பொங்கிற்று. இத்தனை நாட்கள் என்னுள் அடக்கி வைத்திருந்த ஆத்திரம் வடிகால் கண்டது. இந்த மனுஷனை ஒரு பழம்கூட ஏற விடக்

கூடாது. முழுக்கப் பழிவாங்கணும். அப்போத்தான் எனக்குக் கூந்தல் முடிச்சமாதிரி. ஆனால் அப்படி இவன் உனக்கு என்ன தீங்கு செய்தான்? I don't know. I don't care... இவனுடைய ஆணவத்தை பூரா அழித்தாகணும்... கட்டைகளும் என் பங்கில் இருந்தன.

The hunter and the prey. ஒன்றை யொன்று ஒன்றுக் கொன்று எது எந்த சமயத்தில் இடமாற்றம்? இது தான் த்ரில். என்னை வெறி பிடித்துக்கொண்டது. பலப்பரீட்சை யாம்! உங்கள் இஷ்டப்படியே, உங்கள் நிபந்தனைப்படியே, You are having it.

என் கடைசிக் காயைப் பழமெடுத்து தாயக்கட்டை களை வீசி எறிந்தேன்.

"ஐயா, ஆட்டம் இழந்தவரே, இப்போது என்ன சொல்கிறீர்கள்? உம்முடைய பணயத்தைக் கக்கும்!"

"உள்ளே போய்க் குத்துவிளக்கை ஏற்றிக்கொண்டு வா!"—குரல் வெகு அமைதி.

"படம் தொடர்கிறதா"

"இல்லை, விளக்கேற்ற நேரமாகி விட்டதே!"

ஆம்! இப்போத்தான் எனக்குத் தெரிந்தது. இத்தனை நேரமாகி விட்டதா? விளக்கை ஏற்றிக் கொண்டு வந்தேன்.

"தாயக்கட்டானின் நடு மலையில் வை"

சொன்னபடி.

எழுந்து நின்றார். திடீர்னு என்ன உயரம்?

"உமா, இந்த வீடு-வாசல்-இதில் அடங்கிய சகல சொத்துக்கள், மேலும் என் சுய சம்பாதனையில் வாங்கிப் போட்டிருக்கும் நிலபுலன், என் பாங்க் பாஸ்புக்,

எல்லாமே உனக்குச் சொந்தம்... என்றுமே இவை உன்னுடையவைதான். நம் உறவு சகஜமாக இருந்தால் நம்முடையது என்கிற முறையில் இருந்திருக்கும். ஆனால் இப்போதிலிருந்து எல்லாம் உனக்கு மட்டுமே சொந்தம். இவைமேல் எனக்கு இனி எந்த உரிமையும் இல்லே...'' என்பதற்கு அடையாளமாக தன் மழித்த தலையைத் தடவிக் கொண்டார். ''இந்த நிமிஷத்திலிருந்து, நான் இன்னும் இங்கு நின்றுகொண்டிருப்பது உன் தயவு, உன்னிடம் கேட்காத அனுமதி...''

''அப்படின்னா? எனக்கு ஒண்ணும் புரியல்லியே?'' உண்மையிலேயே திகைப்பாயிருந்தது.

உள்ளங்கைகளை விரித்தார்.

''I am going away...பலப்பரீக்ஷை முடிந்தது.''

—வார்த்தைகளின் கனம் அந்தக் குரலின் அழுத்தத்தில், என்னுள் அமிழ்கையில், அர்த்தம் தோய்கையில், என் முழங்கால்கள் என் கீழ் இற்றன. காலடியில் பூமி வாய் திறந்தது.

''No! No!! No!!!'' என்னுள் கற்கள் இடிந்து அவைகளுடன் நான் சரிந்து அவர் முழங்கால்களைப் பற்றிக் கொண்டேன்.

''எனக்கு நீங்க வேணும்! நீங்கள் வேணும்!! நீங்கள் தான் வேணும்!!!''

—அடிவயிற்றிலிருந்து இந்தக் கதறல், மடையுடைந்த இந்தக் கண்ணீர்ப் பெருக்கு, அதில் என் குளிப்பு... தினம் என்னளவாய் இத்தனை நாட்களாக கல்லாய்க் கனத்து விட்ட என் இதய பாரம் இந்தக் கண்ணீர் ஸ்னானத்தில் அதன் கரையல் அம்மாடி—இதுவரை எதற்கேனும் அழுத

தாகவே எனக்கு நினைவில்லே...எல்லாமே புதுமை. அழுகை இத்தனை மகத்தான அனுபவமா?

கன்னத்தில் கண்ணீர் புரண்ட வண்ணம் அவரை அண்ணாந்து நோக்கினேன்.

பனிப்படலத்தில் தெளிவு மங்கிய மலைச்சாரல்போல் ஏதோ வகையில் முடிவற்றவனாய் பயமாயிருந்தான். ஆனால் நான் மலையின் அடிவாரத்தில் இருந்தேன். அதுவே தான் என் தைரியம்! என் உண்மை இவரன்றி வேறு எது?

குத்துவிளக்கின் வெளிச்சத்தில்—

தாயக்கட்டைகள் விழுந்திருந்த நிலையில்,

தாயம்—

கண் சிமிட்டிற்றோ?

# கறந்த பால்

ஸ்ரீமான் பாஸ்கரன், வழக்கப்படி, விடிவெள்ளி வேளையில் சிந்தாமணி படித்துறையில் ஸ்னானம் செய்து கொண்டிருக்கையில், தண்ணீரில் காலடியில் கெட்டியாகத் தட்டுப்பட்டு, அதை எடுத்துப் பார்த்தால்-விக்ரஹம். அன்று வெள்ளிக்கிழமை. பாஸ்கர் புல்லரித்துப் போனார்.

வீடு திரும்பியதும், ரேணு வழக்கம்போல் அப்போது தான் காப்பியடுப்பைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய குளியல் எல்லாம், காப்பிக்கடை ஆனபின் தான்.

பாஸ்கரிடம் ஒரு விசேஷம். தன்னை எடைக்கல்லாக வைத்துக் கொண்டு, மற்றவர்களும் தன் எடையையே, அவர்களுடைய செயலில் காட்டவேண்டும் என்று எதிர் பார்ப்பதில்லை. கட்டாயப்படுத்துவதுமில்லை. என் அம்மா சின்ன வயதிலிருந்தே என்னை, ப்ராத ஸ்னானம், சந்தியா வந்தனம், ஸ்தோத்திரம், ஜபம் என்று வளர்த்துவிட்டால் எல்லாரும் அப்படி இருக்க முடியுமா? பல் குத்திக் கொண்டே அடுப்பு பற்ற வைக்காமலிருந்தால் சரி, அஞ்சுக்கு இரண்டு பழுதில்லையானால் வண்டியை ஓட்டு! என்று வாய்விட்டே சொல்லமாட்டார்.

அம்மா, சரியாகப் பிள்ளை தலையெடுக்கற சமயத்தில், வந்த வழி போய்ச்சேர்ந்துவிட்டாள். பாஸ்கர் அவளுக்கு ஒரு மகவு. ஆகையால் அவள் மறைந்ததும் அவர் ஒண்டிக் கட்டையாகி விட்டார்.

ரேணு புத்தியில் அல்லது தேவையான சமயங்களில், உடல் சுறுசுறுப்பில், எள்ளளவும்குறைந்தவளல்லள். சக்தி

கள் வரவழைத்தாற்போல், உள்ளிருந்து சமயத்துக்கு ஆஜர். ஆனால் அவசரம் என்ன தட்டுக்கெட்டுப் போறது? மணமாகி மூன்று வருடங்களாகின்றன. இன்னும் எதிரும் புதிருமாக இரண்டு பேர்தான்.

ரேணு மறுதாரம். அம்மா காலமான கையுடன், சுற்றியிருந்தவர்கள், இடம் பார்த்து, ஜாதகம் பார்த்து, பாஸ்கருக்கு மணம் செய்துவைத்தனர். மறு வருடமே, முதல் பிரசவத்திலேயே, அவர் மனைவி, தான் ஈன்ற மகவுடன், பூமிக்குத் தன் பாரத்தைக் குறைத்துக் கொண்டு விட்டாள்.

வீட்டில் ஃப்ரிட்ஜ், க்ரைண்டர், மிக்ஸி, gas இத்யாதி நவீன உபகரணங்களுடன் பாஸ்கர் தானே சமைத்து சாப்பிட்டு, உத்யோகத்துக்கும் போய்க்கொண்டு ஐந்து வருடங்கள் ஓடிவிட்டன. ஆனால் இப்படியே எத்தனை நாள் நடத்த முடியும்? என்றேனும் ஒரு நாள் அலுப்புத் தட்டாதா? நேற்றைய குழம்பை, ஃப்ட்ரிஜ்ஜிலிருந்து எடுத்துச் சுடவைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தால் என்றேனும் அது வாடை காட்டாதா? அதன்மூலம் தன் வாழ்க்கையிலேயே வாடை அடித்துக் கொண்டிருப்பது தெரியாமலா போய்விடும்? எல்லாமே நாமே அடுக்கி மூடி வைத்துக் கொள்கிற சமாச்சாரம்தானே!

அத்துடன் வயதும் ஆகிவிட வில்லையே!

இச்சமயம் அண்டையார் உதவியை அவர் நாடவில்லை. தினசரிப் பத்திரிகையில் 'மணமகள் தேவை' விளம்பரம் கொடுத்தார். கொடுத்ததுதான் கொடுத்தார்-இத்தனை பதில்களா வரும்? பாஸ்கருக்குச் சிரிப்பு வந்தது. அன்று மாலை, ஸ்னானம் செய்து, சந்தியாவந்தனம், காயத்திரி ஜபம் எல்லாம் முடித்துக் கொண்டு, குத்து விளக்கை ஏற்றி, வந்த அத்தனை கவர்களையும் அடுக்கி அம்பாள்

படத்துக்கெதிரே வைத்துத் தான் கண்ணை மூடிக் கொண்டு, அந்த அடுக்கிலிருந்து ஒரு கவரை எடுத்தார்.

விளைவு

ரேணு கொடுத்து வைத்தாள்.

அப்போது ரேணு ஹாஸ்டலில் இருந்து கொண்டு ஒரு சிறிய பள்ளியில் ஆசிரியையாக இருந்தாள். கொடுத்து வைத்தாள் என்பதில் சந்தேகமா? கணவன் தோற்றத்தில் குறைவா? உத்தியோகப் பதவியில் குறைவா? அவருடைய மேல் அதிகாரிகள் இரண்டு முறை அவரை வெளிநாடு போகக் கோரி, மறுத்து விட்டார். காரணம்? அவருடைய நேம, நிஷ்டை, அனுஷ்டானங்களுக்குத் தடை வரும் என்று தான்.

போன இடம் எல்லாம் ஸ்னானத்திற்கு காவிரி கிடைக்காது. ஆனால் தினம், கோவில் தரிசனம் பண்ணா மல் அவரால் இருக்க முடியாது. ஹா, ஹூ என்று சாளிக்ராமம், கல்லுப் பிள்ளையார், ஆராதனை இதெல் லாம் வைத்துக் கொள்ளவில்லை.

அம்பாள் படத்துக்கு லலிதா சஹஸ்ரநாமம் சொல்லி, வெள்ளிக் கிழமைதோறும், பாயஸ நைவேத்யம் பண்ணி, அதைக் குழந்தைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதில் இருக்கும் மகிழ்ச்சி, அனுபவித்தவருக்குத்தான் தெரியும். இதெல்லாம், அதனதன் ஐதீக வாசனையுடன் லண்ட னிலோ, நியூயார்க்கிலோ கிடைக்குமா?

No, இந்த தங்கச் சங்கிலியை, அயல்நாட்டு வாசத்தில், சேதப்படுத்திக் கொள்ளவோ, கத்திரித்துக் கொள்ளவோ அவர் விரும்பவில்லை. இல்லை என்று அடித்தே சொல்ல லாம். அவரால் முடியாது. சீலம் ரத்தத்தில் அப்படி ஊறிப் போயிருந்தது.

ஒவ்வொருத்தர் மாதிரி தினப்படியே பரபரப்பும், ஏதேனும் அசாதாரணம் நேர்ந்துகொண்டிராமல், பதற்ற மற்ற அவருடைய வாழ்க்கையில் இந்த விக்ரஹம் கிடைத்தது அவருக்கு ஒரு அபூர்வமான சம்பவம் தானே?

நன்கு விடிந்த காலை வெளிச்சத்தில் விக்ரஹத்தைச் சோதித்துப் பார்த்தார். சுமார் ஏழங்குல உயரத்தில், நல்ல கனம். பஞ்ச உலோகங்களும் சேர்ந்திருக்குமோ? அம்பாள் தவத்திலிருப்பது போல் ஒரு அசாதாரண பிரதிஷ்டை. வலது காலை ஊசி மேல் ஊன்றிய படி, முழு காஷாயத்தில், தியானத்தில் ஆழ்ந்து நிற்கிறாள். அப்பா! என்ன அழகு! என்ன பொலிவு.

இந்த வடிவம் வீட்டில் வைத்துக்கொள்ள உரியதா அல்லது கோவிலில் சேர்த்துவிடலாமா? என்று சந்தேகம் தோன்றிற்று. நாளைக்குத் தீர்மானம் பண்ணலாம் என்று நாளை, நாளையாகத் தள்ளிப்போய், கண்டெடுக்கப் பட்டவள் ராஜராஜேஸ்வரி படத்தடியில் தங்கி விட்டாள்.

தினப்படிக்கு மஹாநைவேத்யம் நைவேதயாமி. சுக்ரவாரம் பாயஸம்.

காஷாயணி
காத்யாயினி
தபஸ்வினி
கன்யாகுமரி
தேவி வந்தே வந்தே

அவளுடைய ஆகர்ஷம் பிரமிக்கத்தக்கதாக இருந்தது. ஆபீசில் சிக்கலான ஃபைல் ஒன்றில் ஊன்றி இருக் கும்போது, பக்கங்களிடையே கரென்ஸீ நோட்டில் water mark போல் அவள் வடிவம் தோன்றும். விஷயத்தின்

கவனம் குலைந்து, சிந்தனை பூரா அவளிடம் நிலைத்து விடும். ஒரு தினுசான ஆனந்த நிலை. வியப்பு நிலை. வெகு காலம் பூஜையில் இருந்து, நிறைய உச்சாடனங்கள் ஏறிய நிலையிலிருந்துதான் விக்ரஹம் வந்திருக்கிறது. அதில் சந்தேகமேயில்லை. இல்லையேல் எங்கிருந்து இத்தனை சக்தி? இதற்கு எதிரில் என்னுடைய ஆராதனை எம்மட்டு? ஃபைலில் மறுபடி கவனத்தைத் திருப்புவார். என்ன ஆச்சரியம். அதன் சிக்கல் கலைந்து, தெளிவான முடிவு தோன்றும். அதைக் காட்டவேதான் வந்தாளோ? அப்படித் தோன்றுகையிலேயே, ஒரு பரவசம், அடுத்து சன்னதி பயம்.

நள்ளிரவில் அழைப்பு விடுத்தாற்போன்ற உணர்வில் விழிப்பு வரும்.

பக்கத்தில் ரேணு முனகிப் புரள்வாள். சில சமயங்களில் தூக்கத்தில் வீறிடுவாள்.

அடுத்த நாள் 'ரேணு, என்ன துர் சொப்பனம் உனக்கு?' என்று விசாரித்தால், 'எனக்கு ஒன்றும் நினைப்பு இல்லையே' என்று விழிப்பாள், 'வீறிட்டுக் கத்தினேனா என்ன' என்று சிரித்து மழுப்புவாள்.

ரேணு சோம்பேறி. ஆனால் அழகி. அந்த ஜாலத்தில் தான் இவள்போன்ற பெண்கள் காலம் தள்ளவேண்டும். அதற்கு ரேணுவுக்கு இங்கு கஷ்டமில்லை. ஒரு மாமியார், இரண்டு நாத்தனார்மார்கள், நாலு ஓர்ப்படிகள் சேர்ந்த கூட்டுக்குடும்பத்தில் இவள் நிலை எப்படியிருக்குமோ? ஆனால் இதெல்லாம் உதவாத, ஒவ்வாத யோசனை. விட்டுத்தள்ளு.

குத்துவிளக்கை ஏற்றி பாஸ்கர் அமர்ந்து விடுவார். எந்தக் கோயில் அல்லது மடத்தினின்று கழன்று வந்திருப்

பாள்? காவிரியில் அகப்பட்டமையால் இவள் பூர்வோத்திரம், இந்த வட்டாரம் தான் என்று கொள்ள முடியுமா? இவள் பிரயாணம் இமயத்தில் ஆரம்பித்து, விந்தியம் தாண்டி ஏன் வந்திருக்க முடியாது? அதுவும் எத்தனை நாள் பயணமோ? ஒரு நாளா, ஒரு வருடமா, எத்தனை ஆயுசுக்களோ? இவளை வடித்த சிற்பி எந்தக் காலம்? உண்மையில் இவள் வடித்தவளா? நித்யத்துவத்தின் அலைகள் ஒன்றில் சவாரி செய்துவந்து...

பாஸ்கர் மூர்ச்சையானார். பாஸ்கர் அப்படி ஒன்றும் கற்பனா சக்தி படைத்தவர் அல்லர். ஆகையால் இது போன்ற சிந்தனை, சிந்தனையினின்று தோற்றங்கள், தன்னிடமிருந்து எழுந்தன, எழக்கூடியவை என்பதை அவரால் தாங்கக்கூடியதாக இல்லை. முதலில் அவை அவருடையதா? இல்லை; அவள் வைக்கும் பொறி.

திடீரென்று பாஸ்கருக்கு உடல் பரபரத்தது. அடுத்த தருணம் ஏதோ அமானுஷ்யம், ஆச்சர்யம் நிகழப்போவது போன்ற உணர்வு. தியானத்தில் மூடியிருக்கும் அவள் கண்கள் திறக்கப்போகின்றனவா? உடல் நடுங்க குத்து விளக்கைத் தூக்கி விக்ரஹத்தின் முகத்துக்கெதிரே பிடித்தார். புன்னகையின் அரும்புதான் விரிந்திருந்தது.

பாஸ்கர் மாரைப் பிடித்துக் கொண்டார். அவள் கண் திறந்தால் நிச்சயம் என்னால் தாங்க முடியாது. விக்ரஹத்தைக் கையில் பிடித்துக்கொண்டு, பாஸ்கர் கங்கோத்ரியிலேயே ஸ்னானம் செய்தார். இங்கு இரு மலைச் சாரல்களிடையே குழந்தைபோல் தவழ்கிறாள். பின்னால்தான்-அல்லது முன்னாலா? சங்கரரின் சடைமுடியே இலக்கான உக்ரஹம். அடுத்து மானசரோவர் ஏரி. ஹரித்வாரில் கங்கையின் குளிரே முதல் தொடலில் நெருப்பாய்ச் சுட்டது. அடுத்து, யமுனையின் சுழித்த கொந்தளிப்பில் திணறினார்.

கங்கை எவ்வளவோ தேவலை. பிரம்மபுத்திராவின் அலைகள், அவரைச் சின்னாபின்னமாக்க முயன்றன. ஆனால் அவளிருக்கப் பயமேது? காவிரி, தாமிரவருணி, முதலைகள் பக்கம் போகாவிட்டால், குழந்தைகூட குளிக்கலாம். குற்றால நீர்வீழ்ச்சி, மேலே பாலருவி, தேனருவி, கடைசியாக கன்யாகுமரியில் முக்கூடல் கடல்.

உட்கார்ந்த இடத்திலேயே இத்தனை அனுபவமும். நினைப்பு மீண்டபோது கீழ்த்திசையில் விடிவு பொல பொல. கண்டது அத்தனையும் கனவா? தோன்றவில்லை. நனவா? சாத்யமில்லை. இடையில் என்ன அது? உடம்பில் துளி அசதியில்லை. உற்சாகமே தெரிந்தது.

பாஸ்கர் பூசை புனஸ்காரத்தில் மும்முரமாகி விட்டார்.

அவரால் அவளை ஆபீஸ் நேரத்துக்குக்கூட பிரிந்திருக்க முடியவில்லை. இதுமாதிரியும் உண்டா? எனக்கு ஏன் இப்படி? என்று தன்னைத் தானே கேட்டுக்கொள்ளக் கூடத் தோன்றவில்லை. பூஜையில் கண்ணை மூடி அமர்ந்ததும் அவருடைய இதயக்கமலத்தில் வீற்றிருந்தபடி, பின்னணியில் எழும் உதயஜோதியில் அவள் ஜ்வலித்தாள். பாஸ்கர் தன் மனோபக்குவ நிலையில் ஒரு தடம் தாண்டி விட்டாரா?

உடனே அவர் உச்சிக்குடுமி வைத்துக்கொண்டு, பஞ்சக்கச்சம் கட்டிக்கொள்ளத் தேடவில்லை. ஒரு வேளை அப்படிச் செய்திருந்தால், அவருடைய உடல்வாகுக்கு மேனி சிவப்புக்கு நன்றாகவே இருந்திருக்கும்.

இங்கே பக்கத்தில் எங்கே நந்தவனம்? தேடி விசாரித்து, தானே மலர்களை குடலை பொங்க பறித்து, தொடுத்து, சார்த்தி, அழகு பார்த்து மகிழ்வார். அபிஷேகத்

திரவியங்களைச் சேகரித்து, அன்பு பொங்கக் குளிப்பாட்டுவார். உயர்ந்த பட்டுத் துணியில், பக்தியுடன் ஒற்றி, துடைத்து, உடுத்தி, மலர் அணிவித்து தூபதீபம் காட்டி, நேரம் போவதே தெரியவில்லை.

மகராஜி, அத்தனை ஆரர்தனைகளையும் ஏற்றுக் கொள்பவளாக இருந்தாள்!

அவர் உப்பு இல்லாமல் உபவாஸம் இருக்க முயலவில்லை. கிடக்கைக்கு மான்தோல் தேடவில்லை. அல்லது கட்டாந்தரையில் படுக்க ஆரம்பிக்கவில்லை. ஏன் என்றால் யாரேனும் கேட்டிருந்தால் எனக்கு அப்படியெல்லாம் தோன்றவில்லையே! என்று உண்மையைத் தான் சொல்லியிருப்பார். அவருக்கு இதுபோல் ஆராதிப்பது பிடித்தது; ஆராதித்தார்.

தினம் முடியாவிட்டாலும், மாதம் ஒரு முறையேனும் அம்பாளுக்கு ஒரு சொம்பு நிறைய பாலாபிஷேகம் செய்து பார்க்க வேண்டும். இந்த ஆசையில் உள்ள நெஞ்சீரல் யாதெனில் சுத்தமான கறந்த பசும்பாலுக்கு எங்கே போவேன்? (குடம், பைப்பால் கிடைக்கலாம்.) இது கலப்பட யுகம். ஒரு செம்பு நிறைய நுரை வழிய ஓரே மாட்டுப் பசும் பால்...டவுனில் எங்கே போவேன்?

நாளடைவில் இந்த நெஞ்சீரல் விசிறிக்கொண்டு, வீசிக்கொண்டு, விபரீத ஆசைக்கனல் தகிக்கத் தலைப்பட்டது. நாமே ஒரு பசுமாடு வாங்கிவிட்டால் என்ன? பின் யோசனையில் டவுனில் வாடகை வீட்டில் மாடு வைத்துக் கொள்வது என்பது நடைமுறையில் சாத்யப்படுமெனத் தோன்ற வில்லை.

ஆனால் அம்பாளுக்கு சுத்தமான பசும்பாலில் அபிஷேகம் செய்து விக்ரஹத்தின்மேல் பாலின் வெண்மை

யின் வழிதலினின்று அவளுடைய சிரித்த முகம் வெளிப்படுவதைப் பார்க்க வேணுமே!

அந்த அழகைப் பார்ப்பதற்கு எந்தப் பாலையேனும் ஊற்றிப் பார்க்கலாமே என்று ஒரு சமாதானம் மனதில் எழுந்தபோதிலும் அதே மனம் ஏற்க மறுத்தது. இப்படியும் ஒரு சபலம், உறுத்தலாகக் கிளம்பி, அதுவே படிப்படியாக ஒரு வெறியாக மாறுவது தெரியாமலே மாறும் அந்த அவஸ்தையில் பாஸ்கர் மாட்டிக்கொண்டு விட்டார். அவஸ்தை நிலை, அவநிலையாக மாறி விடுமோ போன்ற நிலை.

அவரைப் பார்த்து, தெரிந்தவர்கள் ஒருவருக்கொருவர் கண் சிமிட்டும் நிலை; பேர் எரிச்சலே படும் நிலை. குடிக்கக்கூடத் தண்ணி இல்லாமல் குடத்தைத் தூக்கிக்கொண்டு ஒவ்வொருத்தன் அலையறான். இந்த மனுஷன் சாமிமேல் கொட்டறானாம். பொம்மைமேல் கொட்டறத்துக்கு அவனும் குடத்தைத் தூக்கிக்கிட்டுப் பாலுக்கு அலையறானாம். எப்படியிருக்குது கதை!

"கூழுக்கு உப்பு இல்லை என்பாரும், பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பாரும்...'

பாட்டு எப்பவோ எழுதிப் போட்டாச்சு. இதுக்குத் தான்.

ரேணு? அவள் புருஷனை இப்படிப் புரளி செய்வது அவளுக்கு எப்படி இருந்தது? முதலில் இது என்ன அசட்டுக் கேள்வி. ஆனால் ரேணு விஷயத்தில் அந்தக் கேள்வி அசட்டுத்தனம்தானா? தோன்றக்கூடிய சந்தேகம்தான். கணவனுக்கேற்ற மனைவி. ஒருவர் வழியில் ஒருவர் குறுக்கிடுவதில்லை. இன்னிக்கு மஹா நைவேத்யத்துடன் வடை, பாயஸம் என்று ஒருமுறை சொல்லிவிட்டால் போதும். பூஜை மணி சத்தம் கேட்டவுடனேயே தாமாக வந்துவிடும்.

மனம் தெய்வஆராதனையில் முனைந்தவுடன் கடைகண்ணி, வீட்டு வேலை, நிர்வாகம் படிப்படியாக அவள் பங்குக்குச் சேர்ந்து விட்டது.

அதனால் என்ன? இந்த நாளில் தான் பாதிக்கு மேல் ஆண்பிள்ளை வேலைகளை பெண்கள் தானே கவனித்துக் கொள்கிறார்களே, தாங்களும் உத்யோகமும் பண்ணிக் கொண்டு! அவள்பாட்டுக்குப் போவாள், வருவாள். எங்கு போனாய், ஏன் போனாய், எப்போ திரும்புவாய்-கேட்க மாட்டார். பாஸ்கர் சுபாவம் அப்படி, அவளும் தானாக, போன வந்த விவரங்களைச் சொல்லமாட்டாள். தேவை யில்லை. அனேகமாக இன்றைய எல்லாக் குடும்பங்களும் இப்படித்தானே நடக்கின்றன? அதில்கூடப் புதுமை ஏது?

ரேணு ரோசத்தைப்பற்றி அல்லவா கேள்வி! அநேக மாகக் கேள்விக்குப் பதில் 'ப்ளாங்க்' தான். அண்டைவீட்டு எதிர்வீட்டு சகவாசம் என்று ரேணு கொண்டாடுவதில்லை. அவளைத் தேடி வரும்படியாகவும் வைத்துக்கொள்வ தில்லை. தனி ஜீவி? கிட்டத்தட்ட அப்படித்தான். மூங் குணி மாங்கட்டை? அழுத்தக்காரி? ஆபத்தான கேள்வி. என்னைக் கேட்டால் நமக்கேன் பாடு என்று இருந் தாளா? இருக்கலாம். நமக்கேன் பாடு என்பதே நடை முறைத் தத்துவமாக இந்நாளில் விளங்குகிறது.

ஒரு நாள் வாடிக்கை பால்காரக் கிழவன் (எருமைப் பால்) வந்தான். "சாமி, இன்னிக்கு சாயந்திரம் பசுமாடு வீட்டுக்கு கொண்டு வந்து கறக்கறேன். ஒருவேளை தான். வாடிக்கைக்கார சேட் பம்பாய் போயிருக்கார். நாளை ப்ளேனில் திரும்பிவிடுவார். இஷ்டமா? ஒரு வேளைதான்."

கிடைத்தவரை லாபம்.

'பரவாயில்லை. ஒண்ணரை லிட்டர் கறக்கும் ஜாதி மாடு. பால் தடிப்புத்தான்.'

வீட்டு வாசலில் ஒரு மூலையில் எருமை மாட்டைக் கிழவன் கறக்கிறான். அது தினப்படி வீட்டுச் செலவுக்கு. ரேணு பாத்திரத்துடன் அவன் எதிரே நிற்கிறாள்.

மறுகோடியில் பாஸ்கர் ஒரு எவர்சில்வர் தூக்குடன். (கொஞ்சம் பெரிய தூக்குதான்) கறவல் அத்தனையும் அப்படியே வாங்கிக் கொள்வதாகப் பேச்சு.

பால் நுரையோடு, குவளையில் உயர்ந்து கொண்டே வருவதைப் பார்க்கிறார். நுரை துளும்புகிறது. கொஞ்சம் குவளையினின்று தப்பி, காற்றில் அலைந்து பறக்கிறது. நன்றாய்த்தானிருக்கும் போலிருக்கு.

'சேட் நாளைக்கும் பம்பாயிலேயே தங்கி விட்டால் எவ்வளவு நன்னாயிருக்கும்!'

'சேட் பம்பாயிலேயே தங்கிவிடக்கூடாதா?'

பாஸ்கர் தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டார். எத்தனை வயதானால் என்ன? மனிதனைச் சுரண்டினால் அடியில் சிறுபிள்ளைத்தனம் தான்!

''ஆ! கறந்த பால் தேடற ஐயாவா? அது நீங்கதானா? வேறு யாரோன்னா பார்த்தேன்!''

பாஸ்கர் பதில் பேசவில்லை. அவருக்கு வழக்கம் கிடையாது. கிழவன் பிள்ளை fullஆ போட்டிருக்கிறான். பாஸ்கர் எப்பவுமே அனாவசியமாக வாயைக் கொடுக்கமாட்டார். அவருடன் சம்பாஷணை அநேகமாக ஒருதலையாகத்தான் அமையும். அதற்குக்கூட ஒரு knack வேணுமில்லே?

''ஐயாகிட்டே ஒண்ணு சொல்லணும்னு ரொம்ப நாளா எனக்கு எண்ணம். என் அப்பன் எதிரே இருக்கான். இருந்தாலும் சொல்றேன். நான் நல்லா போட்டிருக்கேன். எனக்குத் தெரியும். ஆனால் நான் போட்டிருக்கப்பத்தான்

நான் சொல்ல நினைச்சதைச் சொல்ல முடியும். ஐயா, உலகத்திலே கறந்த பாலே கிடையாது. அடிச்சு சொல்றேன். கடவுளுக்கே அந்த எண்ணம் கிடையாது. அம்மா, நீ என்ன சொல்றே?''

ரேணு முகம் வெளுத்து, சிவந்து, நீலமாகி, மறுபடியும் வெளுத்து-இதென்ன டெக்னி கலர்-பாஸ்கருக்கு வியப்பு.

''ஐயா கறந்த பால்னா என்ன தெரியுமா? ஏமாந்தாங் கொள்ளி.''

அவளுடைய நெற்றி நரம்புகளில் பச்சைக்கொடி ஓடிற்று. விழிகளில் ஏன் அப்படி ஒரு திகில்?

''அம்மா, நாளைக்கு வெள்ளிக்கிழமை இல்லே?''

அவள் விழிகள் வெளியில் பிதுங்கிவிடும் போல் ஆகி விட்டன.

''அம்மா நாகம்மா என் உடன் பிறந்தா-''

புதிர் மேல் புதிர். ரேணுவுக்கு திடீர் களைப்பில் விழிகள் செருகின. சட்டென உள்ளே போய்விட்டாள். கிழவன் பாதி கறவலினின்று வெடுக்கென எழுந்து வந்து அணை கயிற்றினாலேயே பையனை வீறுவீறு என்று வீறினான்- ''அடி செருப்பாலே, ஸூவர். உன்னை எவன் விளக்கம் கேட்டான்?''

பையன் வைதுகொண்டே எழுந்து ஓடினான். குவளை அப்படியே தரையில் உருண்டது.

''டேய் ராத்திரி நீ வீட்டுக்கு வரமாட்டே? அரிவாளோடு காத்திட்டிருக்கேன், வா.''

கிழவன் ஒல்லி. மூச்சு இரைத்தது. வயிறு முதுகோடு ஒட்டித் துருத்தி வாங்கிற்று.

பூமியில் பால் தேசப்படம் வரைந்து இன்னும் விரிந்து கொண்டே போயிற்று.

-'முழுத் தூய்மையான பண்டம் யாருக்குமே கிடையாது என்று ஆண்டவன் விதியோ?'-

''உன் முயற்சிகளை என்னிடம் கொண்டுவா. உன் முயற்சிகளில் நீ தோல்வியுற்றால் உன் தோல்வியை என்னிடம் கொண்டுவா.''

-இது கீதையினின்று ஒரு வாக்யம். ஆங்கில மொழி பெயர்ப்பினின்று பாஸ்கருடைய மனதில் சொந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு, கீதையுடன் அவருக்கு இன்னும் அதிக பழக்கமில்லை. ஆனால் இந்த அடி இப்போது தோன்றுவானேன்.

கணவன் மனைவி இடையே பலப்பரீட்சை முறையில்லைதான். அவளும் அவருடைய அந்தக் கேள்விக்கு, ஓரே கேள்விக்குக் காத்திருந்தாள். இல்லை காத்திருந்தாளா?

அந்தக் கேள்வியைக் கேட்டிருந்தால், உடனே ஒரு நுனியைப் பிடித்து இழுத்தால் அத்தனை முடிச்சுகளும் அவிழ்வதுபோல் புதிர் பிரிந்திருக்கும். இல்லை, பிரிந்திருக்குமா?

அவருடைய நடமாட்டத்தை, செயல்களை, அவள் விழிகள் தொடர்வதை, அவர் முதுகைத் துறுவுவதை பாஸ்கர் உணர்ந்தார். என்னவோ நேர்ந்துகொண்டிருக்கிறது. ஆனால் பாஸ்கர் அந்தக் கேள்வியைக் கேட்க மாட்டார். தானாகக் கனியாததை தடியால் அடிக்கமாட்டேன்.

பாஸ்கர் மழுங்குணி மாங்கட்டையா? அல்ல அழுத்தக் காரரா? அல்ல நமக்கேன் பாடு நடைமுறைத் தத்துவத்தின் கடைப்பிடிப்பா? இப்படி இருப்பது சரியில்லை என்று எனக்கே தெரிகிறது. ஆனால் ஏன் இப்படி இருக்கிறேன்? புரியவில்லையே!

சமையல்கட்டு வேலை முடிந்த பின்னர் ரேணு ஒரு தலையணையையும். ஜமக்காளத்தையும் எடுத்துக்கொண்டு பக்கத்தறைக்குச் சென்று விட்டாள். இது அவர்களிடையே புதுசு. இது ஒரு சவால்தான் அந்தக் கேள்வியைக் கேட்க. No, I won't . குறுக்கிடுவது வறட்டு கௌரவமா? எலி யுடன் பூனை விளையாட்டா? ஈசுவரி நீதான் சஞ்சலத்தைத் தீர்க்கணும்.

நள்ளிரவில் எழுந்து பூஜையறைக்குச் சென்றார். குத்துவிளக்கில் சுடர் முத்தாட்டம் எரிந்து கொண்டு, அசைவற்று நின்று. அது எரிந்த ஒளியின் நிழலாட்டத்தில் அவள், அவளுடைய அற்புதமான மந்தஹாஸத்தைப் புரிந்து கொண்டு கண்களை மூடி தவத்தில் இருக்கிறாள். உள்ளே திரும்பிவிட்ட பார்வைக்கு அவளுக்கு என்ன தெரி கிறது? இல்லாவிட்டால் ஏன் இந்த அற்புதமான புன்னகை? மந்தஹாசினி.

அவள் கட்டை விரல் ஊசி முனையை அழுத்திக் கொண்டிருக்கிறது. பாஸ்கர் குனிந்து உற்று நோக்கினார். இன்றுதான் புதிதாகப் பார்ப்பதுபோல் தோன்றியது. இந்த விக்ரஹத்தைச் செதுக்கிய சிற்பியே ஒரு அவதார புருஷனாகத் தான் இருந்திருக்கவேண்டும். எவ்வளவு சன்னமான ஊசி! ஆனால் என்ன திடம்? தேவியை அவள் தவத்தில் அவளைத் தூங்கவிடாமல் ஸதாதவத்தில், தவ

மெனும் நெருப்பில் அவளைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறது. அப்போது ஊசி முனை அவள் தவ உலகத்தையே தாங்குமெனில், நம் கவலைகள் எவ்வளவு அற்பம்? அவளிடம் கொண்டு போய் வைப்பதற்கே லாயக்கில்லை.

மறுநாள் ஆபீசிலிருந்து பாஸ்கர் திரும்புகையில் ரேணு வாசலில் காத்திருந்தாள். வாசற்கதவு பூட்டியிருந்த சாவியை அவரிடம் கொடுத்தாள். இதுவும் அவர்களிடையே புதுசு.

''வாங்கோ போகலாம்.''

எங்கே? ஏன்? கேட்க மாட்டார்.

இருவரும் நடந்தனர்.

யாரேனும் கவனித்திருக்கிறீர்களா? சில சமயங்களில் பார்வைக்கு ஒரு திடீர் பளிங்கு ஏற்படுகிறது. அல்லது அப்படித் தோன்றுகிறது. அதில் அதுவரை பலகால விஷயாதிகள் ஒரு புது பரிமாண அர்த்தத்தை, தோற்றத்தைக்கூட அடைகின்றன. ஆச்சர்யமாயில்லை? இதுவரை எப்படி இதற்கு நான் குருடாக இருந்தேன்?

இவள் முகத்தில் எப்படி இயற்கையே துடைத்து விட்டாற்போல் இந்த அதிசுத்தம்? அவள் கூந்தலைக் கொண்டையிட்டுக் கொண்டிருந்தாள். பொய்க்கொண்டை போட்டிருந்தமாதிரி கூந்தலின் நிஜம். இப்படியே நடந்து கொண்டேயிருக்கலாமா?

அவர்கள்மேல் இறங்கிய ஏதோ ஒரு அமைதியின் சிறகணைப்பில் இருவரும் பேசவில்லை. ரேணு மெதுவாகத்தான் நடந்தாள், இரு சாரிகளையும் பார்த்துக் கொண்டு. சட்டை உரித்தாற்போன்று உடல்வாகில் அடக்கிய

துடிப்பு. புலியின் சோம்பல் நடை. புதிதாகப் பார்ப்பது போலும்? அல்லது கடைசியாகப் பார்ப்பது போலுமா?

எவ்வளவு தூரம் நடந்திருப்போம்? அக்கறையில்லை. ரேணு திடீரென ஒரு வீட்டெதிரே நின்று கதவை மெதுவாக விரல்கணுவால் தட்டினாள். கதவு திறந்தது.

ஒரு கப்பல் பாஸ்கரைப் பார்த்ததும், அந்த ஸ்திரீயின் முகம் மாறிற்று.

''நாகம்மா, இவர்தான் என் வீட்டுக்காரர்.''

''வாங்கய்யா, வாங்க. உள்ளே வாங்க-இந்தாங்க, இந்த விசுப் பலகையில் குந்துங்க.''

''நாகம்மா, டீ செய்து கொண்டு வா'' ஒரு கீச்சுக் குரல்.

இது யார்?

பாஸ்கர் உத்தரவு வரும் திசையில் திரும்பினார்.

விட்டத்திலிருந்து ஒரு கிளிக்கூண்டு ஊஞ்சலாடிற்று. அதன் மேல் துணி மூடியிருந்தது. பாஸ்கருக்கு சிரிப்பு வந்துவிட்டது. நாகம்மா சமையலறைக்குள் சென்றாள். இரண்டு வினாடிகளுக்கெல்லாம் சமையலறையிலிருந்து ஒரு மின்னல் சுடர் பாய்ந்து வந்து ரேணுவைக் கட்டிக் கொண்டது.

''இது லல்லி. இவருக்கு நமஸ்தே சொல்லு. எனக்கு நாகம்மாதான் பிரசவம் பார்த்தாள்.''

தோற்றுப்போயிருந்த மின்சாரம் அப்பொழுதுதான் மீண்டது. விசிறி சுழலத் தலைப்பட்டு, பாஸ்கர் நெற்றி

வேர்வையை ஒற்றிற்று. உள்ளேயே கொஞ்சம் புழுக்கம் தான்.

"லல்லி என் தவறு-இல்லை, இல்லை." தவடையில் ஒரு கையால் மாற்றி மாற்றி தட்டிக்கொண்டாள். "தவறு செய்தவள் நான். ஏமாந்து போனவள் நான். சின்ன வயசில் பெத்தவா ரெண்டு பேரையும் இழந்துட்டு தனியாக வாழ நேரிடும் என் போன்றவர்கள் கதி, இப்படித்தான். என்னை ஏமாத்தினவரைக் குத்தம் சொல்லி என்ன பயன்? ஏமாந்தவள் நான். அன்னிக்குகூடப் பார்த்தேன் அவனை. அவன் என்னைப் பார்க்கவில்லை. யாரோடேயோ போய்க் கொண்டிருந்தான். பெண்டாட்டியா? இன்னொரு ஏமாளியா? யார் கண்டது? ஒழுங்காய் வாழ்ந்தால் சரி. யாருக்குத்தான் ஆசை இல்லை? உங்கள் விளம்பரம் கண்டதும் வாழ்க்கையில் என் அந்தஸ்தை மீண்டும் பெற ஒரு சபலம். லல்லி பிரச்சனையை எந்த மாதிரி தீர்த்துக் கொள்வது என்று அப்போது தெரியாது. என்றேனும் ஒரு நாள்...அதுவரை நாகம்மா. அவ்வளவுதான். அந்த சமயத்துக்கு முக்யமாய், தெரிந்தது என் மீட்சி-அவ்வளவுதான்."

ரேணு புன்னகை புரிந்தாள்.

நாகம்மா வெளியே வந்தாள். அவள் இரு கைகளிலும் ஏந்திய தட்டில் இரு கோப்பைகளில் இருந்து மணமான ஆவி பறந்தது.

பாஸ்கர் டீயை மெதுவாக அனுபவித்துப் பருகினார். ஜன்னலுக்கு வெளியே சர்வ நிசப்தம். சந்துதான், ஆனாலும் சர்வ சுத்தம்,

ரேணு டீ சாப்பிட வில்லை. அவள் கைகள் அவள் மடியில் அமைதியான சிறகுகளாய் ஒன்றன் மேல் ஒன்றாய் உறங்கிக் கொண்டிருந்தன.

அவள் காலடியில் லல்லி தானே தன்னுடன் ஏதோ பேசிக்கொண்டு ஏதோ விளையாடிக் கொண்டிருந்தாள்.

பாஸ்கர் எழுந்து நின்று-என்ன உயரம்!-குனிந்து லல்லியைத் தூக்கிக் கொண்டார். சாவியை ரேணுவிடம் மறுபடி ஒப்படைத்தார்.

''போவோமா?''

''Thanks நாகம்மா''- கூண்டுக்கிளி.

கூடத்தின் அந்தி இருளில், திடீரென பாஸ்கர் கன்னத்தில் உதடுகள் உராய்ந்தன. பாஸ்கர் மார்புள் பாறை ஏதோ உருகி உடைந்தாற் போன்ற பயங்கர இன்பம். கல்லா? பனியா? நெய்யா? 'நீங்களா கறந்த பாலைத் தேடறேள்?'-அவள் விழிகள் ஸ்படிகத்தில் பளபளத்தன. கல் கண்ணீர் கசிந்தால் இவ்வளவு அழகா?

மறுநாள் மாலை பாஸ்கர், ஆபீசிலிருந்து திரும்பி, உடுப்புகளைக் கழற்றி, உடம்பைச் சுத்தி செய்து கொண்டு பூஜையறையில் நுழைந்தால்-

-விக்ரஹத்தைக் காணோம். ரேணு குத்துவிளக்கை ஏற்றிக் கொண்டிருந்தாள்.

''எனக்கு ரொம்ப நாளாகவே எண்ணம். இந்த மாதிரியான பிரதிஷ்டை, நமக்கு வழிபாடு வழி தெரியாமல் சம்சாரி வீட்டில் நீடித் திருப்பது சரியல்ல. அதனால் இன்று அவள் வந்த இடத்திலேயே கொண்டுபோய் விட்டு விட்டேன்.''

ஒரு கணம் ஒரு யுகம் கண்ணுக்குக் கண், கருவிழிக்குக் கருவிழி நேருக்குநேர் சலசல. பாஸ்கர் முதுகு திரும்பினார். அவருக்குத் தெரிகிறதோ இல்லையோ, முதுகுக்கு உசிதம் தெரியும்.

ஆமாம். அவள் சொல்லுவதும் வாஸ்தவம்தான். அடுத்து, கொடுத்து வைத்தவனுக்கு கண் திறந்துவிட அவள் போக வேண்டாமா?

அவர் கைவிரலுடன் இரண்டு பிஞ்சு விரல்கள் கோத்துக்கொண்டன.

"அப்பா."

★

